# வழிகாட்டும் வான்பொருள்

(ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு)

சீ. இராமலிங்க முதலியார், B. A.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

# வழிகாட்டும் வான்பொருள்

## (ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு.)

இதை எழுதியவர்:
திருவாளர்
தி. இராமலிங்க முதலியார் அவர்கள், பி.ஏ.,
முனிசிபல் கமிஷனர்,
சைதாப்பேட்டை.

---

சென்னை நகராண் சழகக் கல்வித்துறைத் தலைவர்,
பெருந் திருவாளர்
ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்களது
அரிய முன்னுரையுடன்

பதிப்பித்தவர்
திரு-மழவராய நல்லூர்
திருவாளர். ஆ. நரசிம்மலு நாயுடு அவர்கள்.


முதற் பதிப்பு

1937

உரிமை பதிவு செய்தது.

குமரன் பிரஸ்
காஞ்சீபுரம்

29—4—37.



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

# முன்னுரை

உலகில் வாழும் உயிர்கள் எண்ணில. அவற்றுள் மக்கட்பிறவி படைத்தவையே கோடிக்கணக்கிலுள்ளன. விலங்குகளிடத்து விளங்கித் தோன்றாத பகுத்தறிவென்னும் ஆறாவதறிவைப் பெற்றிருத்தலே மக்கட்குத் தனிப்பெருமை தருவதொன்றென்ப. ஆயினும், தம்மிடத்துள்ள இவ்வறிவைப் பயன்படுத்தாது, விலங்குகளோடொப்ப ஐம்புலவுணர்விலேயே அடங்கி நின்றுழலும் கடையாய மக்கள் பலருளர். எஞ்சினோருள் பலர் தம் பகுத்தறிவை உபயோகித்து நாடோறும் புலனோடு போராடிப் படிப்படியே வெற்றி பெற்று மேல்நெறியிற் சென்றுகொண்டிருக்கும் இடையாய மக்களாவர். மற்றுஞ் சிலர் இப் போராட்டத்தில் வெகு தீவிர வெற்றி பெற்றுக் கடவுளியல்புகள் பல தம்பால் கவினுற விளங்குமாறு வாழும் தலையாய மக்கள். கடைப்பட்ட மாக்களை இடைப்பட்ட மக்களினத்திற் சேர்க்கவும், இடைப்பட்ட நிலையினரைத் தலைவன் தாள் தலைப்பட்ட தம்மினத்திற் கூட்டவும், தலையாய பெருமக்களிற் சிலரைத் திருவருள் அவ்வப்போது தூண்டிச் சின்னாள் உலகில் உயரிய தொண்டு புரியுமாறு அனுப்புவ தியல்பு.

இம்முறையில், நந் தமிழகத்தே சென்ற நூற்றாண்டில் அவதரித்து, அனுபவஞான அன்பமர் விளக்காய் ஞான ஒளிபரப்பித் திகழ்ந்த பெரியார்களில் இரெட்டியப்பட்டிச் சுவாமிகள் ஒருவராவர். இவர்களது தெய்வபக்தியும் நிஷ்டாநுபூதியும், ஒழுக்கத்துயர்வும், ஆடம்பரமற்ற வாழ்க்கையும், உலைவிலாத மன்னுயிர்த் தொண்டும், சிறியவரைப் பெரியராக்கிக் கண்டு மகிழும் பெருந்தகைமையும், ஆண்டவனருள் வழி நின்று அவ்வப்போ தியற்றிய அருஞ்செயல்களும் யாவர் மனத்தையும் கவர்ந்து விம்மிதமடையச் செய்யும் இயல்பின.

இச்சுவாமிகள் கி. பி. 1856ல் தோன்றி 1922ல் திருவுருக் கரந்தார்கள். சாதிமதபேத உணர்ச்சி மிகுதியாலும், தெய்வ விருப்பு உணர்ச்சிக் குறைவாலும் தாழ்வுற்றிருக்கும் தற்காலத்திற்குச் சுவாமிகள் சட்ட உருவில் தந்துள்ள 'உபதேசம்' ஒருகையில்

தனிச் சிறப்புடையது. கடவுளிருப்பிலும் அவர் கருணைத் திறத் திலும் உறுதியான நம்பிக்கையையும், அந் நம்பிக்கையை அடிப் படையாகக் கொண்ட சில திட்டமான ஒழுகலாறுகளையும் இச் 'சட்டம்' தன்னகத்தே கொண்டுள்ளது. சைவ நன்மரபிற் பிறந்த சுவாமிகள், உலகப் பெருஞ் சமயங்களாய்ப் பரந்துள்ள இஸ்லாம் கிறிஸ்துவம் என்னும் சமயங்களையும் நுணித்தாராய்ந்து அவற்றின் சிறந்த நலங்களையும் பாராட்டத் தயங்கினாரல்லர். அன்றியும், மக் கட்கு இந்நாளில் துன்பநீக்க மார்க்கம் துலக்குதற் பொருட்டுப் பொதிகை வரையிற் பெருந்தவங் கிடந்து பூரண அருளும் பெற் றார்கள். இத் தவத்தின் பயனாய்ச் செம்பொருட் காட்சியும் திரு வருள் ஆணையும் கிடைத்த பின்னரே, தமது 'சட்ட'த்தை உலகிற் கருளினார்கள்.

சுவாமிகள் உபதேசம் அறவே புதியதொன்றன்று. அப்படி யொன்றை எவரும் எக்காலத்தும் செய்யக்கூடும் என்றும் எதிர் பார்த்தற்கில்லை. "ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழலாதே வான் நோக்கும் வழியாவது நின்மினோ" என்னும் உறுதிச்சொற் களால் அப்பர் அருளிய முதன்மை உபதேசந்தான் எல்லாச் சமய ஆசிரியன்மாராலும் அருளப்பட்டிருப்பது. மக்கள் செல்கதிக்கு வழிகாட்ட வந்த இப்பெரியார்கள் விளக்கியவையே எல்லா ஆத்திகச் சமயங்களும். இவை கூறும் கோட்பாடுகளிலும் ஒழுகலாறுகளிலும், மிக்க சாரமுடையனவும் விழுமிய பயன்தர வல்லனவுமாகிய சீரிய உண்மைகளைத் திருவருட் கண்கொண்டு தேர்ந்தெடுத்து, தற்காலத் தார் எளிதில் அறிந்துகொள்ளுமாறு, திருத்தமும், தெளிவும், திட்பமும் பொருந்திய முறையில் சுருங்கிய சட்டங்களாகத் தந்தரு ளிய பெருமை சுவாமிகட்குரியது. இச் சட்டத்தைச் சாதிமதபேத மின்றியும், பால்வேற்றுமை யின்றியும், எவரும் ஏற்கலாம். ஏற்று உடலுக்கும் உயிருக்கும் உற்ற பிணி நீங்கிப் பெரும்பயன் பெற்ற வர்கள் பலர் இன்றும் இருப்பதாகக் கேள்வியுறுகின்றோம்.

இத்தனைச் சிறப்பு வாய்ந்த சட்டத்தை உலகிற்களித்த சுவாமி களது சரித்திரத்தை வெளியிட முற்பட்டவர் அச் சட்டத்தைப் பின் பற்றி வருபவரும் திருவாளர் ஆ. நரசிம்மலு நாயுடு அவர்களாவர். அவரது சீரிய விருப்பின்படி சுவாமிகள் சரிதத்தையும் போதனை

களையும் நன்காராய்ந்து எழுதியுபகரித்தவர்கள் எனது நண்பர் திரு வாளர் கீ. இராமலிங்க முதலியாரவர்கள். நம் நாட்டுப் பெரியார் சரிதங்களிற் பல, உரிய காலத்தில் எழுதப் பெறாமையால், அவற்றுட் பொய்களும் புகுந்து புனிதத்தைக் குறைத்து அறிஞர்கள் நெஞ்சைப் புண்படுத்துகின்றன. இக்கதி இச்சுவாமிகள் சரிதத்திற்கும் நேராவண்ணம் பாதுகாத்து உண்மையான வரலாற்றை உலகிற் களிக்க முதற்பட்ட இவ்விரு மெய்யன்பர்கள் செய்த நன்றி என்றும் போற்றத் தக்கதாகும்.

'வழிகாட்டும் வான்பொருள்' (இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு) என்னும் இந்நூலானது பதினொரு அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு அதிகாரமும் நுவலும் பொருள்களின் உட்பிரிவுகள் யாவும் தலைப்புக்கள் வடிவில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. மேலே விவகரித்த 'சட்டம்' என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் நூலின் இதயத்தானமாயுள்ள ஆறும் அதிகாரத்தில் மிகவும் தெளிவாய்த் தரப்பட்டுள்ளன. நூலின் தமிழ் நடை இனிமையும் எளிமையும் வாய்ந்தது. இந்நூல், தன்னைப் படிக்கத் தொடங்குவோர்க்கு மேன்மேல் விஞ்சும் நலம்பல காட்டித் தன்னை முற்றும் படித்து மகிழுமாறு செய்யும் ஆற்றலுடையது. முதலிற் சில பக்கங்களிற் காணும் அச்சுப்பிழைகள் அடுத்த பதிப்பில் மறைந்துவிடும் என்று கொள்ளலாம்.

நூலின் இறுதியில் சுவாமிகள் செம்பாகமாகப் பாடியுள்ளப் பாக்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன. சமய மெய்வாழ்விலும், நாட்டு முன்னேற்றத்திலும், உலக சகோதரத்துவ வளர்ச்சியிலும் நம்பிக்கையுடையாரனைவரும் இச் சரிதத்தையும் அதனோடு விரவியுள்ள போதனைகளையும் கண்ணுறின் களிகூருவர். நல்லொழுக்க போதனையும், சமயபோதனையும் சாதிமதப்பிணக்கு நேராவகையிற் பாடசாலைகளிற் செய்யப்படவேண்டும் என்பது பல சிறந்த அறிஞர்கள் துணிபு. அத்தகைய போதனை செய்வோர்க்கும் இந்நூல் ஒரு பெருந்துணையாயிருக்கும் என்பதென் நம்பிக்கை.

சென்னை,
14-4-37.

ச. சச்சிதானந்தம் பிள்ளை.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

# பதிப்புரை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்னும் எமது குருநாதரது திவ்விய வரலாற்றை அடியார்களாய் உள்ளவர்கூட முழுதும் அறியார். அவரவர்களது ஊரிலே அவரவர்களது அளவிலே சுவாமிகள் எழுந்தருளியமை, அருள் ஆற்றியமை, இவை தெரியுமே தவிர, நாட்டின் பிற பாகங்களில் சுவாமிகள் நடத்திய அற்புதங்களும், அடியவரை ஆட்கொண்ட அருமைப்பாடுகளும் பலருக்கும் தெரியா. எல்லோரும் சுவாமிகளது முழு சரித்திரத்தையும் அறியவும், சுவாமிகளது கொள்கைகளின் அருமையை அடியாரும் அல்லாரும் போற்றிப் பற்றி ஒழுகவும், வேண்டும் என்பது அடியார் பலரது அவாவாக இருந்தது.

சுவாமிகளது அடியவர்களில் தலைசிறந்தவர்களான பிரஞ்சு இலாகா பிள்ளையார் குப்பம் திரு. சுவர்ணம்பாள் அம்மையாரும், சாத்தூர் திரு. ச. சுவாமிநாதம் பிள்ளை அவர்களும் வாணியம்பாடி திரு. சி. மு. முனியப்ப செட்டியாரும் இதுபற்றி மிக்க சிந்தை செய்து வந்து அடியேனை ஊக்கினார்கள். முன்னவர் இருவரும் முதல் கொடுத்தும் உதவினார்கள்.

அவர்களது ஆசியின் பயனாய், அடியேன் சுவாமிகள் எழுந்தருளியிருந்த பல இடங்களுக்கும் நேரே சென்று குறிப்புகள் எடுத்து வந்தேன். காஞ்சிபுரம் குமரன் அச்சகத்தை யடைந்தேன். அச்சுக்கூட உரிமையாளர் திரு. த. குப்புசாமி முதலியார் அவர்களது பெருந்துணையால் 5—8—1936ல் இந்நூலை எழுதிக் கொடுத்த பெரியாரது நட்பு கிடைத்தது. அவருக்கு உத்தியோக முறையில் இருக்கும்பல வேலைகளுக்கு இடையே சிறிது சிறிது நேரம் ஒதுக்கிக், கைம்மாறு சிறிதும் கருதாது, அடியேன்பால் சுவாமிகளது சரித்திரத்தைக் கேட்டுக்கொண்டே வரைந்து சென்று, கடந்த பிப்ரவரி மாத முதலில் முடித்துக் கொடுத்தார். அவரது அளிந்த அன்பினுக்கும், அவரது உயரிய கூட்டுறவைக் கூட்டி வைத்ததோடு உரிமையுடன், வரலாற்றை அச்சு செய்து தந்த குமரன் அச்சக உரிமையாள

ருக்கும் அடியார்களும் அன்பர்களும் என்றும் நன்றியுள்ளவர்களா வார்கள். அடியேனுடைய அன்பின் பணிவு அவர்கட்குப் பலப் பல.

அச்சு செய்து வரும்போது திருத்துதல் தொண்டினை அன்போடு ஏற்றுச் செய்து வந்த, காஞ்சிபுரம் ஆண்டார்சன் உயர்தரக் கல்லூரித் தமிழ்ப்புலவர் திரு. வித்வான் ஆ. மு. பரமசிவானந்த முதலியார் அவர்கட்கும் அடிமையினது அன்பின் நன்றி பல.

இந்நூலில் காணுவதே சுவாமிகளது முழு வரலாறு என்று சொல்லுவதற்கில்லை. தெரிந்த அளவிலே வரையப் பெற்றதே யல்லாமல், சுவாமிகள் சென்ற, இருந்த, இடங்கள் யாவற்றிலும் நடந்த யாவற்றையும் அறியக்கூடவுமில்லை, எனவே, வரைய இயலவுமில்லை. இன்னம் அடியேனும் போய்ப்பார்க்காத இடங்கள், அடியேனுக்குத் தெரிந்தே பல இருக்கின்றன; தெரியாமல் எத்தனையோ இடங்கள் இருக்கலாம். கண்ட அடியார்கள் பலராயினும் இன்னும் காணாத அடியார்கள் பலராயிருப்பர். கண்டவர்களிலும் தாங்கள் சுவாமிகளைப்பற்றி அறிந்த யாவற்றையும் விண்ணடவர்கள் சிலரே யாவர். இந்நூல் வெளியாவதன் பயனாய், சுவாமிகளது சரித்திரத்தின் இது வரை மறைந்துள்ள பகுதிகளும் வெளிக்கு வருமென நம்புகிறேன். அவ்வாறு கிடைக்கும் புதிய குறிப்புக்களை அடுத்த பதிப்பில் கலந்து அச்சிட அவா உடையேன்.

குருநாதரது அருள் நெறியை அன்பர்கள் பலரும் அறிய வேண்டுமென்ற ஆவலோடு, அவரவர்கள் வசமுள்ள குறிப்புக்களை நேரிலும் தபால் மூலமும், அளித்து உதவிய அடியார்கள் பலர்க்கும் அடிமையின் வணக்கம் எண்ணில.

இந்நூல் விற்பனையால் வரும் பொருளில், செலவு முதல் போக, எஞ்சுவது குருநாதரது பணிக்கும் கொள்கையை மேலும் பரப்புதற்குமே செலவழிக்கப் பெறும். எனவே, இதனைப்பெறுபவர் தாம் படித்து நற்பொருள் தெரிந்து இம்மை மறுமைப் பயன்களை யடைவதோடு மக்கள் தொகுதிக்கு நல்ல தொண்டும் புரிந்தவர் ஆவர்.

காஞ்சிபுரம்
1—3—37

அடியார்கள் பாத ஊழியன்,
ஆ. நரசிம்மலு.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# நூலாசிரியர் குறிப்பு

கல்லில் நார் உரிப்பது போல என்னிடமும் இவ்வரலாற்றை எழுதி வாங்கிவிட்டார் அன்பர் திரு. ஆ. நரசிம்மலு நாயுடு. சென்ற ஐந்தாறு திங்களாக அவரை என் வாயிலிலே காக்க வைத்து விட்டது எனக்கு மிக்க வருத்தத்தைத் தருகின்றது. அதற்கு என்னை அவர் பொறுப்பார். ஏனெனில், அவரோடு பேசவும் சில நாளில் நேரங் காணாது போனது என்னுடைய குறையல்ல, எனது தொழிலின் குறையென்பதை அவரே கண்ணாரக் கண்டு இருக்கின்றார்.

கரும்புத் தின்ன கூலி வேண்டுமா? ஆண்டவனது நடமாடுங் கோயிலாகத் தோன்றியருளிய அடிகளாரது வரலாற்றை வரையும் பேறு பெற ஒருவரை ஒருவர் வேண்ட வேண்டுமா? அடிகளாரை நேரே சேவை செய்யும் நல்வினை யில்லாமற் போயினும், அவர்களது வரலாற்றை நல்லடியாராகிய திரு. ஆ. நரசிம்மலு நாயுடு வாயிலாக அறியவும், அறிந்த வண்ணம் வரையவுமாவது புண்ணியம் இருந்தது பற்றி அளவிலா மகிழ்ச்சி யடைகின்றேன். திரு. நாயுடுவிடம், நேரே கேட்டவும், அவர் காட்டிய குறிப்புகளில் கண்டவுமே யல்லாமல் சொந்தக் கருத்தாக நான் ஏதும் எழுதவில்லை என்பதை இங்கே குறித்து வைக்க விரும்புகிறேன்.

அரிய பெருந்தொண்டினை ஆற்றுவதற்குரிய பெருந்தகையார்கள் நம் நாட்டில் பலர் இருக்க எனக்கு அத்தொண்டால் வரும் பேற்றினை மடுத்துத்தர அன்பு கூர்ந்த எனது உழுவல் அன்பர் திரு. த. குப்புசாமி முதலியாருக்கும், அவர் காட்டிய குறிப்பை உடும்பெனப் பற்றிய அன்பர் திரு. ஆ. நரசிம்மலு நாயுடுவுக்கும் என்ன கைம்மாறு செய்யவல்லேன்?

சைதாப்பேட்டை
1-3-1937

கி. இராமலிங்கன்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

---

திரண்டிடு மடியார் தீவினை தீர்ப்பான் திருவுருக் கொண்டவெம் சிவமே
யரண்டரு நின்ற னடிமலரை மலரா யனுதினம் போற்றிசெய் கின்றோம்
இரண்டறக் கலந்தின் புறவருள் செய்வாய் இணையிலா துயர்ந்திடு பவனே
முரண்பட லில்லா ரெட்டியப் பட்டி முதுநகர் வருகுரு பரனே.

அன்புசெய் வார்க்கு வேண்டுவ தந்தே யளித்திடு கருணையை யுடையோன்
வன்புசெய் வார்க்கு மறக்கருணையினால் வகைபடு நலம்வரச் செய்வோன்
முன்புபின் பில்லா முதல்வனென் றின்னும் முழுமறை முழங்கிடு தலைவன்
நன்மனத் தவர்சூழ் ரெட்டியப் பட்டி நகர்தனிற் குருவென வந்தோன்.

தரைபுகழ் வளஞ்சேர் ரெட்டியப் பட்டித் தனிநகர் வந்தடி யேங்கள்
உரைபுக ழேற்றுன் கருணையை யளித்தா யுய்ந்தன முய்ந்தன மென்றும்
வரையினிற் சிறந்த கயிலையை விட்டு வந்தனை தந்தனை ஞானம்
குரைகட லுலகிற் கண்ணினிற் கண்ட குறைவிலாத் தெய்வநீ யன்றோ.

கண்டிடும் பொருள்கள் பற்பல வாயுங் காணொணாப் பலபொரு ளாயும்
விண்டிட முடியாப் பலபொரு ளாயும் வேறுமாம் பலபொரு ளாயும்
தொண்டரை யாளுங் குருபர னாயுந் துலங்கிடு சத்தியப் பொருளே
மண்டலம் புகழும் ரெட்டியப் பட்டி வளநகர்க் குருபரா போற்றி.

---

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# வழிகாட்டும் வான்பொருள்

## உள்ளுறை


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| **I. வாழ்வெனும் கடலும் வழிகாட்டும் தலைவனும்** | | |
| 1. வாழ்வெனும் கடல் | ... | 1 |
| 2. வழிகாட்டும் தலைவன் | ... | 4 |
| **II. பிறத்தலும் வளர்தலும்** | | |
| 1. இடத்தின் அமைப்பு | ... | 8 |
| 2. பரம்பரைப் பெருமை | ... | 9 |
| 3. பெற்றவர் நற்றிறன் | ... | ,, |
| 4. தோற்றத்தின் ஏற்றம் | ... | 11 |
| 5. தொழுதலும் அழுதலும் | ... | 12 |
| 6. கண்டவர் விண்டமை | ... | ,, |
| 7. பள்ளிப் படிப்பு | ... | 13 |
| 8. ஓதாது உணர்தல் | ... | ,, |
| 9. உடல் உரம் பேணல் | ... | 14 |
| 10. சிலம்பச் சிறப்பு | ... | ,, |
| **III. வேளாண்மையும் தாளாண்மையும்** | | |
| 1. பயிர்த் தொழிற் பாங்கு | ... | 16 |
| 2. ஏழைகட்கு ஏக்கம் | ... | ,, |
| 3. வள்ளல் வாணிபம் | ... | 17 |
| 4. வீட்டில் விசாரம் | ... | ,, |
| 5. தனிச்செல நினைவு | ... | 18 |
| **IV. மதுரை வாழ்க்கையும் மாண்புச் செயல்களும்** | | |
| 1. மறைந்துறையும் மனம் | ... | 19 |
| i. மதுரை நகர் அடைதல் | ... | ,, |
| ii. கடைதனில் கணக்கு | ... | ,, |
| iii. தினசரி ஒழுக்கம் | ... | 20 |
| iv. முன்னை வினை மணம் | ... | 21 |
| v. தந்தையார் சிவபதம் | ... | 23 |

2. 'இரெட்டியப்பட்டி சுவாமி' திருநாமம் ... ,,
i. மானுமதுரைச் சுவாமிகள் கூட்டுறவு ,,
ii. பரிபூரண விநாயகர் திருக்காட்சி ... 24
3. பம்பாய் பயணம் .... 26
i. இந்துஸ்தானி, இஸ்லாம் மதப்பயிற்சி ,,
ii. பம்பாய்க்கனுப்ப ஏற்பாடு ... ,,
iii. சுவாமிகள் செல்லத் திட்டம் ... 27
iv. பம்பாயில் வாணிபம் ... 28
v. திரும்பவேண்டிய காரணம் ... ,,
vi. கிறித்து மதம், அரசியல் அறிவு ... 29
4. அன்பரை ஆட்படுத்தல் ... ,,
i. அன்பர் குழாம் ... ,,
ii. விநாயகர் ஆலய அமைப்பும் கும்பாபிடேகமும் ... 30
iii. கடம்பவன நாதர் பிரதிஷ்டை ... 31
5. பாடல் உதயம் ... 32
i. ஊற்றெடுக்கும் உள்ளம் ... ,,
ii. பரமனருள் பரிவு .... 33
iii. மனதினுக்கு உபதேசம் ... ,,
6. ஊரெங்கும் புகழ் ... 34
7. ஆன்ம பூசை ... 35
i. அருள் நினைந்துருகல் ... ,,
ii. மௌனம் ஏற்று அமர்தல் ... ,,
iii. உண்ணாது உறைதல் .. 36
iv. பைத்தியம் எனப்பெறல் ... 37
v. மதுரையிடம் விடை கொளல் ... ,,

## V. பொதிகை வாசமும் பூரண அருளும்

1. பொதிகை நோக்கம் ... 39
i. செந்திலாண்டவன் சேவை ... ,,
ii. குகை யடைதல் ... 40
iii. குகையின் அமைப்பு ... 41
iv. தனித்தவ வொழுக்கம் ... 42

2. அன்னையார்க்கு அரும்பணி ... 43
i. தாய்நிலை அறிதல் .... ,,
ii. மலை விட்டு ஊர் செலல் ... 44
iii. தினசரி வழிபாடு ... 45
iv. அடியவர் கூட்டம் ... ,,
v. சித்திக் கணபதிசீராலயம் ... 46
vi. அற்புத ஆற்றல் ... 47
vii. சட்டத்திற்குக் கடைக்கால் ... 49
viii. இடையிடையே போதிகை ... 50
ix. அன்னையார் அடக்கம் ... 51
x. மண்டல மௌனம் ... 52
xi. மறுபடியும் போதிகை ... 53
3. பூரண அருள் பெறல் ... 54
i. போதிகை நிருவிகல்பம் ... ,,
ii. அருள் நிரம்பப் பெறல் ... 55
iii. உலகத்தின் மீது இரக்கம் ... 56

VI சுவாமிகளது சட்டமும் சுகம் பெறு திட்டமும்

1. சட்டத்தின் நோக்கம் ... 58
i. இம்மை இன்பம் ... ,,
ii. மறுமைப்பேறு ... ,,
iii. சமயங்களின் சங்கடம் ... 59
iv. சுருக்க முறையின் அவசியம் ... 60
2. 'சட்டம்' என்று ஏன் பெயர்? ... 61
i. அரசியல் முறை ... ,,
ii. இயற்கையின் இயல்பு ... ,,
iii. அவை போல் அமைப்பு ... ,,
3. எவரும் சட்டம் ஏற்கலாம் ... 62
i. சாதி மத பேதமில்லை ... ,,
ii. வயதும் வழக்கமும் வழி நில்லா ... 63
iii. வான்பொருள் வழிகாட்டும் ... 64
4. சட்டத்தின் பொதுப்பகுதி ... 65
i. ஒரு தெய்வக் கொள்கை ... ,,
ii. மரக்கறி உணவு ... ,,

iii. பஞ்சமா பாதகம் தவிர்த்தல் ... 66
iv. வெள்ளி விரதம் ... 67
v. செத்தார்க்குச் சமாதி ... 68
5. சட்டத்தின் சிறப்பியல் .... 69
i. நாள் தவறு நீராட்டமும் வழிபாடும் ,,
௧. விடியல் நீராட்டின் விழுமம் ... ,,
௨. எந்நீராயினும் ஏற்றதாகும் ... 70
௩. அரை ஸ்நானம் ஆகாது ... ,,
௪. வந்தனை வழிபாடு ... 71
ii. பச்சை நீர்ப் பழக்கம் ... 72
௧. நீராடப் பச்சை நீர் ... ,,
௨. அருந்த அந்நீரே ... ,,
௩. வெந்நீர் வேண்டாம் ... ,,
iii. மருந்தென்பது அருந்தாமை ... 73
௧. மருந்து இயற்கைக்குமாறு ... ,,
௨. வினை வளர்க்கும் விரோதி ... ,,
௩. உடையவன் உறுதிக்கு ஊனம் 74
iv. பிணி வந்தால் யாது செய்தல் ... 75
௧. காலை மாலை நீராட்டம் ... ,,
(i) சகல நோய் ... ,,
(ii) பிரசவம் ... 77
(iii) விஷக்கடி ... 78
(iv) வெட்டு ரணம் ... ,,
௨ திருநீறும் தீர்த்தமும் ... ,,
௩. ஆண்டவன் நாம மனனம் .... 79
௪. அச்சம் அணுவும் இல்லை ... ,,
v. கடவுளே கதி .... 80
௧. நம்போல் உயிரை நாடாமை ... ,,
௨. நாளை கோளை நம்பாமை .... 82
௩. மணிமந்திரம் மருவாமை ... 83
௪. பிரார்த்தனை செய்து கொள்ளாமை 85
௫. அறமன்றம் அணுகாமை ... 86
௬. இறந்தவருக்கு இரங்காமை ... 87

vi. ஞான நிஷ்டை ... 88

க. நிஷ்டையின் அவசியம் ... ,,

உ. கூடும் நேரம் ... 89

ங. அமரும் முறை ... ,,

ச. முறையிடும் சமயம் ... 91

ரு. காணும் காட்சி ... ,,

6. சட்டம் மீறினால் தண்டனை ... 92

i. உடலில் உபாதி ... ,,

ii. வேறுபல தடைகள் ... 93

iii. மீறிய செயல் கைகூடாமை ... ,,

7. பரிகாரமும் நிவர்த்தியும் ... 94

8. சட்டத்தின் பயன் ... 95

i. வேலைக்கு ஏற்றகூலி ... ,,

ii. தூயநல் வாழ்வு ... 96

iii. உடையவனிடம் உறுதி ... 97

iv. வழிகாட்டும் வளமை ... 98

9. சட்ட அனுபவம் இரகசியம் ... 99

## VII. அடியாரைத் தேர்தலும் அருளாலே ஆள்தலும்

1. ஆண்டவன் அருளை வழங்க அவா ... 101

2. அடியவரது ஆவல் நோக்கம் ... ,,

3. அருள் செலுத்தச் செல்லல் ... ,,

4. அடியவரைத் தேரும் அருமை ... 103

5. அருளாலே ஆளும் பெருமை ... 106

i. ஆள்தற்குரிய அருந்தகைமை ... ,,

க. தெய்வத்தின் தோற்றம் ... ,,

உ. குழந்தையின் குணம் ... 107

ங. கனியினும் இனிமை ... ,,

ச. கைம்மாறு கருதாக்கடமை ... 108

ரு. கடையேற்றும் உறுதி ... 110

ii. அற்புத அருளாட்சி ... 111

iii. பாடல் பான்மை ... 129

VIII. அடியவரது அன்பும் அதிசய அனுபவமும்

1. அன்புசெய் முறைகள் .... 131
   i. வருகை வேட்கை ... ,,
   ii. நல்வர வேற்பு ... 132
   iii. திருவடி பூசை ... ,,
   iv. உண்மை உபசாரம் ... 134
   v. உற்சவ ஊர்வலம் ... 136
2. அதிசய அனுபவம் ... 141
   i. விபூதி விலாசம் ... ,,
   ii. அற்புத நிகழ்ச்சி ... 142
   iii. ஆபத்தில் அருந்துணை ... 143
   iv. வளம்பெறு வாழ்வு ... 144

IX. போலிச்சுவாமிகளும் பொய் அடியவர்களும்

1, போலிச்சுவாமிகள் தோற்றம் ... 146
2. பொய்யடியவர் ஏமாற்றம் ... ,,
3. உண்மை உணரா உரை ... 147

X. ஆண்டவன் மறைவும் அடியவர் வழிபாடும்

1. அடியார்க்கு அறிக்கை ... 148
2. நிருவிகல்ப நிஷ்டை ... 149
3. பிறப்பிடமே மறைவிடம் ... ,,
4. திருமேனித் திருக்காப்பு ... 150
5. ஆலய அமைப்பு .... ,,
6. வந்தனை வழிபாடு ... 151

XI, என்றும் வழிகாட்டும் எந்தை குருநாதர்

1. மறைந்தும் அருளும் மகிமை ... 153
2. அனைவரை ஆளும் அருமை ... 154

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

# பிழை திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| iv. | 30 | குகை | பொதிகை |
| 3 | 27 | அவை | அவற்றில் |
| 4 | 18 | ஏதோதோ | ஏதேதோ |
| 10 | 5 | கருவரை | கருவறை |
| | 19 | பெர்ருத்த | பொறுத்த |
| 11 | 28 | அவர்க்கு | அவர்கள் |
| 14 | 10 | பொருத்தது | பொறுத்தது |
| 15 | 6 | கடை | கரை |
| 21 | 1 | விடியல் | விடியல்மணி |
| 23 | 6 | ஆனி மாதத்திற்கு அடுத்த | அவ்வாண்டு |
| 29 | 16 | திருசிரபுரம் | திரிசிரபுரம் |
| 31 | 11 | முழக்கை | முழுக்கை |
| 33 | 12 | திடமேலே | திமேலே |
| 36 | 23 | உடம்பு | உடம்புக்கு |
| 39 | 22 | உள்ளூர வழிப்படும் | உள்ளூரவழிபடும் |
| 46 | | சீரா லாயம் | சீராலயம் |
| 50 | 5 | சக்தி | சித்தி |
| 51 | 26 | கட்டு | கட்கு |
| 52 | 20 | அசைக்கினுர்கள் | அசைத்தார்கள் |
| 56 | 3 | அவற்றினுல் | அதனுல் |
| | 18 | அழை | இழை |
| 59 | 3 | மறுமையை | வீட்டை |
| | 5 | முன்பதே | முன்பே |
| 67 | 7 | சட்டத்தில | சட்டத்தில் |
| 71 | 24 | தேங்காய்ப் | தேங்காய் |
| 75 | 11 | கொண்டுவிட்ட | கொண்ட |
| | 14 | என்று | என்பதைச் |
| 80 | 17 | உயிர்களாகப் | மக்களாகப் |
| 93 | 20 | பண்ணுமல் | பண்ணுத |
| 96 | 10 | சாமிச் | சாமி |
| | 28 | வளர்ச் | வளர்

| | | | |
|---|---|---|---|
| 97 | 22 | முடி | மூடி |
| | 23 | நெஞ்சே | னெஞ்சே |
| | 26 | | —நடலையில்லோம் |
| 99 | 17 | தான் | தாம் |
| 101 | 10 | திருவருளானது | திருவருளின்படி |
| 102 | 22 | சொரியின் | சொரி |
| | 27 | சொரியன் | |
| 104 | 30 | வெள்ளிட | வெள்ளிடை |
| 106 | 17 | மணக்கண் | மனக்கண் |
| 107 | 4 | தூரே | தூரம் |
| 110 | 3 | படைத்தார்க்கு | படைத்தாற்கு |
| | 3 | மற்று அவர் | பொன்படைத்தோன் |
| 116 | 15 | இணங்க | இணங்கி |
| 125 | 4 | என்பவர் | என்பவன் |
| 127 | 22 | தடுமாடி | தடுமாறி |
| 129 | 27 | படிக் | படி |
| 131 | 21 | இனிது கைகூடி | இனிது |
| 133 | 12 | கனிவகைத் | கனிவகை |
| | 21 | மிக்கப் | மிக்க |
| 134 | 16 | சோமநாத | சோமசுந்தரசாமி |
| 136 | 14 | மகிபராகிய | மகிபனாகிய |
| | 17 | ஊனும் | ஊணும் |
| 137 | 12 | மஞ்சநீர் | மஞ்சன நீர் |
| 141 | 1 | மண்டகப்படி | மண்டபப்படி |
| | 28 | படிப் | படி |
| 143 | 2 | செட்டியார் | ரெட்டியார் |
| 155 | 14 | எவர்தான் | எவர்தாம் |

பிழைகளைத் திருத்திக் கொண்டு வாசிக்க.

உ

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

# வழிகாட்டும் வான்பொருள்

(திரு இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு)

---

## I

## வாழ்வெனும் கடலும் வழிகாட்டும் தலைவனும்.

### 1. வாழ்வெனும் கடல்.

உலகம் ஒரு பரந்த கடலாகக் காண்கிறது. இதன் கரை எங்கே உளது என்று கண்டு அறியக்கூட வில்லை. ஆழத்தை அளவு இட்டுத் தெரிந்து கொள்ள முடியவில்லை. எதிர்பாராத இடங்களிலே, குதிருக்குள் பொருளைப்போல, எதிர்ந்தவர்களைத் தகர்த்து வீழ்த்தப், பெருங்கற்பாறைகள் ஆங்காங்கு மறைந்து கிடக்கின்றன. நினைக்கும் நேரத்தில், நீந்தும் பொருள்களைப், பற்றி இழுத்துப் பாதாளத்தில் சேர்த்துவிட நீர்ச்சுழிகள் இங்கும் அங்கும் நிறைந்திருக்கின்றன. நீருக்குள்ளே யாருக்கும் அஞ்சாத திமிங்கிலங்களும், மறநெஞ்சுடைய சுறுமீன்களும், செம்மையும் அரித்துண்ணும் சென்னாகவனிக் கூட்டமும், இரும்பையும் அழிக்கும் இருவும் பிறவும் ஏராளமாக இருக்கின்றன. நீருக்கு மேலே, பேரலையும் பெரும்புயலும், எந்த வேளையில் என்ன தீங்கு செய்யுமோ என்று எண்ணித் துணியலாகாதபடி, இயங்கிக் கொண்டிருக்கின்றன.

# வழிகாட்டும் வான்பொருள்

பார்வைக்குப் பகட்டாகப் பல பல பசும் பொற் குன்றுகளும், புது மணப் பூஞ்சோலைகளும், மகிழ்ச்சி தரும் மாளிகைகளும், இழுக்கும் இனிய காட்சிகளும், இவ்விடத்தும் அவ்விடத்தும், நிலைத்தும் நீங்கியும், தோற்றந் தருகின்றன. இவைகளுக்கு இடையே, கூட்டங் கூட்டமாக அழகிய கப்பல்கள், போகும் இடந் தெரியாமல், போய்க்கொண்டிருக்கின்றன. எங்கோ ஒவ்வோரிடத்தில், வழியறிந்து விரைந்து செல்லும் வல்லார்களைப்போல, தனித் தனி மரக்கலங்கள் தயக்கமில்லாமல் சென்று கொண்டிருக்கின்றன. அவற்றின் துணை பிடித்துக்கொண்டு கரையேற, அருகிலிருக்கும் அனைத்து மரக்கலங்களுக்கும், அவாவும் முயற்சியும் அரும்புவதே காணோம். தாமே இயக்கவல்ல எல்லாவித பொறிகளையும், அமைக்கப் பெற்ற இக்கப்பல்களை யல்லாமல், அக்கடலின் மீது, பாய்மரம் கட்டியவும், காற்றாலேயே ஓடக்கூடியவுமான, சிறு கப்பல்களும், படகுகளும், தோணிகளும், தெப்பங்களும், கட்டு மரங்களும், கணக்கில்லாமல் மிதந்து, காற்று அடிக்கும் வழியே செல்லுகின்றன.

ஒவ்வொரு கப்பலையும், உள்ளே சென்று, பார்த்தால், பலவகை நுணுக்கமான பொறிகள் அவற்றினில் அமைக்கப் பெற்றிருப்பது தெரியும். எந்தப் பொறியினை, எந்தக் காலத்தில், எப்படி அழுத்த வேண்டுமோ, எவ்வாறு இழுக்க வேண்டுமோ, எம்மாதிரி முறுக்க வேண்டுமோ, எவ்வண்ணந் திருக வேண்டுமோ, அப்படியே, அவ்வாறே, அம் மாதிரியே, அவ் வண்ணமே, அளவுப்படி அழுத்தியும், இழுத்தும், முறுக்கியும், திருகியும் வந்தால், கப்பலானது தானும் விரைவில் கரை சேருவது மல்லாமல், தன்னோடு உள்ள ஏனைய மரக்கலங்களையும், தோணிகளையும், படகுகளையும், தெப்பங்களையும், கட்டு மரங்களையுங்கூட தன்னோடேயே வழிகாட்டி இழுத்துச் சென்று வாழ்வெனுங் கடலின் வளக்கரையைச் செவ்விதின் சேர்விக்கும். அமைந்திருக்கும் பொறிகளை இயக்குதற்குரிய முறையிலே இயக்கினால், காண்டற்கு அரியது, எண்ணத்திற்கும் எட்டாதது, என்றெல்லாம் அடைமொழியிட்டுக் கூறப் பெறுகின்ற, வாழ்வின் எல்லையாகிய

அக்கரைதனைக், கண் இமைப்போதிலேயே திண்ணமாய் அடையவும் கூடும்.

ஆனால், அந்தோ! கப்பலில் உள்ள பேர்வழியோ அங்குள்ள பொறிகளை இயக்கும் முறையினை ஏதும் அறியமாட்டாமல், செல்லும் இடம் இது என்பதை இம்மியும் உணராது, இடர்ப்பட்டு இழிதரும் காட்சி, காண்போராது கருத்தை அழிக்கும் தன்மையதாகும். கரைதனை நோக்கிச் செல்லும் வழியிலே போக வேண்டுமே என்னும் எண்ணமும் சிறிதும் இல்லாமல், 'காண்பதற்கு அழகிதாகின்றது' என்று நினைந்து, செம்பொற்குன்றின் அருகே செல்ல விரும்பி, கப்பலிலுள்ள ஒரு பொறியை அழுத்துவான். அவனது அவாவிற்கு நேர்மாறாகக் கப்பல் வேறொரு திசையில் விரைந்து போய், மறைந்திருந்த மாபெரும் பாறையில் தாக்கும்! கப்பல் கட்டழியும்! கலங்கிக் கண்ணீர் விடுவான்! அல்லாது, அழுத்திய அழுத்து, ஒரு வேளை, கப்பலை நேரே அப் பொற்குன்று நோக்கிச் செலுத்தினாலும், வேக மிகுதியினால், அக்குன்றின் மீதே அதனைத் தள்ளித் தாக்கி உடைவிக்கும். ஒரு முறை பூஞ்சோலை மேலே வாஞ்சை வைத்து, அங்குப்போதல் வேண்டும் என்று ஒரு பொறியைத் தொடுவான். அச்செயல் மரக்கலத்தை மகரமீன் செறிந்துள்ள இடத்திலோ, படுஞ்சுழி கிடந்த பக்கலிலோ, செலுத்திவிடும்! அடுத்துள்ள கப்பல்களைக்கண்டு, அவற்றின் அமைப்பும் அழகும், செலவும் சேர்க்கையும், தன் அழகைக்காட்டினும் சிறந்தனவாய் இருப்பதாகப் பொறாது எண்ணிக்கொண்டு, அவற்றைத் தாக்கவும் தகர்க்கவும் தன்னால் ஆனபடியெல்லாம் பொறிகளை இழுத்தும் அழுத்தியும், முறுக்கியும் திருகுவான். அவன் ஒன்று எண்ண அது ஒன்றாய் முடியும். உள்ளம் நைந்து தள்ளாடித் தடமாடுவான்!

"மற்றவர் கப்பலையும் தோணியையும், படகையும் தெப்பத்தையும் அழித்தால், அவை ஆக்கப்பெற்ற பொறியும் பொருளுங்கொண்டு நம் கப்பலைச் சீர் செய்யலாம், சிறப்பாக்கலாம்", என்று ஏமாந்து எண்ணி, அவற்றிலுள்ளார் கரை சேர்தற்கெனப் பெற்றிருக்கும் அருமையான அப்பொறியையும் பொருளையும் சிதைத்துத் தன் போன்றோரோடு பங்கிட்டுக் கொள்வான். பங்கிட்டுப்

பயன்படுத்தியும், முன்னினும் கோணலாகவும், முன் நலம் அற்றுமே, தம் கப்பல் இருப்பதைக் கண்டு, மேலும் பல அழிதொழில் செய்ய அவாவுவான். செய்தும் அவாவிய பயன் கிட்டாது போக, அவலமுற்று அழுங்குவான்!

இப்படிப் பலகாலம் உழன்று வருகையில், தன்னைப்போல், தவறான முறைகளிலே பொறிகளை இயக்கிப், பொறிகளுங்கெட்டுத் தாமுங் கெட்டு, பல கப்பலாளிகள் தளர்ந்து தயங்குவதையும், அத் தளர்ந்து தயங்கும்நிலையிலும் வாளாஇராமல், வந்தவகையில் எல்லாம் பொறிகளை மேலும் முறுக்கித் திருகி, கப்பலை முரட்டுப் பாறைகளிலும், மலைகளிலும் தாக்கிச் சின்னபின்னமாக்கி முழுகவைப்பதையும், படுஞ் சுழிகளிற் செலுத்திப் பாதலத்திற்கு இழுக்கப்பெற வைப்பதையும், சுறாக்களிடையும் இறாக்களிடையும், திமிங்கிலங் களிடையும் சென்னாகவனிக் கூட்டத்திடையும் சிக்க வைத்துச் சிதையச் செய்வதையும், கண்ணால் கண்டு கொண்டு, ஆற்ற முடியாதவனாய், 'ஐயையோ! என்னாவோம்! அக்கதி தான் நமக்காமோ!' என்று பதபதைத்து, எது செய்வதெனத் தெரியாது திணறலுறுவான்!

"இந்தப் பாழுங்கப்பலில், அழகு அழகாக, ஏதோதோ பொறிகள் அமைக்கப் பெற்றிருந்தாலும், அவற்றினை எவ்வண்ணம் இயக்கினால் எளிதில் கரை சேரலாம் என்று அறியக் கூடவில்லையே!" யென்று அழுங்குவான். "இத்தனை காலமாக, இயக்கும் முறை தெரியாது இடர்ப்படுகின்றோமே, பரந்த கடலின் மீது வந்து பல நாட்களாகின்றனவே, இன்னும் இடுக்கணும் நம்மை இரையாக்கிக் கொள்ளக் கங்கணங்கட்டி யிருக்கின்றனவே, கரை சேரும் காலம் எக்காலமோ, வழிகாட்டக்கூடிய வான்பொருள் ஏதேனும் வந்து தலைப்பட்டுக் காப்பாற்றி கரை சேர்விக்காதா?" என்று ஏங்கி வங்கி யழுவான்!

## 2 வழிகாட்டும் தலைவன்

இந்நிலையில், அவன் கண்ணுக்கு, அதற்குமுன் அவன் காணமுடியாதிருந்த பல அரிய காட்சிகள் நேரும். அழகிய கப்பலும்,

அருமையான பொறிகளும், நாம் கரையடைந்து களிப்பதற்கெனவே தரப்பெற்றிருக்கின்றன என்பதையும், அவலத்தில் அலைந்து அல்லல் உறுவதற்கு அன்று என்பதையும், ஆனால் அவரவர் சொந்த அறிவற்ற செயல்களினாலேயே அவரவரது கப்பல்களை அவரவர் கீழ்வழிகளில் செலுத்திப் பாழ்ப்படுத்திக்கொள்கின்றார் என்பதையும், முனைந்து முயன்றால் ஏதும் இடரில்லாமல் எளிதில் கரை சேரும் வழியைக் காட்டி ஆட்கொள்ள அருந்துணை கட்டாயம் கைகூடும் என்பதையும், அவன் உணர்வான். இவ்வாறான உணர்ச்சி நாளோடு நாள் அவனுக்குள் மிகுந்து வரும்.

திடீரென ஒரு நாள், காற்றினாலும், அலையினாலும், ஒரு சிறிதும் அலைக்கழிக்கப் பெறாமலும், மனதைக் கவரும் மருங்குள்ள காட்சிகளால் மறித்து இழுக்கப் பெறாமலும், மறைபாறைகளுக்கும் மகர மீன் பிறவுக்கும் இரையாகப் பெறாமலும், நேர்வழியாகச் சீர்பெறச் செல்லும் சிறப்புறு மரக்கலம் ஒன்று அவன் கண்ணுக்குப் புலனாகும். அது அவனை அணுகியதும் மெல்லெனச்செல்லும். அவனது கருத்தெல்லாம் அக்கப்பலின் மீதேயே கட்டுண்டு ஓடும். எட்டிப் பார்ப்பான். "ஏன் அப்பா? எது வேண்டும்? அருகே வா" என்று அம்மரக்கலத்திலிருந்து ஒரு பெரியார் அன்பில் அழைப்பர். அக்குரலே, அவ்வழைப்பே, அவர் நோக்கே, அருந்துணை எதிர்பார்த்திருந்த அவனைப் பிணித்து, அப்பெரிய மரக்கலத்தின் பக்கல் அவனது கப்பலை அணைவிக்கும்.

அதுமுதல், தன் இயக்கமற்று, தலைவன் இயக்கமாகவே செல்லத், தன் கப்பலை விட்டுவிடுவான். சிலகாலம் அவ்வாறே நேரிய வழியிலே, முன் கப்பல் செல்லப் பின் கப்பலும் கண் மூடியோடும். இனி நெறி பிறழான் என்று தலைவன் துணிந்ததும், இரக்கங் கொண்டு, அன்பு கனிந்து, "அப்பா! நின் கப்பலிலுள்ள பொறிகளை அறிவையோ?" என்பர். "அறிவேன் ஐயனே!" என்பான். "இயக்கும் முறை அறிவையோ?" என்பர். "அறியேனே ஐயனே!" என்று வருந்துவான். "வருந்தாதே அப்பா! இதோ இந்தப் பொறியை இப்படிஇழு, அந்தப்பொறியை அப்படி அழுத்து" என்று பொறி ஒவ்வொன்றையும் தான் சொல்லுகிறபடி இயக்கச்சொல்வார்.

அங்ஙனமே இயக்குவான். தன் கப்பலும் தலைவன் கப்பலைப்போலே, சிறிதும் கோணல் பூணாது, நேர்முறையிலே செல்வது கண்டு மிக மகிழ்வான். "இவ்வளவு எளிதிலே இயக்கக் கூடிய பொறிகளின் நுணுக்கத்தை, இதுகாறும் அறியாமல் இடர்ப்பட்டோமே" என்று அதிசயிப்பான். தானே இனி அவ்வாறு இயக்கிக் கொள்ளக் கூடுமே என்று எண்ணுவான். கட்டாயம் கரை சேர்ந்து விடுவோம் என்று நம்புவான். தலைவன் கற்பித்த வகையைக் கைவிடாது கடைப்பிடித்து, இடர் ஏதும் அணுகப்பெறாது இன்பக் கரையையடைந்து விடுவான்.


இவ்வாறாக, ஏமாந்தால் ஏய்த்துவிடக்கூடிய எவ்வங்கள் பல நிறைந்த இவ்வாழ்வாகிய கடலைக் கடக்கவும், என்றும் அழியா, துன்பஞ் சலவா, பேரின்பமாகிய அதன் கரையை அணுகவும், நம் ஒவ்வொருவருக்கும் வாய்த்திருப்பது விசித்திரமாக ஆக்கப் பெற்றுள்ள உடலமாகிய இக்கப்பல்; என்றாலும், அதனைச் செவ்விதின் இயக்கும் வகையினை நாம் அறியாமலே கிடக்கின்றோம். அவ்வறியாமையினாலே அனந்தம் இடர்களுக்கு ஆளாகின்றோம். உண்மை நெறியினை உணரவும், உலக அல்லலில் உழலாது வாழ்வின் எல்லையாம் வான் நிலைதனை இவ்வுடல்கொண்டே அடையவும், வழிகாட்டும் வான் பொருளாகிய குருநாதன் வாய்க்கவேண்டும். அவ்வாய்ப்புக்கு, நாம் ஒவ்வொருவரும், வாழ்வின் தொல்லையை நினைந்து, வாய்விட்டு அழவேண்டும்; கனிந்துருகிக் கண்ணீர் மல்க வேண்டும்.

அவ்வாறு அழுதால், விழி நீர் பெருக்கினால், குருநாதன் நாம் இருக்கும் இடத்திலேயே வந்து எதிர்ப்படுவான். உலக சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப்பார்த்தால், அவ்வக்காலத்தில் அழுது ஏங்கிய உயிர்களுக்கு இரங்கி, திருவருள் வடிவான பல பெரியார்கள் தோற்றங்கொடுத்து, அழுதவர்களை அக்கரை சேர்த்திருப்பதை யறிகிறோம். அத்தகைய முனிவரர்களை நேரில் சேவித்துச் செம்மையுறும் பேறு அவ்வக்காலத்திலே அதற்கெனப் பிறந்து இருந்த உயிர்களுக்கே உரியதாகும். மற்றைக் காலத்திலேயுள்ள மற்றவர்கள் அப்பெருந்தகையாளர்களது வரலாறுகளையும், அவர்கள், உயிர்கள் உய்

வதற்குக் காட்டிய உயரிய வழிகளையும், நூல் மூலமாகத்தான் அறிந்து, பெறுதற்கேற்ற பயனைப் பெறக்கூடும்.

அப்பேரருளாளர்களைப்பற்றிய வெல்லாம் அறியும் பேறு பெறுபவர் அழிவிலாப் பேறுபெறுபவராவார் எனவே, அவ்வரும் பொருள் பற்றி வரைவதும் படிப்பதும் உயிர்கள் செயற்பால உயரிய கடமையல்லவா?

இக்கடமையை ஆற்றுகின்ற முறையிலே, சென்ற நூற்றாண்டிலே, ஆடம்பரம் இன்றி அவதரித்து, வழிகாட்டிய வான் பொருள்களில், எல்லா மக்களும் எளிதில் கையாளக்கூடிய இலேசான முறைகளை அமைத்து அளித்த ஒப்பற்ற ஒளியாகிய திரு. இரெட்டியப்பட்டி சுவாமிகளது வரலாற்றின் பெருமையும், வழிகாட்டும் நுண்மையுமே, இந்நூலில் கூற எடுத்துக்கொண்ட பொருளாகும்.



# II

# பிறத்தலும் வளர்தலும்

## 1 இடத்தின் அமைப்பு

**சு**வாமிகள் தோன்றிய இடம் இரெட்டியப்பட்டி என்னும் ஒரு சிற்றூர் ஆகும். இவ்வூர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது. சென்னையிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லும் புகைவண்டிப் பாதையிலுள்ள கோவில்பட்டி என்னும் இடத்தில் இறங்கவேண்டும். அங்கிருந்து வண்டிச்சாலை வழியாக நேர் கிழக்கே சென்றால் சுமார் ஒன்பதாவது மைலில் எட்டியாபுரம் இருக்கிறது. அங்கிருந்து இன்னும் நேர் கிழக்கேயே சுமார் பதினொரு கல் சென்றால் விளாத்தி குளம் வரும். விளாத்திகுளத்திலிருந்து நேர் வடக்கே எட்டு மைல் போனால் இரெட்டியப்பட்டி கிராமத்தை யடையலாம். இதே பெயரோடு வேறு பல சிற்றூர்களும் அப்பக்கங்களிலே இருப்பதனால், இவ்வூரைக் குறிப்பதற்கு அடுத்துள்ள நாகலாபுரத்தைச் சொல்லி, 'நாகலாபுரம் இரெட்டியப்பட்டி' என்று கூறுவது வழக்கம். சிறிது காலத்திற்கு முன்வரையில் இக்கிராமத்திற்கு எட்டியாபுரம் வரை ஜட்கா வண்டியிலும், மீதி வழியை மாட்டு வண்டியிலுமாகவே கடந்துபோக வேண்டியிருந்தது. இக்காலத்தில் அத்தகைய கஷ்டம் ஏதும் அவசியமில்லை. ஆள் ஒன்றுக்குப் பதினொன்கு அணு கட்டணத்திற்குக் கோவில்பட்டியிலிருந்து இரெட்டியப்பட்டிக்குத் தானியங்கி வாடகை வண்டிகள் (மோட்டார் பஸ்) ஓடுகின்றன. இருபத்தெட்டு மைல் தூலைவையும் இரண்டு மணி நேரத்தில் கடந்துவிடலாம்.

ஊரின் வளத்தைப்பற்றி நிரம்ப ஏதும் சொல்லுவதற்கு இல்லை. ஏழைக் குடிகள் வாழும் எண்ணிறந்த இந்தியக் கிராமங்களில் அதுவும் ஒன்று என்ற அளவே கூறலாம். பெயரைப் பார்த்தால் இரெட்டி மக்கள் அவ்வூரில் பலராக வாழ்கின்றனர் என்று எண்ண இடமுண்டு. ஆனால் அவ்வூரில் மருந்துக்குக்கூட ஒரு இரெட்டி இனத்தவர் வீடு கிடையாது. முன் எப்போதாவது ஒரு

காலத்தில் இரெட்டிமார்கள் அங்குப் பெருவாரியாக வதிந்து இருந்தனர் என்று கூறுவதற்கும் ஆதாரம் காணேம். மற்று அவ்வூருக்கு ஏன் அப்பெயர் வந்தது என்று சொல்லுவதற்குக் காரணம் ஏதும் காணக்கூடவில்லை. பெயரும் காரணமும், வளமும் வனப்பும், எப்படியானுலும், ஒரு நறுந்தாமரை மலர்ந்து மணத்தற்கு ஆதாரமாகும் சேற்றுக்குளம்போல, சுவாமிகள் திருமேனி தோற்றம் பெறுதற்கு நிலைக்களஞக இருந்தமையினுலேயே, அவ்வூரைப் பற்றி நாமும் பிறரும் நன்கு அறியவும், போற்றி மாற்ற மாடவும், நேர்கின்றது.

## 2 பரம்பரைப் பெருமை

சுவாமிகள் தென்னுட்டுச் சைவ வேளாள குடும்பத்தில் தோன்றியவர். அவரது குடும்பம் வழிவழியாகச் சிறந்துவந்த ஒன்று. பரம்பரையாக அம்மையின் ஆலயத்தில் வழிபாடும் செய்யும் வழக்கம் அக் குடும்பத்தினருக்கு இருந்துவந்தது. அவர்கள் வீட்டிற்கே 'பூசைபுரிவார் வீடு' என்று பெயர் வழங்கி வந்தது. இரெட்டியப்பட்டியிலேயே அவர்கள் குடும்பம் ஊராராலும், சுற்றுப்பக்கத்தாராலும் நன்கு மதிக்கப்பெற்றுவந்த ஒரு குடும்பமாகும்.

பல தலைமுறையாகப் பராசக்திக்குப் பணியாற்றும் பெருமையும், அச் சக்தியினிடத்தே அங்குள்ள மக்களை ஆறுபடுத்தி அவர்களுக்கு எல்லா நலங்களையும் கூட்டுவிக்கும் பெருமையும், அக்குடும்பத்தினுக்கு வாய்த்திருந்தமையினுல்தான், அதில் சுவாமிகள் தோன்றலாயினர் என்று ஊகிக்கலாம். பெரியார்களது வரலாறுகளை ஊன்றி நோக்கும் ஒவ்வொருவரும் ஓர் உண்மையைக் கவனிக்கலாம். அவர்கள் தோன்றும் குடும்பம் அவர்கள் தோன்றுதற்கென பல தலைமுறையாகப் பண்படுத்தப்பெற்று வந்திருப்பது இனிது விளங்கும். சுவாமிகளது பரம்பரை, சுவாமிகளைப் பெறுவதற்கென்று, பலகாலம் தவங்கிடந்தே இருக்கவேண்டும்.

## 3 பெற்றவர் நற்றிறன்

பரம்பரை சிறந்துவந்தாலும், அப் பரம்பரையில் ஒரு பெரியார் தோன்றுவதற்கு, அவரது பெற்றோர் மிகச் சிறந்தவர்களாக

இருத்தல் வேண்டும். சுவாமிகளது பெற்றோர் மனத்தூய்மையும், மாதவமும் உடையவர்கள். இல்லற வாழ்க்கையை இயல்பு கெடாது இனிது நடத்திவந்தவர்கள். தந்தையார் பெயர் வீரபத்திரப்பிள்ளை. தாயார் திருநாமம் ஆவுடையம்மை. இவ் இரு முது குரவரது வாழ்க்கையின் பிற்பகுதியிலேதான் சுவாமிகள், கருவரை புகுதத் திருவுளம் இருந்தது. அந்நிலையில் வீரபத்திரரும் ஆவுடையம்மையும் ஆறுமக்களை யீன்று அம்மையும் அப்பரும் போன்று விளங்கி வந்தனர்.

மண வாழ்வின் முற் பகுதியிலே, கணவன் என்னும் உணர்ச்சியும், மனைவியென்னும் உணர்ச்சியும் மிகுதியாக இருப்பதுஇயற்கை. ஒரு மகவு பிறந்ததும், அவ்வுணர்ச்சி சிறிது குறைந்து, தாய் என்ற உணர்வும் தந்தையென்ற உணர்வும் அரும்பி மலரத் தொடங்கும். இரண்டாவது குழந்தை தோன்றியதும், அவ்வாறு அரும்பி மலர்ந்த உணர்வு வளர லுறும். மேலும் மேலும் மக்களை ஈன ஈன, அன்னையும் பிதாவுமான அருட் பண்பு, அகலமுறப் பரந்து விளங்கி, உலகத்திலுள்ள எல்லா மக்கள் மீதும் எல்லா உயிர்கள் மீதும் கனிந்து பாயும். அக்காலத்திலே அவர்களுக்குப்பிறக்கும் குழந்தை அருட்பகுதி மிகுந்து தோன்றுவது இயல்பு.

சாதாரண மக்களைப் பொருத்த அளவிலேயே, உலக இயற்கை இவ்வாறு உள்ளதை நாம் காண இருக்க, தலைமுறை தலைமுறையாகத் தவங்கிடந்த பரம்பரையில் தோன்றிய இருமுது குரவராகிய வீரபத்திரரும் ஆவுடையம்மையும், மூவிரு மக்களை ஈன்ற பின்னர், இருந்த இன்னருள் முற்றிய நிலையினை, உரைகொண்டு செப்புதலைக் காட்டிலும், உய்த்து உணரலே பொருத்தமாகும். பெற்றோரது நற்றிறன் இப்படி இருந்துவருகின்ற நாளையிலே, உலகம் உய்யும் பொருட்டு, கர்த்தன் கட்டளைப்படி கருவு அரும்பலாயிற்று. ஆவுடையம்மையார், ஒரு திங்கள், இரு திங்கள், முத்திங்கள், முதலாகப் பத்துத் திங்களும், பரமன் பரங்கருணையையே கருதினவராய்க், கரு வளர்த்து வந்தனர். அம்மாதங்களிலே, அத் திருவினர், முன்னைய மக்களைச் சுமந்த காலத்திற்கும், இப்பொறையினை ஏற்று விளங்கும் இப்போதைக்கும், பெரிதும் வேறுபாடு இருந்த

கைக்கண்டு வந்தனர். தமது உள்ளமும் உடலும் அதுவரை பூண்டிராத பூரிப்பு பெற்று வருவதைத் தாம் உணரலாயினர். தமது இன்ப நிலையினை, மற்றாரும், தமது தோற்றத்தினாலும் மெய்ப்பாட்டினாலும், அறிந்து கூறிவருவதைக் கேட்டு மகிழ்வாராயினர்.

## 4 தோற்றத்தின் ஏற்றம்

பத்துத்திங்கள் முற்றியதும், கலியுகம் 4957, கொல்லம் 1032, நள ஆண்டு புரட்டாசித் திங்கள் 2ம் நாள் செவ்வாய்க்கிழமை வளர்பிறை துவிதியை திதி, இரேவதிவிண்மீன் கூடிய நன்னாளில், ஞாயிறு எழுந்து நாழிகை 25, விநாடி 47க்கு, மகர நல்லோரையில், அம்மையார் அருட்பொறையைக் கருவுயிர்த்தனர். ஆங்கிலக் கணக்கின்படி அந்நாள் கிறித்து பிறந்த 1856ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16-ம் நாள் ஆகின்றது.

குழந்தை வயிற்றில் தோன்றி வளர்ந்து வந்த அக் காலத்திலேயே, தாயின் நிலையையும் தூய பிறகுறிகளையும் நோக்கிவந்த அவ்வூர் அறிஞர்கள், அது ஓர் அதிசயக் குழந்தையாய்த்தான் இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தார்கள். மகவு மண்மீது காட்சி யளித்ததுமே, அவாவுடன் வந்து, அகத்தில் விளங்கு அருள் ஒளியை முகத்தில் காட்டும் தெய்வ அழகினைக் கண்டு, களித்து, ஊராருக்கெல்லாம் விதந்து விளம்பலாயினர். ஊராரும் பாராரும் கூட்டம் கூட்டமாகப் போந்து, பிள்ளையின் அள்ளூறும் அருள் அழகை உள்ளம் நிரம்பப் பருகி, உவகை பூக்கலாயினர். வனப்பு மிக வாய்ந்த உலகத்து ஏனைய குழவிகட்கும், இக் குழந்தைக்கும் காண இருந்த கழிபெரு வேறுபாடு ஒன்று உண்டு. அது தான், அம்மகவின் திரு முகத்திலே மிளிர்ந்த, எழுதலாகாத, எண்ணலாகாத, அருள் ஒளிப் பொலிவாகும்.

இம் மகவின் வெளித் தோற்றமே இத்துணைக் கவர்ச்சி தருவதாக இருக்க, இதன் வாழ் நாள் எத்துணைச் சிறப்பினதாக இருக்குமோ என அறிய அவாக்கொண்டு, கோள் நிலையறிந்து வரும் பொருள் உரைப்பார் கூர்ந்து ஆராயலாயினர். ஆராய்ந்த அவர்க்கு, "இது மனிதப் பிறப்பல்ல தெய்வத்தின் தோற்றம், உழல வந்த

தல்ல உய்விக்க வந்தது, அடிமை செய்யாது ஆட்கொளும் அரசு, மருளும் மன்பதைக்கு அருளும் பெருமன்னன்" என்றெல்லாம் எடுத்து எடுத்து இயம்பலாயினர்.

பெற்றெடுத்த அன்னையின் அக மகிழ்ச்சியை அளவிட்டுக் கூறலாகுமா? தந்தையின் பூரிப்பும் இந்த திட்டத்தில் இருந்தது என்றும் சொல்லமுடியுமா? குடும்பம் முழுதும் குதூகலம் அடைந்தது. ஊாரெல்லோருமே உவகை பூண்டனர். 'சுப்பிரமணியம்' என்ற அருமைத் திருநாமம் இட்டனர். குழந்தை இவர்களது அன்பின் நடுவே அருமையாக வளர்ந்து வந்தது.

## 5 தொழுதலும் அழுதலும்

வயது மூன்று ஆயிற்று. சுப்பிரமணியம் மற்ற மகவுகளைப் போல் அல்லாமல், தனிமுறையான விளையாட்டுகளையும், பேச்சுக் களையும் உடையதாய் இருந்தது. மற்ற பிள்ளைகளோடு கலந்து ஆடாது. அவர்களோடு விரும்பிப் பேசாது. தனியான இடத்தில் போய் உட்கார்ந்து கொள்ளும். ஆகாயத்தை நோக்கிக் கைகூப்பித் தொழும். மூலையைப்பார்த்து முழந்தாள் இட்டுப்பணியும். இருந் தது போல் இருந்து தேம்பித் தேம்பி அழும். அடிக்கடி பூசை அறையிற் புகுந்துகொள்ளும். புஷ்பம் எடுத்துப் பிள்ளையார் திரு வுருவத்தின் மீது போடும். சிரிக்கும் அழும், குதிக்கும் கூத் தாடும்.

## 6 கண்டவர் விண்டமை

வீட்டாரும், ஊராரும் சுப்பிரமணியத்தின் செயற்கரிய செயல் களைக்கண்டு ஒருபுறம் ஏங்கினர். ஒருபுறம் களித்தனர். ஒரு சமயம், "இது என்ன குணங்கெட்ட பிள்ளையாக இருக்கிறதே. மூளையில் ஏதாவது கெடுதி இருக்குமோ என்னவோ" என்று சொல்லி வருந்தினர். மற்றொரு சமயம், "இது அதிசயமான குழந்தைபோலும். கடவுளே உருவமாக வந்ததுபோலும்" என் றெல்லாம் சொல்லி மகிழ்ந்தனர். இவ்வாறு கண்டவர் பலரும் விண்டு வியந்து பேசத், தெய்வத்திருக்குழந்தை திகழ்ந்து வளர்ந்து வரலாயிற்று.

## 7 பள்ளிப் படிப்பு

பள்ளிக்குச் செல்லும் வயது வந்ததும், சுப்பிரமணியம், 'ஓம் அரிநமோத்துசிந்தம்' என்று ரெட்டியப்பட்டியிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றார். அவ்வூருக்கு அது ஒன்றே பாடசாலை. சாதாரண எழுத்து வாசனையுடைய ஒருவரே ஆசிரியர். கிராமத்துச் சிறுவர்கள், தப்பும் தவறுமாகவாவது, எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளப் போதுமானது அப் பள்ளிக்கூடம். மற்றப் பிள்ளைகள், ஆசிரியர் சொல்லிக்கொடுத்ததைப் படித்து ஒப்பிப்பதே கடினமாக இருக்க, சுப்பிரமணியம் குருவுக்கு மிஞ்சிய சீடராகப் படித்துச் செல்வதை, வாத்தியார் கண்டு வியப்பதுண்டு. இப்படிச் சில ஆண்டுகள் சுப்பிரமணியம் தமிழ் மொழியைப் படிக்கவும் எழுதவும் பழக்கப்பெற்றார். அவ்வளவே அவருடைய பள்ளிப் படிப்பு.

## 8 ஓதாது உணர்தல்

இனி, சுப்பிரமணியம் பெற்ற ஞானம் எல்லாம், ஆண்டவன் அருளால் ஓதாது உணர்ந்த ஞானமேயாகும். சுவாமிகள் கல்வி வளர்ச்சிக்காக கல்லூரிகளுக்குப் போகவில்லை; கற்றோரை நாடவில்லை; புஸ்தகங்கள் படிக்கவில்லை; புலவர்கள்பின் செல்லவில்லை. இக்கருத்தைச் சுவாமிகளே தமது பாடல்களில், "கலைபலவும் உற்றுணர்ந்தார் வாசல், ஒருக்காலும் சென்றறியாச் சிற்றறிவேன்." என்று கூறுகின்றார்கள். முழு அறிவுடைய முதல்வனது முற்றருளினாலேயே, தாம் ஞானம் பெற்ற உண்மையினைச் சுவாமிகள் தம் அருட்பாடலில் கூறுவது காணத்தக்கது:—

> நன்னயமாய் நின்பால் வந்து அடுத்தேன் என்தன்
> நாவினால் உனைப்பாட அருளிச் செய்தாய்
>
> பன்னு தமிழ்க் கரசே! மெய்ஞ்ஞானமூர்த்தி!
> பலகலைகள் ஆராயும் பயன்கள் நல்கி
>
> இந் நிலத்தில் உன் மகிமை யறியச் செய்த
> இங்கிதத்தை யென் சொல்வேன் எம்பிரானே."

அருமையான பொருள்களை, இனிமையான சொற்களால், நெஞ்சுருக்கும் பாடல்களாகச், சுவாமிகள்செய் திருப்பதையும், தமிழ்இலக்கியம்

சமயம்பற்றிய ஓலைச் சுவடிகளையும், அச்சுப் புத்தகங்களையும், சுவாமிகள் பிற்காலத்தில், பார்த்ததுமே பொருள் கண்டு, அடியார்களுக்கு விளக்கி வந்ததையும், கண்ணுற்ற அன்பர்களுக்குச், சுவாமிகள், ஓதாமலேயே பெற்றிருந்த உயர் ஞானத்தின் பெருமை நன்கு விளங்கும்.

## 9 உடல் உரம் பேணல்


வாத்தியார் இடத்தில் சென்று, புத்தகங்கொண்டு படித்த படிப்பு மிகக்கொஞ்சமேயானாலும், சுப்பிரமணியத்திற்கு எண்ணங்கள் எல்லையில்லாது போய்க்கொண்டிருக்கும். அப்படி சிந்தித்து சிந்தித்து, அச்சிறு வயதிலேயே அவர் பல உயர்ந்த முடிவுகளுக்கு வந்தார். அத்தகைய முடிவுகளிலே ஒன்று நமது உடலைப் பொருத்தது. நமக்கு இயற்கையாக உள்ள அறியாமையை, நாம் பெற்றிருக்கும் உடலைக்கொண்டே போக்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என்னும் உண்மையை, அவர் நன்கு கண்டுகொண்டார். எனவே, இந்த உடல் பரிசுத்தமாகப் பாதுகாக்கப்படவேண்டிய ஓர் அரும்பொருள் என்பதை யுணர்ந்திருந்தார். இவ்வுடலின் எந்தப் பகுதியையும் எந்த வகையிலும் சிதைக்கலாகாது, சீர்கெடச்செய்தலாகாது என்னும் உறுதி பூண்டிருந்தார். இத்தேகம் திடமானதாகச், செம்மையானதாக, தூய்மையானதாக, இருத்தற்கேற்ற விதிகள் பலவற்றை நாடலானார்.

## 10 சிலம்பச் சிறப்பு

அவ்வாறு நாடிய நாட்டத்தின் பயன்களில் ஒன்றே, சுவாமிகள் இளஞ் சுப்பிரமணியமாயிருந்தபோது சிலம்பப் பயிற்சி செய்து வந்ததாகும். இப்பயிற்சி உடலின் உறுப்புக்களை உறுதி செய்வதோடு, தற்பாதுகாப்புக்குப் பெரிதும் துணையானதாகும். துப்பாக்கி, கத்தி முதலிய ஆயுதங்களைப்போல, சிலம்பப் பயிற்சியில் கையாளப் பெறும் கம்பானது, எதிர்ப்பவர்களுக்கு அக்கிரமமாகக் கேடுதியையும் உயிர்ச்சேதத்தையும் விளைப்பதில்லை. நம் நாட்டுப் பண்டைய பயிற்சிகளிலே இது ஒரு சிறந்த பயிற்சியாகும். உலகப் போக்காக இவ் வித்தையைப் பயிலாமலே, உயரிய நோக்கத்தோடு பயின்று வந்தமையினாலே, இப்பயிற்சி யுடையவர்கள்

# பிறத்தலும் வளர்தலும்

வீண் சண்டைக்குப் போவதும் வீரியம் பேசிச்செல்வதும் போல, சுவாமிகள் போகார்கள் என்று எடுத்து இயம்பவேண்டுவதில்லை. என்றாலும், இவ்வித்தை கற்ற மற்றவர்களைக்காட்டிலும், சுவாமிகள் இவ்வித்தையில் மிகத் தேர்ச்சியுற்றிருந்தார்கள் என்று தெரிகிறது. வினைகளின் தாக்கை உயிர்கள் தடுத்துக்கொள்ளுதற்கு உரிய உயர்ந்த வித்தையை மக்களுக்குக் கற்றுக்கொடுத்து கடையேற்ற வந்த சுவாமிகள், உடலுக்குப் பகைவர்களால் நேரவல்ல தாக்குகளைத் தடுத்துக்கொள்ளுதற்கு உரிய சிலம்ப வித்தையில் சிறந்திருந்தது பெரிதாகுமா?



# III

# வேளாண்மையும் தாளாண்மையும்

## 1 பயிர்த்தொழிற் பாங்கு

சுப்பிரமணியத்திற்குப் பதினாறு வயது ஆயிற்று. அவர் பிறந்த வேளாள குலத்திற்கு ஏற்க வேளாண்மைத் தொழிலைச் செய்ய உடன்பட்டார். சுப்பிரமணியம் மேழிப்பால் குடிக்கத் தொடங்கியதுமே, அவரது குடும்பத்திற்குப் பயிர்த்தொழில் பல படப் பயன் கொடுக்கலாயிற்று. ஒரு கலம் விளைந்த நிலம் இருகலமாக விளைவது கண்டு, 'சுப்பிரமணியம் கைராசி யுடையவன்' என்று பெற்றோரும் மற்றோரும் மகிழ்ந்தும் புகழ்ந்தும் கூறலானார்கள். களர் புலத்தைப் போன்ற பலதிற மக்களது மனங்களை யெல்லாம், அன்பெனும் கலப்பையால் உழுது உழுது, அருளெனும் அருநீர்ப் பாய்ச்சி, அவற்றில் கடவுள் எனும் கரும்புப்பயிரை விளைவித்துக் கொடுப்பதற்கெனவே வந்துதித்த சுப்பிரமணியத்திற்கு, மண்ணைக் கிண்டி மகிதலத்துப் பயிர்களை மாண்புற விளைவிப்பது ஒரு கடினமான செயலாகுமா? தொட்டதெல்லாம் பொன் இட்டதெல்லாம் மாணிக்கமாகும் இயல்பு வாய்ந்ததல்லவா, அத்தகையாரது அருமைத் திருக்கரங்கள்?

## 2 ஏழைகட்கு ஏக்கம்

பாங்கு பெற பயிர்த்தொழிலைச் செய்து வந்த சுப்பிரமணியத்திற்கு, அக்காலத்தில் அவ்வூர் மக்களுக்கு இருந்த ஏழ்மையும் துயரமும் ஏக்கந்தரலாயின. உணவிற்கு உரிய தானியங்களைத், தூத்துக்குடி முதலிய தொலைவான இடங்களிலிருந்து, அயலூர் வர்த்தகர்கள் வாங்கி வந்து, ஒன்றுக்குப் பலவாக இலாபம் வைத்து விற்று, ஏழை மக்களை இன்னல் படுத்துவது பார்த்து சுப்பிரமணியப் பிள்ளை மனம் நையலானார். பயிர்த்தொழிலில் இருந்த பற்று சிறிது சிறிதாக விட்டு வந்தது. எளிய நம் மக்களுக்கு, நாம் உழைத்து உதவி செய்யலாகாதா என்று எண்ணலானார். நல்லதொரு வழி அவருக்குத் தோன்றிற்று.

## 3 வள்ளல் வாணிபம்

தூத்துக்குடிக்கு வண்டி கட்டுவதுதான் தகுந்த வழி என்று அவர் உறுதி செய்தார். இரெட்டியப்பட்டிக்கும் தூத்துக்குடிக்கும் சுமார் முப்பது மைல் தூரம். காட்டு வழி, கள்ளர் பயம். அப் பக்கங்களில் புஞ்சைப்புலமாகிய கரிசல் நிலத்திற்குக் 'காடு' என்று பெயர் வழங்குகிறது. இவர் புறப்படவே மற்றவர்களும் புறப்பட லாயினர். கையில் சிறிது பொருள்கொண்டு போய், துறைமுக மாகிய தூத்துக்குடியில் விலை மலிவாக விற்கும் அரிசி முதலிய அருந்தும் பொருள்களை வாங்கி, வண்டியில் ஏற்றிக்கொள்வார். இரெட்டியப்பட்டியிலுள்ள ஏழை ஜனங்கள் சுப்பிரமணியப் பிள்ளை யின் வண்டி எப்போது வரும் என்று எதிர்பார்த்திருப்பார்கள். கொள்விலைக்கே அள்ளி யளிப்பாரென்றால், அவர் கொண்டுவரும் பொருள்கள் வந்தது வராதமுன்பே செலவாய் விடுவதில் வியப் பில்லை. சுப்பிரமணியப் பிள்ளை ஊருக்குப் பிள்ளையானார்.

அவர் வண்டி செலுத்திச் செல்லுகின்ற வரையில், அவரது வண்டியில் வரும் பண்டங்களுக்காவது, அவரது வண்டியோடு வரும் வண்டிகளுக்காவது, கள்ளர் பயமென்பது கடுகளவும் இராது. பிள்ளை அவர்களின் உள்ளத்தின் உள்ளிருந்து ஒளி வீசும், எல்லாம் வல்ல பரம்பொருள் தன்மையை அறியாத சாதாரண மக்களும், அவரது திண்ணிய உடலமைப்பிலும் திட்டமான சிலம்பப் பயிற்சி யிலும், நம்பிக்கை நிறைந்து, காட்டு வழிக்கும் கள்ளர் பயத்துக்கும் அச்சம் அற்று, அவருடன் செல்வார்கள்.

## 4 வீட்டில் விசாரம்

பயிர்த்தொழிலில் ஊக்கம் குன்றியதற்குச், சுப்பிரமணியப் பிள்ளையின் உறவினர் வருத்தம் கொண்டனர். ஆயினும் அவர் வாணிபம் செய்து, கோணி கோணியாகச் சம்பாதித்துத் தருவார், என்னும் எண்ணம் அவர்கள் வருத்தத்தை ஆற்றுவதாயிருந்தது. முதல் முறை சுப்பிரமணியம் தூத்துக்குடி சென்று வந்ததுமே, அவர்களது ஆசையெல்லாம் அஸ்தமனமாய் விட்டது. "தூ தூ இது எதுக்கும் பயனற்ற பிள்ளை" யென்று வெறுக்கலானார்கள்.

மறுபடியும் மறுபடியும், வண்டிகட்டிச் செல்லச் செல்ல, சுப்பிரமணியப் பிள்ளையிடம் அவர்களுக்கு வெறுப்பும் சினமும் மிகுந்து வந்தன.

## 5 தனிச்செல நினைவு

வீட்டாருடைய வெறுப்பையும் சினத்தையுமே சுப்பிரமணியப் பிள்ளையும் எதிர்பார்த்திருந்தார். அவருக்கு ஏற்கனவே, உற்றார் உறவினரை விட்டுத், தனித்திருந்து வாழ்ந்து வருதல் வேண்டும் என்னும் எண்ணம் வளர்ந்து வந்து கொண்டிருந்தது. வீட்டில் ஏற்பட்டு வந்த வெறுப்பு, அவருடைய கருத்துக்குப் பெரிதும் துணை செய்வதாக இருந்தது. அவர் வாழ்க்கையில் செய்ய வேண்டியிருந்த அரும்பெரும் பணியைப்பற்றிப் பலவாறு சிந்திக்கலானார். எவ்விடத்திற்குச் சென்றால், தாம் கோரிய எண்ணம் முடியும் என்று ஆராய்ந்தார். எவ்வாறு இனி வாழ்வு செய்தால் தாம் கருதி வந்த செயல் கைகூடும் என்று நினைவு செய்யலானார்.

தம்முடைய தொண்டுக்கு உரிய இடம் இன்னது இன்னது தான், அவ்வவ்விடத்திலே, இவ்வளவு இவ்வளவு காலம், இன்ன இன்னமாதிரி, வாழ்ந்து வருதல் வேண்டும் என்று தீர்மானம் ஏற்பட்டுவிட்டது. அப்போது சுப்பிரமணியப் பிள்ளைக்கு வயது 23 இருக்கும். பிரமாதி வருஷம் நடந்து வந்தது. வீட்டை விட்டுப் புறப்பட்டார்.



# IV

# மதுரை வாழ்க்கையும் மாண்புச் செயல்களும்

## 1 மறைந்துறையும் மனம்

### i மதுரை நகர் அடைதல்

சுப்பிரமணியப் பிள்ளை வழிநடந்து சென்றபோது, தாம் செல்லத் துணிந்திருந்த, இடத்தைப் பற்றிய இனிய எண்ணங்கள் அவரது நினைவில் ஒவ்வொன்றாக நிகழ்ந்து வந்தன. அண்டசரா சரங்களுக்கும் அதிபனான ஆண்டவனே, அவ்வூரில் உருக்கொண்டு வந்து, சங்கம் அமர்ந்து, தமிழையும் அறிவையும் வளர்த்திருக்கின்றார் என்னும் வரலாறும், எல்லாப் பொருள்களின் உள்ளேயும் இருந்து இயக்குகின்ற பராசக்தியே, திருமேனி கொண்டு அவதரித்து, அவ்வூரில் அரசுகட்டில் ஏறி ஆண்டனள் என்னும் சரிதமும், அழகும் இயற்கையும் அருவமும் உருவமுமாயுள்ள அறுமுகச் சிவம் அங்கு அருள் ஆடல்கள் புரிந்த அருமையாம் பெற்றியும், அளவிறந்த அடியார்கள், அந்நகரிலே தாண்டவமிடும் அருட் சோதிக்கு ஆளாகும்படி அருந்தவம்புரிந்து, அருளும், அதன் முடிவாம் பேரின்ப முத்தியும், பெற்ற சிறப்பும், சுப்பிரமணியப் பிள்ளையின் மனதில், ஒவ்வொன்றும் அப்போதுதான் நடப்பது போலத் தோன்றி இன்பம் அளித்தன. பசுவைக்காணப் பரிந்து ஓடிச் செல்லும் கன்றினைப்போல, அவர் அத்துணைப் பெருமை வாய்ந்த அம்மதுரைமாநகரை யணுகும் மனதுடையவராய் விரைந்து போய் அப்பெரும்பதியை யடைந்தார்.

### ii கடைதனில் கணக்கு

வைகை நதிக்கரையும், அங்கயற் கண்ணியின், அருளில் அகன்றது போல அளவிலும் பரந்த, ஆலயமுமே, சுப்பிரமணியப் பிள்ளைக்கு உரிமையான இடங்களாகத் தோன்றின. இவையே தாம் கோரி வந்துள்ள கருத்தினுக்குத் தகுதியான நிலையங்களாகக் காணப் பெற்றன. என்றாலும் உலகத்தினுக்குத் தாம் யார் என்பதை

அறிவித்துக் கொள்ள உள்ளம் இல்லாதவராய்ச், சிறிது காலம்வரை மறைந்துறையும் மனமுடையவராய், இருந்தமையால், வெளியூர்களி லிருந்து அந்நகரத்திற்குப் பிழைக்க வரும் ஒரு சாதாரண ஆளைப் போலவே, வெளியாருக்குக் காட்டிக் கொண்டார்.

அவ்வாறு மறைந்து வாழ்ந்துவருவதற்குத் தக்கவழி யாது என்று அவ்வூரிலுள்ள பல துறைகளையும், இடங்களையும் ஆராய்ந் தார். அப்படி ஆராய்ந்து வந்தபோது, அவ்வூரிலே, ஸ்ரீ மீனாக்ஷியம்மன் சந்நிதிக்கருகிலே, திருநெல்வேலிப் பேட்டையிலிருந்துவந்து, சீமைச் சாமான்கள் வியாபாரம் செய்து வந்த உ. செ. இ. உருண்டை மீரா முகையதீன் ராவுத்தர் அவர்கள் கடையைப்பற்றி கேள்விப்பட்டார். மிக்க நேர்மையாகவும், நாணயமாகவும் அக்கடையில் வர்த்தகம் நடத்தப்படுவதை ஊரார் பலரும் புகழ்ந்து பேசுவது அவருக்குத் தெரிய வந்தது. இக்கடையில் கணக்கு எழுதும் வேலையைத் தாம் ஏற்றுக்கொள்வது தகுதியுடையதாகும் என்று தீர்மானித்தார். அப்படியே அக்கடைத் தலைவரிடம்சென்று தம் கருத்தை அறிவிக்க, அவரும் இவரது பெருந்தன்மையை, முகத்தின் பொலிவாலும், பேச்சினாலுமே, நன்கு உணர்ந்து, உடனே இவரை வேலையில் அமர்த்திக் கொண்டார்.

முதலில் கடையின் கணக்கின் சிலசில பகுதிகளே இவருக்குத் தரப்பெற்றன. அவையிற்றினைத் திறம்பெற ஒழுங்காகப் பார்ப்பது கண்டு, சிறிது சிறிதாகக் கடையின் மொத்தக் கணக்கையுமே இவ ரிடத்தில் ஒப்புவித்தனர். கடையின் தலைவர், பேருக்கே தலைவராக இருந்து வந்தார். சுப்பிரமணியப்பிள்ளையே கடையின் பொறுப்பு முழுவதையும் ஆண்டுவரலானார். இவர் வந்து கணக்கை யேற்றுக் கொண்ட பின்னர் நாளுக்கு நாள் வியாபாரம் விருத்தியாவதாயிற்று.

## iii தினசரி ஒழுக்கம்

வெளியில் பார்ப்போருக்கு, ஒரு சாயபு கடையிலே கணக்கு எழுதும் சாதாரண ஒரு குமாஸ்தாவாக காணப்பெற்று வந்தாரானா லும், சுப்பிரமணியப்பிள்ளை, மக்கள் பலர் காணாத மறைந்த நேரத் திலே, தாம் பிற்காலத்தில் செய்ய வேண்டிய வேலைக்கு, இடை

விடாது ஆயத்தம் செய்து கொண்டே வந்தார். விடியல் 3க்குமேல் விழித்துக்கொண்டு, விரைந்து சென்று, வைகையை யடைவார். நீர் ஓட்டம் இல்லாத காலத்திலே ஊற்றுப் பள்ளம் போட்டுக் கொள்ளவும் நேரும். மணி 4க்கெல்லாம் நன்னீராட்டம் செய்து முடிந்து விடும். முழுகி முடிந்ததும் ஆற்றங்கரையிலே அமைக்கப்பெற்ற ஆதிமூர்த்தியாகிய விநாயகக் கடவுளின் ஆலயம் ஒன்றிற்கு சென்று, உள்ளத்தை ஒரு வழிப்படுத்தி, உடையவனது, பரஞானம் அபரஞானமாகிய இரண்டு திருவடிகளிலே, யான் எனது அற்ற இடமாகிய சேவடிகளிலே, இறுகப் பொருந்த வைத்து வருவார்.

தினந்தோறும், சீதோஷ்ண நிலை மாறினும், தமது ஒழுகலாறு மாறாது, நடந்துவரும் சுப்பிரமணியப் பிள்ளையை, விடியலிலே ஆற்றுக்குச் சென்று நீராடும் நெறியுடையார் சிலர் கண்ணுற்று வந்தார்கள். நாளாக நாளாக அவரிடத்தில் அவர்களுக்கு மிகுந்த மதிப்பும், மரியாதையும், அன்பும் அச்சமும் வளரலாயின. அவற்றோடு, அவர்கள் அவரை அணுகும் பழக்கமுடையவர்களானார்கள். அவ்வாறு பழகியவர்களிலே மணப்பாறை சேர்வை என்பாரும் ஒருவராவர். இவர் ஆற்றிலே ஊற்றுப் போடுவதிலே வல்லவர். சுப்பிரமணியப் பிள்ளை நீராடுவதற்கென, நல்லதொரு ஊற்றுப் பள்ளத்தினை ஆர்வத்தோடு தோண்டி வைத்து, நாடோறும் அதனைத் துப்புரவு செய்து கொடுப்பது, சேர்வையின் வழக்கமாய் விட்டது. மற்ற அன்பர்களும், அவ்வாறும் பிறவாறும், சுப்பிரமணியப்பிள்ளைக்குப் பணியாற்றுவதிலேயே மிக்க ஊக்கமும் வேட்கையும் கொண்டிருந்தனர்.

## iv முன்னை வினை மணம்

இவ்வாறு சுப்பிரமணியப்பிள்ளை இங்கு இருந்து கொண்டிருக்க, இரெட்டியப்பட்டியிலே அவரது பெற்றோரும் மற்றோரும், அவர் தனித்துச் சென்று விட்டதற்காக வருந்தி, எங்குச் சென்றிருக்கின்றார் என்பதையறிந்து, தேடிக்கொண்டு மதுரைக்கு வந்தார்கள். கடையில் கணக்கெழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு, ஊருக்குவந்து விடும்படி யழைத்தார்கள். கூட்டிக்கொண்டு போய்க் கலியாணத்தைச் செய்துவிட வேண்டும் என்பது அவர்களது அவாவாக இருந்தது. அவரா போபவர்? வரமுடியாதென அடியோடு மறுத்து விட்டார்.

என்ன செய்வதெனத் தோன்றாது நின்றார்கள். "அவரே ஊருக்கு வந்து நம்மோடு இருக்காவிட்டாலும், அவரோடு நம்மில் ஒருவனைக் கூடவிட்டு வைப்போம். அவரைப்பற்றி அடிக்கடி அறிந்து கொள்ளுவதற்கு அப்படிச் செய்வது ஏதுவாக இருக்கும்" என்று தீர்மானித்தார்கள். அவரது அண்ணராகிய திரு. முத்துகருப்பப் பிள்ளையின் குமாரர் பிச்சாண்டியாப் பிள்ளையை மதுரையிலேயே விட்டு விட்டுச் சென்றார்கள்.

சென்றும், அவர்கள் மனம் மதுரையிலேயே யிருந்தது. சுப்பிரமணியப் பிள்ளையின் தந்தையாருக்கு வயோதிகம் மூண்டு வந்தது. நலியாலும் உடல் மெலிந்தது. எப்படியாவது, சுப்பிரமணியத்தின் மனதை மாற்றி, மணம் செய்து வைத்துவிடவேண்டும் என்று முயன்று வந்தார்கள். சுப்பிரமணியத்தின் விட்டகுறை தொட்டகுறையும், அவர்களது முயற்சிக்கு முனைந்து துணை செய்ய முன் வந்தது. 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் தமிழ் மறையின் தாக்கும், சுப்பிரமணியப் பிள்ளையின் உள்ளத்தைச் சிறிது சிறிதாக மாற்றமுறுத்திக் கொண்டு வந்தது. இவை யெல்லாம் ஒன்று சேர்ந்து, தாரண வருஷம் ஆனி மாதத்தில், ஒரு நன்னாளில், மதுரையிலே மணத்தை ஏற்பாடு செய்துவிட்டன.

பெண் வீட்டார் எட்டையாபுரம். அது ஒரு சுதேச சமஸ்தானம். அப்போது அதை மகாராஜ ராஜபூஜித வெங்கடேசுவர எட்டையப்ப ஐயனவர்கள் ஆண்டுகொண்டிருந்தார். அந்த சமஸ்தானத்தில் நடுவிற்பட்டி வீரதீரகம்பீர முருகப்பிள்ளை என்பவர் வேலைபார்த்துவந்தார். அவரது தேவியாரின் திருநாமம் 'ஆவுடையம்மாள்'. இருவரது அருந்தவப் புதல்வி மாரியம்மையார். இவ்வம்மையாரே கலியாணப் பெண் ஆவர். எட்டையாபுரத்திலேயோ அல்லது இரெட்டியப்பட்டியிலோ மிக்க சௌகரியமாகச் செய்யக்கூடிய இத்திருமணத்தை, மதுரையிலே வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிள்ளையிருக்கும் இடத்தைத் தேடிவந்து மணத்தை ஏற்பாடு செய்தும், கடைசி நேரத்தில் பிள்ளை ஒத்துக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று அவர்கள் அஞ்சியிருந்தார்கள். இம்மகனுக்கு மணம் செய்து வைத்துவிடவேண்டுமே என்ற தந்தையாருடைய ஏக்கமும், அவரு

டைய வயோதிகமும், பிணிநிலையும், பெற்றோரிடத்தில் சுப்பிரமணியப் பிள்ளை வைத்திருந்த பக்தியும், முன்னை வினையின் முனைப்பும், எல்லாமாகக்கூடித் திருமணத்தைச் செவ்வனே முடித்துவைத்து விட்டன. சுப்பிரமணியப்பிள்ளை உள்ளத்துறவு நிறைந்தவராயினும் அவர் விரும்பாமலேயே இல்லறத்தாரானார்.

### v தந்தையார் சிவபதம்.

மணமான ஆனிமாதத்திற்கு அடுத்த தை மாதத்திலே, சுப்பிரமணியப்பிள்ளையின் தந்தையார், தன் கடைசி மகனுக்கும் கலியாணம் முடிந்து விட்டது என்ற திருப்தியோடே, இரெட்டியப் பட்டியிலே, இறைவன் திருவடி நீழல் எய்தினார். அதுகேட்ட சுப்பிரமணியப்பிள்ளை மதுரையிலிருந்து விரைந்து சென்று, தகப்பனாருக்குரிய ஈமக் கடன்களை நெறிமுறை வழுவாது தமது அண்ணார் இருவரோடிருந்து செய்து முடித்து, மறுபடியும் மதுரையடைந்து முன்னிலும் தீவிரமாகத் தமது தினசரி ஒழுக்கத்திலே, திகழ்ந்து உயர்ந்து வரலானார்.

## 2 'இரெட்டியப்பட்டி சுவாமி' திருநாமம்

### i மானாமதுரைச் சுவாமிகள் கூட்டுறவு.

நாடக மேடையிலே, நனிசிறந்த வகையிலே, நடித்து நயமுடனே மக்களது உள்ளங்களைக் கவரும் கருத்துடைய நடிகர் ஒருவர், அவ்வாறு நடித்தற்கு ஏற்ற காலம் கண்டு வெளிவருமுன்பு, அந்நடிப்புக்கு உரிய முறைகளிலெல்லாம் பலபடப் பழகும் நேரத்திலே மக்கள் கண்படாது மறைவிலிருந்து வருவதுபோல, சுப்பிரமணியப்பிள்ளையும் தாம் உலகினுக்குச் செய்ய எண்ணி வந்த அரும் பணியை ஆற்றுவதற்கு வெளிப்படையாகத் தொடங்கு முன்னம், தாம் இன்னாரெனக் காட்டிக்கொள்ளாது மறைவாகச் சில காலம் வாழ்ந்து வரும் நோக்கத்தோடேயே, கடையில் கணக்கெழுதும் வேலையில் அமர்ந்திருந்தார் என்று முன்னர் அறிந்தோம்.

ஆனால் அவர் எவ்வளவுதான் அவரை மறைத்து வைத்துக் கொள்ள முயன்றாலும், அவருள்ளிருந்து ஊற்றெடுக்கும் ஆண்டவன் அருளானது அவரது திருக்கண்களின் பொலிவாலும், திருமுகத்தின் ஒளியாலும், அவரைக் கண்டு வந்த மக்கள் பாலும், அவர்கள்

வழியாய் மற்றவர்கள் பாலும் ஊறி, அவர்கள் எல்லோரையும் அவரிடத்தே இழுக்கலாயிற்று. 'சுப்பிரமணியம்' 'சுப்பிரமணியப் பிள்ளை' 'கணக்கப்பிள்ளை' என்ற பேர்களால் குறிப்பது வற்கனவே சிறிது சிறிதாகக் குறைந்து வந்து கொண்டிருந்தது. 'சாமி' 'சாமி' என்று பலரும் அவரைக் குறிப்பிட்டு வரலாயினர். மற்ற சுவாமி களுக்கும் இவருக்கும் வேறுபாடு தோன்ற அவருடைய ஊரின் பேரை முன் வைத்து எல்லோருமாக அவரை 'இரெட்டியப்பட்டி சுவாமிகள்' என்று அழைக்கத் தொடங்கினர். பலதிறப்பட்ட மக்களும் சுவாமிகளை வந்து பார்த்தபடி யிருப்பார்கள்.

அப்படி வந்தவர்களிலே யொருவர் மானுமதுரைச் சுவாமிகள் என்னும் பெயரோடு புகழ்ப்பெற்று வந்த மகான். இந்தச்சுவாமிகள் துறவு பூண்டு தூயவாழ்வு செய்து வந்த பெரியார். கடைக்கணக்கு எழுதும் இல்லறத்தாராகிய இரெட்டியப்பட்டி சுவாமிகளிடம், இப் பெரியாருக்கு இழுப்பு வந்தது கண்டு ஊராரெல்லாம் வியந்தனர். அப்போதும் நமது சுவாமிகள் தம்மை மறைத்துக்கொண்டு, தம்மோடு கூட்டுறவு கொள்ள வந்த துறவியாரை வந்தனோபசாரங் களால், உலகத்தார் கண்களிலே, உயர்த்த முயன்றார். ஆனால் மக்களோ, மானுமதுரைத் துறவியாரோ, அவ்வளவு எளிதிலே மயங்கிவிடவில்லை. உண்மையை யறிந்து கொண்டார்கள். நமது சுவாமிகளுடைய பெருமையை இன்னும் பெரிதாக மதிப்பதற்கே சுவாமிகளது முயற்சி துணையாக ஆயிற்று. துறவியாரும் சுவாமி களைப் போற்றி செய்யலானார். பிற்காலத்தில் சுவாமிகள் எல்லாத் தொடக்கையும் விட்டு அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டு உலா செய்து வந்த காலத்திலே, மானுமதுரைத் துறவியார், சுவாமி களது திருவடிகளில் வணங்கிக்கொள்ள பலமுறை முயன்றதும், முதலில் தாம் அத்துறவியாரைச் சந்தித்தபோது நடந்து கொண்ட முறையையே தாங்கிப் பிடித்தவராய்ச், சுவாமிகள் அதற்கு இடங் கொடுக்காமலே சென்றதும், அடியார்கள் அறிந்த பொருளாகும்.

ii பரிபூரண விநாயகர் திருக்காட்சி.

"மதுராபுரி வடக்காய் வைகைநதித் தென்பால்
சதுரார் ரயில்பாலம் தன்மேற்காய்—எங்கும்
கதித்தோங்கும் செந்நெல்சூழ் கட்டிடத்தின் கீழ்பால்
உதித்தாய் என்உள்ளத் துறை"

என்று சுவாமிகளே பாடியிருக்கின்றபடி, இப்பாடலிலே குறித்த நான்கு எல்லைக்குள்ளே, சுவாமிகளுக்கு சர்வசித்து ஆண்டிலே ஒரு திருநாளிலே ஒரு அதிசயக் காட்சி தோன்றிற்று. விடியல் வழக்கம்போல, சுவாமிகள் நீராடி, தியானத்தில் அமரச் செல்லும்போது, என்றும் காணுத்தோற்றம் ஒன்றை ஆற்றங்கரையிலே சுவாமிகள் கண்டார்கள். தமக்கு குருமூர்த்தியாக ஏற்று வழிபட்டுவரும் விநாயகப் பெருமானை அங்கே கண்ணுரக்கண்டு பேரின்பம் பெற்ருர்கள். அருகில் அணைந்து அணைத்து அகமகிழ்வதற்காகச் சென்றபோது, அத்திருமேனி அழகியதொரு சிலா விக்கிரகமாக ஏற்பட்டது. அப்போதே அதனை அடுத்திருந்தஅரசமரத்தின் அடியில், அன்பர்கள் சூழவிருக்க, எடுத்து அமைத்து நன்னீராட்டி, வழிபாடு செய்துத் தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடினுர்கள். அன்பர் குழாமும் ஆரவாரித்து ஆனந்தம் உற்றது.

அதுமுதல், சுவாமிகள் நாடோறும் விடியல் நீராடியதும், விநாயகப் பெருமானுர்க்குத் திருமஞ்சனம் தீபாராதனை முதலிய உபசாரங்களை நெறிமுறை பிறழாது செய்து வரலானுர்கள். ஏற்கனவே சுவாமிகள் நீராடச் செல்லும்போது, அன்பர்கள் சூழ இருப்பது வழக்கமாயிருந்தது. குருமூர்த்தியாகிய கணபதிப் பெருமானுர் காட்சி கொடுத்த அற்புதமும், அத்திருமேனிக்குச் சுவாமிகள் தினந்தோறும் செய்துவரும் வந்தனை வழிபாடுகளும், மக்களுக்குத் தெரியத் தொடங்கிய பின்னர், ஏராளமான அடியவர்கள் "இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை" என்று கண் விழித்து, விநாயக மூர்த்தியின் விடியல் வழிபாட்டிற்கு வர ஆரம்பித்தனர். உடல் நலங் குறைந்தவர்களும், மனநலம் மங்கியவர்களும், கோரிய கருத்துக்கள் நிறைவேற வேண்டும் என்னும் வேட்கையுடையவர்களும், உள்ளத்தூய்மையை விழைந்தவர்களுமாக, பல அன்பர்கள் கூட்டங்கொண்டு வந்து ஊற்று நீராடி உளங்கசிந்து வணங்கலானுர்கள். வணக்கத்தின் கைமேல் பலனைக் குறைகொண்டு வந்தவர்கள் குறைகளையெல்லாம் ஆற்ருேடே போகவிட்டு, நிறைபூண்டு போகலானுர்கள். நலம்நாடி வந்தவர்கள், நாளினும்நாள் நலம் ஓங்கப் பெற்ருர்கள். மனத்தூய்மை விரும்பியவர்கள் தினந்தூய்மை மிகுந்

தார்கள். சுவாமிகள் தூலே சிறந்த அன்பினோடு, தவமாகிய பூசையினைச் சற்றும் தவறுதலின்றி நடத்தி, அன்பர்கள் இடத்தே இறைவனது இன்னருளானது மடை திறந்து பாயச் செய்து வந்தார்கள்.

## 3 பம்பாய் பயணம்

### i இந்துஸ்தானி, இஸ்லாம் மதப் பயிற்சி.

இவ்வாறு, கடவுளின் திருவருளைக் கணக்கின்றி மடுத்துவரும் சுவாமிகள் கடையிலிருந்து வியாபாரம் செய்வதென்றால், அக்கடையின் வாணிபம் எவ்வளவு விரைந்து வளர்ந்து உச்ச நிலையையடைந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? முன்னை வினையின் பயனாக இன்னும் சிறிது காலம் கடையிலேயே கட்டுண்டு இருக்க வேண்டும் என உடையவன் கணக்கிருந்ததாக சுவாமிகள் உணர்ந்தார்கள். எனவே, அக்கணக்கு முடியும் வரையில் சுவாமிகள் கடையை விட்டு வெளியேற முடியவில்லை.

கடையிலே இருந்துவந்தது சுவாமிகளது பிற்காலத் தொண்டுக்கு வேறொரு வகையிலே உதவியாக இருந்தது கடைக்குக் கருத்தாக்களாகிய முகம்மதியர்களோடே நாடோறும் பழக நேர்ந்தமையினாலே, இஸ்லாமிய கொள்கைகளையும், இந்துஸ்தானி மொழியினையும் சிறிதும் சிரமமில்லாமலேயே சுவாமிகள் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் மதத்தினுடைய நுணுக்கங்களை, குரான் என்னும் இஸ்லாமிய வேதங்கொண்டு அறியலானார்கள். அச்சமயத்தின் அடிப்படையான கருத்துக்கள் யாவை, முடிந்த முடிபுகள் யாவையெனச் சிந்தித்துச் சீர்பெற உணர்ந்துகொண்டார்கள். அவர்களது சமயக்கருத்துக்களை ஆராய்வதோடு, அவர்களது மொழியை உபயோகிப்பதிலும் வல்லவராயிருந்ததானது சுவாமிகளுக்கு அடுத்தபடி வாய்த்த தொழிலுக்கும் துணையாயிருந்தது.

### ii பம்பாய்க்கனுப்ப ஏற்பாடு

சுவாமிகளது பெருமையினால், கடையின் பெருமையும் விளக்கமுற்று, அளவிடலாகாதபடி ஓங்கலாயிற்று. கடையாட்சியின் மொத்தப் பொறுப்பையும் சுவாமிகளே ஏற்கும்படியும், சுவாமிகளது ஆணைக்கு உட்பட்டு கடையில் உரிமையுள்ள மற்றவர்கள்

பலரும் நடக்கும்படியும், ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. பொருள் ஏராளமாகப் புரண்டதனால், கடையின் தலைவர்களுக்குப் புதியதொரு வியாபாரத் துறை தோன்றுவதாயிற்று. பம்பாயிலிருந்து நம் நாட்டுச் சரக்குகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும், வெளிநாட்டுப் பண்டங்களை இறக்குமதி செய்தும், மொத்த வியாபாரம் பண்ணலாம் என்னும் எண்ணம் பிறந்தது. அதைச் சரிவரச் செய்வதற்குத் தகுதியான பேர்வழி நமது சுவாமிகள்தான் என்று தீர்மானித்தார்கள்.

மேலும் சுவாமிகளது உள்ளத்தின் நிலை நாளுக்குநாள் மாறிச் செல்லுகின்றதை நோக்க, அவர்களுக்கு அச்சமாகவும் இருந்திருக்கலாம். இப்படியே போய்க்கொண்டிருப்பாரானால் தெய்வப் பைத்தியம் பிடித்துத் திடீரென ஒருநாள் நமது கடையையும் விட்டுச் சென்றுவிடக்கூடுமே. அப்படி நேர்ந்துவிட்டால் பின்னர், ஓங்கி வளர்ந்துவரும் நமது வர்த்தகம் படுத்துக்கொள்ளுமே என்று பயந்திருப்பார்கள். இந்தச் சமயத்திலே, ஊருக்கு மிக்கத் தொலைவானதும், சுவாமிகளது தினசரி ஒழுக்கத்திற்கு எளிதில் இடந்தராததுமான பம்பாய் என்னும் துறைமுகப் பட்டினத்திற்கு அனுப்பி வைத்துவிட்டால், கடவுள் பித்தும் மாறிவிடும், புதுமுறையாகச் செய்ய எண்ணங்கொண்ட கப்பல் வியாபாரமும் செம்மையாய் நடந்து இலாபம் பெருகும் என்று சிந்தித்திருக்கலாம்.

## iii சுவாமிகள் செல்லத் திடசித்தம்

எது நடந்தாலும் அது முற்றறிவுள்ள முழுமுதலாகிய உடையவன் கணக்கே என்று நம்பியிருந்த சுவாமிகளுக்குக் கடை முதலாளிகளின் ஏற்பாடு எதும் மனமாற்றத்தைத் தரவில்லை. வெளியூர்களுக்குச் சென்று பலதிற மக்களையும், அவர்களது பலதிறச் சமய ஒழுகலாறுகளையும், கண்டு பயனடைவதற்கு, முதலாளிகளின் ஏற்பாடு எதுவாகும் என்று சுவாமிகள் எண்ணலானார்கள். வைகையாற்றின் கரையும், அங்கு வழிபாட்டிற்கென வாய்த்த இடங்களுமே, எக்காலும் சதமெனச் சுவாமிகள் நம்பியிருக்கவில்லை. ஆண்டவன் ஆணைப்படி ஆற்றங்கரையில் அதுவரை நடந்தனவெல்லாம், அவனது அருளை நாடிப் பற்றிக்கொள்வதற்குத் துணையாயிருந்தது

போலவே, மேலும் அவனது கட்டளைப்படி ஏற்படும் யாவும் அவனது திருவடிகளையே சிந்திப்பதற்கு உதவியாகாமல் மற்று எப்படி போய்விடக்கூடும் என்ற கருத்து சுவாமிகளுக்கு உறுதியாக இருந்து வந்தது.

எனவே, முதலாளிகள், சுவாமிகளிடத்தில் பம்பாய் பயணத்தைப் பற்றிச் சொன்னதுமே, சுவாமிகள் தடையேதும் சொல்லாமல் சென்றுவர ஒத்துக்கொண்டார்கள். பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆயின. சுவாமிகள் புறப்பட்டுச் சென்னை வழியாய்ப் பம்பாய் சேர்ந்தார்கள்.

## iv பம்பாயில் வாணிபம்

பம்பாயில் வியாபாரம் நடந்த சிறப்பைப்பற்றியெல்லாம் சொல்வதென்றால் இங்கு இடங்காணாது. மேலும், அவற்றைக் குறித்துக் கூறுவதால் அடியார்களுக்கு ஆகும் பயன் ஏதும் இல்லை. சுவாமிகள் எத்தனை மாதம் பம்பாயிலிருந்து கப்பல் வாணிபம் புரிந்தார்களென்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. குறைந்தது ஒரு வருஷமாவது இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. முதலாளிகளுக்கு, சுவாமிகளிடத்தில் ஏற்கனவே இருந்துவந்த மதிப்பு! சுவாமிகள் கப்பல் வாணிபஞ் செய்துவரும்போது, பல மடங்காக வளர்ந்துவந்தது.

## v திரும்பவேண்டிய காரணம்

பம்பாயிலே வியாபாரம் மும்முரமாக நடப்பதற்கு ஏற்க, மதுரையிலும், திருநெல்வேலி பாளையங்கோட்டையிலுமிருந்த கடைகளிலும் வர்த்தகம் முடுகி நடந்துவரவேண்டியதாயிற்று. ஏற்றுமதி இறக்குமதிக்கு உரிய பண்டங்களை, முறையே, சேகரித்து அனுப்பவும், பெற்றுப்பிரித்துச் சிறுகடைகளுக்கு வழங்கவும், வேலையிருந்துவந்தது. இவ்வாறு நடந்துவந்ததனால், தலைமையிடமாகிய மதுரையிலே கணக்குகளெல்லாம் குவிந்துவிட்டன. அவற்றை ஒழுங்குபடுத்தி வரவுசெலவு வகுக்கவேண்டிய வேலையைச் செய்யப், போதிய ஆற்றல் வாய்ந்தவர்கள் மதுரையிலும் பாளையங்கோட்டையிலும் ஒருவருமில்லை. எனவே, சுவாமிகளே மதுரைக்கு வந்து

கணக்கு முடிவுகட்டவேண்டியேற்பட்டது. முதலாளிகள் கோரிய படி சுவாமிகள் பம்பாயை விட்டுப் புறப்பட்டார்கள்.

**vi கிறித்துமதம் அரசியல் அறிவு**

வழியில் சென்னையில் இறங்கி, அந் நகரத்தின் அருமையான இடங்கள் பலவற்றையும் சுற்றிப் பார்க்கலானார்கள். அப்படிப் பார்த்துவரும்போது கிறித்துமதப் பிரசாரகர்கள் பலரைக்காண நேர்ந்தது. அவர்கள் செய்த பிரசங்கங்களைக் கேட்டும், அவர்களோடு கலந்து உரையாடியும், அந்தச் சமயத்தின் சாரத்தையும், நுணுக்கங்களையும், சுவாமிகள் நன்கு அறிந்து கொண்டார்கள். அரசாங்கம் நடக்கின்ற கட்டுப்பாடான கம்பீர முறைகளையும், நீதிமன்றங்களிலே சட்டங்கள் செலாவணியாகும் செம்மையான விதங்களையும், கூர்ந்து கவனித்து உள்ளம் கொண்டார்கள். உடையவனுடைய ஆட்சிமுறையின் அற்புதத்தையும், சட்டத்தின் பெருமையையும் போக்கையும், அவ்வப்போது நினைந்து நினைந்து அதிசயித்து வந்தார்கள்.

சென்னையை விட்டதும், கும்பகோணம், நாகைப்பட்டினம், காரைக்கால், தஞ்சாவூர், திருசிரபுரம், கரூர், சேலம், ஈரோடு முதலிய பல ஊர்களில் இறங்கி வியாபாரத்துறையிலே இருந்த அலுவல்களைக் கவனிப்பதோடு, ஆங்காங்குள்ள மக்களது மனப்பான்மைகளையும் சமய உணர்ச்சியையும் நுணுகி அறிந்துகொண்டு, சுவாமிகள் மதுரைவந்து சேர்ந்தார்கள். சேர்ந்ததுமே, முன்னமேயே குறித்தபடி சுவாமிகள் பார்க்கவேண்டிய கணக்குகள் ஏராளமாய் இருந்தமையினால் அவற்றில் சிலநாள் ஆழ்ந்திருக்கவேண்டியவர்களானார்கள். என்றாலும், அவர்கள் சிந்தையெல்லாம் அறவாழி அந்தணனது சேவடிகளின்மீதேயே உந்திச் சென்றுகொண்டிருந்தது என்று சொல்லவேண்டுவதில்லை.

## 4 அன்பரை ஆட்படுத்தல்

**i அன்பர் குழாம்**

சுவாமிகள் தாமே முன்மாதிரியாக நடந்து செய்வித்த விடியல் நீராட்டம் முதலிய நல்ல பழக்கங்களாலும், தாமே குருமூர்த்தமாக

தரிசித்துத் தொண்டாற்றிக் கூட்டுவித்த ஸ்ரீபரிபூரண விநாயகர் திருவுருவ வழிபாட்டாலும், மக்கள் பலர், அவர்களது முன்னைவினைப் பயனும் துணை செய்ய, சுவாமிகளை வழிகாட்டும் ஞானாசிரியர் எனக்கொண்டு, மேதக்க வாழ்க்கை செய்து வரலானார்கள். இடையில் சுவாமிகள் பம்பாய்க்கு சென்றுவிட்டதானது, அவர்கள் எல்லோர்க்கும் மிக்க துயரத்தைத் தந்திருந்தது. அவர்களை வழிபடுத்தி வளமையுறுத்த சுவாமிகளைப்போல, மற்று ஒருவரையும் அங்குக் காணப்பெறாது வருந்தலானார்கள். சுவாமிகள் காண்பித்துச் சென்ற தினசரிக் கடமைகளும், விநாயகர் வழிபாடும், அவர்களுக்கு ஆறுதலாயிருந்தாலும், அவற்றைச் சுவாமிகள் உடனிருக்கச் செய்து முழுப்பயன் அடைவதற்கில்லையே என்பதும், முன்னிலும் உரமாகச் செய்து மேலும் மேலும் மேன்மை சிவணுதற்குச் சுவாமிகள் அவர்களோடு இல்லையே என்பதும், அவர்களுக்குப்பெருங்குறையாகத்தானிருந்தன.

இவ்வாறு அன்பர் கூட்டங்கள் வருந்திக் கொண்டிருக்கும் நேரத்திலே, சுவாமிகள் மதுரைக்குத் திரும்பி வந்தார்கள் என்றால் அக்குழாங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருந்திருக்கும்! சுவாமிகள், கடைக் கணக்குகள் எத்துணை அதிகமாகக் குவிந்தாலும், அவற்றைக் கவனிக்க வேண்டிய நேரத்தில் கவனித்து வருவார்களே தவிர, உயிர்க்குரியவான தமது தினசரிக் கடமைகளாகிய ஆற்று நீராட்டம், வந்தனை வழிபாடு, முதலியவற்றிற்குரிய காலங்களைக்கூட கணக்குகள் பற்றிப் பறித்துக் கொள்ளும்படி விட்டுவிடமாட்டார்கள். சுவாமிகள் மறுபடியும் வைகைக் கரைக்கு வந்துவிட்டார்கள் என்று தெரிந்ததும் அன்பர்கள் நாளுக்கு நாள் ஏராளமாக வரலானார்கள். மேன்மையடைய வேண்டும் என்னும் அவாவோடு நாடி வருகின்ற ஒவ்வொருவருக்கும் சுவாமிகள் தாமே வேண்டுவ கூறி அவர்களை வழிப்படுத்துவார்கள். எனவே அன்பர் கூட்டம் அதிகரித்து வந்தது அதிசயமல்ல.

ii விநாயகர் ஆலய அமைப்பும் கும்பாபிஷேகமும்.

அன்பர்கள் மிகுந்து வர, மிகுந்து வர, அவர்களை ஆண்டவன் அருளுக்கு ஆட்படுத்தவேண்டும் என்னும் ஆர்வமும் சுவாமிகளுக்கு

மிருந்து வரலாயிற்று. அடியவர் பலரும் ஒரு முகமாக ஆற்றங் கரையில் அமைந்துள்ள ஸ்ரீ பரிபூரண விநாயகருக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்று அவாக்கொண்டார்கள். அப்பணியைச் சுவாமிகளை முன்னிறுத்திச் சுவாமிகள் கையால் செய்வித்துக் கொண்டால், பெரும் பயன் பெறலாம் என்று எண்ணினார்கள். விரைவிலே, பிரிவு போட்டுக்கொண்டு, தாராளமாகப் பொருள் சேமித்து, சுவாமிகள் கட்டளை செய்கின்றபடி ஆலயத்தை அமைக்க லானார்கள்.

சீக்கிரத்தில் சீர்பெறக் கோயில் முற்றுப்பெற்றதும், கும்பாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். சுவாமிகள் அருகிருந்து, அன்பர்கள் விருப்பத்திற்கு இணங்கி, குடமுழக்கைச் செவ்வனே ஆகம முறைப்படிச் செய்வித்தார்கள். அனபர்கள் திரளாக வந்து சேவித்துச் செம்மை பூண்டார்கள். முன்னிலும் விரகோடு அன்பர்கள் ஆலய வழிபாடு ஆற்றி ஆண்டவன் அருளுக்கு அருகராய் வந்தார்கள். தம்மக்கள் சிறந்து வளர்வதைக் கண்டு தாயொருத்தி குளிர்ந்து களிப்பதைப்போல, சுவாமிகளும், தம் அடியவர்கள் செந்நெறியில் உயர்ந்து செல்வதைப் பார்த்து செம்மாந்து மகிழ லானார்கள்.

iii கடம்பவன நாதர் பிரதிஷ்டை.

ஸ்ரீ பரிபூரண விநாயகர் ஆலயத்திற்குத் தெற்கில் பரந்த இடம் வெறும் நிலமாக இருந்தது. அதன் வழியாகவே கணபதியின் கோயிலுக்கு வருதல் போதல் வேண்டும். அந்நிலம் அன்பர்கள் போக்கு வரவுக்கு உரியதாக வேண்டுமானால், ஆலயத்திற்குச் சொந்தமாக ஏற்பட்டு விட வேண்டுமென்று அன்பர்கள் அவாக் கொண்டார்கள். அப்பாரிசம் மொத்தத்திற்குமே கடம்ப வனம் என்று ஒரு பெயர் வழங்கி வந்தது. அங்கே கடப்ப மரங்களும் இங்கொன்று அங்கொன்று வளர்ந்திருந்தன. அன்பர்கள் அவ்வெறு வெளியினை ஆலயத்திற்குச் சொந்தமாக்கும் பொருட்டு, கடம்பவன நாதர் என்னும் திருநாமத்தோடு, ஒரு பெருமானை அவ்விடத்தே எழுந்தருளச் செய்யவேண்டும் என்று கோரினார்கள். அக்கருத்தைச் சுவாமிகளிடம் தெரிவித்தார்கள். சுவாமிகளுக்கு, அதுபோது, வெளி

வழிபாடுகளிலெல்லாம் மனம் நாடாது, உள் நாட்டம் உடையதாக ஆய்க்கொண்டு வந்ததனால், சுவாமிகள் அன்பர்களது கோரிக்கையில் ஆழ்ந்த கருத்து செலுத்தவில்லை. என்றாலும் அன்பர்கள் விடாது முயன்று, ஆலயத்தை அமைக்கவேண்டும் என்று விரும்பவே, சுவாமிகள் அன்பர்கள் வேண்டுகோளுக்கு ஒப்ப, அம்மையப்பரைப் பிரதிஷ்டை செய்து, ஆலயம் அமைக்கும் வேலையை அன்பர்களே செய்யுமாறு விட்டு விட்டார்கள். அடியவர்கள் ஆண்டவன் அருளுக்கு அருகராக வேண்டும் என்னும் அவா நிரம்பச் சுவாமிகளை உந்தி வந்ததனால், உள் நாட்டம் உடையவராய்த் தனித்தே இருந்து விடாமல், அன்பர்கள் முன்னேறும் முயற்சியிலே சுவாமிகள் இயன்ற துணை புரிந்தும் வருவாராயினார்கள்.

## 5 பாடல் உதயம்

### i ஊற்றெடுக்கும் உள்ளம்.

உள்ளத்திலே எண்ணங்கள் ஆழ்ந்து அடர்ந்து எழுகின்ற போது, அவை வெளியிலே வந்தே ஆதல் வேண்டும். மனம் எவ்வளவு மடுக்க இயலுமோ அவ்வளவே தான் மடுத்து வாளா இருக்கும். மனதின் அளவினுக்கு அதிகமாய் மனதிலே செறிந்து வளரும் கருத்துக்கள், படிநிறைந்து வழியும் பால்போல, பொங்கி வழியாமலிருக்க முடியாது. அக்கருத்துக்கள் சாதாரண தன்மையன ஆயின் சாதாரண நடையாகிய உரை நடையிலே வெளி வரும். ஆனால் அவை, பட்டு, அதாவது உள்ளத்திலே உறுத்துத் தாக்கி, ஊற்றெடுக்கும் எண்ணங்களாயின், பாட்டாகவே, நல்ல கவியாகவே, காட்சி தரும்.

சுவாமிகளது திருவுள்ளத்திலே என்னென்ன கருத்துக்கள் தோன்றி வந்தன, எந்த எந்தக் கருத்துக்கள், எந்த எந்தக் கருத்துக்களோடு முட்டிக்கொண்டன, எவ்வெக் கருத்துக்கள் வெற்றி கொண்டன, என்றெல்லாம் அளவிட்டறிய முடியாது. ஆனால் வெற்றியின் களிப்பால், என்ன என்ன கருத்துக்கள் ஒன்றுக்குப் பலவாகப் பலங்கொண்டு பெருகி, உள்ளத்தின் எல்லையை உதைத் துக்கொண்டு வெளியே தோன்றின என்பதற்கு மாத்திரம் சில அறிகுறிகள் காணக் கிடைத்திருக்கின்றன. அந்த அறிகுறிகளே சுவாமிகள் பாடிய பாட்டுக்களாகும்.

ii பரமனருள் பரிவு.

வைகை யாற்றின் கரைதனிலே, ஸ்ரீ பரிபூரண விநாயகரைக் குரு மூர்த்தியாகத் திருக்காட்சி கண்டவுடனேயே, சுவாமிகள் திருவுள்ளத்தில் பாடல் உதயம் ஆயிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. உள்ளத்திலே கருத்துக்கள் எவ்வளவு ததும்பியிருந்தாலும், அவை தாமே வெளிப் படுவதைக் காட்டிலும், அவற்றை வெளிப்படுத்தக்கூடிய பொருள் ஒன்று புறத்திலே புலனுை போது, திடீரெனவும், எளிதாகவும் அவை ஊற்றெடுத்து வெளிவரும். அது போலவே, குருநாதரை, எதிர்பாராத நேரத்திலே, எதிர்பாராத இடத்திலே, கதுமெனக் காணப்பெற்ற போது, சுவாமிகளது உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்திருக்கக் கூடியது இயற்கைதானே.

பரம்பொருள், சுவாமிகளிடத்திடலே கொண்ட அருளும், சுவாமிகள் பரம்பொருளிடத்திலே பூண்ட அன்பும், பல்லோரும் காண வேண்டுமென்றால், பாடல்களிலே தான் படம் போலத் தெரியவரலாகும். அவனருள் உள்ளிருந்து இயக்கிக் குறிப்பிக்க, அதன் பயனாய் அவன் மாட்டு அன்பானது கசிய, எண்ணங்கள் எழுத்தாய், அசையாய், சீராய், வரியாய், பாவாய், வருகின்றவெல்லாம் அருட்பாடல்களாகும் என்பர் அறிஞர். சுவாமிகளது பாடல்கள் பரமனது அருளினால் உதயமானவை யாதலின் அருட் பாடல்களாகும்.

iii மனதினுக்கு உபதேசம்

திருவருள் வயப்பட்டு நிற்குங் காலத்திலேயும், செய்ய எண்ணி வந்த தொண்டைச் செய்து முடிக்கும் வரையிலே, வினையானது முழுதும் மாயும் வரையிலே, சடமாகிய ஸ்தூல உடலோடு கூடியே இருக்கவேண்டி யிருப்பதனாலே, அவ்வுடல் உறுப்புகளிலே நுண்ணியதானதும், தலைமை வகித்திருக்கின்றதுமான, மனம் எனும் ஒரு பொருள் ஏதாவது தொல்லை செய்து கொண்டேயிருக்கும். பரனருளைப்பற்றிப் பரவசப்படும் நல்லதொரு நேரத்திலே, படுக்கென, மனமான குரங்கு, பக்கவாட்டிலே எங்கேயாவது இழுத்துக்கொண்டு தள்ள முயலும். அதன் முயற்சியினைத் தடுத்துத் தவ

ருன நெறிக்கு ஆளாகாதிருக்கத் திருவருள் துணையை நாடுவதோடு கூட, மனதிற்கும் சார்ந்தமான நல்லுபதேசங்கள் செய்யவேண்டியும் வரும். மனதின் வம்புத்தனத்தால் பெரிதும் முட்டுப்பட்ட நிலையிலே அம்மனதிலே தோன்றும் எண்ணங்களும் பாடல் உதயத்திற்குத் துணையானவையாகும். சுவாமிகள் விஷயத்திலும் அவ்வாறே, பாடல் தோன்றுவதற்கு, மனதினுக்கு உபதேசம் செய்யவேண்டிய அவசியமும் துணையாயிருந்தது என்பது அவர்களது அருட்பாடல்களாலே அறியக்கிடக்கின்றது.

## 6. ஊரெங்கும் புகழ்

சுவாமிகளைப் பற்றி மதுரையில் அறியாதாரில்லை. சுவாமிகளது, தினசரி ஒழுக்கம், ஆலய அமைப்பு, வந்தனை வழிபாடு, முதலியவற்றைப் பின்பற்றி நடக்க வந்த அன்பர்களைக் காட்டிலும், அவர்களிடத்தில் விபூதி பெற்றுக்கொண்டு போபவர்கள் அளவிறந்தவர்களானார்கள். தேள் கொட்டினால் சுவாமிகளிடம் ஓடுவார்கள். பாம்பு கடித்தால் சுவாமிகளிடம் விரைவார்கள். நோயுள்ளவர்கள் சுவாமிகளிடம் போவார்கள். எத்தகைய மனக்குறை நேர்ந்தாலும் சுவாமிகளிடம் செல்லவேண்டியதுதான். குறித்த காரியம் கைகூடவேண்டிய விருப்பமுள்ளவர்களுக்கும் சுவாமிகள்தான் கதி. நாளைக்கு என்ன நடக்குமோ என்று அவாவினாலாவது, அச்சத்தினாலாவது, அறிந்துகொள்ள எண்ணுபவர்களுக்கும் சுவாமிகளே தஞ்சம்.

எல்லோருக்கும், கடவுளின் திருவருள் வடிவமான திருநீறுதான் மருந்தும் துணையுமாகும். அவனருளை அகத்து எண்ணி ஏழை மக்களுக்காக மிக இரங்கிய மனதோடு, விபூதியை யெடுத்துத் தருவார்கள் சுவாமிகள். நஞ்சு நீங்கவும், நோய் பற்றறவும், மனக்குறை யகலவும், வேண்டுவ கைகூடவும், சுவாமிகள் தந்த விபூதியே அமிர்தமாக இருந்தது. எதிர் காலத்தில் வரும் குறிப்புகளை ஆண்டவனை உறுத்து நினைந்து அவன் காட்டும்வண்ணம் அறிந்து, தம்மிடம் வந்து மன்றாடிக் கேட்போருக்குக் கூறிவரலானார்கள். எனவே, மதுரைமா நகர முழுதும் சுவாமிகளது புகழ் பரவலாயிற்று என்பதில் வியப்பு ஏதும் இல்லை.

## 7. ஆன்ம பூசை.

### i. அருள் நினைந்துருகல்.

ஊரார் புகழ்வதைச் சுவாமிகள் விரும்பவில்லை. உயிர்களிடத்தில் கொண்ட இரக்கத்தால், ஆண்டவனது அருளைக் கோரி கொடுத்துவந்த திருநீறு, பலவித பயன்களைச் செய்து சென்றதைச் சுவாமிகள் பெரிதாக எண்ணிவிடவில்லை. அவ்வாறு பயன் விளைவிப்பதே முடிவான பொருள் என்பது சுவாமிகள் கருத்தல்ல. பூரணமாகத் திருவருளை மடுக்கவேண்டும், பிறவா நெறிக்கு மக்களை ஆளாக்கல்வேண்டும், என்பது சுவாமிகளது கொள்கையாக இருந்தது. வெளிப்படையான வழிபாட்டாலும், ஊரார் வியக்க அருள் ஆற்றல்கொண்டு பிணி விஷம் முதலிய குறைகள் நீக்கி நலம்பல ஆக்குவித்தலாலும், மக்கள் நெருக்கு மிகுந்துகொண்டு வந்ததனால், தாம் உலகினுக்குச் செய்ய எண்ணி வந்துள்ள பெரும் பணியை ஆற்றமுடியாது போய்விடுமோ என அஞ்சி, சுவாமிகள், வெளிமுகமான வேலைகளைச் சுருக்கிக்கொண்டு, உள் முகமாகவே, உடையவன் அருளை நினைந்து நினைந்து உருகலானார்கள். பிற்காலத்தில் பக்குவப்பட்ட அடியார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களோடு உரையாடும்போது "இது கொஞ்சமான அழுகையா அழுதது!, இது கொஞ்சமான அழுகையா அழுதது" என்று சுவாமிகள் அடிக்கடி சொல்வார்களாம். இக்காலத்தில் நிரம்ப அத்தகைய அழுகை சுவாமிகள் அழுதிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

### ii. மௌனம் ஏற்று அமர்தல்.

வெளிப்படையாக, அருள் நெறிக்கு உழைத்தபோதும், உள் முகமாக அதே நெறிக்கு அகநெக்கு உருகி வந்தபோதும், சுவாமிகள் கடையில் இருந்துகொண்டே தான் இருந்தார்கள். சுவாமிகளது வெளி வியாபகங்கள் ஒடுங்கி வந்துகொண்டிருந்ததைக் கண்டு கடை முதலாளிகள் ஒருவேளை களித்திருக்கலாம்! "இனி நமது கடை வேலைகளையே கவனிப்பார்கள். எனவே, முன்னிலும் பல மடங்கு இலாபம் பெருகும்" என்று எண்ணியிருக்கலாம். ஆனால் அவர்களுடைய எண்ணமெல்லாம் விரைவில் ஏமாற்றமாய்முடிந்தது.

உள் நினைவு மிக மிக, வெளி இயக்கங்களை ஒவ்வொன்றாக ஒடுக்கிக் கொண்டே வந்த சுவாமிகள், திடீரென ஒரு நாள் மௌன மாக அமர்ந்து விட்டார்கள். கடை சம்பந்தமான அலுவல்களைப் பற்றிக் கடையிலுள்ள பிறருக்குத் தெரிவிக்க வேண்டுமானாலுங்கூட எழுதியே காட்டி வந்தார்கள். ஆகார விஷயங்களெல்லாம் மிக ஒடுங்கி விட்டன. கடை முதலாளிகளுக்குப் பீதி உண்டாய்விட் டது. எப்பேர்ப்பட்ட நண்பரோ, அடியவரோ, பிறரோ வந்தாலும் பேச்சே கிடையாது. அவசியமிருந்தால் மாத்திரம் இரண்டொரு சொல் எழுதிக்காட்டுவார்கள்.

iii உண்ணாது உறைதல்

பேசாது இருப்பதோடு நில்லாமல் சுவாமிகள், முதல் ஐந்து நாள் ஆனதும், அதுவரை சிறிது சிறிதாக ஒடுக்கிக்கொண்டே வந்த உணவை அடியோடு ஆறாம்நாள் நிறுத்திவிட்டார்கள். அன்ன ஆகாரம் இல்லாமல், முழு மௌனியாய் இருக்கத் தொடங்கிவிட் டார்கள். இதற்குள் ஊரெல்லாம் "இரெட்டியப்பட்டி சுவாமிகள் சாப்பிடுவதும் இல்லையாம், பேசுவதும் இல்லையாம். கடையிலேயே ஏதும் செய்யாது உட்கார்ந்திருக்கிறார்களாம்" என்ற சமாசாரம் விளம்பரமாய்விட்டது. கடைக்காரர்களுக்கு இன்னது செய்வது என்று புலப்படவில்லை. சுவாமிகளைப் பார்க்கக் கூட்டம் மிகுந்து வந்தது. கூட்டத்தால் கடையில் வியாபாரம் கெட்டு வந்தது. இத் தனை வருஷங்களாக உண்மையாக உழைத்துக் கடையினை உன்னத நிலைக்குக் கொண்டுவந்த ஒரு நல்லாரை, இப்போது திடீரென அடித்து விரட்டிவிடுவதென்பது சுலபமான செயலாகுமா?

சுவாமிகளிடம் போய் "என்ன உடம்பு? ஏன் இப்படி இருக்கி றீர்கள்? ஆற்றுக்குப் போகவில்லையா? ஆகாரம் கொள்ளவில்லையா? விபூதிக்கு வந்திருக்கிறார்களே, விஷயங்கள் கேட்கிறார்களே அவர் களைச் சாமி கவனிக்கட்டுமே" என்றெல்லாம் கடைக்குச் சொந்தக் காரர்களும் மற்றவர்களும் கேட்டால், சுவாமிகள் ஏதும் பதில் சொல்லாமல் சில சமயம் சிரிப்பார்கள், சில சமயம் தலையை அசைப் பார்கள், சில சமயம் விறைக்க விறைக்கப் பார்ப்பார்கள், சில சமயம் கண்ணை மூடிக்கொண்டே இருந்து விடுவார்கள்.

## iv. பைத்தியம் எனப்பெறல்.

வந்தவர்கள் சுவாமிகளது செயல்களைப் பார்த்து, கையை விரித்துவிட்டு, "அவ்வளவுதான், பைத்தியம் பிடித்துபோச்சு, இனி எது திரும்புகிறது" என்று சொல்லிக்கொண்டே செல்ல லானார்கள். மிக்க அன்பர்களாகவும் அடியார்களாகவும் இருந்தவர்கள் சுவாமிகளை இந்த நிலையில் விட்டுச் செல்ல மனமில்லாதவர்களாய்ப் பெரும் பொழுதைக் கடையண்டையே கழிக்கலானார்கள். சுவாமிகளைத் தேற்ற என்ன வைத்தியம் செய்யலாம், என்ன மந்திரம் பண்ணலாம் என்று எண்ணினார்கள். மறுபடியும் அவர்களே, சுவாமிகளுக்கு என்ன வைத்தியம் செய்ய முடியும், எந்த மந்திரம் சுவாமிகளிடம் செல்லும் என்று சொல்லிக்கொண்டு முயற்சி விழுந்து வருந்தினார்கள்.

மற்றவர்களுக்கு ஒரு புறம் வருத்தம் என்றால் கடைக்காரர்களுக்கு இருபுறம் துன்பமாக இருந்தது. தமது கடையின் முன்னேற்றத்திற்கே முழுத்துணையான உண்மையாளருக்கு இப்படி ஆய்விட்டதே என்ற வருத்தம் ஒருபுறம். இனி தமது கடையின் நிலையென்னவது என்ற துன்பம் மற்றொருபுறம். என்ன வருந்தி என்ன பயன்? சுவாமிகளை எதனாலும் திருப்ப முடியவே யில்லை. ஊரார் பலர் சொன்னது போல, கடை முதலாளிகளும், சுவாமிகளுக்குப் பித்தம் தலைக்கு ஏறிவிட்டது, இனி இது எந்த வைத்தியத்திற்கும் இசைந்து குணப்படாது என்று சொல்ல லானார்கள். அப்படியே அசையாமல் சுவாமிகளைத் தூக்கிச்சென்று வேறொரு இடத்தில் வைத்துவிடவேண்டும் என்று தீர்மானித்தார்கள். அன்பர்களுக்கும் அடியவர்களுக்கும் வருத்தம் வராமலிருக்கும் பொருட்டு அவர்களோடும் கலந்தார்கள்.

## V. மதுரையிடம் விடை கோளல்.

இவர்கள் இப்படி யோசனைகள் செய்துகொண்டிருக்கும்போது, சுவாமிகள் மதுரையை விட்டுச் செல்ல மனதிலேயே சங்கற்பித்துக் கொண்டார்கள். பிரமாதி வருஷத்திலே 'வா' வென்று வரவேற்று, உயிரை உயர்த்த முறையிலே பன்னிரண்டு வருஷத்துக்கு மேலாக

வளர்த்து வந்த மதுரை நகராகிய தாய்க்கும், அதன் அரிய அங்கங் கள்போன்ற வைகைக்கும், மீனாட்சி ஆலயத்திற்கும், பிறவற்றிற் கும் 'போய் வருகிறேன்' என்று நன்றியோடு கூறி சுவாமிகள், நந்தன ஆண்டிலே, யாரும் அறியாததொரு நேரத்திலே, மதுரை யிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள். எப்படிச் சென்றார் கள், எங்குப் போனார்கள் என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வார் மதுரையில் யாரையும் காணோம்.

சுவாமிகள் மாயமாக மறைந்துவிட்டது அறிந்து, கடைக்காரர் களும், ஊராரும் கலக்கங்கொண்டு வருந்தினார்கள், "சித்தம் சுவாதீனம் இல்லாது இருந்தாலும் இருந்து போகட்டும், சுவாமி களது திருமேனியையாவது தரிசித்துக்கொண்டு இருக்கலாம் என்று எண்ணினோமே, இப்படியாய்விட்டதே" என்று அலமந்தார் கள். சுவாமிகள் எந்த எந்த இடத்திற்குப் போயிருக்கக் கூடும் என்று யூகித்து, அந்த அந்த இடத்தில் எல்லாம் போய்த் தேடினார் கள், பயனில்லை. எங்கேயாவது போகவேண்டும் என்று, சுவாமி கள் மௌனம் ஏற்காத காலத்திலே, யாரிடமாவது சொல்லிக்கொண் டிருந்திருக்கின்றார்களா என்று அன்பர்கள் ஒருவரை யொருவர் உசாவலானார்கள். ஏதும் ஏற்படவில்லை.

மற்றவர்கள் இவ்வாறு அலைக்கப் பெற்றிருக்க, சுவாமிகளது, திருத்துணைவியாரும், அண்ணார் குமாரர் பிச்சாண்டியாப் பிள்ளையும் பட்டபாடு சிறிதல்ல. ஏற்கனவே சுவாமிகள் குடும்பத்திலே பற்றில்லாமல் நடந்து வந்தது அவர்களுக்குத் துன்பம் தந்துகொண் டிருக்க, சுவாமிகள் மௌனம் ஏற்றதும், உண்ணாது நின்றதும், இவைகொண்டு பிறகு, பலருமாகக் கூடிச் சுவாமிகளைப் பைத்தியம் என்று பகர நேர்ந்ததும், அவர்களுக்கு அளவிடலாகா துயரத்தைக் கொடுத்து வந்தன. இவை போதாமல் சுவாமிகள் இப்போது சென்ற இடம் தெரியாமல் எங்கேயோ மறைந்துவிட்டார்கள் என்று அறிந்து அவர்கள் அடைந்த துக்கம் எழுதி முடியாது. இங்கும் அங்கும் தேடுவாரோடு தேடி, ஓடுவாரோடு ஓடி, எங்கும் காணப் பெறாமல், கடைசியில் வீட்டைக் காலிசெய்துகொண்டு இரெட்டியப் பட்டிக்குப் போய்விட்டார்கள்.

# V

# பொதிகை வாசமும் பூரண அருளும்

## 1 பொதிகை நோக்கம்

### i செந்திலாண்டவன் சேவை

**யா**ருங் காணாத வண்ணம் மதுரைமாநகரை விட்டுப் புறப்பட்ட சுவாமிகள், பொதிகை மலைக்குப் போய்த் தங்கிப், பொன்னம்பலக்கூத்தனின் பூரண அருளைப் பெறவேண்டும் என்னும் உள்ளக்கருத்தோடே சென்று, வழியில் திருநெல்வேலியை யடைந்தார்கள். அங்குப் போனதும் சுவாமிகளுக்குச் செந்திலாண்டவனது சேவையின் மீது நாட்டம் சென்றது. திருச்செந்தூர் எனும் திருப்பதியின் இயற்கை யழகு அவ்வூர்ப் பக்கம் சுவாமிகளை இழுத்ததானது உடையவன் கணக்கேதான் என்று சுவாமிகள் உறுதி கொண்டார்கள். அக்காலத்தில் திருநெல்வேலியிலிருந்து செந்தூருக்குப் புகைவண்டியாவது, மோடார் வண்டியாவது கிடையாது. வியாபார முறையில் கட்டை வண்டிகள் என்றைக்கோ ஒன்று போய்க்கொண்டிருக்கக்கூடும். சுவாமிகள் அத்தகையவண்டியொன்றில் ஏறிச் சென்றார்களோ, அல்லது கால் நடையாகவே கர்த்தன் அருள் செலுத்தச் சென்றார்களோ, தெரியவில்லை.

செந்தூர் சேர்ந்தார்கள் என்பது மாத்திரம் சுவாமிகள் அடியவர்களிடம் பிற்காலத்தில் அளவளாவும்போது கூறிய குறிப்புக்களிலிருந்து திட்டமாகத் தெரியவருகிறது. அலைகடல்நீர் அளைந்து ஆடி, நாழிக் கிணற்று நன்னீர் ஆடி, அறுமுக ஆண்டவனின் அருள் சேவையையும், செந்திற் செம்பொருளின் செவ்விய காட்சியினையும், மனமார நுகர்ந்துகொண்டு மகிழ்ச்சிக் கடலில் சிலநாள் மூழ்கி யிருந்துவிட்டார்கள். பரஞானவடிவான திருமுருகன் கைவேலை உள்ளூரவழிப்படும் உயரிய முறையினை நனி யுணர்ந்து உள ஞானம் மிகுந்தார்கள். ஆண்டவனது அருள் ஆணை கிடைத்ததும், சுவாமிகள் செந்தூரைவிட்டுப் பொதிகை நோக்கிப் புறப்பட்டார்கள்.

## ii போதிகை யடைதல்

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா! உன்குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்து உருக வேண்டுவனே" என்று

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளுக்குத் தோன்றியது போலவே, ஸ்ரீஇரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கும் பொதிகைமலே யடியிலுள்ள குற்றாலம் என்னும் திவ்விய தலத்தைப்பற்றித் தோன்றியிருக்க வேண்டும். உற்றாரையும் கற்றாரையும் ஊரையும் பேரையும், வெறுத்து, உலகியல் கல்வியினைக் கற்றதெல்லாம் போதும் என ஒதுக்கி, கன்றை நினைந்த பசுவைப்போலக் கசிந்து உருக, அக் காலத்தில்போல இக் காலத்திலும் வைக்கக் கூடியன, நீர்வீழ்ச்சி கொண்ட குற்றாலமாகிய பொதிகை மலேயின் அடிவாரக் காட்சியும்; அங்கு அமர்ந்து உறையும் கூத்தனின் குரைகழல் சேவையுமாகும். எனவே, அகங்கனிந்த அடியவர்கள் அங்குச் சென்றதுமே, அவ் விடத்தைப்பற்றி எண்ணியதுமே, இழுப்புண்டு அப்படியே பரவசப் பட்டு, ஆண்டவனது அருள்வயமாய்க் கட்டுண்ணப் பெறுவதில் வியப்பு ஏதும் இல்லே.

செந்தூர் எந்தையின் திருவருள் மடுத்ததும் சுவாமிகள் மறு நினைவு எதுவும் இல்லாமல், பொதிகை நினைவையே உள்ளத்தில் பூண்டு கொண்டார்கள். இடை வழியில் எத்தனையோ சிற்றூர்களை யும் பேரூர்களையும் கண்டார்களானாலும், எவ்வளவோ அறிந்தவர் களையும் அறியாதவர்களையும் பார்த்தார்களானாலும், எங்கும் எவ ரோடும் சுவாமிகள் தங்கியும் பேசியும் தவக்கமுறவில்லேயெனத் தெரிகிறது. குற்றாலத்தை விரைந்து அடைந்து, உருகி வழிபாடு ஆற்றி, உடையவன் கணக்கின்படி மலேமீது சென்று சண்பகமா தேவி என்னும் இடத்திலே, மறைவான குகையொன்றிலே மனதையடக்கித் தனித்து அமர்ந்துவிட்டார்கள்.



குற்றாலமலை சண்பகமாதேவி நீர்வீழ்ச்சிக்கு அருகுள்ளதும், சுவாமிகள் தனித்தவம் ஆற்றியதுமான குகை.

## iii குகையின் அமைப்பு

சுவாமிகள் தனித்திருந்து தவமாற்றச் சென்ற குகையும், அதன் சுற்றுப்புறமும் இயற்கை யழகு மிகுந்தது. உள்ளத்தை ஒரு வழிப்படுத்தும் தன்மையது. குற்றாலநீர் வீழ்ச்சியிலிருந்து தென்மேற்கே சுமார் இரண்டு மைல் தூலைவில் உள்ளது. கால் நடையாகத்தான் செல்ல வேண்டும். குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தனது ஆலயத்திற்குப் பின்பக்கமாக, மேற்கு நோக்கிச் செல்லும் காட்டு இலாக்கா பாதையின் வழியாகப் போகவேண்டும். வழியில் 'சம்பாதேவி' என்று ஒரு கை காட்டிப்பலகை காணும். பாதையும் இரண்டாகப் பிரிந்து, ஒன்று தெற்கு நோக்கி மலைமீது செல்லும், மற்றொன்று முன்பாதையைத் தொடர்ந்து காட்டு இலாக்கா சாலையாகவே போகும். மலைமீது ஏறும் வழியாக அரை மைல் தூரம் போனால், மற்றொரு கைகாட்டிப் பலகை தோன்றும். இடதுபுறமாகப் பாதையும் பிரியும். அங்கிருந்து நேர் கிழக்கே நடக்கவேண்டும். இருமருங்கும் அடர்ந்த சோலை. களைப்பே தெரியாது. வழி சிறிது தூரம் ஏற்றமாகவும் சிறிது தூரம் இறக்கமாகவும் மாறி மாறி யிருக்கும்.

முதல் சண்பகமாதேவி ஆலயமும் சிலமடங்களும் தென்படும். அதற்கப்பால் அருவியும், அருவியின் தலைப்பில் உயரத்திலிருந்து விழும் வீழ்ச்சியும் காண இன்பந்தரும். வீழ்ச்சிக்கு வடக்கேதான் ஒரு மண்டபத்தையொட்டிச் சுவாமிகள் தவமாற்றிய குகை யிருக்கின்றது. குகையின் வாயில் சற்று உயர்வான இடத்தில் அமைந்திருக்கின்றது. படிகள் வழியாக ஏறி வாயிலண்டை சென்றதும் குகைக்குள் இரண்டு பிரிவுகள் இருப்பது தோன்றும். குகையின் உள்புறம் இருண்டதொன்றதலின், சாதாரண மனமுடைய மக்கள் எவரும் அங்குச் சென்று தங்கி வாசம் செய்ய விரும்பவே மாட்டார்கள். சுவாமிகளுக்குத் தனியிடமே தேவையாயிருந்தது. ஆதலின் அவாவோடு அவ்விடத்தைப் போற்றி ஏற்றுக்கொண்டார்கள். தற்காலத்தில் அன்பர்கள் பலர் அவ்விடத்திற்குச் சென்று வீழ்ச்சியில் ஆடி, குகை சேவை செய்து வருகிறார்கள். சுவாமிகள்

சென்ற அக்காலத்தில் பெரும்பாலும் மக்கள் யாரும் அங்கே போய்வருவது வழக்கமாயிருந்திராது எனத் தோன்றுகிறது.

### iv தனித் தவ வொழுக்கம்

குகைக்குள் சென்றமர்ந்த சுவாமிகள், உடையவன் சேவடியைத் தவிர வேறு எந்தப் பொருளின்மேலும் சிந்தை செல்லாத சிறந்த நிஷ்டையில் இருந்து வந்தார்கள். அந்நிலையில் சுவாமிகள் பல மாதங்கள் இருந்து வந்தாலும் இடையிடையில் நிஷ்டை கலைந்து குகைக்கு வெளியிலே வந்து உலவினார்களா, நீராடினார்களா, காய்கனியாவது அருந்தினார்களா, அருவிநீர் பருகினார்களா, என்று அறிந்துகொள்ளக்கூடவில்லை. சுவாமிகளும் இவைகளைப் பற்றி யாரிடமும் சொல்லிக்கொண்டதுமில்லை. அடியவர்களாவது சுவாமிகளை யணுகவும், இவற்றைப்பற்றியெல்லாம் கேட்டறியவும், துணிவு கொள்ளவுமில்லை. பலநாட்கள் தம்மை மறந்த தவ நிலையிலே தங்கியிருந்து, உடையவன் கணக்கின்படி, விழிப்பு நேர்ந்து, சுற்றிலும் உள்ள உலகத்தின் நினைவு வந்ததும், ஒருவேளை எழுந்து குகையை யகன்று, அப்பக்கத்தில் இங்கும் அங்கும் இயற்கையாய் விளைந்திருந்த மரங்களில் கண்ட காய் கனிகளை யருந்தி, சுனைநீர் பருகியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. மற்று, மலையின் அந்தப்பாகத்திலே, குகைப்பாங்கரிலே, சுவாமிகளுக்கு யாராவது உணவு எடுத்துச்சென்று கொடுத்ததாகவாவது, கூடவே யிருந்து பணிவிடை செய்ததாகவாவது ஏற்படவில்லை. பின்னல், பக்குவப்பட்ட சில அடியார்களை பொதிகை மலைக்கு அழைத்துச சென்று தவநெறி காட்டுவித்தபோது, சுவாமிகளே "இதுதான் நிஷ்டை கூடிய குகை" என்று அவ் அடியார்களிடம் அருளியிராவிட்டால், இவ்வளவுகூட அதுபற்றி அறிந்துகொண்டிருக்க முடியாது.

உடையவன் உண்டு, தாம் உண்டு, என்று தனித்தவ ஒழுக்கம் மேற்கொண்டு வதிந்த சுவாமிகள், அக்குகையிலே உடையவனது பூரண அருளை நாடி உருகி உருகி, அழுகையாக அழுதிருக்க வேண்டும். முன்னரே ஓர் இடத்தில் குறித்தபடி சுவாமிகள் அடிக்கடி, "இது லேசான அழுகையா அழுதது உடையவனிடத்திலே" என்று அடியவர்களோடு பேசும்போது சொல்வதுண்டு.

அப்படி அழுவதற்குத் தக்க தனியிடம் மதுரை முகம்மதியாது நவீனச்சாமான்கள் விற்கும் கடையைக்காட்டிலும், பாசம் எனும் தாழ் உருவி பரனருளுக்கு உளம் கசிய வைக்கும் பொதிகை மலைக் குகையே, மிகச் சிறந்ததாக இருந்திருக்கும். மதுரைக் கடையிலே மனத்தினுள்ளேயே மறைவாக அழுத சுவாமிகள், மலைத் தனிக் குகையிலே வெட்கம் விட்டு வெளிப்படையாக அவனருளுக்காகக் கதறியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

## 2 அன்னையார்க்கு அரும்பணி.

### i தாய்நிலை அறிதல்

இவ்வாறு சுவாமிகள் தனியிருந்து தவம் ஆற்றிவரும் நேரத்திலே, ஒவ்வொரு மனிதனும் செய்து ஆகவேண்டிய இன்றியமையாத கடமையொன்று சுவாமிகளது உள்ளத்திலே கதுமென உதிக்கலாயிற்று. உடையவன் கணக்கு அவ்வாறு உதிக்கும்படிச் செய்தது என்று சொல்லுதல் வேண்டும். சுவாமிகள் தவம் ஆற்றி வந்த அக்காலத்தில் அவர்களது அன்னையாருக்கு வயது அறுபத்து ஐந்துக்குமேல் இருக்கும். நிரம்ப மக்களைப் பெற்ற தாய் ஆதலின் சாதாரணமாக நாள் தள்ளிவந்திருக்கவேண்டிய மூப்பு முந்தியே வந்திருத்தல்வேண்டும். சுவாமிகளது தமயனார் இருவரும் பிறரும் இரெட்டியபட்டியில், அவர்களது அன்னையாரைப் பாதுகாக்க, இருந்துகொண்டிருந்தாலும், தம்முடைய கூட்டைப் பத்துமாதம் சுமந்து பெற்று, பரிந்து எடுத்து, பாலூட்டி, வளர்த்து ஆளாக்கிய அன்னையின் திருமேனிக்குத் தம் கையால் கட்டாயம் தொண்டு செய்து ஆதல் வேண்டும் என்று சுவாமிகளுக்கு ஏற்பட்டது. "நமக்காக தாயாரது தனியுள்ளம் ஏங்குமே. அவ்வாறு ஏங்குதலைத் தவிர்க்கவேண்டியது நமது கடமையல்லவா?" என்றும் தோன்றியிருக்கலாம். முற்றத்துறந்த முனிவர்களாகிய பட்டினத்து அடிகளார் போன்ற நம் நாட்டுப் பேரருளாளர்கள் அவரவர்களது அன்னைமார்க்கு ஆற்றிய அரும்பணி சுவாமிகள் நினைவிலே நிகழ்ந்திருக்கக் கூடும். தவமும், தனிப்பரம் பொருளின் தண்ணருளும், தாயாருக்குப் புரிய வேண்டிய கடமையிலிருந்து தவறியவர்கட்கு, சித்திக்கா என்னும் வாய்மையானது உடையவன் கணக்கின்படி

சுவாமிகளது திருவுள்ளத்தில் 'புறப்படு' என்னும் குறிப்பை உண்டாக்கி யிருக்கும்.

ii மலைவிட்டு ஊர் சேலல்

தாம் முனைந்து முடித்து முழுப்பயன் பெறவேண்டும் என்று துணிந்து வந்த தூய தொழிலினைச் சிறிது காலம் தாழ்த்தே, மறுபடியும் பற்றுதல் வேண்டும் என்னும் தீர்மானத்திற்கு வந்தார்கள் சுவாமிகள். மலையை விட்டுப் புறப்பட்டார்கள். மலைக்கு வருவதற்கு முன் சுவாமிகளுக்கு இருந்த உள்ளத்தின் தன்மையும், உடலின் அமைப்பும், மலையை விட்டு இரெட்டியப்பட்டிக்குச் செல்லத் தொடங்கிய அக்காலத்தில், எவ்வளவோ மாறி யிருந்திருக்க வேண்டும். எத்துணைக்காலம் சுவாமிகள் மலைமீதிருந்து குகை வாசம் செய்தார்கள் என்று தெரியவில்லை. பின்னிட்டு நடந்த சம்பவங்களைக் கொண்டும், முன்னால் சென்ற செய்திகளை வைத்தும், பார்க்கும்போது சுவாமிகள் சுமார் ஓராண்டு மலைமேலே தவ ஒழுக்கம் தாங்கி நடத்தி யிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அப்போது சுவாமிகளுக்கு வயதுமுப்பத்தைந்து அல்லது முப்பத்தாறு இருக்கலாம்.

மதுரையிலே, ஏறத்தாழ ஒருவருஷத்திற்கு முன்பு, பைத்தியக்காரர் என்ற பட்டம் பெற்று, ஒதுக்கப்படுகின்ற காலத்திலே திடீரென மறைந்து விட்ட சுவாமிகள், எதிர்பாராதபடி கதுமென எதிரே வந்து நின்றார் என்றால், "அந்தோ! நமது அருமை மகன் பித்துப் பிடித்துப் போனானே, கண்ணிலும் காண்பதற்கு இல்லாமல் மாயமாய் மறைந்து சென்றானே; இனி எக்காலத்தில் நமது செல்வப் பிள்ளையைக் காணப் போகின்றோம்." என்றெல்லாம் வருந்தி வருந்தி ஏக்கங்கொண்டு இளைத்திருந்த, பெற்ற தாய்க்கு எவ்வளவு ஆனந்தமா யிருக்கும்! மற்றவர்களும் எம்மட்டு களித்திருப்பார்கள்! அன்னையாருடைய மனத்தின் துன்பந்தான் அருமருந்தன்ன மகனைக்காண வேண்டும் என்று கொண்ட அவாதான், சுவாமிகளை இங்கு இழுத்து விட்டது என்று சொல்லிக் கொண்டார்கள். முதலில் சுவாமிகளை இன்னாரென்றே அடையாளங் கண்டு பிடித்திருக்கமாட்டார்கள். பிறகு உடனேயே தெரிந்து

அறிவாளாகி யிருப்பார்கள். என்ன அளவளாவினாலும், சுவாமிகள் உற்றாரிடத்திலும், மற்றாரிடத்திலும் பற்றியும் பற்றாமல் நடந்து கொண்ட போக்கும், பேசி வந்த மாதிரியும், அவர்கள் நிலையிலே யிருந்து பார்த்தபோது, எத்துணையோ வேறு பட்டதாகவும், புதுவதாகவும் அவர்களுக்குத் தோன்றி யிருக்கும்.

## iii தினசரி வழிபாடு

யார் இடத்தில் எப்படி யிருந்தாலும் அன்னையாரிடத்தில் மாத்திரம் கனிந்த அன்பு பூண்டவர்களாக நடந்தார்கள் சுவாமிகள். விடியல் எழுந்து நீராட்டம் முதலிய முடித்து, அன்னையாருக்குப் பாத பூசை செய்வது வழக்கம்.

திருவடிகளைத் தட்டில் வந்தி நன்னீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து மலர் தூவி, தூப தீபம் காட்டி வழிபட்டு வருவார்கள். மற்ற நேரங்களில், தனியமர்ந்து ஆண்டவனது அருள் சிந்தனையிலேயே ஈடு பட்டிருப்பார்கள். இவை தவிர சுவாமிகளுக்கு வேறு ஏதும் வேலை இல்லை. குடும்பக் கவலையாவது, உற்றார் உறவினர் பற்றுவது சுவாமிகளுக்குக் கிடையாது. இருக்கும் இடந்தேடி ஏதாவது சிறிது உணவு கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள் வீட்டார். பெரும்பாலும் பயற்றம் பருப்பு இட்டு செய்யப்பெற்ற கஞ்சியையே அக்காலத்தில் சுவாமிகள் சாப்பிட்டு வந்ததாகத் தெரிகிறது.

## iv அடியவர் கூட்டம்

சுவாமிகள் இங்கு வந்து தங்கி யிருப்பதை மதுரையிலும் மற்ற இடங்களிலும் இருந்த அடியவர்கள் அன்போடும் அவாவோடும் அறிந்து, இவ்விடத்திற்கு ஓடி வந்து தரிசித்துப் போகலானார்கள். தங்கியும் இருந்தார்கள். குறையுள்ளவர்கள் மதுரை வழக்கம் போல் திருநீறு பெற்றுப் போவதற்காக இரெட்டியப்பட்டிக்கும் வரத் தொடங்கினார்கள். வெளியூரார்கள் வந்து சுவாமிகளது திருநீற்றால் பல நன்மைகளைப் பெற்றுப் போவதைக்கண்ட உள்ளூராரும் சுவாமிகளை ஒருவர் இருவராக நாடலானார்கள். சுற்றுப்பக்கத்தார்களும் புற்றுக்கொண்டு வரலானார்கள். மதுரையிலே நடந்த அற்புதங்களைக் காட்டிலும், இரெட்டியப்பட்டியிலே பலமடங்காக

வும் பெரிய பெரியவைகளாகவும் அவை நடக்கலாயின. எனவே அடியவர் கூட்டத்திற்கு அளவு சொல்ல முடியாது.

மேல் விழுந்து வந்துகொண்டிருந்த அடியவர் கூட்டம் அவ்வளவிற்கும் வீட்டண்டை இடங்காணது போயிற்று. குடி செய்துவரும் ஒரு வீட்டில், எந்நேரமும் பல நோயாளிகளும் பல குறையுள்ளவர்களும் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருப்பதோடு, தங்குபவர்களும் பலராக இருந்தால், வீட்டின் தினசரி வேலைகளை, பயிர் பச்சைக்குரிய பணிகளை அவ்வீட்டிலுள்ளார் சரிவர எப்படிச் செய்துவர முடியும்? வரும் அடியவர்களையோ தடுக்க முடியவில்லை. சுவாமிகளும் இதைப்பற்றிச் சிந்தித்தார்கள்.

V சித்திக்கணபதி சீராலயம்.

இந்தச் சிந்தனையோடு சுவாமிகள் இரெட்டியப்பட்டிக்கு மேற்காயுள்ள கண்மாவின் ஓரமாக, ஒரு நாள் காலை உலாவிக் கொண்டிருந்தார்கள். சுவாமிகளது கண்கள் அக்கண்மாவின் துறையொன்றில் போடப் பெற்றிருந்த கருங்கல் மீது சென்றன. அதை உற்று நோக்கிய வண்ணமே உடையவன் கணக்கை உன்னிய அவர்களுக்கு, சடக்கென ஏதோ தோற்றங் கொடுத்தது. சுவாமிகள் வெளியே செல்லும்போது யாராவது ஒருவர் இருவர் கூடவே போகும் வழக்கம்போல் அன்றும் போயிருந்த அன்பர் ஒருவரை சுவாமிகள் அழைத்தார்கள். கண்ணுற்ற கருங்கல்லைப் புரட்டச் சொன்னார்கள். புரட்டியவர் வியக்கும்படியாக, அக்கல் விழுமியதொரு விநாயகர் திருவுருவமாக இருந்தது.

அப்போதே ஆள்களை வைத்து அக்கணபதிமூர்த்தத்தை எடுப்பித்து, ஊருக்குக் கிழக்குப்பக்கமாக இருந்த புளியந்தோப்பின் ஓரமாக அமைத்தார்கள். சுற்றிலும் மண்சுவர் வைத்து, மேலே அப்பக்கத்து வழக்கம்போலப் பருத்தி மிலாறு வேய்ந்த ஒரு கோவிலும் விரைவிலே கட்டுவிக்கப் பெற்றது. [இப்போது அவ்விடத்தில் கருங்கல்லால் அழகிய ஆலயம் ஒன்று அமைக்கப்பெற்று இருக்கிறது.] சித்திவிநாயகர் என்று சுவாமிகளே அத்திருமூர்த்தந்திற்குத் திருநாமம் இட்டார்கள். வெள்ளிக்கிழமைதோறும்

விசேஷ பூஜை நடைபெறும். கடைசி வெள்ளியன்று மேலும் சிறப்பாகப் பூசனை நடக்கும். அத்தினத்தில் வீதிவலம் வருவதற்காக என்று, 'தூத்துக்குடி ஆச்சாரிகள்' என்ற பெயர் வழங்கிய, விசுவ பிரம்ம குலத்து அன்பர் சிலர் அழகிய செவ்வேல் ஒன்று செய்து வந்து சேர்த்தனர். விமானம் முதலியவும் அமைத்து வைத்தனர்.

வெள்ளியன்று வரும் கூட்டத்திற்கே எல்லையில்லை. கடைசி வெள்ளியன்று வரும் கூட்டமோ கணக்கிட்டுச் சொல்ல முடியாது. சுவாமிகள் அன்னையார் வழிப்பாட்டைச் செய்யும் நேரம் போக மற்ற நேரமெல்லாம் ஆலயத்தண்டையே தங்குவார்கள். வரும் அடியார்கள் அங்கேயே வருவார்கள். எதிரிலிருந்த புளியந்தோப்பு, அன்பர் கூட்டங்களுக்கு அருநிழல் தந்து வர சௌகரியமா யிருந் தது.

vi அற்புத ஆற்றல்.

விஷக்கடி நீங்குவதற்காகவும், நோய்கள் போவதற்காகவும் மன தில் எண்ணிய காரியங்கள் கைகூடுவதற்காகவும் மக்கள் திரள் திர ளாக வந்து விபூதி பெற்றுப் போனதோடு, பேய் பிசாசு உள்ள வர்களும் அங்கு வந்து சேரலானார்கள். ஆலயத்திற்கு முன்னே வந்து அமர்ந்து ஆட்டமாக ஆடிக்கொண்டிருக்கும் பேய் கொண்ட வர்களைச் சுவாமிகள் பார்த்து, இரங்கி, உடையவன் அருளை உறுத்து நினைந்து, 'இனி இவர்கள் வருந்தாதிருக்க வேண்டும் இறைவா!' என்று இறைஞ்சி, "எழுந்திருந்து போங்கள்" என்பார்கள். உடனே பேய் கொண்டவர்கள் சாதாரண மக்களைப்போல எழுந்து ஆலய வழிபாடு ஆற்றி ஆண்டவன் விபூதி பெற்று வீடு செல்வார்கள்.

ஒரு நாள் இரெட்டியபட்டியிலுள்ள அய்யம்பெருமாள் பிள்ளை யின் மனைவியாகிய ஆச்சியம்மாள் என்பவர் ஊருக்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள புன்செய் காட்டுக்குப் போயிருந் தார்கள். அங்கே கடுவிஷப் பாம்பொன்று, அவ்வம்மையாரைக் கடித்து விட்டது. விஷம் தலைக்கு ஏறி மாண்டுவிட்டார்கள். அவரது உறவினர் கையற்று வருந்தி, காட்டில் இறந்த பிணம் வீட்டிற்கு வரலாகாது என்று சொல்லி அப்படியே ஈமக்கடன்களை முடிக்க ஏற்பாடு செய்தனர். அது சமயத்தில் சுவாமிகளது

அற்புத ஆற்றலை அறிந்த அன்பர் ஒருவர் சுவாமிகளிடம் அந்த அம்மையாரை எடுத்துச் செல்லச்சொன்னார். செல்லலாகாது என்று பலர் தடுத்தனர். கடைசியாகச் செல்வதெனச் சிலர் துணிந்து சுவாமிகளிடம் தூக்கிப்போனார்கள். சுவாமிகள் சித்திவிநாயகர் ஆலயத்தின் முன்னர் அந்தப் பிணமான அம்மையாரைக் கிடத்தி, ஆண்டவனது அற்புத அருளை ஆழ்ந்து எண்ணி, திருநீறு தடவினார்கள். உடனே அவ்வம்மையார் உறங்கி யெழுந்திருப்பவர் போல எழுந்து வணங்கினார்.

இந்த அற்புதத்தை அவ்வம்மையார் அடுத்துள்ளவர்களுக்குச் சொல்ல, நெருங்கிய உறவினர் சிலர் "இப்படியும் ஆகுமோ? இதில் ஏதோ சூது இருக்கும்" என்று ஏளனம் செய்தார்கள். ஆச்சியம் மாளுக்கு ஆத்திரம் வந்தது. கையில் நெருப்புச் சட்டியை யேந்தி, சித்திக்கணபதி ஆலயத்தின் முன் சென்று வணங்கி, ஊர் சுற்றிவந்தார்கள். வீட்டுக் கூரைகளிலும், சோளத்தட்டு படப்புக்களிலும் காட்டினார்கள். நெருப்பு கனிந்து எரிந்ததானாலும், கையும் பழுதாகவில்லை, கூறை, படப்பு முதலிய எதுவும் தீப்பற்றவுமில்லை. அந்த அம்மையார் இன்றைக்கும் இரெட்டியபட்டியில் சுவாமிகளது நெறியைப் பின்பற்றி வாழ்க்கை செய்து வருகிறார்கள்.

இம்மாதிரி அப்பக்கங்களில் கிராம தேவதையின் சக்தியை விளக்க சாதாரண மக்கள் செய்யும் வழக்கம் இருப்பதாகத் தெரிகிறது. அதைப் பின்பற்றியே இவ்வம்மையார் உலகினுக்கு இரெட்டியப்பட்டி சுவாமிகளது அற்புத ஆற்றலை விளக்கிக் காட்ட வேண்டும் என்ற ஆவேசத்தினால் செய்ததைப்போலப் பின்னும் பலரும் பலவேறு சந்தர்ப்பங்களில் செய்ததாகத் தெரிகிறது.

அவர்களுடைய மன உறுதிக்கும் அன்புக்கும் மகிழ்ந்து ஆண்டவன் அருட் பெருமையினை வியந்து உவந்திருப்பார்களானாலும், இத்தகைய செய்கைகளைக் கண்டு சுவாமிகள் மனம் நொந்து இருப்பார்கள். சுவாமிகளுடைய கருத்தெல்லாம், உடையவனது அருளால் நடக்கும் செய்திகளை இரண்டாம்பேருக்குச் சொல்லல் ஆகாது என்பதாகும். அப்படியே தம்மிடம் வரும் அடியவர்களுக்குச் சுவாமிகள் சொல்லிவருவதுண்டு. என்றாலும், ஆச்சி

யம்மாளைப் போல ஆர்வமிகுதியினாலே, ஆண்டவனது அருளில் கொண்ட முரட்டுத்தனமான பற்றினாலே, விளம்பரம் செய்பவர் களைச் சுவாமிகள் என்ன செய்வார்கள்? இம்மாதிரி விளம்பரங்க ளாலே ஏற்கனவே பெருகியிருந்த அன்பர் கூட்டங்கள் மேலும் பெருகலாயின. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளி வீதி விழா அன்றைக்கு அன்பர்கள் ஏறிவரும் வண்டிகளிற் பூட்டிய மாடுகள் இடும் சாணம் மாத்திரம், விலைமலிந்த அக்காலத்திலேயே, ஐந்து ரூபாய்க்குக் குத்தகைக்கு விடப்பெறுமாம். அன்றைக்கு விழும் பொரிக்கடலை கடைகட்கு அளவே இல்லையாம். குறைந்தது ஆயிரம் தேங்காய்கள் உடையுமாம்.

## vii சட்டத்திற்குக் கடைக்கால்

இப்படி ஏராளமாக, வரும் அன்பர்களுக்குச் சுவாமிகள் சில அரிய உபதேசங்களைச் செய்வார்கள். பலதிற பக்குவமுடைய பெருங்கூட்டமான எல்லோருமே சுவாமிகளது உபதேச மொழி களை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை அறிந்து, சுவாமிகள் சில சிறந்த அன்பர்களை அருகு அழைத்து, அவர்கள் இம்மை மறுமை நலங்களை இனிது அடைய வேண்டுமானால், இக்கலி காலத்தில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்னும் வழிகளை அருளோடு கூறுவார்கள். விடியற் காலத்தில் விழிப்பு கொள்ளு தல், அப்போதே பச்சைத் தண்ணீரில் நீராடுதல், வெந்நீரைக் குடிப்பதற்கும் கொள்ளாது விடுத்தல், ஆண்டவனது அருளில் முழு நம்பிக்கை வைத்து செயல்களை நடத்தல், நமக்கு வரும் பிணி முதலிய துன்பங்கள் யாவற்றையும் உடையவனது திருவருள் மேல் உறுதிவைத்தே தீர்த்துக்கொள்ளுதல், மருந்து என்பதையே அருந்தாதுவிடுத்தல், முதலிய நன்னெறிகளைச் சுவாமிகள் மிகத் தெளிவாக விளக்கிச் சொல்லக்கேட்டு, எல்லோருமே அந்நெறியைப் பின் பற்றுவிட்டாலும், நல்வினைப் பயன் இருந்த பலரும் போற்றிப் பற்றி அப்படியே ஒழுகிப் பயன் பெறலானார்கள்.

அரசாங்கத்திலே ஒரு சட்டம் செய்வது என்றால், முதலிலே அதற்கு ஒரு மசோதா செய்து பொதுமக்கள் பலருக்கும் அறி வித்து அவர்கள் அபிப்பிராயங்களைக் கலந்து சட்டசபையில்

வைத்து ஆலோசித்துப் பிறகே உலகம் மதித்து நடக்கக்கூடிய சட்டமாகத் திட்டம் செய்வது வழக்கம். அதைப்போலவே சுவாமிகள் பின்னால் ஊர்ஜிதம் செய்து உலகமக்கள் பலருக்கும் பயன் படும்படி விதிக்க இருக்கும் சட்டத்திற்கு மசோதா போல இரெட்டியபட்டியிலே சக்தி விநாயகர் ஆலயத்தின் முன்பு அடியார்கள் முன்வைத்து அப் பெருஞ் சட்டத்திற்கு அடிப்படையான கடைக்கால் போட்டு வைத்தார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

viii இடையிடையே பொதிகை.

அன்னையார் பொருட்டாகவே சுவாமிகள் இரெட்டியப் பட்டியில் இருந்துவர இசைந்தார்களானாலும், சுவாமிகளது உள்ளம் எல்லாம் பொதிகைமலையிலேயே, குற்றாலக்கூத்தரின் குரை கழல்களிலேயே, அவனது அருளை நிறையப் பெறுவதிலேயே, பதிந்து இருந்தது. அன்னையார் கடமையை ஆற்றவேண்டிய அவசியம் இல்லாமல் இருந்திருந்தால், அச்சமயத்தில் சுவாமிகள் பொதிகையை விட்டுக் கீழே இறங்கிவந்திருக்கமாட்டார்கள். அன்னையின் பணிக்காக வந்த இடத்திலே, ஆண்டவனது அருளை நாடிவந்த மக்களுக்கு அவ்வருளை மடுத்துத்தரும் வேலை பெரிதாய்விட்டது. இராப்பகல் ஓயாது அன்பர் கூட்டங்கள் வந்தபடி இருந்தன. செய்வது மக்கள் பணியானாலும், அப் பணியை இன்னமும் சிறப்பாக ஆற்றுதற்கு அம்பலவனது அடர்ந்த அருளை மேலும் பெறுதற்குரிய முயற்சியாகிய மலைத் தனித்தவம் புரிவதற்கு இல்லையேயெனும் ஏக்கம் அடிக்கடி சுவாமிகளுக்குநேர்ந்ததெனத் தோன்றுகிறது.

இருந்ததுபோல் இருந்து சுவாமிகள் இரெட்டியப்பட்டியை விட்டுச் சென்றுவிடுவார்கள். எங்கே போனார்கள், எப்பொழுது வருவார்கள், என்னும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அவ்வூரில் யாருக்கும் தெரியாது இருக்கும். ஒருவேளை அன்னையார் அறிவார்களோ என்னவோ. ஆனால் அவர்கள் யாரிடமும் சுவாமிகளது செலவைப்பற்றிக் கூறுவது கிடையாது. நேரே அம்பாசமுத்திரம், பாபநாசம், குற்றாலம் முதலிய இடங்களுக்குப் பொதிகை வாசம் செய்து புனிதம் பூரித்தல் பொருட்டு, போய்விடுவார்கள் என்று

பின்னிட்டு சுவாமிகளோடு உரையாடும்போது அன்பர்கள் அறிந்து வந்தார்கள். இப்படிச் சென்றார்களானாலும், இரெட்டியப்பட்டியை விட்டுப் பலநாள் வெளியே யிருக்கச் சுவாமிகளுக்கு உள்ளம் இருப்பதில்லை. நீரிலிருக்கும் மீன் எப்போதும் நீருக்குள்ளேயே யிருந்துகொண்டிராமல், அப்போதைக்கப்போது காற்று கொள்ளு தற்காக நீர்மட்டத்திற்குமேலே முகத்தை நீட்டிவிட்டு உடனே உள் செல்வதுபோல, சுவாமிகள் இரெட்டியப்பட்டியிலேயே இருந்து வராமல், நினைத்தபோது மலைக்கு ஓடி சிலநாள் தங்கியிருந்து உடனே திரும்புவது வழக்கமாயிருந்தது.

## ix அன்னையார் அடக்கம்

மன்மத ஆண்டு ஆரம்பித்தது. அன்னையாருடைய ஆயுளும்முடிவுக்கு வந்தது. நோயும் பாயும் காணுதபடியே, தம் மக்களது தகுதிக்கு ஏற்க, அன்னையார் அவர்கள் ஆண்டவன் திருவடியையே சிந்தித்துச் சிவமானூர்கள். தாம் பெற்ற சுப்பிரமணியம் தம்மிடம் கொண்டிருந்த இன்பங்கனிந்த அன்பும், தமக்கு ஆற்றிய தெய்வத் திருப்பணியும், தவமாற்றும் தனிப்பெருமையும், இறைவன் திருவருள் கொண்டு மக்களுக்கு இயற்றிவரும் தொண்டும், அம்மையாரை ஆனந்தக்கடலில் ஆழ்த்திவந்து, ஆனந்தமயமான ஆண்டவனின் சேவடி நீழலிலே, ஆனந்தமாகவே அடைவித்தன.

அண்ணூர் இருவரோடும், உற்றூர் உறவினரோடும், உடன் இருந்து முறைப்படி செய்யவேண்டிய ஈமக்கடமைகளைச் சரிவர செய்து முடித்தார்கள். ஆனுல் சுவாமிகளது வேண்டுகோளுக்கு இசைந்து, அவர்களது அண்ணூரும் பிறரும், குடும்ப வழக்கத்தின் படி அம்மையாரைத் தீயிலிட்டுத் தூய்மை செய்யாமல், பூதேவியின் திருவயிற்றிலே புனிதமுடன் அடக்கம் செய்தார்கள். அது முதல் சுவாமிகளது குடும்பத்தில், தீக்காப்பு இடும் வழக்கம் போய் மாண்டவர்கள் உடலங்கட்டு மண்காப்பு இடும் வழக்கமே ஏற்பட்டுவிட்டது. பின்னர் கூறப்போவதிலிருந்து, சுவாமிகளது கொள்கை இறந்தவர்களைச் சுடலாகாது, மண்ணில் இடுவதே தகுதி என்பதாகத் தெரியவரும்.

X மண்டல மௌனம்

அன்னையார்க்குரிய இறுதிப் பணிகளை ஆற்றியதுமே, வீட்டிலே, முதலில் சுவாமிகள் தியானத்தில் அமர்ந்திருந்த இடத்திலே, இடம்பெற்றிருந்த சாய்வு நாற்காலியிலே, சுவாமிகள் சென்று உட்கார்ந்துவிட்டார்கள். அன்று அமர்ந்தவர்கள் சரியாக ஒரு மண்டலம்வரை இப்படி அப்படி அசையவில்லை. மல ஜலத்திற்காகவாவது, குளிக்க உண்ணவாவது எழுந்திருக்கவில்லை. மௌனம் சாதித்துக் கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிட்டார்கள் என்று தான் கண்டவர்கள் சொல்லக்கூடும். அதுபோது அவர்களது மனம் இருந்த நிலையும், ஆன்மா அடைந்த அநுபவமும் யாரால் அறியமுடியும்? சுவாமிகளா அந்த இரகசியங்களை வெளிவிட்டுச் சொல்லப்போகிறார்கள்?

அயர்ச்சியினால் சுவாமிகள் அடர்ந்து நித்திரை செய்கின்றார்கள் என்று முதலில் நினைத்தார்கள். எத்தனை மணிநேரம் ஒருவர் தூங்கமுடியும்? அதிலும், பெரும்பாலும் பொழுதையெல்லாம் விழித்தே, தியானித்தே, செலவு செய்யும் சுவாமிகள் எவ்வளவு நேரம் உறங்கியிருக்கப்போகிறார்கள் என்று எண்ணிச் சிறிது போது சும்மா இருந்தார்கள். சுவாமிகள் விழித்துப் பார்க்கவில்லை, அசையவுமில்லை. எனவே, என்ன இது புதுமையென அருகிற்சென்று அழைத்துப் பார்த்தார்கள். பதில் இல்லை. தொட்டு அசக்கினார்கள். ஊரெல்லாம் வந்து உரக்கக்கத்திக் கூப்பிட்டு உலுக்கியும் பார்த்தாய்விட்டது: உணர்ச்சி யிருப்பதாகத் தோன்றவில்லை. அடியார் கூட்டங்கள் அளவில்லாமல் வந்து தரிசித்துப்போயின. சுவாமிகள் கையையும் காலையும் நீட்டிவிடவில்லையாதலால், முதலுக்கு ஏதும் மோசம் இல்லை யென்று மாத்திரம் எல்லோரும் நம்பினார்கள்.

என்றாலும் துன்பம் பெருகிவந்தது. அம்மையார் அடைந்ததனால் வந்த வருத்தமெல்லாம் எப்படியோ போய்விட்டது. சுவாமிகளும் அன்னையாரைத் தொடர்ந்து விடுவார்களோ என்னும் அச்சந்தான் அனைவரையும் அலமரச் செய்தது. பொதிகையிலே சுவாமிகள் பொருந்தியிருந்த நிஷ்டை நிலையை அவர்கள் கண்டிருக்கமாட்

டார்கள். பார்த்திருந்தால் இப்போது பயப்படவேண்டிய அவசியம் இருந்து இராது. பல பொழுது விடிந்தது. பல பொழுது போயிற்று. ஒவ்வொரு நாளும் உற்றாரிலும் ஊராரிலும் பலர் வந்து சுவாமிகளது மோன நிஷ்டையைக் கலைக்க முயன்று வந்தார்கள். எத்தனைபேர் முயன்றும் எதும் பலனில்லாது போயிற்று.

ஒரு மண்டலம் முடிந்தது. அன்று சுவாமிகள் நிஷ்டையைக் கலைக்கவந்தவர்களில் வெள்ளையப்பதேவரும் ஒருவர். தேவர் குடும்பத்துக்கு நெடுநாளைய நண்பர். அவர் ஏதேதோ உரத்த குரலில் பேசிக்கொண்டிருக்கும்போது, சுவாமிகளது திருநயனங்கள் திறந்தன. இதுதான் சமயம் என்று பற்றிக்கொண்டார் தேவர். வாடிலாயமாக அவர் பேசும் பாஷையிலே சுவாமிகளைக் கண்டித்துப் பேசலானர். "என்னத்தைக் கண்டுட்டது இந்தச்சாமி. இதுக்குத்தான் தெரியுமின்னு இப்படி உட்காந்துகிட்டுதே. ஆகாசத்திலிருந்து குதிச்சாப்பலன்னு இருக்கு! மக்க மனுஷாளிட கஷ்டம் தெரியாதச் சாமி என்னச் சாமி இது" என்றபடியெல்லாம் ஏதேதோ கத்தினர். மறுபடியும் சுவாமிகள் கண்களை மூடிக்கொண்டது காணவே, தேவருக்கு ஆவேசம் அதிகமாக வந்தது. இந்த சமயம் விடாமல், நெட்டிப் பேசினல்தான், 'சாமி வழிக்கு வரும்' என்று சொல்லிக்கொண்டு, வாய்க்கூச்சலோடு, கையாலும் சுவாமிகளைத் தொந்திரவு செய்தார்.

## xi மறுபடியும் போதிகை

தேவர் செய்த தொந்தரவோடு, மற்றவர்களும் 'இதுதான் சமயம் சுவாமிகளைச்சரியான நிலைக்குக் கொண்டுவர, என்றுஎண்ணி, சுவாமிகளைப் பலவாறு உலுக்கினர்கள். சுவாமிகள் கண் விழித்தாலும் இன்னமும் கர்த்தனுடைய கழல்களை விட்டு அகலாத சிந்தையராய், உலக நினைவு அற்றவராய் இருந்தமையினல், தேவர் முதலியோர் செய்த தொந்தரவுக்கு எதிராகத் தாம் உடுத்து அவிழ்ந்து கிடந்த வேட்டியைக் கிழித்தார்கள். இயற்கைக்கு மாறுன செயல்கள் செய்தார்கள். இது ஏது பைத்தியமாய் முடிந்து விட்டது போலிருக்கிறதே என்று எல்லோரும் வருந்தினர்கள். மதுரையில் நேர்ந்த பைத்தியத்தை யறிந்த இருவர் ஒருவர் மாத்திரம்

இதுவும் அத்தகைய பைத்தியமாகத்தான் இருக்கும் போலும் என்று எண்ணினார்கள்.

அவர்களது எண்ணந்தான் பலித்தது. எழுந்து வீட்டுக்கு வெளியே செல்பவர் போலச் சென்று அப்படியே நடந்துவிட்டார்கள் சுவாமிகள். கண்மா பக்கமாகப் போய் வருவார்கள் என்று நினைத்தார்கள் சிலர். எவ்வளவு தூரம் போகிறதோ போய் வரட்டும் என்று இருந்தார்கள் சிலர். திரும்பிப் பார்க்காமல் வெறுப்போடு சுவாமிகள் செல்வதைக்கண்டு பின் தொடர்ந்தார்கள் சிலர். யாரையும் பொருட்படுத்தாமல் சுவாமிகள் மாயமாய் நடந்து மறைந்துவிட்டார்கள். எங்கே சென்றார்கள் என்று யாருக்குமே தெரியாமற் போய்விட்டது. வீணாக இவ்வளவு கடுமையாக இருந்து விட்டோமேயென எல்லோரும் வருந்தினார்கள். வெள்ளையப்பத் தேவரால்தான் இப்படி நேர்ந்தது என்று அவர் மீது சினந்தார்கள் சிலர்.

அதுபோது அங்கிருந்த சுவாமிகளது அடியவர்கள் மனம் நைந்து, ஊராரது மடமைக்கு நொந்தார்கள். ஊருக்கு ஏதோ கஷ்டகாலத்திற்குத்தான், சுவாமிகளை இவ்வாறு செய்து அனுப்பி விட்டார்கள் என்றார்கள். அவர்கள் சொன்ன சொற்படியே சுவாமிகள் சென்றவுடனே ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் இருவர்க்கு நரம்புச் சிலந்தி வந்து பாயும் படுக்கையும் ஆனார்கள். "மறுபடியும் சுவாமிகளை என்று காணப்போகின்றோம், சுவாமிகளே கருணை வைத்தால்தான் நமது கர்மம் தொலையப் போகின்றது" என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள். சுவாமிகளைத் தேடும் முயற்சியிலே பலர் ஈடுபட்டார்கள். சுவாமிகளது அடியவர்கள் இருக்கும் இடங்கள் தெரிந்து போய்த் தேடினார்கள். எங்கும் காணக் கூடவில்லை. யார் கண்ணிலும் படாமல் சுவாமிகள் பொதிகை உச்சியை அடைந்தார்கள்.

## 3 பூரண அருள் பெறல்

### பொதிகை நிர்விகல்பம்.

இரெட்டியப்பட்டியார் இப்படித் தேடிக்கொண்டிருக்க, அடியவர்கள் ஆசானைக் காணாது அகம் நொந்து வாடி யிருக்கச், சுவாமி

கள், யாவருக்கும் அருள் பாலிப்பதற்காக, பொதிகை மலையிலே, நிர்விகல்ப சமாதியிலே, அமர்ந்திருந்தார்கள். முதலில் சென்று தவம் செய்ததும், இடையிடையே போய் நிஷ்டை கூடியதுமான அதே குகையில்தான் சுவாமிகள் நிர்விகல்ப சமாதியில் அமர்ந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தாம் வாசம் செய்ததாக அடியவர்களுக்குச் சுவாமிகள் காட்டிய குகை அஃது ஒன்றே தான்.

அன்னையார் அடக்கத்திற்குப் பிறகு, இரெட்டியப்பட்டியிலேயே தொடங்கி இச்சமாதி இடையில் தடைபட்டுப் போய், உடையவன் கணக்கின்படி, பொதிகையில் மறுபடியும் கூடப் பெறுவதாயிற்று. இரெட்டியப் பட்டியிலே, இடைஞ்சல்களுக்கு இடையிலே, நிர்விகல்பத்திலிருந்த சுவாமிகளுக்கு, நிச்சலப் பொதிகைமலைத் தனிக் குகையிலே அச்சமாதியில் அமர்ந்திருப்பது தானு இடர்ப்பாடாய் இருந்திருக்கும். ஏற்கனவே பலமுறை பண்படுத்தப் பெற்றிருந்த துறையாதலின், சுவாமிகள் வெகு விரைவிலே மிக உன்னத நிலையை யடைந்து,

> "பூதங்கள் அற்றுப், பொறி யற்றுச்,
> சார் ஐம்புலன்கள் அற்றுப்,
> பேதம் குணம் அற்றுப், பேராசைதான்
> அற்றுப், பின்முன் அற்றுக்,
> காதம் கரணங்களும் அற்ற, ஆனந்தக் காட்சி
> யிலே"

திளைத்துத் திகழலானார்கள்.

ii அருள் நிரம்பப் பெறல்.

அந்நிலையில் ஆண்டவனது அருளைச் சுவாமிகள் பூரணமாகப் பெற்றிருந்தார்கள் என்றுசொல்லவும் வேண்டுமா? இவ்வாறு அருள் நிரம்பப் பெறுதல் வேண்டும் என்று தான் சுவாமிகள் இதுகாறும் கோரி வந்தது. உடையவனது அருளை ஓர் அளவு பெற்றவுடனேயே, உண்டாகும் சிறு ஆற்றலைப் பெரிதாகவும் முடிந்த பொருளாகவும் எண்ணிக்கொண்டு, சித்து விளையாடி விட்டு எத்தனையோ பெரியார்கள் முத்தி முடிவை யடையாது போயிருப்பது சுவாமி

களுக்குத் தெரியும். அதனாலேயே சுவாமிகள் ஏற்கனவே அவனது அருளை அளவு அளவாகப், படிப் படியாகப் பெற்று, கையிற் கொண்டு இருந்தார்களானாலும், அவற்றினால் உலகத்தார்க்கு. அற்புதங்கள் செய்து காட்டி வியக்கச் செய்து, ஒருவாறு மக்கள் தொண்டுபுரிந்து, மாண்டுபோவதற்கு ஒருப்படவில்லை. 'புனிதனது பூரண அருளைப் பெற்றால்தான் எடுத்த ஜன்மம் இதோடு பூர்த்தி யாகும்; முக்திப்பேற்றை யடையலாம்; உலகத்தாருக்கும் அவ் வருளை வழங்கி அவர்களும் இனிப்பிறவாத மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடையும்படிச் செய்யலாம்' என்று சுவாமிகள் திண்ணமாக எண்ணி யிருந்தார்கள்.

அதற்கெனவே சுவாமிகள் அழுகையாய் அழுதது; முயற்சி யாய் முயன்றது. சிறு போதில் இரெட்டியப்பட்டியை விட்டது. மதுரையில் மறைந்து வசித்தது. வைகைக் கரையில் வைகறை நீராடியது. நிஷ்டை கூடியது. முன்னவனைக் குருவெனக் கொண் டது. அன்னவனுக்கு ஆலயம் அமைத்தது. மகம்மதியர் கடை யில் மௌனம் இருந்தது. மனப்பித்து கொண்டது. செந்தூர் சென்றது. செழும் பொதிகை யடைந்தது. இரெட்டியப்பட்டி யில் அன்னைபணி அழைத்திருந்த காலத்தும் இடையிடையே பொதிகைக்குப் போய்ப் புலன்களை வென்றது. இரெட்டியப் பட்டியிலேயே நிர்விகல்ப சமாதி கூடியது. அங்கு அது கலைய, பொதிகைக்கு ஓடி, 'கதி பெற்று ஆவேன்' எனக் கர்த்தன் கழல் பற்றி நிறைந்த நிர்விகல்ப சிறந்த சமாதியில் அமர்ந்தது.

### iii உலகத்தின் மீது இரக்கம்.

இப்படியெல்லாம் இடருற்று இடைவிடா ஊக்கத்தோடு தவ மாற்றியதன் பயனாய், உடையவன் அருளை உன்னத அளவிலே. பெற்று, எல்லாப் பற்றும் அற்று, ஆண்டவரும் அவர்களுமாய் நிற்கின்ற அந்த ஆனந்தக் காட்சியிலே, அப்படியே சுவாமிகள் திளைத்து நிலைத்து விட்டால், உலகத்தில் சுவாமிகளைக் குரு நாத ராகக் கொண்டு கடைத்தேறலாம் என்றே ஜன்மம் எடுத்த உயிர்களது கதி என்ன ஆவது? சுவாமிகளைக் காட்டி, மான் காட்டி மான் பிடிப்

பது போல, மக்களைப் பரி பக்குவப் படுத்த ஆண்டவன் அருள் கொண்டு செய்திருந்த ஏற்பாடு எப்படிப் போவது?

அடியவர்களது நல்வினை ஒருபுறமும், ஆண்டவனது அருட் குறிப்பு மற்றொரு புறமுமாக, இழுக்கவே சுவாமிகளது சமாதி கலைந்தது; 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று உலகத்தின் உயிர்களின் மீது இரக்கம் கொள்ளலானார்கள். மக்கள் மறுபடியும் பிறவாது, வீடுபேறு அடைதற்கு, இக்கலி காலத்தில் கையாளக்கூடிய எளிய முறைகள் யாவையென அவனருளை நினைந்து வேண்டினார்கள். அம்முறைகள் நம் நாட்டு ஏழ்மை நிலைக்கு ஏற்ற வாயும் இம்மை நலங்கள் யாவற்றையும் இனிது கூட்டுவிக்க வல்ல வாயும் இருத்தல் வேண்டும் என இறைவன் திருக் கருணையையே எண்ணி இறைஞ்சலானார்கள். முன்னரே அவனது அருள்கொண்டு சிந்தித்து வைத்திருந்த சில திட்டங்களையும் அவனிடத்தில் விண்ணப்பித்து விளக்கம் கோரினார்கள்.

# VI

# சுவாமிகள்து சட்டமும் சுகம்பெறு திட்டமும்

## 1 சட்டத்தின் நோக்கம்

i. இம்மை இன்பம்.

இக்காலத்தில் உலகத்து உயிர்கள் சுகமாக வாழ முடியவில்லை என்பதைச் சுவாமிகள் கூர்ந்து கவனித்தார்கள். காரணம் என்னவென்று ஆராய்ந்தார்கள். இவ்வாறு சுவாமிகள் ஆராய்ந்து கண்ட காரணங்களில் முக்கியமானவை மூன்று. முதலாவது ஆண்டவன் அருளில் நம்பிக்கையில்லாமை. இரண்டாவது இயற்கைக்கு மாறான வாழ்க்கையினாலே நோய் பிடுங்கித் தின்றுகொண்டிருக்கச் சுகம் ஏதும் இல்லாமல், உடல் உரம் குன்றி, அதன் பயனாய்க் கோபம் பொறாமை முதலிய தீக்குணங்கள் மேலே கிளம்பி மிதந்துகொண்டிருக்கின்ற நிலைமை. மூன்றாவது தேவைகளை அதிகப்படுத்திக்கொண்டு, அவைகளை அடையும் அவாவினாலே ஆளப்பெற்று, கோரியது கிட்டாமையினால் உள்ளதிலுள்ள இன்பத்தையும் இழந்து, அமைதியில்லாது உழல்கின்ற உண்மை. இக் காரணங்களைக் களைந்துவிட்டால், மக்கள் மகிழ்ச்சியாக இருந்து இம்மைச் சுகங்களை இனிது பெறக்கூடும் என்று சுவாமிகள் தீர் மானித்தார்கள்.

ii. மறுமைப் பேறு.

இம்மைச் சுகங்களையே செம்மையாய்ப் பெறலாகாத நிலையிலே மக்கள் உழன்றுகொண்டிருக்க, மறுமைப் பேற்றை அவர்கள் எப்படி எண்ணவும் போகின்றார்கள் என்று சுவாமிகள் மிக்கக் கவலையுற்றார்கள். இறந்ததும் மறுபடியும் பிறந்துவிடுவோமானால், அந்தப் பிறவியும் ஓர் இம்மையாகிவிடுகின்றதே தவிர, மறுமையென்று சொல்லும் பெருமை பெறாது. எனவே, உலகிலுள்ளவரையில் நம்மால் எவ்வுயிர்க்கும் ஏதும் இடைஞ்சல் இல்லாமல் இருப்பதோடு, நாமும் நம்மைச்சூழ்ந்த பிற உயிர்களும் நாளுக்கு நாள் நல்ல ஒழுக்கமுடையவர்களாய், இப்பிறவி ஒழிந்தால் மறு பிறவி பெறாததொரு

சிறந்த வகையிலே இல்வாழ்க்கையை நாம் நடத்திவரவேண்டும் என்பது சுவாமிகளது திருக்கருத்து.

பிறவா நெறியாகிய மறுமையை யடைவதற்கு ஒவ்வொருவரும் துறவு நிலையைக் கைக்கொண்டுதான் ஆகவேண்டும் என்பது சுவாமிகளது எண்ணமல்ல. உள்ளம் பழுக்காத முன்பதே, பழுத்துப் போய்விட்டதற்கு வெளி யடையாளமான காவி முதலியவற்றை அணிந்து கொள்ளுதலைப் பற்றிச் சுவாமிகள் கண்டித்துப் பேசுவார்கள். முற்றத்துறந்த முனிவராகக், கலங்கும் உயிர்களைக் கரையேற்றும் காவலராக, ஆண்டவன் அருளே என, அவனே குருமூர்த்தங் கொண்டு வந்தான் என, அவதரித்தருளிய சுவாமிகளுங்கூட நான்குமுழ வெள்ளை வேட்டிச் சாமியாகவே யிருந்து மக்களுக்கு வழிகாட்டி மறைந்தார்கள். இல்லறத்தில் இருப்பவர்களும் தூய்மையான வாழ்க்கையை நடத்தி மறுமை யின்பத்தையடையும் நெறியைத்தான் சுவாமிகள் சட்டமாகக் கொடுத்தருளினார்கள்.

### iii. சமயங்களின் சங்கடம்.

மேலே குறித்தபடி இம்மை மறுமை நலங்களைச் செவ்விதின் கூட்டுவிக்க உலகத்திலே பல சமயங்கள் இருக்கின்றன என்பது சுவாமிகளுக்குத் தெரியும். ஆனால், அச்சமயங்களை நெறி தவறாது அனுஷ்டிக்க அவாவும் மக்கள் அவற்றைப்பற்றிய புஸ்தகங்களைப் படிக்கவேண்டும். நூல் வாசிப்பு இல்லாத ஒருவன் உலகில் உயர்ந்தது என்று சொல்லப் பெறும் எந்தச் சமயத்தையும் சரிவர அனுஷ்டிக்க முடியாது. மேலும், அவற்றை அனுஷ்டிக்க வேண்டுமானால், அவ்வாறு வேண்டுபவருக்கு எற்கனவே அனுஷ்டானமுள்ளவர்கள் அருகிருந்து, உரிய முறைகளைப் பயிற்றுவிக்க வேண்டும்.

இன்னொரு இடர்ப்பாடு என்னவென்றால், இக்காலத்தில் மக்களுக்குத் தாம் கையாளும் ஒரு சமயம் போதியதுதான், சிறந்ததுதான், என்ற தீர்மானம் ஏற்படுவதில்லை. ஒரு மதத்தின் கொள்கைகள் மற்றொரு மதத்தின் கொள்கைகளோடு மலைவனவாகத் தோன்றுகின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து அவ்வாறு மாறுபடுவனவாகக் காண்கின்ற முடிவுகள் பலவும், தம்முள் ஒன்றுக்கு ஒன்று ஒற்றுமை உடையன, எல்லாம் ஒரு பொருளைப் பலவகை

யாகக் குறிப்பன, என்று முடிவு கட்டுவதற்கு நெடுநாள் வேண்டும். ஆயுள் நாள் குறைந்துகொண்டு வருவதோடு, உள்ள சில காலத்தில் பல வேலை வைத்துக்கொண்டு உழன்றுவரும் இக்காலத்து மக்கள் அத்தகைய ஆராய்ச்சி செய்ய இயலாத நிலையில் இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு சமயத்திலும் இரகசியமான சில பகுதிகள் இருக்கும். திட்டமாகத் தெரிந்துகொண்டு பாமர மக்களும் கையாளக் கூடியபடி இல்லாமல், சில முறைகள் கூர்ந்த புத்திகொண்டு கவனித்து அறிந்து கைக்கொள்ள வேண்டிய நுண்ணிய தன்மையுடையனவாக இருக்கும். ஒரு சமயத்தில் சேர்ந்தவர்கள் தினசரி வாழ்க்கையிலே தங்கள் சமயத்தின் எல்லாக் கொள்கைகளையும் அனுஷ்டிக்கவல்ல சிலவாக இராமல், அக்கொள்கைகள் பலவாக விரிந்து பல்கியிருக்கும். மேலும் முன்னைக் காலத்தைப்போல், வனங்களில் சென்று தனித்து உறைந்து தவமாற்ற இக்காலத்து மக்களுக்கு வசதிகள் பலவகையில் குறைந்திருக்கின்றன. அப்படி வசதிகள் சில இருந்தாலும் எல்லா மக்களும் அவ்வாறு சென்று தவமாற்ற இயலாது. எல்லோரும் சடக்கென முழுதும் துறந்து வெளியேறிப் போக முடியாது.

### iv. சுருக்கமுறையின் அவசியம்.

சமயங்களின் சங்கடம் இப்படியிருப்பதனால் பொதுவாக இக் கலிகாலத்து மக்களும், சிறப்பாக ஏழ்மையும் அறியாமையும் மிகுந்த நம் நாட்டு எல்லாஜனங்களும், இப்பிறவி ஒன்றிலேயே, நிச்சயமாகப் பேரின்ப வீட்டை யடைவதோடு, உள்ளவரையில் உலகத்திலே உயர்ந்த சுகமான வாழ்க்கை வாழ்வதற்குச், சிலவாகவும், சுருக்கமாகவும் இருப்பதோடு, மறைவு இரகசியம் இவை இல்லாமல், திட்டமாகவும் தெளிவாகவும் அறிந்து கையாளக் கூடிய முறைகளைச், சுவாமிகள் சட்டமாக ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணினார்கள். அம்முறைகள் எந்தச் சமயத்திற்கும் முரணாக இல்லாமல், எச்சமயத்தில் உள்ளவர்களும், அவரவர்களது சமயத்தைக் கைவிடாமலே நின்று, அம்முறைகளை அனுஷ்டிக்கக் கூடியவாகவும்

இருக்கும்படி அமைக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார்கள். அவ்வாறே சட்டம் வகுக்கத் தொடங்கினார்கள்.

## 2. 'சட்டம்' என்று ஏன் பெயர்?

**i அரசியல் முறை.**

சுவாமிகள் வகுக்கத் துவங்கிய முறைகளுக்கு வேறொரு பெயர் தராமல் 'சட்டம்' என்று நாமகரணம் சூட்டியது ஏன் என்று எண்ணலாம். சுவாமிகள் அரசாங்க முறைகளைக் கூர்ந்து நோக்கியிருக்கிறார்கள். பம்பாய் சென்னை முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தபோது அரசியல் மன்றங்கள், நீதிஸ்தலங்கள் இவற்றில் செயல்கள் நடக்கும் விதங்களைக் கவனித்திருக்கிறார்கள். அவ்வளவு ஒழுங்காக அரசியல் நடைபெறுவதற்கு அடிப்படை, அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள சட்டங்களேயாகும் என்பதை நன்கு அறிந்தார்கள். ராஜாங்க சட்டங்களை மீறினால் தண்டனை இருப்பது போல, சுவாமிகளது முறைகளை மீறுபவர்களுக்கும் தண்டனை அப்போதே உண்டு என்பதைக் குறிக்கவும் 'சட்டம்' என்ற சொல் தகுதியுடையது என்று எண்ணினார்கள்.

**ii இயற்கையின் இயல்பு.**

அரசாங்கத்தில் இருப்பதற்கு மேலாக இயற்கையிலும் சட்டம் நிலவுவதைச் சுவாமிகள் நுணுகி அறிந்திருக்கிறார்கள். 'நமது வீட்டு விளக்காயிற்றே' என்று கூரையில் வைத்துவிட்டால் கொளுத்தாமல் இருக்குமா? நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளைக் கொடுத்துப் பெறுகின்ற மின்சார சக்திதானேயென்று தொட்டால், உலுக்கி உயிரை எடுக்காமல் விட்டு விடுமா? இயற்கைச் சட்டம் அரசாங்க சட்டத்தைக் காட்டிலும் மிக்கக் கடுமையானது. அதற்குக் கட்டுப்பட்டு நடக்காவிட்டால் தண்டனை தவறாமல் வந்து தான் தீரும். பரிகாரம் தேடுவதும் கஷ்டம். அரசாங்கச் சட்டம் நாளுக்கு நாள் மாறலாம். ஆனால் இயற்கைச் சட்டம் என்றும் அப்படியே இருப்பது. சுவாமிகளது சட்டமும் அப்படியே.

**iii அவைபோல் அமைப்பு.**

அரசியல் சட்டம் இயற்கைச் சட்டம் இவைபோலச், சுவாமிகளது முறைகளும், ஒழுங்காக, எக்காலத்தும் நடந்து வந்து,

உயிர்கள் இப்பிறவிக்கடலை நீந்துதற்குத் துணை புரிய வேண்டும் என்ற திருவுள்ளம் சுவாமிகளுக்கு இருந்தது. இந்த இரண்டு சட்டங்களுக்கும் மேலாக, சுவாமிகளது சட்டம் உயிர்களுக்குப் பயன் அளிக்கவல்லது ஆகையினாலும், எந்தப்பலனை உடலெடுத்த உயிர்கள் அடைந்தால், அதற்குமேல் அடையக்கூடிய பலன் ஏதும் கிடையாது என்ற நிலைவருமோ அந்தச் சிறந்த பலனைக் கூட்டு விக்கக் கூடியது ஆகையினாலும், சுவாமிகளது சட்டம், மற்ற இரு சட்டங்களைக் காட்டிலும் 'சட்டம்' என்னும் பெயருக்குப் பெரிதும் உரிமையுடையது என்பது அங்கை நெல்லிக்கனிபோல் விளங்க வில்லையா?

## 3 எவரும் 'சட்டம்' ஏற்கலாம்

### i சாதிமதபேதமில்லை

சுவாமிகள் ஏற்படுத்திய சட்டத்தை எந்த மதஸ்தரும் ஏற்று நடக்கலாம் என்பது முன்னமே குறிக்கப்பெற்றது. மதப்பிணக்கு இல்லாமல் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவரும் கையாளுதற்கென்றே சுவாமிகளது சட்டங்கள் பொதுமுறையாக அமைக்கப்பெற்றன என்றும் முன்னரே அறிந்தோம். சட்டத்தை அனுஷ்டிப்பதற்கு மதவித்தியாசம் தடையாய் இல்லாதது போலவே, சாதிவித்தியாச மும் இடைஞ்சலாய் இருக்கக் கூடாது என்பது சுவாமிகளது கருத்து. பிறப்பைக் கொண்டோ, பழக்கவழக்கங்களைக் கொண்டோ பண நிலையைக் கொண்டோ உலகத்தில் ஏற்பட்டு மக்களைப் பங்கு பங்காகப் பிரித்து, மக்கள் வளர்ச்சிக்குப் பங்கம் விளைவித்து வரு கின்ற சாதி வேறுபாடுகள், சட்டத்தினிடம் தலைகுனிந்து நிற்க வேண்டும் என்பது சுவாமிகளது எண்ணம்.

எந்த நாட்டவரும், எந்த மதத்தவரும், எந்த வகுப்பினரும் எந்த மொழியினரும், ஏழைகளும் செல்வந்தரும், படித்தவர்களும் படிக்காதவர்களும், சுவாமிகளது சட்டத்தை ஏற்று நடந்து நன்மை பெறலாம். சுவாமிகள் நேர்முகமாக இருந்து வழிகாட்டிய காலத்து மாத்திரமல்லாமல், மறைந்து தோன்றாத்துணையா யிருந்து அற்புத மாக வழிகாட்டிவரும் இக்காலத்தும், சுவாமிகள் ஏற்படுத்திய சட்டத்தை இந்துமதத்தின் பல பிரிவினரே யல்லாமல், கிறித்து

சமயத்தவரும், இஸ்லாமிய மதத்தவரும், அரசகுடும்பத்தவரும், ஆண்டிக் கூட்டத்தவரும், புலவர்களும், பாமரர்களும் பலராகக் கையாண்டு பயன் பெற்று வருகின்றனர்.

## ii வயதும் வழக்கமும் வழிநில்லா

'இளமையிலேதான் இச்சட்டத்தை யேற்றுக் கொள்ள வேண்டும். இளமையில் இச்சட்டத்தை அனுஷ்டிக்கும் பேறு பெறாமலேயே, வயதிலே மூத்துவிட்டவர்கள் அம்மூத்த வயதிலே இச்சட்டத்தைக் கையாளுதல் இயலாத காரியம்' என்பது கிடையாது. தொண்டுகிழவராக இருக்கின்றவர்களும், அவர்களுக்கு அந்த நிலையில்தான் சுவாமிகளது சட்டத்தைப்பற்றி அறிந்து கொள்ளும் புண்ணியம் கிட்டுமானால், உடனே அவர்கள் சட்டத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரலாம். அவர்களுக்கு வாய்க்கும் சில கால உலக வாழ்க்கையிலேயே, நெறியோடு சட்டத்தைக் கையாண்டு வந்தால் கட்டாயம் அவர்களும் பிறவிப் பெரும் பயனை அடைந்து விடுவார்கள் என்பது சுவாமிகளது துணிபு. அன்று பிறந்த சிசு முதற்கொண்டு, நின்று பேசுதற்கும் இயலாத கிழங்கள் வரையில், எவரும் சுவாமிகளது சட்டத்தைச் சுகமாக அனுஷ்டித்துச் சுகிர்தம் பெறவேண்டும் என்பதுதான் சுவாமிகளது அவா.

வயது எங்ஙனம் தடையாகாதோ, அப்படியே பழக்க வழக்கங்களும் சட்ட அனுஷ்டானத்திற்குச் சிறிதும் தடையாகா. "வாழ்க்கையில் இது வரையில், உணவு முறையிலும், நீராடும் வகையிலும், இதர விதங்களிலும் நாம் கையாளும் பழக்க வழக்கங்களுக்கு, நேர்மாறாக இருக்கின்றனவே சுவாமிகளது சட்டங்கள். நெடுநாளாக நம்மால் கையாளப்பெற்ற இப்பழக்க வழக்கங்களை, நமக்கு இயற்கைபோல் ஆய்விட்ட இப்பழைய முறைகளை, நாம் திடீரென எவ்வாறு கைவிட்டு முழுதும் புதிதான வழியாகிய சுவாமிகளது சட்டத்தை மேற்கொள்வது" என்று எவரும் சிறிதும் சந்தேகமாவது அச்சமாவது கொள்ளவேண்டுவதில்லை. எத்தகைமையான கடும் பழக்க வழக்கங்களை யுடையவர்களும், சுவாமிகள் சட்டத்தை எடுத்துக்கொண்ட அளவிலே, அக்கடுமையான பழக்கங்

கள் தாமே பையப்பைய இருந்த இடம் தெரியாமல், விடை பெற்றுக் கொண்டு போய்விடும்.

### iii வான்பொருள் வழிகாட்டும்

முன்னை வினைப்பயனாய்த் துணிவு ஏற்பட்டு, சுவாமிகளது சட்டத்தை ஒருவர் ஏற்றுக்கொண்டு விட்டால், உடையவன் திருவருள் சுவாமிகள் வழியாக நின்று, அவருக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் வழிகாட்டிக்கொண்டே செல்லும். சட்டத்தை மேற்கொண்டதனால், 'என்ன கெடுதி வந்துவிடுமோ! எந்த ஆபத்து சூழ்ந்துகொள்ளுமோ!' என்று அஞ்சியிருந்த அவருடைய உள்ளத்திற்கு உறுதியையும் அமைதியையும் கொடுத்துவந்து, அவருக்கு எவ்வித இடர்ப்பாடும் நேராமல் காத்து, நாளுக்கு நாள் அவர் சட்டப்பயிற்சியில் மேன்மையுறும்படி செய்து வரும்.

சுவாமிகள், சட்டத்தை, நேர்முகமாக இருந்து, மக்களுக்கு வழங்கிய அக்காலத்தில், மக்களுடைய கண் எதிரிலே தங்கி அவர்களுடைய ஐயங்களையும் அச்சங்களையும் நீக்கியதுமல்லாமல், நேரே காண முடியாதபோதும், மறைவாக உள்ளக் கண்ணுக்குத் தோன்றி வேண்டிய தைரியத்தை ஊட்டி வந்ததுபோலவே, சுவாமிகளது தூலத் திருமேனியை ஊனக் கண்களால் காணமுடியாத இக்காலத்தும், சுவாமிகள் இடைவிடாது மனதின் முன்னே தோன்றி வழிகாட்டி வருகின்றார். 'சுவாமிகளை நேரே சேவிக்கும் பேறு பெற்றவர்களுக்கே இவ்வாறு தோன்றுவார் போலும். மற்றார்க்கு அங்ஙனம் தோன்றார்போலும்', என்று எண்ணுதல் கூடாது. இன்றைய தினம், சுவாமிகளது சட்டத்தை எடுத்துக் கொள்ளுகின்றவர்களுக்கும், சுவாமிகள் ஒவ்வொரு நிமிஷமும் தோன்றாத் துணையாய் இருந்து, அடுத்த நிமிஷம் செய்ய வேண்டுவது இன்னது என்பதை மிகச் சூக்ஷ்மமாகக் குறிப்பித்துக் கொண்டே வருகிறார்கள்.

எனவே, சுவாமிகளது சட்டத்தைக் கொஞ்சமேனும் ஐயமும் அச்சமும் இல்லாமல் எந்த தேசத்தாரும், எந்த மதத்தாரும், எந்தச் சாதியாரும், எந்தப் பழக்க வழக்க முடையவரும், எந்த வயதிலும் ஏற்றுக்கொள்ளலாம். பூர்வ புண்ணியப்பயனாய்த் துணிந்து ஏற்றுக்

கொள்ளும்' வரையில்தான் ஐயமும் அச்சமுமே தவிர, ஏற்றுக் கொண்டு விட்டால் பிறகு, வான்பொருளாகிய உடையவனது அருள் சுவாமிகள் வழியாய் வெளிப்பட்டு உந்திக்கொண்டே சென்று, உச்ச நிலையை யடைவித்துவிடும் என்பது திண்ணம்.

## 4 சட்டத்தின் பொதுப் பகுதி

### i ஒரு தெய்வக் கோள்கை

அண்டங்களுக்கெல்லாம் அதிபதியாக ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான். உயிர்கள் அவ்வொருபெரும்பொருளையே பல பெயர்களாலும், பல உருவங்களாலும், பல சரித்திரங்களாலும் வழிபடுகிறார்கள். எல்லாப் பெயர்களும், எல்லா உருவங்களும், எல்லாச் சரிதங்களும் அவ்வொரு பொருளையே குறிப்பனவாகும். சமயவாதிகள் தம் தெய்வம் பெரிது, எம் தெய்வம் பெரிது என்று தம்முள் சண்டையிட்டுக்கொள்வதெல்லாம் வீண். இதுவரையில் வழக்கிலுள்ள எந்தப் பெயரோடு, எந்த உருவத்தோடு வணங்கினாலும் சரி, அல்லது இனி புதிதாக எந்தப்பெயரும் உருவமும் கற்பித்துக்கொண்டு வழிபாடு ஆற்றினாலும் சரி, எல்லாம் அவ்வொரு பொருளுக்கே செல்லும். அவ்வொரு பொருளை அவரவர் விருப்பத்திற் கேற்கவே தோற்றமும் தந்து, கோரும் பொருளைக் கூட்டுவிக்கும். இவையே உலகிலுள்ள உயர்ந்த சமயங்களின் கொள்கைகளாகும். இவையே நமது சுவாமிகளது கொள்கையுமாகும். சட்டத்தை மேற்கொள்பவர்கள் எந்தச் சமயத்தராய் இருந்தாலும் அந்தச் சமயத்தின் மூர்த்தங்களை வழிபடலாம். ஆனால், பிற மதங்களினால் கடவுளுக்கு அமைந்த உருவங்களையோ அல்லது பெயர்களையோ தாழ்வாக எண்ணவாவது, தூஷிக்கவாவது கூடாது.

### ii மரக்கறி உணவு

மனிதர்களாகப் பிறந்த உயிர்களுக்கு மரக்கறி உணவுதான் தகுதியானதென்பது சுவாமிகள் கருத்து. மனிதனைத் தாழ்வு படுத்தும் தமோ ரஜோ குணங்களெல்லாம், மரக்கறி உண்போனை விட்டு அகலும் என்பது அறிஞர்கள் ஆராய்ந்து கூறும் முடிபாகும். சன்மார்க்கத்திற்கு அவசியமான சாத்விக குணமானது மரக்கறி

உணவால் மிகுந்து வளர்கின்றது என்பதும் பதார்த்த குணங்களை ஆராய்ந்து அறிந்த பெரியார்களுடைய முடிபு ஆகும்.

சுவாமிகளது சட்டத்தை அனுஷ்டிக்கும் ஆண் பெண்பாலார் பலரும் தூய்மையான மரக்கறி உணவைத் தவிர, எந்தக் காரணத்தைக்கொண்டும், எக்காலத்தும், மாமிச போஜனம் செய்தல் ஆகாது. ஏற்கனவே மாமிச உணவு உட்கொண்டிருந்தவர்கள் சட்டத்தில் சேர்வார்களானால், சேர்ந்தது முதல் மரக்கறி உணவு உடையவர்களாக ஆய்விடுதல் வேண்டும். பழக்கத்தின் கொடுமையால் எளிதிலே மாமிச ஆகாரத்தை ஒழிக்க முடியாதிருந்தால், சிறிதும் அதைரியம் கொள்ளாது, உடையவனிடத்தில் உறுத்து விண்ணப்பித்துக்கொண்டே வரவேண்டும். சட்டத்தைக் கையாள் பவரில் எத்தனையோ பேர் முதலில் மாமிச உணவு உடையவர்களாயிருந்தவர்கள். பிறகு அவர்கள் உடையவனிடம் கொண்ட உறுதியினால், உள்ளம் மாறிச் 'சீயென' அவ்வுணவை வெறுத்துவிட்டிருக்கிறார்கள். வேண்டுவது ஆண்டவனிடம் அனுதினம் அசைவிலா முறையிடு.

iii பஞ்சமா பாதகம் தவிர்த்தல்

மனிதனை இழிவு படுத்துகின்ற ஐந்து பெரிய பாதகங்களாகிய கள் குடித்தல், பொய் பேசுதல், காமவயப்படுதல், உயிர்களைக் கொல்லுதல், திருடுதல், இவற்றைத் தவிர்க்கவேண்டும்.

அறிவு தன்னுடைய இயற்கை நிலையை விட்டு மயங்கும்படிச் செய்கின்றது கள். எனவே கள்ளைப்போலவே, அத்தகையமயக்கத்தை உண்டாக்கக்கூடிய மற்ற பானங்களும், கஞ்சா, அபின் முதலியவும் புகையிலை சம்பந்தமான பல பொருள்களும் கள் என்னும் சொல்லுக்குள் அடங்கும். ஆதலால் கள் நீக்கவேண்டும் என்றது கள்ளைப்போன்ற பிற வஸ்துக்களையும் நீக்கம் வேண்டும் என்றதாகும். நீக்கமுடியாத லாகிரி வஸ்துப் பழக்கமுடையவர்களும் சட்டத்தை எடுத்துக்கொண்டு, உண்மையாக அப்பழக்கங்களை ஒழித்துவிட வேண்டும் என்று உடையவனிடம் மன்றாடி முறையிட்டு வந்தால் அவை ஆச்சரியப்படும்படி அவர்களை விட்டு நீங்கிவிடும் என்பதை அடியார்கள் பலர் அவரவர்களது வாழ்க்கையில் அறிந்திருக்கிறார்கள்.

காமவயப்படலாகாது என்றது அளவுக்கு மிஞ்சி அதன் வழியில் ஈடுபட்டு அழிவு தேடிக்கொள்ளலாகாது என்ற கருத்தோடாம். இல்லாவிட்டால் இல்லறத்தானுக்கு இச்சட்டத்தில் இடமில்லாமற் போய்விடும். சுவாமிகளோ, பெருவாரியாக இல்லறத்தில் இருக்கும் மக்களும் இம்மை மறுமை நலங்களை அடைவதற்கு இச்சட்டம் பெரிதும் பயன்படவேண்டும் என்னும் நோக்கங் கொண்டவர்கள். சட்டத்தில சேரும்போது இல்லறத்திற்குரிய வரம்புக்கு உள்பட்ட ஆசைகள் இல்லறத்தானுக்கு இருந்தாலும் தினை தினை, உடையவனிடம் முறையிட்டு வருவதால், அவ்வுடையவனிடம் வைத்த ஆசையை யல்லாமல், மற்ற நம் காமங்களை யெல்லாம் அடியோடே மாற்றிக்கொள்ளலாகும் என்பது சுவாமிகள் கருத்து.

எவ்வகையான உயிர்க்கொலையும் சுவாமிகளுக்குச் சம்மதங் கிடையாது. பசியாற்றிக்கொள்வதற்காக எளிய முறையான இன்றியமையாத உணவுக்கென்று அல்லாமல், மற்றப்படிசெடி கொடிகளுக்கும் சிதைவு நேர்வித்தல் கூடாது என்பது சுவாமிகள் எண்ணம். தாவர வர்க்கம் தவிர இதரவித உயிர்களை எக்காரணத்தினலும் கொல்லுதல் தவறு. விஷ ஜந்துக்கள் என்று சொல்லப்படும், தேள், பாம்பு முதலியவற்றைக்கூட உடல் சிதைத்தல் ஆகாது. வீடுகளில் அவை காணப்பட்டால், அடித்துக் கொல்லாமல் பிடித்துப் புறத்தே விட்டுவிடவேண்டும் என்பது சுவாமிகளது கட்டளை. அவ்வாறே சட்டத்தைச் சேர்ந்த அடியவர்கள் நடந்து வருகிறார்கள். 'இரெட்டியப்பட்டி சுவாமி துணை' என்று சுவாமிகளது பேரைச் சொல்லிக் கொடிய பாம்பையும், தேளையும் தாமே கையாலேயே பிடித்து ஊருக்கு வெளியே கொண்டுவிடும் அடியவர்கள் பலர் இருக்கின்றனர்.

### iv வெள்ளி விரதம்

சுவாமிகளது சட்டத்திற்கு விரதம் மிக்க அவசியம். விரதங்களால் முதலில் உடம்பிலுள்ள பிணிக்குறைகள் பல நீங்குகின்றன. இரண்டாவது உயிர் உரம்பெற்று வளர்கிறது. பசியைப் பொறுக்கின்றஒருவன் உலகத்திலுள்ள எத்தகைய கஷ்டத்தையும்பொறுத்து

மேலுக்கு வந்துவிடக்கூடியவன் ஆவான். சுவாமிகள் எத்தனையோ நாட்கள், மண்டலங்கள், உணவு இல்லாமல் இருந்திருக்கிறார்கள். அடியவர்களையும் அம்முறையில் பழக்குவதற்காகச் சுவாமிகள், மறைந்திருக்கின்ற இக்காலத்திலுங்கூட, 'அடியவர்களுக்குக் காட்சி கொடுத்து உண்டி சுருக்கவேண்டிய முறைகளை மிக அற்புதமாகக் குறிப்பிட்டு வருகின்றார்கள். அவ்வாறே அடியவர்கள் நடந்து கைமேல் பலன்கண்டு குருநாதரின் பேரருளைப் போற்றுகின்றனர்.

தேர்ச்சி பெற்ற அடியவர்களுக்குப் பல திறமான விரதங்களைத் தனித்தனியே குறித்துக் காட்டி வருவதுமல்லாமல், சுவாமிகள் பொதுவாக எல்லா அடியார்களும் தொடக்கத்தில் எடுத்துக் கொள்வதற்காக வெள்ளிக் கிழமை விரதத்தைக் கட்டளையிட்டார்கள். அவரவர்களுடைய உடல் உரத்திற்கு ஏற்றபடி முழுதும் உண்ணாமலேயோ, பானம் மாத்திரம் செய்தோ, சிற்றுணவு மாத்திரம் அருந்தியோ, இருக்கலாம். ஆனாலும், சாதாரணமாகத் துவங்குவோர் ஒரு பொழுது உணவு ஏற்று, இராப்பொழுது சிறிது பலகாரத்தோடோ, அஃதும் இல்லாமலோ இருக்கவேண்டும் என்றே இவ்விரதம் கட்டளை யிடப்பெற்றது.

மற்ற நாட்களைக் குறிக்காமல், வெள்ளிக்கிழமையைத் தேர்ந்து கொண்டதில் சுவாமிகளது பரந்த சமரசக்கருத்து புலனாகின்றது. சைவ வைணவ மதத்தினருக்கேயல்லாமல், முகம்மதியர் கிறிஸ்தவர் முதலிய சமயத்தினருக்கும் வெள்ளிக்கிழமை ஒரு சிறந்த நாளாகும். மற்ற நாட்களைக்காட்டிலும் இந் நாளை விரதத்திற்கு உரியதாக எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்வார்கள். பல சமயத்தவர் ஏற்கனவே இந் நாளை விரத நாளாகவே கொண்டாடியும் வருகின்றனர். எனவே சுவாமிகள் மிக்க அருளோடு வெள்ளிக்கிழமையை விரதநாள் ஆக்கியிருக்கின்றார்கள் என்பது தெரிகிறது.

## V சேத்தார்க்குச் சமாதி

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் கொண்டிருந்த கருத்தின்படியே, சுவாமிகளும், மாண்டவர்க்கு மண்மறைவுதான் தகுதி யென்னும் கொள்கையுடையவர்களாயிருந்

தார்கள். ஆண்டவன் ஆக்கிய உடலைத் தீயிட்டுச் சிதைத்தலை சுவாமிகள் விரும்பவில்லை. சுவாமிகளது கருத்துப்படியே சுவாமிகளது அன்னையாரும், அவருக்குப்பின் அவர்களது குடும்பத்தில் உயிர் நீத்த பலரும் சமாதியே செய்யப்பெற்றனர். சுவாமிகளது சட்டத்தை மேற்கொள்ளும் அன்பர்களும் சுவாமிகளது கருத்தையே அனுசரித்து நடக்கின்றனர். சமாதி செய்யும் பழக்கம் ஏற்கனவே இல்லாத குடும்பங்களில் ஒருவர் இருவர் மாத்திரம் சட்டம் மேற்கொண்டிருந்தால் அவர் அடைகின்ற காலத்து, குடும்பத்தாரால் சமாதி செய்யத் தடைகள் நேர்வதுண்டு. அக்காலங்களில் மற்ற அடியார்கள் உடனிருந்து சுவாமிகளது கொள்கைக்கு இணங்கச் சமாதி செய்ய முயலுவர். அக்காலத்து அவர்களது முயற்சிக்கு இணங்கவும், மாண்டவர் கொண்டிருந்த கொள்கைக்கு ஏற்பவும், மற்றவர்கள் தடை செய்யாது சமாதி யமர்த்த உடன்படுவதுதான் அறிவுடைமை. பழக்கவழக்கங்கள் ஏறிசசவாரி செய்ய விட்டுவிடுதல் ஆகாது.

## 5. சட்டத்தின் சிறப்பியல்

### i நாள் தவறு நீராட்டமும் வழிபாடும்.

#### க. விடியல் நீராட்டின் விழுமம்.

ஒருநாள்கூடத் தப்பாமல் காலை நான்கு மணிக்கு விழித்துக் கொண்டு, மலஜல விசர்ஜனம் ஆனதும், நீராட வேண்டும் என்பது சுவாமிகளது சட்டத்தின் சிறப்பான கொள்கை. காலை ஐந்துக்குள் நீராட்டத்தை முடித்து விடவேண்டும். நாலுக்கும் ஐந்துக்கும் உள்ள இடைக்காலத்தில் தண்ணீருக்கு ஓர் அருமையான சக்தியிருப்பதாகச் சுவாமிகள் கூறுவார்கள். அந்நேரத்தில் அத் தண்ணீரைக்கொண்டு உடல்மீது கொட்டிக் கழுவுவதால், உடம்பிலுள்ள நரம்புகள் கெட்டியாகின்றன, மூளை கூர்மையடைகிறது, இரத்தம் பரிசுத்தமாகிறது, என்று சொல்லுவார்கள். மற்ற நேரங்களில் நீராடுவதால் முழுகுவதனுடைய முழுப்பயன் கிட்டாது போவதோடு ஏதாவது கெடுதிகளும் நேரலாம். ஆனால் விடியல் நீராட்டத்தினால் தீங்கு ஏதும் இல்லை. உள்ள நோய்கள்

நீங்கும். உடல் ஆரோக்கியமாக ஆகும். சட்டத்தின் மற்றப் பகுதிகளுக்கு மேலாக இந்த விடியல் நீராட்டம் போற்றப்படவேண்டும். இது ஒன்றிருந்தாலும் போதும், மற்றவை யெல்லாம் ஒவ்வொன்ருய்க் கைகூடிவிடும், என்று சுவாமிகள் சொல்லுவார்கள்.

### உ. எந்நீராயினும் ஏற்றதாகும்.

அங்ஙனம் விடியல் நீராட்டத்திற்கு ஆற்று நீரே வேண்டும் என்பது இல்லை. ஊற்று நீரே தேவை என்பது கிடையாது. இவை கிடைத்தால் சிறப்பே. கிடைக்காவிடின் குளத்திலோ குட்டையிலோ கிணற்றிலோ, கேணியிலோ எங்கேயாவது அழுக்கில்லாத தண்ணீர் கிடைக்குமாஞல் போதும். குதிரைக் குளம்பு பதிந்த இடத்தில் உள்ள நீராயினும், விடியல் நேரத்தில் கங்கை நீரின் தன்மையை அது பெற்றிருக்கிறது; எனவே அதுகிடைத்தால் சாலும், அதிலே நீராடலாம், என்று சுவாமிகள் சொல்லுவார்கள். தவருது விடியற் காலத்திலே நீராடிவிடவேண்டும் ஆதலிஞல் இந்நீரே வேண்டும், அந்நீரே வேண்டும் என்று சுவாமிகள் கட்டுப்பாடு செய்யவில்லை.

### ௩. அரை ஸ்நானம் ஆகாது

கழுத்துக்குக்கீழே மாத்திரம் தண்ணீர் விட்டுக்கொள்ளும் வழக்கம் நல்லதல்ல என்பது சுவாமிகள் எண்ணம், தலைக்குக் கொட்டிக் கொள்ளாமல் நீராடுவது நீராட்டமாகாது என்பது சுவாமிகளது கருத்து. மேல் நாட்டு முறையில் வைத்தியம் செய்பவர்கள், ஒருவருக்குக் கடுங் காய்ச்சல் வந்தக்கால் கொதிப்பெடுத்திருக்கின்ற உடலின் வேறு பாகங்களிலே பனிக்கட்டியை வைத்து வெம்மையைத் தணிக்க முயலாமல், உறை நீர்க்கட்டியைப் பையிலிட்டு தலை மீதேயே வைக்கிருர்கள். தலையிலே உடலிலுள்ள நரம்புகள் நாடிகளின் முடிச்சுகள் எல்லாம் திரண்டு கிடத்தலின் அவ்விடத்தைக் குளிர்வித்தால் உடம்பு முழுதும் குளிரும் என்னும் உண்மையையறிந்தே அப்படிச் செய்கிருர்கள். அப்படியாக உடலைச் சுத்தம் செய்ய வேண்டுவோர் பிரதானமான தலையை மாத்திரம் விட்டு விட்டு மற்றப் பாகத்தின் மீது தண்ணீர் விடுதல் தகுதியுடையதாகாது. அவ்வாறு செய்வதால் கெடுதிகளும் நேரலாம்.

ச. வந்தனை வழிபாடு.

நீராடியதும், அவரவர்களுடைய வழக்கப்படி நெற்றியில் அணிதற்குரிய சமயச் சின்னங்களை அணிந்து கொண்டு ஆண்டவனை வழிபட வேண்டும். எல்லாவிதப் பக்குவமுடைய மக்களுக்கும் இச்சட்டம் பயன்பட வேண்டும் ஆதலால், இவ்வழிபாட்டை மிக்க இலேசான முறையிலே செய்வதற்குச் சுவாமிகள் திட்டம் செய்திருக்கிறார்கள். வீட்டிலேயே வழிபடுதற்குரிய இடமும் உருவங்களும் எல்லோருக்கும் வாய்க்காது. எல்லோருக்கும் எளிதாகக் கிட்டக்கூடியது தெருக் கோடியில் இருக்கக்கூடிய பிள்ளையார் கோயில். எந்தச் சிறு கிராமத்திலும் ஒரு விநாயகர் கோவில் இராமல் இராது. பெரிய ஊர்களில் சந்துக்கு ஒன்றும் இருக்கும். மற்ற ஆலயங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பிள்ளையார் கோவில் இருப்பது பெரும்பாலும் நிச்சயம். எனவே, நீராடி நெற்றிக்கு அணிந்ததும், பிள்ளையார் கோயிலுக்குப் போய் மூன்று சுற்று சுற்றிக் கும்பிட்டு வரவேண்டும் என்பது சுவாமிகளது கட்டளை.

சைவ வைணவர்களாகிய இந்துக்கள் விநாயகர் கோயிலுக்குப் போகத் தடை யேதுமில்லை யாதலினால், இவர்கள்நீங்கலாக, கிறித்தவர்களும் முகம்மதியர்களும், பிறரும் அவரவர்களுக்கு உரிய வழிபாடுகளைச் செய்யவேண்டும் என்று சுவாமிகள் கூறி யிருக்கிறார்கள். ஆலயத்தண்டையே வரலாகாது, உருவ வழிபாடே செய்யலாகாது என்பாரும், இறைவனது இயற்கைத் திருமேனிகளான மரங்களையும் செடிகளையும் வலம் வந்து இறைவனாகிய இயற்கையை வழிபடலாம் என்பது சுவாமிகள் கட்டளை.

இவ்வளவுதான் வழிபாடு. சில நிமிஷமும் பிடிக்காது. மலரும் நீரும் வேண்டுவதில்லை. கர்ப்பூரம், பழம், தேங்காய்ப் பிறவும் வேண்டுவதில்லை. இவ்வழிபாட்டிற்கு மந்திரங்களும்,ஜெபங்களும்கிடையா. அர்ச்சகரும் வேண்டாம். செல்வந்தர்கள் வழிபாட்டுக்காக வேண்டும் பட்டும், பீதாம்பரமும், பீடமும், பூசை அறையும், பிறவும் வேண்டவே வேண்டாம். இவை கொண்டு பூசை செய்தலாகாது என்று சுவாமிகள் சொல்லவில்லை. செய்வதால் குறை கிடையாது. ஆனால் எளியவரும் வழிபாடு செய்தற்கான முறையை வகுக்க

வேண்டும் என்றே சுவாமிகள் மேல்குறித்த இலேசான திட்டத்தைக் கட்டளையிட்டார்கள்.

ii பச்சை நீர்ப்பழக்கம்.

க. நீராடப் பச்சை நீர்.

நீராடுதற்குப் பச்சை நீரைத்தான் பயன் படுத்த வேண்டும் என்பது சுவாமிகள் கட்டளை. இயற்கையாகக் கிடைக்கும் நீரிலேயுள்ள உயிர்ச்சத்து, அந்நீரைக் காய்ச்சியோ, அந்நீரோடு வேறு பொருள்களைக் கலந்தோ உபயோகப் படுத்தும்போது, குன்றி விடுகின்றது. எக்காரணத்தைக் கொண்டும் நீரைக் காய்ச்சி உபயோகித்தலாகாது. கைகால் சுத்தம் செய்யவும் வெந்நீர்கூடாது. தானே கிடைக்கும் தண்ணீர், அழுக்கற்றதாகச் சுத்தமானதாக இருக்கின்றதா என்று மாத்திரம் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்ச்சினால் தான் நீங்கும் என்ற குறைகள் இருப்பதாகக் குறுகுறுப்பு ஏற்பட்டாலும், அல்லது இப்பச்சை நீரில் ஸ்நானம் செய்தால் இப்போதுள்ள தேக நிலை கெட்டு விடும் என்ற அச்சம் ஏற்பட்டாலும், உடையவன் நாமத்தை எண்ணி, அவனது அருள்வந்து அந்நீரில் படிவது போன்ற குறிப்பாக, சிறிது திருநீறு அதிலே இட்டு நீராடலாம். குறைகள் ஏதும் நேரா. ஆண்டவனது அருட்பாங்கை அகத்தெண்ணி எந்நீரில் நீராடினும் இடர் இராது.

உ. அருந்த அந்நீரே.

நீராடுதற்கு மாத்திரம் அல்லாமல் குடிப்பதற்கும் பச்சை நீரைத்தான் பயன் செய்தல் வேண்டும் என்பது சுவாமிகள் கொள்கை. காய்ச்சலால் கஷ்டப்பட்ட போதிலும், பிற நலிவு வந்த போதிலும் தண்ணீர்தான் தாகத்திற்குக் கொள்ள வேண்டும். வெந்நீர் கூடாது. அச்சமாயிருப்பின் ஆண்டவன் அருளை நினைந்து பருகி வரவேண்டும். குறை சிறிதும் வராது என்பது சுவாமிகள் ஆணை.

ங. வெந்நீர் வேண்டாம்.

எவ்விதத்திலும் வெந்நீரைத் தொடுதல் கூடாது என்பது சுவாமிகளது கொள்கை. ஒத்தணம் கொடுத்தல், கொப்பளித்தல் முதலிய எதற்காகவும் சுடுநீர் உபயோகித்தல் ஆகாது. எண்ணெய்

தேய்த்துக் கொண்டாலும் தண்ணீரிலேயேதான் நீராடுதல் வேண்டும். இவ்வாறி வெந்நீரைத் தீண்ட நேர்ந்தால், அவ்வாறு தீண்டியது சட்டத்திற்கு மாறான செய்கை என்பதைக் குறிக்க உடையவன் குறிப்பு ஏதாவது ஏற்படும். குற்றத்தை யுணர்ந்தால் குறையேதும் இராது.

iii . மருந்தென்பதை அருந்தாமை

க. மருந்து இயற்கைக்கு மாறு.

மருந்து அருந்துதல் இயற்கைக்கு மாறு ஆதலின் எத்தகைய நோய் வந்தாலும் மருந்தென்பதே சாப்பிடலாகாது என்பது சுவாமிகளது கட்டளை. 'மருந்தினால் நோய் நீங்கி வருவதைக் கண் கூடாகக் காண்கின்றோமே. அப்படியிருக்க மருந்து ஏன் கூடாது என்று சொல்லவேண்டும்' எனச் சிலர் எண்ணலாம். சிறிது கவனிக்க வேண்டும். சாப்பிடும் மருந்தானது ஒரு குறித்த நோயை நீக்குவதோடு நின்றால் நல்லதுதான். ஆனால் அது அதோடு நிற்பதில்லை. உடம்பை வேறு பல வகையிலே கெடுத்து வைத்து விடுகிறது. ஆகையினால்தான் மருந்து கூடாது என்று சுவாமிகள் வற்புறுத்தினார்கள்.

உ. வினை வளர்க்கும் விரோதி.

'வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய்' என்று பட்டினத்து அடிகள் சொல்லியதற்கொப்ப முன் செய்த வினையை அநுபவித்துத் தீர்க்கவே பிறவி எடுக்கிறோம். எடுத்த இந்த ஜன்மத்தில், முன்னை வினையைத் தொலைத்துக் கொள்வதே நோக்கமா யிருக்க வேண்டுமே தவிர மேலும் மேலும் புது வினைகளைச் செய்து போடுதல் கூடாது. அப்படிச் செய்வதால் பிறவி நோய் நீடித்துக் கொண்டு போகிறது.

நமக்கு வரும் நோய்கள் நம்முடைய சொந்த வினையின் பயனாக வருகின்றன. இயற்கைக்கு மாறான வாழ்க்கையை, முன் ஜன்மத்திலாவது இந்தப் பிறவியிலாவது செய்யாது வந்திருப்போமானால் நோய் என்பதே நம்மை யணுகாது. பொருத்தமில்லாத வாழ்க்கை வாழ்வதனாலேதான் பொல்லாத பல பிணிகளுக்கு ஆளாகிறோம்.

வினையை நுகர்ந்து தீர்ப்பதற்காக வரும் நோயை, மருந்து கொடுத்துத் தடுக்க முயல்வதானது, மேலும் வினையைப் பெருக்கிக் கொள்வதாகும்.

முன்னும் இன்றும் செய்த வினையை ஒழித்துப் பிறவா முக்தியாகிய பேரின்பத்தை யடைவித்தற்குத் துணை செய்ய வருகின்ற பிணியை, வினையை வளர்த்து அல்லல் சூழ்ந்த அகலிடத்தில் அலமர வைக்கும் பொருளாகச் செய்துவிடக்கூடியது மருந்து என்னும் மாயப் பொருள்தான். ஒரு நோயைப் போக்கிக் கொள்ளுகின்ற மனித முயற்சியிலே, எத்தனையோ விதமான புதியபுதிய வினைகளைச் செய்ய வேண்டி நேர்ந்து விடுகிறது. அவ்வினைகளை யெல்லாம் அநுபவித்தே தீர்க்க வேண்டுமாதலின், அவற்றிற்காகப் பல பிறவிகளையும் அப்பிறவிகளில் பல பிற நோய்களையுங்கூடப் பெறவேண்டியவர்களாய் விடுகிறோம். எனவே, மருந்து மனிதனுக்கு வினை வளர்க்கும் விரோதியாக இருப்பது நன்கு புலனாகும்.

### ௩. உடையவன் உறுதிக்கு ஊனம்.

'வைத்திய நாதன்' என்று எல்லாம் வல்ல பொருளுக்கு ஒரு பெயரை மாத்திரம் அழகுக்கு இட்டுவைத்துவிட்டு, ஒரு சிறு தலைவலி வந்தாலும், அதற்கு ஆயிரத்தெட்டு வைத்தியம் செய்து கொள்வதற்காக இங்கும் அங்கும் ஓடுகின்ற மக்களை என்னென்று சொல்வது என்று சுவாமிகள் இரங்குவார்கள். தீரா நோய் தீர்த்தருள வல்லவன் ஒருவனே; அவனைப் பற்றியவர்கள், வேறு எவரையும் மருந்துக்கென நாட வேண்டிய அவசியமில்லை. நாடவே கூடாது என்பது சுவாமிகள் கருத்து.

சிறு தலைவலி முதற்கொண்டு, தீர்தற்கு அரிய பிறவி நோய் வரையில், எதையும் எளிதில் தீர்த்து வைத்தற்காக உடையவன் ஒருவன் தன் துணையை அடியவர்கள் எப்போது நாடுவார்கள் என்று காத்துக் கொண்டிருக்க, அவன் அவ்வாறு இருப்பதை மறந்து, பிணிகளை நீக்கிக் கொள்ள அவனருளை நாடாமல் மருந்தை நாடிச் செல்வதானது, அவனிடத்தில் உறுதியை யிழப்பதாகும் என்பது சுவாமிகளது எண்ணம். அவன் படைத்த அற்புதமான சுக்கினாலும் மிளகினாலும் மற்றுமுள்ள மருந்துப் பொருள்களாலும் தீரக்கூடிய

ஒரு வியாதி, அவனது நேர் அருளினாலேயா நிராமற் போய்விடும்? ஆண்டவன் அருளைக் கோருகின்ற ஆர்வம் இல்லாதவரையில்தான் ஒருவன் நோய் நீக்கத்திற்கு உலக மருந்துகளுக்காக அலைய வேண்டி வரும். ஆனால் அவன்அருளை நம்பிவிட்டவர்களுக்கு, உலக மருந்து களைப்பற்றிய நினைவு கூட வேண்டியதில்லை. 'தமக்கு வரும் நோய் களை அவன் அருளை அடரப் பெறுவதற்கு, துணையாக்கிக் கொள்ளா மல், மாய மருந்துகளை நாடியா மாய்ந்து விடவேண்டும் அறிவுடை யார்?' என்பது சுவாமிகளது கேள்வி.

## iv பிணிவந்தால் யாது செய்தல்?

இப் பிறவியில் இயற்கை பிறழாத வாழ்க்கை வாழ்ந்து வருப வர்களுக்கு நோய் வராது. நம்மையும் மீறி நேரும் சில அசந்தர்ப் பங்களால் இயற்கைக்கு மாறாக நடந்துகொண்டு விட்டபோது வியாதி வந்தே தீர்கிறது. அப்படியல்லாமல் முன்னைப் பிறவியின் பயனாகவும், பிணிவருதல் கூடும். இப்படியாக நோய் வந்துவிட் டால் எந்த விதமாக நடந்துகொள்ளவேண்டும் என்று சுவாமிகள் திட்டம் செய்திருக்கிறார்கள்.

### க. காலை மாலை நீராட்டம்.

### (i) சகல நோய்

உலகத்திலே மக்களுக்கு வரும் நோய்கள் எண்ணில. அவற் றில் எத்தகைய பிணி வந்தாலும் சரி, பச்சைத் தண்ணீர் விடியல் ஸ்நானத்தை விடக்கூடாது. அதோடு வியாதி நீங்கும் வரையில் மாலையிலும் பச்சை நீரிலேயே ஸ்நானம் செய்துவருதல் வேண்டும். சாதாரண காலத்திலேயே தண்ணீரில் நீராடுவதற்கு அச்சங்கொள் கின்றவர்களுக்கு, குளிர்க்காய்ச்சல் வந்தபோது, காலை மாலை இரண்டு வேளையும் பச்சை நீரில் ஸ்நானம் செய்பவர்களைக் கண்டாலும், அல் லது அவர்களைப்பற்றிக் கேட்டாலுங்கூட நடுநடுக்கம் ஏற்பட்டு விடும். ஆனால் சட்டத்தை மேற்கொள்ளுகிறவர்கள் அம்மாதிரி யான சோதனைக் காலங்களிலேதான் ஆண்டவன் அருளிலே ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்களாக ஆய்விடுகின்றனர். இரண்டு நுரையீரல் களிலும் சளி நிறைந்து சன்னி பிறந்திருக்கின்ற நிலையிலுங்கூட, பச்சை நீர் ஸ்நானத்தை விடாது செய்யும் ஒருவருக்கு உடையவ

னது உண்மையிலே எவ்வளவு அடர்ந்த நம்பிக்கை யிருக்க வேண்டும்?

அவ்வாறு, ஆண்டவனே அடைக்கலம் என்று அடைந்ததன் பயனாக, அக்கடு நோயுடையார், நிச்சயமாக முழு நலம் அடைந்து விடுகின்றபோது அவருடைய உள்ளம் எம்மட்டு குதூகலம் அடையும்? ஆண்டவனது அருளின் பெருமையை எத்துணை வியக்கும்? பின்னர், அவர் வாழ்வெனுங் கடலை நீந்துதற்கு எவ்வளவு வன்மை பெற்றவர் ஆய்விடுவார்? பிரபஞ்சப் போரிலே வெற்றியடைதற் குரிய தைரியத்தை அவர் எவ்வளவு உறுதியாகப் பெற்றுவிட்டதாக உணர்வார்? ஒரு நோயை இவ்வாறு ஆண்டவன் அருள் கொண்டே எளிதிலே கடந்த அவர், மேலும் மேலும் வரக்கூடிய பிணிகளையும் அவ்வாறே கடந்து வரும்போது அவரது வாழ்க்கை எத்துணை வெற்றியுடையதாக, இன்பம் நிறைந்ததாக, முத்தி எனும் கரை சேரும் முனைப்பு உடையதாக விளங்கும்? அவ் விளக்கமானது அண்டை அயலிலுள்ள மற்ற மக்களையும் ஆண்டவன் அருளுக்கு அருகராக்குவதற்கு எம்மட்டு துணை புரியும்?

"மற்றைக் காலங்களில் பச்சைநீர் ஸ்நானம் பயனளிக்குமாயினும், உடலில் நோய் வந்து உற்ற காலத்தில், அதிலும் தண்ணீரைத் தொட்டாலும் மிகுந்துவிடக்கூடிய பிணிகள் உடம்பிலே இருக்கின்ற நேரத்தில், பச்சைநீர் ஸ்நானத்தைப் பற்றிப் பேசவும் கூடாது. அந்நிலையில் தக்க வைத்தியம் செய்துகொள்ளாமல் தவறித் தண்ணீரில் நீராடுவோர்களை முழு மூடர்களென்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லலாகும்" என்று கூறுபவர்களைக் கண்டு சுவாமிகள் புன்னகை பூப்பார்கள். வைத்தியத்திலே கைபோய ஆற்றல் வாய்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய பெரிய நிபுணர்கள் பக்கத்திலேயே இருந்து கொண்டு, உலகிலே கிடைக்கக் கூடிய உயர்ந்த மருந்துகளை யெல்லாம் உடனுக்குடன் வரவழைத்துக் கொடுத்து, மிகச் சிறந்த சிகிச்சை செய்து வந்தாலுங்கூட, நோய் குணப்படாமல், நோய்வாய்ப் பட்டவர் தீவாயோ மண்வாயோ படவேண்டியவர் ஆய்விடுகின்றாரே, என்பதை அவ்வறிஞர்கள் அறியாரோ என்று சுவாமிகள் கேட்பார்கள்.

இருப்பதும் இறப்பதும், நோய் நீக்கம் பெறுவதும் நோயால் வருந்துவதும், மருந்தினாலே யல்ல, மாண்புடைய மருத்துவ ராலேயல்ல, மற்று ஆண்டவனது அளிந்த அன்பினாலே என்பதை அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கின்றார்களே என்று சுவாமி கள் இரங்குவார்கள். மருந்தை நம்பி, மருத்துவரை நம்பி, 'ஐயோ! மருந்து ஐயோ! மருந்து' என்று உயிர் விடுவதைக் காட்டிலும், ஆண்டவனை ஆழ நம்பி அவனது அருளையே அடர நினைந்து, மாளவேண்டும் என்னும் வினையிருந்தால், மாண்டுவிடுவது எவ்வளவோ சிறந்ததல்லவா? இவ்வுண்மையை என் மக்கள் உணரக் கூடாது என்று சுவாமிகள் நினைப்பார்கள். சுவாமிகளது கட்டளைப்படி நடப்பவர்கள் கட்டாயம் நன்மையே பெறுவார்கள் என்பது சுவாமிகளது உறுதி.

மருந்து சாப்பிட்டு மாண்டுவிடுபவர்களது எண்ணிக்கையைக் காட்டிலும், உடையவனது உண்மையைத் திடமாக நினைந்து, இயற்கை முறையாகிய பச்சை நீராட்டத்தைச் செய்து இறந்து விடுபவர்களது எண்ணிக்கை, நூற்றுக்கு எவ்வளவுபேர் என்று கணக்கிட்டுப் பார்த்தால், மிகக் குறைவாக இருப்பதை மக்களே அநுபவத்தில் காணட்டுமே என்று சுவாமிகள் கூறுவார்கள். உடலெடுத்து வந்த வினை முடிந்ததும் உடலும் முடியும் என்பது உண்மை. அவ்வுடல் முடியவேண்டிய நேரம் வந்துவிட்டால் வைத்தியம் செய்தாலும் முடிந்துவிடும். அப்படியிருக்க, மருந்து அருந்தாததனால்தான் முடிந்துவிட்டது, அல்லது பச்சை நீரில் நீராடியதனால்தான் முடிந்துவிட்டது, என்று சொல்வது மடமை என்பது சுவாமிகளது கருத்து.

## (ii) பிரசவம்

நோய் வந்தால் நீராடுவது போலவே பிரசவித்தாலும், குழந்தை பிறந்தவுடனே அது எந்த நேரமானாலும் சரி, தாய்க்கும் மகவுக்கும் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்விக்க வேண்டும் என்பது சுவாமிகள் கட்டளை. பிரசவத்திற்குப் பிறகு, காய்ச்சல் முதலிய எந்தத் தொந்தரவும் இல்லாமல் இருந்தால், காலை ஸ்நானம் மாத்திரம் போதும், ஏதாவது இருந்தால் மாலையும் நீராடவேண்டும்.

பிரசவமானவர்கட்கும் சிசுக்களுக்கும் சாதாரணமாகச் செய்யும் பத்தியங்களும் எதுவும் செய்தலாகாது. மருந்து ஏதும், எக்காலத்திலும், அருந்தலாகாது என்று முன்னமே குறித்தாயிற்று.

### (iii) விஷக்கடி

தேள், பாம்பு முதலிய விஷ ஜந்துக்களால் தீண்டப் பெற்றாலும், உடனே பச்சைநீரில் தலைமுழுக வேண்டும். கடித்த ஜந்துவைக் கொல்லக் கூடாது. கொன்று விட்டு இவ்வாறு செய்தால் பயன் நேராது. மற்றவகையால் உடம்பில் விஷம் ஏற்பட்டாலும் இதே முறையைத்தான் கையாள வேண்டும்.

### (iv) வெட்டு ரணம்

ஆயுதங்களாலோ, அபாயங்களாலோ காயங்கள் ஏற்பட்டாலும், கட்டிப் பிளவை முதலிய வந்தாலும் அவற்றால் ரணம் ஏற்பட்டாலும் காலை மாலை நீராட்டம் செய்து வருதல் வேண்டும்.

### உ. திருநீறும் தீர்த்தமும்.

நோயுற்ற காலங்களில், காலை மாலை நீராடியதும், பிரசவ நீராட்டத்திற்குப் பிறகும் விஷக்கடி ஸ்நானத்திற்குப் பின்னும் உடையவன் அருளை உறுதியாக நினைந்து தண்ணீரில் சிறிது திருநீறும் துளசியும் இட்டு, அவனது கருணையைக் குடிப்பது போலக் குடித்து விடவேண்டும். விபூதியை, நோயுள்ள இடங்களில் அவன் அருளால் பந்தனம் செய்வதுபோலப் பற்றோடு நினைந்து பூச வேண்டும். இதை மருந்தாக எண்ணிக் கொள்ளாமல், உடையவனை உறுதியான பற்றுக் கோடாகப் பிடித்துக் கொள்ளுதற்கு உரிய ஒரு துணையாக நினைத்தல் வேண்டும். திருநீறு கிடைக்காத சமயத்தில் சிறு துளி மண்ணை யள்ளி உபயோகிக்கலாம் என்பது சுவாமிகள் கட்டளை.

தலைவலி, சுளுக்கு, வீக்கம் முதலியவற்றிற்கும், திருவருளைத் திண்ணமாக நம்பித் திருநீறு பூசினால் நலமாகும். கட்டியின் மேலும் காயத்தைச் சுற்றிலுங்கூட அவ்வாறே விபூதி பூசினால் குணமாகும் என்பது சுவாமிகள் வாக்கு.

ந. ஆண்டவன் நாம மனனம்.

நீராடுதல், திருநீற்றுத் தீர்த்தம் பருகுதல், நீறு பூசுதல் இவற்றைச் செய்து வருவதோடு, ஆண்டவனுக்கு அவரவர்கள் வாலாயமாக இட்டு வழங்கும் திருநாமத்தை மனதிலே இடைவிடாது தியானம் செய்து வருதல் வேண்டும் என்பது சுவாமிகள் சட்டம். பிணியுள்ளவர்கள் செய்ய இயலாது இருக்கின்றபோது அவர்களுக்காக மற்றவர்கள் மனனம் பண்ணலாம். மற்றக்காலங்களிலும் இம்மனனம் இன்றியமையாதது ஆனாலும் நோய்வாய்ப் பட்டிருக்கின்ற நேரத்தில், நோயாளியின் சிந்தையும், அவர்க்கு உரியாருடைய சிந்தையும், சிதறிச் செல்லாது இறைவன் திருவருளையே பற்றி நிற்பதற்கு இது ஒரு சிறந்த சாதனமாகும் என்பது சுவாமிகள் கருத்து.

சா அச்சம் அணுவும் இல்லை.

"நோய் வந்துற்ற காலத்தில் மருந்து சாப்பிட்டு அந்நோயைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று உலகத்தில் அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம். ஆனால் சுவாமிகளோ மருந்தே வேண்டாம் என்கிறார்கள். மருந்து சாப்பிடாது இருப்பதே மக்களுக்கு மனக்கலக்கத்தை உண்டாக்குகின்ற செயலாகும். அப்படியிருக்க அந்நோயிலே ஸ்நானம் செய்ய வேண்டும் என்கிறார்கள். இரண்டு வேளையும் என்கிறார்கள். பச்சைத் தண்ணீரில் என்கிறார்கள் உள்ளுக்குக் குடிப்பதும் பச்சைநீர் என்கிறார்கள். பிரசவ காலத்திலும் இப்படியே செய்ய வேண்டும் என்கிறார்கள். பிள்ளை ரணமாயிருந்தாலும் இப்படியே என்கிறார்கள். இது என்ன அக்கிரமமாக இருக்கின்றதே! இவ்வாறெல்லாம் செய்வதானது, எப்போதோ வரவேண்டிய சாவை இப்போதே தாம்பூலங்கொடுத்து நிச்சயமாக வரவழைத்துக் கொள்வது போலாகுமே, இப்படியும், செத்துப் போவதற்கு மக்கள் தாமே வழிதேடிக் கொள்ளலாமோ? இம்மாதிரி செய்வது தற்கொலை செய்ய யத்தனிப்பதற்குச் சமானம் ஆகாதா?" என்றெல்லாம் பலர் பலவாறு எண்ணலாம்.

ஆனால், சுவாமிகளது கட்டளைப்படி நடப்பதால் துளி அச்சங் கூடக் கிடையாது என்று சுவாமிகளே துணிந்து கூறியிருக்கின்றார்

கள். ஒரு திட்டம் சரியோ தப்போ, நன்மை விளக்குமோ தீமை விளக்குமோ, என்று சந்தேகமாயிருந்தால், அதை அனுஷ்டித்துப் பார்க்காமல் அதைப்பற்றி என்ன முடிவான கருத்தைச் சொல்லமுடியும்? சுவாமிகளது சட்டத்தைப்பற்றி அறிய நேரும் அன்பர்கள், முதலில் அச்சங்கொள்வது இயற்கையே ஆனால், முன்பே சட்டத்தைக் கையாண்டு அரியபலன்களை அடைந்துவரும் அடியவர்களை அவர்கள் கண்ணாரக் காணும்போது, அவர்களது அச்சமெல்லாம் அஸ்திவாரம் அற்று அடியோடு அழிந்துவிட ஆரம்பிக்கும். அதோடு அவர்கள் நில்லாமல், அவர்களே சட்டத்தை ஏற்றுக் கொள்வார்களானால், அவர்களுக்கே பிணி முதலிய வருமானால், அப்போதும் அப்பனுடைய ஆணையின்படி அவர்கள் நடப்பார்களானால், ஆண்டவன் அருள் அவர்களை அழகாக, அருமையாக அற்புதமாக, ஆண்டு, உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே செம்மை செய்து, உயர்ந்த நல்வாழ்வு புரிய அவர்களுக்குத் துணை நிற்பதை, எல்லோருங்காண அறிந்து, இன்பம் அடைவார்கள் என்பது சுவாமிகளது கருத்து.

### V கடவுளே கதி:

#### க. நம்போல் உயிரை நாடாமை:

உலகத்திலே உயிர்களாகப் பிறந்த நாம் செம்மையாக வாழ்ந்துவர வேண்டுமானால், நாம் ஒருவருக்கு ஒருவர் துணை செய்து கொண்டால்தான் முடியும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஒரு தனி மனிதன், தானே பிறந்து, தானே வளர்ந்து, தானே வாழ்ந்துவிட முடியாது. பிறப்பது முதற்கொண்டு, இறந்து போவது வரையில் தாய் தந்தை யென்றும், உற்றார் உறவினர் என்றும், ஊரார் நாட்டார் என்றும், ஆசிரியர் பிறர் என்றும் பல பேருடைய உதவியினாலேயே இம்மை மறுமைகளுக்கு வேண்டிய நலங்களைத் தேடிக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். இருந்தாலும், இவ்வாறு அவனுக்கு உதவி செய்கிறவர்களுக்கு, இப்படி உதவி புரியவேண்டும் என்ற எண்ணம் உண்டாவதும், துணை செய்வதற்கு உரிய சக்தியும் சமயமும் ஏற்படுவதும், அருள் வடிவான ஆண்டவனுடைய திருக்குறிப்பி

ஞாலேயேயாகும் என்று சுவாமிகள் கூறுவார்கள். உடையவனுடைய கணக்கின்படி யல்லாமல், வேறுவிதமாக நன்மையென்றும், தீமை யென்றும் நாம் எண்ணிக்கொள்ளுகின்ற எதுவும் நேரவே நேராது என்பது சுவாமிகளது முடிபு.

எனவே, நமக்கு முட்டுப்பாடான நிலைகள் நேர்கின்ற காலங்களிலே, அத்தகைய முட்டுப்பாடுகள் அவர்களுக்கே வந்த சமயங்களில் அவற்றினின்றும் கரையேற வழி தெரியாமல் நம்மைப் போலேயே விழிக்கக்கூடிய, நம் போன்ற மனிதர்களை நாடக் கூடாது என்பது சுவாமிகளது கட்டளை.

ஆகையினாலே நமக்குத் துணைபுரியும் நிலையிலே யுள்ளவர்களையெல்லாம் உதாசினம் செய்யவேண்டும் என்பது சுவாமிகளது கருத்து அல்ல. அவர்களை அணுகுவதிலும் அவர்களிடத்திலே நம்முடைய சந்தர்ப்பங்களைச் சொல்லிக் கொள்வதிலுங் கூடத் தவறில்லை. ஆனால், அவர்களை நம்மைக் காக்கக்கூடிய கர்த்தர்கள் என்று நம்பி அவர்களை நத்துவதிலேயே, அவர்களைத் திருப்தி செய்வதிலேயே, காலத்தைப் போக்கக்கூடாது. அப்படிச் செய்வதனாலே, அவர்களுடைய உள்ளம் கனிந்து, கோரிய உதவியைச் செய்ய அவர்கள் முன் வந்தாலும், ஆண்டவன் திருக்குறிப்பும் அவ்வழியே செல்லாவிட்டால், அவ்வுதவி கைகூடாது. ஆகையினால் எவ்விதமான குறை தீரவேண்டுமானாலும் சரி, நன்மைகைகூட வேண்டுமானாலும் சரி, உடையவனை நினைந்து உருகவேண்டும். அவனிடம் சென்று அழவேண்டும் என்பது சுவாமிகளது புத்திமதி.

அவனை நினைந்து அரற்றினால் ஆகமுடியாத காரியங்கள் ஆகும். தீரமுடியாத குறைகள் தீரும். அதற்கு உரியவர்களுடைய உள்ளத்திலே புகுந்துகொண்டு, அதற்கு வேண்டிய ஆற்றலையும் வசதியையும் அவர்களுக்குக் கொடுத்து, எண்ணியதை எண்ணியவண்ணம் அவர்கள் வாயிலாய்க் கூட்டுவிக்கும் பெருமை எல்லாம் வல்ல எந்தைக்கே உண்டு. இன்று நமக்குத் துணைக்கு வந்து, நாளைய தினம் 'நம்மைப்போலேயே பிறரது துணையையே நாடும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களைப்போல்' அல்லாமல், உடையவன் எக்காலத்திலும் எல்லாருக்கும் எத்தகைய துணையையும்

கொடுக்கும் வல்லமை வாய்ந்தவன் ஆதலின் அவனையன்றி மற்ற உயிர்களை நாடி ஆவது என்ன இருக்கின்றது?

உ. நாளை கோளை நம்பாமை:

'நாள் செய்வது நல்லார் செய்யார்' என்பது பழமொழி. 'நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை' என்ற வாக்கியத்தினாலேயே, நாளும் கிழமையும் நலிவு இல்லாதவர்க்கு உண்டு என்பதாயிற்று. நாள் நட்சத்திரம் திதி யோக கரணம் காலம் முதலியவற்றில் நல்லன உண்டென்றும், தீயன உண்டென்றும், அவற்றைக் கவனித்து, அவையாவும் நல்லனவாயுள்ள நேரத்திலேயே காரியங்களைச் செய்யவேண்டும் என்றும், தீயனவாயுள்ள வேளையிலே தொடங்குதல் கூடாது என்றும் அவைகளைப்பற்றிக் கூறும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பஞ்சாங்கம் என்பது, இவற்றின் தன்மையை யெல்லாம் நமக்கு வெளிப்படுத்தி, நல்ல வேளை கெட்ட வேளை தெரிந்து நாம் செய்யும் செயல்களைச் செம்மையாகச் செய்யத் துணை புரிவதற்காகவே, சாஸ்திரம் அறிந்தவர்களாலே, வருஷா வருஷம் எழுதப்பட்டு வருகின்றது

நாளைப்பற்றி இவ்வாறு ஆக, கோள்களினுடைய போக்கானது மக்களுடைய வாழ்க்கையின் போக்கை, தெள்ளத் தெளிய அறிந்து கொள்ளுதற்குத் துணையாயிருக்கின்றது என்று கூறி, ஜோதிட சாஸ்திரங்கள் எத்தனையோ, நம் முன்னோர்களாலே வரைந்து வைக்கப்பட்டிருக்கின்றன. முறையாகச் சோதிட நூலைக் கல்லாதும், மறைவாக உள்ள கோள் நிலைகளைக் கூர்ந்து அறியாதும், எவ்வளவோ ஜோசியர்கள் ஜாதகங்களுக்குப் பலன்கூறி மக்களை ஏமாறவைத்து ஏங்கும்படிச் செய்தும் வருகின்றார்களானாலும், அவற்றைச் செவ்வனே கற்று ஆராய்ந்து, மக்களுடைய வருங்கால நிலையை வழுவாத முறையிலே எடுத்துச் சொல்ல எம்மட்டோ ஜோதிடர்கள் நம் நாட்டில் இருக்கின்றார்கள்.

இப்படியெல்லாம் இருக்கும் சாஸ்திரங்களைச் சுவாமிகள் பொய்யென்று சொல்ல வரவில்லை. நாளும் கோளும், எல்லாம் வல்ல எந்தையின் அருளுக்கு அடங்கினவே யன்றி, அதை மீறிச் செல்லும் தகையன அல்ல என்பதே சுவாமிகளது கருத்து.

எனவே, இறைவனுடைய இன்னருளிலேயே நாட்டம் வைக்க வேண்டிய உலகத்து மக்கள், நாளையும் கோளையுமே பெரிதாக நம்பிக் கொண்டு, அவற்றிற்கு மிக மிக மேலாக இருக்கின்றதும், அவற்றை யெல்லாம் படைத்து இயக்குகின்றதுமான தெய்வத்தின் திருவருளை மறந்துவிடவோ, கீழ்ப்படுத்தவோ கூடாது என்பதும் சுவாமிகளது கட்டளை. ஆண்டவனது அன்பருளில் அசைவிலாத பற்றுடைய அடியவர்களுக்கு, நாளும் கோளும், ஏதும் நன்மையோ தீமையோ, செய்ய ஆற்றல் அற்றனவாய் இருக்கும் என்பது சுவாமிகளது எண்ணம். ஆகவே அவற்றை நம்புவதை விட்டு, உடையவன் அருளையே உறுதியாகப் பற்றி வாழ்ந்து வரவேண்டும் என்பது சுவாமிகளது உபதேசம். அவற்றின் மீது நம்பிக்கை வைக்க வைக்க ஆண்டவன் அருளில் நம்பிக்கை குறைந்து விடக்கூடும் என்பது சுவாமிகளது அச்சம்.

நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை, ஜாதகம் பார்க்க வேண்டியதில்லை, என்பதோடு, சகுனம் பார்ப்பது, ஆரூடம் பார்ப்பது போன்றவற்றிலும் நம்பிக்கை வைக்கவேண்டிய அவசியமில்லை என்பதும் சுவாமிகளது கொள்கை. அருளே வடிவமாய் அவரவர்க்கு ஏற்ற நன்மையையே செய்வதற்கென ஆண்டவன் எங்கும் நிலைத்திருக்க, அவனருளையே நம்பி நடந்து செல்லாமல், பிறவற்றை நம்புவதில் சுவாமிகளுக்கு விருப்பமில்லை.

### ௯. மணி மந்திரம் மருவாமை.

நோய் தீர்த்துக்கொள்ளுதற்கு மருந்தென்பதே அருந்தலாகாது என்று சொன்னது போல, மணி மந்திரத்தின் துணையையும் நாடக் கூடாது என்பது சுவாமிகள் கட்டளை. பிணி நீக்கத்திற்கே யல்லாமல், நினைத்த காரியங்கள் கைகூடுதற்காக என்றும், இடர்தரக்கூடிய ஏதும் அணுகாமல் இருத்தற்காக என்றும், சொல்லி, இம்மணி மந்திரத்தின் உதவியைக் கோருதல் கூடவே கூடாது என்பது சுவாமிகளது ஆணை. உலக மார்க்கத்தில், மணிமந்திராதிகள் மக்களுடைய நன்மையைக் கோரியே வைக்கப் பெற்றிருக்கின்றன என்று சாஸ்திரங்கள் கூறுமாறுலும், இக்காலத்தில் சிலர் அவற்றையே பெரிதாக எண்ணி, அவற்றின் துணையாலேயே

எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்று நம்பி, அவற்றையெல்லாம் மக்களுக்கென ஆக்கிக் கொடுத்திருக்கும் அருள் நிறை யுண்மையை அடியோடு மறந்து விடுகின்றார்கள். ஆதலினால், அவைகளை மக்கள் மருவலாகாது என்று சுவாமிகள் கட்டளை யிட்டார்கள்.

சுவாமிகளது சட்டத்தில் மந்திரம் என்பதே கிடையாது என்று சொல்லுதல் வேண்டும். அடியவர்களுக்குச் சுவாமிகள் ஏதும் மந்திர உபதேசம் செய்ததில்லை. எந்த மந்திரத்தையும் தாழ்த்தியாவது உயர்த்தியாவது சுவாமிகள் சொன்னதில்லை. உடையவனது ஒப்பற்ற ஒரு தனிச் சிறப்பினையாவது ஆண்டவனது அளவற்ற அருளினையாவது, மறக்க வைக்கும், அல்லது குறைவாக எண்ண வைக்கும், மந்திரம் எந்த மந்திரமானாலும் சரி, அதனைச் சுவாமிகள் போற்றக்கூடாது என்று மாத்திரம் மிக உறுதியாகக் கூறுவார்கள். ஆண்டவனிடத்திலே, ஆழ்ந்த பற்றினை அதிகப்படுத்தும் எந்த மந்திரத்தைப்பற்றியும் சுவாமிகள் குறை கூறவில்லை.

ஆனால் மந்திர வாதிகள் என்று சொல்லிக்கொண்டு, பேய் ஓட்டுதல் பிசாசு ஓட்டுதல், பில்லி சூனியம் வைத்தல், பிறர் வைத்த அவற்றை எடுத்தல், மந்திரங்களினாலேயே வசியம் செய்தல், பகை உண்டாக்குதல், பகைவரை வெல்லுதல், முதலியவற்றைச் செய்து விடுவதாகக் கூறுபவர்களை நம்பவே கூடாது என்பது சுவாமிகளது எச்சரிக்கை. சக்கரம் போட்டுக்கொடுத்தல், குளிசம் தாயத்தை கட்டுதல், முதலியவற்றைச் செய்பவர்களும் மக்களைக் கடவுளிடத்தினின்றும் அகல அழைத்துச் சென்று விடுபவர்கள் என்பது சுவாமிகள் கருத்து. சட்டத்தில் சேருவதற்கு முன்பு ஏதாவது குளிசம் சக்கரம் முதலியவை அணிய நேர்ந்திருந்தாலும், சட்டத்தில் சேர்ந்ததுமே, அவற்றை ஆண்டவன் பேரைச் சொல்லிக் களைந்து எறிந்துவிட வேண்டும் என்பது சுவாமிகள் வாக்கு. 'மணி மந்திரவாதிகளைக் கண்டாலும் மறைந்து கொள்ள வேண்டும்' என்று சுவாமிகள் விளையாட்டாகச் சொல்லுவார்கள். கோடாங்கிகள் குறி சொல்லுபவர் முதலியவர்களது துணையையும் நாடக்கூடாது என்பது சுவாமிகளது கட்டளை. எந்தக் குறை யிருந்த போதிலும் எல்லாம் வல்ல உடையவனை உறுத்து நினைப்

பதை விட்டு விட்டு மற்றவற்றின் துணையைத் தேடுதல் தவறு என்பது சுவாமிகளது கொள்கை.

### ௬. பிரார்த்தனை செய்துகொள்ளாமை

ஆண்டவனது அடர்ந்த அருளிலே நம்பிக்கை வைத்தவர்கள் எது குறித்தும் பிரார்த்தனை எதும் செய்துகொள்ள வேண்டுவதில்லை என்பது சுவாமிகளது கருத்து. எவ்வெக்காலத்தில் எது எது தரவேண்டும் என்றும், எது எது நீக்கவேண்டும் என்றும் கவனித்து அறிந்து, மக்களுக்குக் கொடுக்கவேண்டியவற்றைக் கொடுத்தும் அவர்களிடத்திலிருந்து எடுக்கவேண்டியவற்றை எடுத்தும் வருகின்ற எந்தைக்கு எதற்காக நாம் பிரார்த்தனை செய்துகொள்ளவேண்டும் என்பது சுவாமிகளது கேள்வி. நாம் பெற்று, அநுபவித்து வருகின்ற பலவிதப் பொருள்களும் அவனருளாலே நமக்குத் தரப்பெற்றவை. அப்படியிருக்க அவன் நம்மிடமிருந்த எந்தப்பொருளை எதிர்பார்க்கப்போகிறான்?

நம்மிடத்திலிருந்து அவன் வேண்டுவதெல்லாம் ஒன்றே. அதுதான் நமது அடிமைத்திறம். அருள் ஆண்டவனாகிய அவனது, அன்பின் அடிமை நாம் என்று, எதற்கும் அவனது துணையையே நாடிக்கிடக்கவேண்டுவது நமது கடமை. இந்த அடிமைத் திறத்தை, அவனிடத்து அன்பை, நன்றியை, வளர்ப்பதற்காகவே முன்னோர்கள் பிரார்த்தனை செய்துகொள்ளும் வழக்கத்தை வைத்திருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இப்பிரார்த்தனையானது உலக மக்களைத் திருப்தி செய்வதுபோலக், கடவுளைத் திருப்திசெய்து, நாம் மனதிற்கு இசைந்த கோரிக்கைகளையெல்லாம் பெற்றுவிடலாம் என்று எண்ணிச்செய்கின்ற, சுவாமிக்குக் கைக்கூலி கொடுக்கும், முறையாகி விட்டது. ஆண்டவனிடத்தில் கொள்ளவேண்டிய உயர்ந்த அன்பும் நம்பிக்கையும் இத்தகைய பிரார்த்தனைகளால் குறைந்துபோகலாயின. ஒரு பெரிய உத்தியோகஸ்தனிடம் வைக்கவேண்டிய மரியாதையானது, அவனுக்குக் கைக்கூலி கொடுத்துக் காரியங்களை முடித்துக்கொள்வதற்குப் பழக்கம் செய்துகொண்ட பிறகு எப்படி மனமார்ந்த மரியாதையாக இருக்கமுடியும்?

வாழ்க்கையில் நேரும் சிறு சிறு தொல்லைகளைப் போக்கிக் கொள்ள அவ்வப்போது தெய்வத்திற்கு ஏதாவது பிரார்த்தனை செய்துகொண்டால் போதும் என்று மக்கள் ஏமாந்து எண்ணி, உடையவனிடத்தில் உண்மையான அன்பை வளர்க்கும் வழக்கத்தை மறந்து விடுகின்றார்களே என்பது சுவாமிகளது வருத்தம். எனவே, பிரார்த்தனை செய்துகொள்ளும் பழக்கமே கூடாது என்று சுவாமிகள் கட்டளை செய்தார்கள். ஏற்கனவே பிரார்த்தனைகள் செய்துகொண்டிருந்தால் அவற்றைப் பூர்த்தி செய்துவிடலாம் என்று மாத்திரம் அநுமதி கொடுத்தார்கள். மேலும் ஏதும் பிரார்த்தனைகளையே செய்துகொள்ளுதல் கூடாது. எது நேர்ந்தாலும் எது நேராவிட்டாலும் ஆண்டவன் திருவடிகளே தஞ்சம் என்னும் எண்ணத்தை என்றும் நழுவவிடாது பற்றிக்கொண்டிருத்தல் வேண்டும், என்பது சுவாமிகளது உபதேசம்.

ரு. அறமன்றம் அணுகாமை

கோர்ட் கச்சேரிகளுக்குப் போகும்படியான நிலைமையையே உண்டாக்கிக்கொள்ளக்கூடாது என்பது சுவாமிகளது கொள்கை. எவ்வளவு வரையில் விட்டுக்கொடுத்து சகஜமாகவே விவகாரங்களை முடித்துக்கொள்ளலாமோ அவ்வளவு வரையில் முயலவேண்டும். நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியாயும், செங்கோல் அரசர்க்கெல்லாம் செங்கோல் அரசனும் எங்கும் இருக்கும் இறைவனிடம் முறையிட்டுச், சச்சரவுகளை ஒழுங்காக முடித்துவைக்கும்படிக் கோரிக்கொள்ளவேண்டும். அவனால் ஆகாததா மற்றவர்களால் ஆகப்போகின்றது என்ற நம்பிக்கை நிரம்பவேண்டும். நம்மையும் மீறி எதிரி அறமன்றத்திற்குச் சென்று நம்மை அங்கு வலிய இழுப்பானானால், 'ஆண்டவனே!' என்று அவன் குறிப்பறிந்து சென்று, உள்ளது உள்ளபடி சொல்லித் திரும்பவேண்டும். எதிரி கோர்ட்டுக்கு நம்மை இழுத்ததையே காரணமாக வைத்துக்கொண்டு, நாம் அவனோடு போட்டி போட்டு விவகாரங்களை விபரீதமாக்கிக்கொள்ளக் கூடாது என்பது சுவாமிகளது சட்டம்.

நாம் எதிர் பாராமலேயும், விரும்பாமலேயும், நம்மைப் பிறர் அவர்களுடைய விவகாரங்களில் சாக்ஷியாகப் போட்டுக் கோர்ட்டுக்கு

இழுத்துவிட்டபோதும், 'உடையவன் சம்மதம்போலும்,' என்று எண்ணிச் சென்று, நடந்தது நடந்தபடி கூறிவிட்டு வந்துவிடவேண்டும். கட்சிப் பிரதி கட்சிகளில் சேர்ந்துகொண்டு, பேதமையினாலே கோர்ட்டும் கையுமாக அழும் ஏழை மக்களைக் கோள் சொல்லியும், குத்திக்கொடுத்தும் மேலும் கெடுத்து, ஒருவருக்கொருவரிடம் உள்ள விரோதத்தீயை, மாச்சரியம் என்னும் நெய்யை விட்டு வளர்ப்பதற்கு எண்ணவுங் கூடாது. இயன்றவரையில், ஆண்டவனுடைய துணையை முன்வைத்து, இருதிறத்தாரையும் சமாதானப் படுத்தி, அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லாத வழியையே தேட வேண்டும்.

மன்னனைக் காண்பது திருமாலைக் காண்பதற்கு ஒப்பாகும் என்று நமது பெரியோர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அரசன் அமலனுடைய அம்சமாகும். அவன் ஏற்படுத்தியுள்ள அறமன்றங்கள் ஆண்டவனுடைய ஆணையை உலகிலே நிலைநிறுத்துவதற்காகவே நடந்து வருகின்றன என்பது சுவாமிகளுக்குத் தெரியாததல்ல. ஆனால் பெரும்பாலான மக்களோ இவ்வுண்மையறியாது, ஒருவரை யொருவர் அழித்துக்கொள்வதற்காகக் கோர்ட்டு கச்சேரிகளைப் பயன்படுத்திக்கொள்ளுவதைச் சுவாமிகள் கண்டார்கள். வருந்தினார்கள். அறக்கடலாகிய அந்தணன் நம் சச்சரவுகளையும் விவகாரங்களையும் மிகத்துல்லியமான முறையிலே தீர்த்து வைப்பதற்குக் காத்துக்கொண்டிருக்க, மக்கள் அவனை யணுகி, பகைமை யொழிந்து, அணுவளவும் பிசகாத அறமுடிவைப் பெறக் கூடாதா என்று சுவாமிகள் இத் திட்டத்தை வகுத்தார்கள். இத் திட்டத்தால், உடையவனிடம் உறுதியை வளர்த்துக்கொள்ள மேலும் ஒரு வழி காட்டினார்கள்.

### ௬. இறந்தவருக்கு இரங்காமை.

வினையை அநுபவித்துத் தீர்த்து அறியாமை நீங்கப் பெறுவதற்காகவே உயிருக்கு உடல் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. எவ்வளவு வினையை நுகர்ந்து முடிக்கக் கருதி எந்தையினாலே ஓர் உயிருக்கு, ஒரு தேகம் தரப்பெற்றதோ, அவ்வளவு வினையும் நுகர்ந்து முடிந்த பின், ஒரு விநாடிகூட அச்சடலத்தில் அவ்வுயிர்

தங்கி யிருக்காது. இவ்வாறு வினையின் செயலாக நம்மைச் சேர்ந் தார்க்கு மரணம் நேர்கின்ற காலத்திலே, நாம் வருந்துவதால் என்ன பயன் என்று சுவாமிகள் கூறுவார்கள். ஒவ்வொரு உயிருக்கும், எவ்வெக்காலத்தில் எது எது செய்தால், நன்மையாக இருக்கும் என்று கூர்ந்து அறிந்து, வேண்டிய வேண்டிய காலத்தே செய்து வரும் பரம காருண்ய மூர்த்தியாகிய உடையவனின் கட்டளையாக உயிர்கள் இறக்கும்போது, அதற்காக வருந்தலானது, கடவுளின் அற நேர்மையையும், அருள் தன்மையையும், மறந்துவிடுவதற்கு ஒப் பாகும். எனவே, சுவாமிகள் இறந்தவருக்கு இரங்கலாகாது என்று சட்டம் செய்ததனுடைய உண்மை விளங்கும்.

## vi ஞான நிஷ்டை.

### க. நிஷ்டையின் அவசியம்.

சுவாமிகளது சட்டத்திலே, நிஷ்டை கூடுவது என்பது மிக் முக்கியமானதொரு பகுதியாகும். ஆனால், சட்டத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் சேர்ந்த உடனேயே, நிஷ்டையை அனுஷ்டிக்கும் படி சுவாமிகள் திட்டம் செய்ததாகத் தெரியவில்லை. சட்ட அனுஷ் டானத்திலே மிக்க ஊக்கம் வைத்திருந்த சில அடியார்களைச் சுவாமிகளே தேர்ந்தெடுத்து, நிஷ்டை அமரும்படி ஏற்பாடு செய் திருக்கிறார்கள். ஆனால் சட்டத்தை ஏற்று நடக்கும் ஒவ்வொரு வருமே, படிப்படியாக மற்ற திட்டங்களைக் கையாண்டு வந்து, முடி வாக, நிஷ்டையையும் மேற்கொள்ள வேண்டும் என்பது சுவாமி களது கட்டளை.

சட்ட அனுஷ்டானமான்து, நித்திய நிஷ்டை இல்லாமல் பூரணம் அடைந்ததாகக் கொள்ளக்கூடாது. சட்டத்தை ஏற்கும் எவரும் தொடக்கத்தில் இல்லாவிட்டாலும், போகப் போகவாவது, கட்டாயம் நிஷ்டைகூடும் மிக முக்கியமான வழக்கத்தை ஏற்று நடக்காமல் இருக்கலாகாது என்பதுதான் சுவாமிகளது எண்ணம் என்று திட்டமாகச் சொல்லலாம். சட்டத்தின் மற்றப் பகுதிகளைச் சரிவர அனுஷ்டிப்பதற்கும் சட்டத்தின் முழுப்பயனைப் பெறுவதற் கும் நிஷ்டையானது இன்றியமையாத பெருந்துணையாயிருப்பதைக் கூர்ந்து கவனிக்கும்போது, வேறு வகையாகச் சொல்லுவதற்கில்லை.

### உ. கூடும் நேரம்.

தினந்தவறாமல் நிஷ்டை கூடவேண்டும் என்று சுவாமிகள் கட்டளை செய்திருக்கிறார்கள். கூடுவதற்குரிய நேரம் பெரும்பாலும் இரவேயாகும். சாப்பாட்டிற்குப் பிறகும், படுக்கப்போவதற்கு முன்பும் உள்ள சமயமே சாதாரணமாகக்கூடும் சமயம் ஆகும். அப்போது சுமார் இரண்டு மணி நேரமாவது நிஷ்டையில் இருக்க வேண்டும் என்று சுவாமிகள் சொல்லுவார்கள். எடுத்ததுமே இரண்டு மணி நேரம் அமர்வது கடினமாயிருந்தாலும், முதலில் அரைமணி நேரத்தில் தொடங்கி, சிறிது சிறிதாக நேரத்தை அதிகப்படுத்தி வருதல் வேண்டும். இரவு மாத்திரம் கூடுவது என்பதும், இரண்டு மணி நேரமே கூடுவது என்பதும், முடிவான நேர அளவுகள் ஆகமாட்டா.

விடியல் நீராடி வழிபாடு முடித்ததும் நிஷ்டைக்கு அமருதலும் சிறந்ததாகும். சுவாமிகளின் கட்டளையின்படி, காலை மத்தியானம் இரவு இம்மூன்று வேளையும் நிஷ்டை கூடும் அடியார்களும் இருக்கின்றனர். மூன்று முறைக்கு மேல், நினைத்த போதெல்லாம் நிஷ்டை அமர்வதும் இன்னும் உயர்ந்த முறையாகும். எக்காலமும் இடைவிடாது நிஷ்டையில் இருந்து வருவதே முடிவான முத்தி நிலையாகும்.

### ௩. அமரும் முறை

நிஷ்டையை இந்த முறையாகத் தான் கூடவேண்டும் என்று, சுவாமிகள் அடியவர்களுக்கு நேரே காட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். நோக்கி உட்காரவேண்டிய திசையைப்பற்றியாவது, அடியில இட்டுக்கொள்ளவேண்டிய ஆசனத்தைப்பற்றியாவது, சுவாமிகள் ஏதும் கட்டுப்பாடுகள் செய்யவில்லை. தனியாக இருக்கக்கூடிய இடம் நிஷ்டைக்குப் பொருத்தமான இடமாகும். சாதாரணமாகச் சப்பளம்இட்டு உட்காருகின்ற வகையிலேயே நிஷ்டைக்கும் உட்கார வேண்டும். யோக நூல்களிலே சொல்லப் பெற்ற பலவித யோக ஆசனங்களில் கடுமையான எதையும் சுவாமிகள் கையாளச சொல்லவில்லை. சகஜமாக அமர்ந்து நிஷ்டை செய்வதனாலே, இந்நிஷ்டையைச சகஜ நிஷ்டை யென்னலாம்.

சுவாமிகளை அவ்வாறு அமர்ந்து காட்டியிருக்கிறார்கள். எல்லோருக்கும் அம்முறை தெரியும் பொருட்டு, அந்நிலையில் தம்மைப் படம் எடுக்கவும் இசைந்தார்கள்; எவ்வளவோ வேண்டுகோளின் பேரில் இணங்கினார்கள். அப்படமே இந்நூலின் முகப்பிலே இருப்பதாகும். அடியவர்களுடைய வேண்டுகோளுக்கு இரங்கி உற்சவ மூர்த்தமாக அமர்ந்திருப்பதும் நிஷ்டைக்குரிய நிலைதான். சுவாமிகளை எத்தனையோ மற்ற நிலையிலேயெல்லாம் படம் எடுக்க வேண்டும் என்று அடியவர்கள் முயன்ற முயற்சி எதுவும் பயன் படாமல் போக, இந்நிஷ்டைநிலைப் படம் மாத்திரம் சுவாமிகளைத் தரிசிக்கும் பேறுபெறாத எல்லோருக்குங்கூட கிடைக்கும்படி சுவாமிகள் இசைந்ததின் அருட் குறிப்பு உன்னற்பாலது. நிஷ்டை கூடும் அடியார்களுக்கு பயன்தர வேண்டும் என்னும் அன்பு கனிந்த எண்ணந்தான், அவ்வொரு நிலைப் படமாவது நமக்குக் கிட்டும்படி வாய்த்ததற்குக் காரணம் என்று நன்கு அறிந்து கொள்ளலாம்.

உட்காருவது இப்படியாக, உள்ளம் உடையவனிடம் பதிந்து இருத்தல் வேண்டும் என்று சுவாமிகள் கூறுவார்கள். தேர்ந்த அடியார்களைத் தனியிடத்திலே வரிசை வரிசையாக நிமிர்ந்து உட்காரச் செய்து கண்களை மூடிக்கொள்ளச் சொல்லி, ஒவ்வொருவர் சிரசின்மீதும் சில நிமிஷம் சுவாமிகள் தமது வலது திருக்கரத்தை வைத்து, அநுக்கிரகம் செய்வதுவழக்கம். பிறகு ஒருமணி அல்லது இரண்டுமணிநேரம் வரையில் ஒவ்வொருவரும் மெய்ம்மறந்து, யான் எனது என்றவை அற்ற ஆனந்தமான நிலையிலே, இருப்பது வழக்கமாம். இவ்வாறு சுவாமிகளது திருக்கரத்தால் தீண்டப்பெற்ற அடியவர்கள் பலர், இன்றும் இவ்வித ஆனந்த நிலையைத் தரும் நிஷ்டையைக்கூடி இன்புற்று வருகிறார்கள்.

நிஷ்டையில் அமரும்போது ஆண்டவனை அகத்தில் பதிய வைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்ற சுவாமிகளது கட்டளையை அடியவர்கள் சிறிது மாற்றி ஏற்றுக்கொண்டிருப்பதாக வற்படுகிறது. "ஆண்டவனை அறிந்து அமைத்துக்கொள்வது எப்படி? கண்ணெதிரில் காணும் சுவாமிகளே நமக்குக் கடவுள்" என்று எண்ணிச் சுவாமி

களுடைய தெய்வத் திருவுருவத்தையே உள்ளத்திலே நெகிழாது பற்றி யமர்வதாகத் தெரிகிறது. நிஷ்டை நேரத்தில் இந்த இந்த உருவந்தான் மனதில் பதித்தற்கு உரியது, இவை இவை ஆகா, என்று சுவாமிகள் கட்டுப்படுத்தி வைத்ததாக ஏற்படவில்லை. மனம் ஒருவழிப்பட்டு நிலைப்பதற்கு உரிய எந்தத் திருவுருவமும் நல்லதே. இச் சட்டத்தையும், இச சட்டத்தின் பகுதியாகிய இந் நிஷ்டையையும் கற்பித்த குருநாதரது திருவுருவத்தை மனதில் அமைத்து நிஷ்டை அமர்வதில் குறையென்ன இருக்கின்றது? மிகச் சிறந்த முறையேயன்றோ?

**ச. முறையிடும் சமயம்**

ஆண்டவனை அகத்து எண்ணி நிஷ்டையமர்கின்ற இச்சமயமே, அவனிடத்தில் நமது குறைகளையெல்லாம் முறையிடும் தக்க சமயமாகும். சட்டத்தை அனுஷ்டிப்பதிலே நமக்கு நேரக்கூடிய பல வித இடைஞ்சல்கள், இயலாமைகள், வாழ்க்கையிலே நமக்கு ஏற்படும் குறைகள், எல்லாவற்றையும், நேர்முகமாக உடையவனிடத்திலே விண்ணப்பித்து வழிகாட்டும்படி அழுவதற்கு ஏற்ற நல்வேளை இதுவேயாகும். இவ்வாறு விண்ணப்பிப்பதைச் சுவாமிகள், "தாக்கல் செய்வது, தாக்கல் செய்வது" என்று சொல்லுவார்கள்.

வாழ்க்கையில் சிக்கலான விஷயங்கள் ஏற்பட்டு என்ன செய்வதெனத் தெரியாது மக்கள் திகைத்துச் சுவாமிகளிடம் வந்து முறையிடுகின்ற காலத்திலே, சுவாமிகள் மிக்க அருளோடும், தேர்ந்த அடியவர் ஒருவரை அருகு அழைத்து, "இது விஷயம் உடையவனிடம் தாக்கல் கொடுத்து, உடையவன் கணக்கு என்ன என்று அறிந்து சொல்லட்டும்" என்று கட்டளை யிடுவது வழக்கம். அப்படியே அவ்வடியவர் அதுபற்றிய விவரம்கேட்டறிந்து, நிஷ்டையில் அமர்ந்து, அது விஷயம் உடையவனிடம் 'தாக்கல்' கொடுத்து, "உடையவனது திருக்குறிப்பு இந்தவிதமாக இருக்கின்றதாக ஏற்படுகிறது" என்று ஏற்பட்டவிதத்தைச சொல்லுவது வழக்கம்.

**ரு. காணும் காட்சி.**

ஆண்டவனை ஆழ்ந்து எண்ணி அமர்ந்தபின், முறையிட்டுக் கொள்ளவேண்டிய குறைகளையெல்லாம் முறையிட்டுக் கொண்டே

உள்ளம் உருகிச் செல்லும்போது, தம்மை மறந்து, தூங்காமல் தூங்குகின்ற நிலை தானே வரும். இந்நிலை, சுவாமிகளாலேயே நிஷ்டையில் பழக்கப்பெற்ற அடியவர்களுக்கே யல்லாமல், மற்றவர்களுக்குங் கூட வாய்க்கக்கூடிய நிலையாகும். இந்நிலையைப் பெறுவதற்கு, மேலே குறித்த ஆண்டவன் தியானத்தைத் தவிர வேறு முயற்சி ஏதும்தேவையில்லை. சகஜமாக, நிஷ்டை அமர்பவரையும் அறியாது, தானே வந்து இந்நிலை கூடுகிறது. இது உயிருக்கும் உடலுக்கும் இன்பம் தருகின்ற ஓர் ஒப்பற்ற நிலையாகும்.

இந்நிலை கலைகின்ற நேரத்திலே, சில காட்சிகள் தோன்றுகின்றன. தியானிக்கும் திருத்தோற்றம் நேராக வந்து, அப்போதைக்கு அவசியமான சில புத்திமதிகளைக் கூறுவது போலவும், யாரோ ஒரு பெரியார் வந்து பேசுவது போலவும், தோன்றும். இன்னும் ஏதேதோவிதமான காட்சிகளும் நடவடிக்கைகளும் கண் முன்னே தோற்றமளிக்கும். அப்போது கூறப்பெறும்பொருள்களும், காணப்பெறும் காட்சிகளும் அடுத்தபடி வாழ்க்கையில் நடப்பனவற்றைப் பற்றியிருக்கின்றன என்பதை அநுபவத்தில் தெரிந்து கொள்ளலாம். எவ்வளவு அருமையாக ஆண்டவன் நமக்கு வழி காட்டிக்கொண்டு செல்கின்றான் என்பதை யறிந்து உள்ளம் பூரிக்க வேண்டியவர்களாகிறோம்.

மற்ற நிஷ்டைகள் போலாது, இது இறைவன் உயிர்களுக்கு இரங்கிக் காட்டும் உலகியல் ஞானமும், உண்மை நிலை ஞானமும் கூட்டுவிக்கின்ற ஒருநிஷ்டையாக இருத்தலின் இதனை ஞானநிஷ்டை என்று சொல்லலாயிற்று.

## 6. சட்டம் மீறினால் தண்டனை.

### i. உடலில் உபாதி.

சட்டம் தவறலாகாது என்ற உறுதியோடிருந்தும், தன்னையும் கடந்த காரணம் ஏற்பட்டு, ஒருவர்க்குச் சட்டத்தின்படி நடக்க இயலாமல் போனால் அது சட்டம் மீறுவதாகாது.

ஆனால், சட்டத்தை மேற்கொண்ட ஒருவர் வேணுமென்றே சட்டத்தை மீறி நடந்தாலும், மறந்து தவறி நடந்து விட்டாலும்,

அறிவுறுத்தியும், நினைப்பூட்டியும், திருத்துவது உடையவனது கடமையாக இருக்கின்றது. மறதியும் அசிரத்தையும் காரணமாக சட்டத்தில் நட என்று சொல்லியபடி நடவாமலோ, நடவாதே என்று சொல்லியபடி நடந்தோ, விட்டால், ஆண்டவன் கருணையினால், உடலில் ஏதாவதொரு பாகத்தில் உபாதியுண்டாகும். கையைத்திருப்ப முடியாமலோ விரலை மடக்க முடியாமலோ, மற்று வேறு விதங்களிலோ இடர்ப்பாடு ஏற்படும். வயிற்றுக் கோளாறுகள் உண்டாவதும் உண்டு.

உணவிலோ, பாதுகாப்பு முறையிலோ, ஏதாவது குறை பாடுகள் இருந்தால் தான், சாதாரணமாக, இவ்வாறு உடல் நலம் கெடுவது உலக வழக்கம். அப்படி ஏதும் இல்லாமல் இருக்கத் திடீரென உடல் நல நிலை கெடுமானால், உடனே, சட்ட அனுஷ்டானத்தில் தான் தவறு ஏதோ நேர்ந்திருக்க வேண்டுமென்று கண்டு கொள்ள வேண்டும்.

ii வேறு பலதடைகள்.

எதிர்பாராத நேரத்திலே, எதிர்பாராத இடத்திலே தேள் கொட்டி விடும். இது சாதாரணமாக நேருவதொன்று. மற்ற ஜந்துக்களாலும், மனிதர்களாலும், இடைஞ்சல் ஏற்படவும் கூடும். நிஷ்டையிலே பல காட்சிகள் தோன்றி, செய்வதற்கு எண்ணுகின்ற தவற்றைச் செய்யவொட்டாதபடி தடுத்தும், செய்து விட்ட குற்றத்திற்கு வருந்தச் செய்து மேலும் அக்குற்றத்தைப் பண்ணாமல் படிக்கு வழிகாட்டியும் வரும். நிஷ்டையிலே தேர்ச்சி பெறாதவர்கட்குக் கனவுகளிலே தோற்றங்கள் உண்டாகி, இவ்வாறு தடுத்தும் வழி காட்டியும் வருவதுண்டு.

iii மீறிய செயல் கைகூடாமை.

இப்படியல்லாமல், சட்டத்தை மீறிச் செய்கின்ற காரியம் கைகூடாமல் போகவைத்து, அவ்வகையாக மேலும் அத்தகைய குற்றத்தைச் செய்யாதபடி தடுத்தாட்கொள்வதும் உடையவனுடைய பெருமையாகும். சட்டம் தவறி முயல்கின்றோமே என்பதை மறந்தோ, இவ்வொரு முறை தவறினால் என்னகுறை என்று எண்ணியோ, சட்ட அனுஷ்டானம் பிசகி நடப்பவனுக்கு, அவனுடைய

சிறந்த முயற்சியெல்லாம் பாழ்பட, சிறிதும் எதிர்பாராதபடி, செய்ய எடுத்த வேலை கைகூடாமல் போகுமானல், மற்ற வகையிலே அவனுக்கு புத்தி வருவதைக் காட்டிலும் இவ்வகையிலே கண்டிப்பாக நல்லறிவு உண்டாய்விடும்.

## 7. பரிகாரமும் நிவர்த்தியும்.

சட்டத்தை மீறியதற்காக ஏற்படும் தண்டனைகட்கும், மற்ற தண்டனைகட்கும் முக்கிய வேறுபாடு இரண்டு உண்டு. மற்ற தண்டனைகள் ஆரம்பத்தில் இலேசாகத்தோன்றி வரவர வளர்ந்து சிறிது சிறிதாக நீங்கும்; அவற்றைக்குறித்த காலம் வரையில் அநுபவித்தே தீரவேண்டும். ஆனல் சட்ட தண்டனையோ அப்படியில்லை. தொடங்கும்போதே தாங்க முடியாததாகத் தீவிரமாகத் தொடங்கும்; குற்றத்தை உணர்ந்ததுமே தண்டனை பட்டெனப் பாதியளவு நீங்கி, ஆண்டவனிடம் விண்ணப்பித்து வழிபாடு செய்ததுமே முற்றும் பற்றறும். சட்ட தண்டனையின் நோக்கமே, தடுத்தாட் கொள்ளும் நோக்கந்தான். தப்பு செய்கின்றவனை மேலும் மேலும் தப்புசெய்து கொண்டே போகும்படி விட்டு விட்டுப் பிறகு பெருங்கேட்டிற்கு உள்ளாக்க உடையவன் எண்ணமாட்டான். அப்போதைக்கப்போது செய்ய எண்ணுகின்றவும், செய்கின்றவுமான குற்றங்களை நினைத்து வருந்தச்செய்து மேலும் குற்றங்களைச் செய்யவிடாமல் காத்து வருவது கடவுளுடைய கருணையின் செயலாகும்.

திடீரென ஒரு தண்டனை நேருமானல், உடனே இது எதற்காக இருக்கலாம் என்று சிந்தித்து, “இன்ன குற்றம் செய்தேன், அதற்காகத்தான், உணர்ச்சி யுண்டாக்கி உய்விக்க, உடையவன் இத் தண்டனையைத் தந்தான்” என்று உணர்ந்து வருந்தவேண்டும் என்பது சுவாமிகளது கட்டளை. இக்குற்றத்திற்காகவே இத்தண்டனை வந்தது என்னும் உண்மையை அறியவேண்டுமானல், மேலும் அக் குற்றத்தைச் செய்யாதிருக்கும் உறுதிபெற வேண்டுமானல், ஆலயத்திலுள்ள ஆண்டவன் சன்னிதியையோ, வீட்டிலேயே அமைத்து வழிபடும் உடையவன் உருவத்தையோ இத்தனை முறை வலம் வந்ததும் நீங்கிவிடுதல் வேண்டும் என்ற வகையான தீர்மானம் செய்து

கொள்ளலாம். அப்படியே வலம் வந்ததும் கதுமென மிக ஆச்சரிய மாக அத்தண்டனை நீங்கிவிடும். உடனே "ஆம் இக்குற்றத்திற்கா கத்தான் இத்தண்டனை வந்தது. இனி இதைச் செய்யேன்" என்று உறுதி செய்து கொள்ளலாகும். செய்த குற்றத்தை யுணரவும், மேலும் குற்றம் செய்யாமலிருக்கவும் வழி தேடுகின்ற முறை இது வாதலின், இது பிரார்த்தனை செய்து கொள்வதாகாது. தேகத்தின் மீது வைத்த பற்றினாலோ உலகப்பொருள்களின்மீது வைத்த ஆசையினாலோ, உலகத்தார் செய்து கொள்ளும் பிரார்த்தனைக்கும், இம்முறைக்கும் பெரிதும் வேறுபாடு இருப்பதை அறிஞர்கள் அறிவார்கள்.

## 8 சட்டத்தின் பயன்

### i வேலைக்கு ஏற்ற கூலி.

சட்டத்தை இவ்வளவு திட்டமாக வகுத்து வைத்த சுவாமி களுக்கு, உலகிலுள்ள ஒவ்வொரு உயிரும் இதனை முழுதும் அனுஷ் டித்து முழுப்பயன் பெற வேண்டும் என்பதுதான் திருவுள்ளம். ஆனால் அவரவர்களது வினைப்பயனும் பிறவும் இடை நின்று, அவ் வாறு எல்லோரும் இச்சட்டத்தின் பகுதிகள் அனைத்தையும், வகுத் தது வகுத்த வண்ணமே, கையாள முடியாதபடித் தடுப்பதைச் சுவாமிகள் அறிவார்கள். ஆகவே அவரவர்களது வினைப்பயனுக்கு ஏற்ப, அவரவர்களது உண்மையான முயற்சிக்கு முடிந்த வரையில், சட்டத்தை அனுஷ்டிப்பதைப்பற்றி சுவாமிகள் தடையேதும் கூறார் கள். அச்சிறு அளவாவது கையாள முன்வரும் ஒருவர், உடைய வனிடம் உறுதியிருக்குமானால், சிறிது சிறிதாக, சட்டத்தின் அங் கங்கள் அத்தனையையும் மேற்கொண்டு விடுவார் என்பது சுவாமி களது நம்பிக்கை.

"சட்டத்தை இம்மட்டுதான் அடியேன் அனுஷ்டிக்க முடியும், சுவாமிகளே! தேவரீர் ஏழையின் மீது கிருபைபாலித்துத்தான் ஆக வேண்டும். சட்டத்தை முழுதும் திட்டமாகக் கையாளாதவன் எனக் கைவிட்டுவிடக் கூடாது குருநாதா!" என்று சுவாமிகளிடம் சில அடியவர்கள் நேரே விண்ணப்பித்துக் கொண்டதும் உண்டு.

சுவாமிகள் சிறிதும் அன்னவர் பால் அருவருப்பாவது, சினம் பிறவாவது கொள்ளாமல், அன்போடு அருகழைத்து, "அப்படியே செய்யட்டும். உத்தியோகத்திற் கேற்ற சம்பளம் உண்டு. அன்பு மாறாது இருந்து வந்தால் அதுவே போதும். மேற்கொண்டு நடத்த வேண்டிய வற்றை யெல்லாம் அது ஒன்றே பையப் பைய நடத்தி வைத்துவிடும்" என்று இனிய வாசகம் கூறுவது இயல்பு.

சட்டத்தில் வகுத்தபடி விடியல் 4-30 மணிக்குத் தண்ணீரில் முழுக முடியாது போய், நேரந் தாழ்த்து ஐந்து மணிக்கோ, ஆறுக்கோ, இன்னமும் தள்ளியோ நீராடுபவர்களைப்பற்றி சுவாமிகள் வருத்தங் கொள்வதில்லை. "சாமிச சட்டத்திலே, வேலைக்கு ஏற்ற கூலிஉண்டு," என்று புன்னகை புரிந்து சொல்வது வழக்கம். சட்டத்தின் முழுத் திட்டத்தையும் அனுஷ்டிப்பவர்க்கு முழுப் பயன் கைகூடுவது நிச்சயம் போல, சட்டத்தைச் சிறிது அளவு அனுஷ்டிப்பவர்க்கு இப்பிறவியிலேயே பூரணமாகச் சட்டத்தைக் கையாளும் பேறும, அதன் பலனாய் இம்மை மறுமைப் பேரின்பங் களும் வாய்த்து விடுமா என்று உறுதியாகச் சொல்ல இயலாது. ஆன்மாக்களின் பக்குவத்திற்கு ஏற்றபடி இந்த ஜன்மத்திலேயே, முதலில் சிறிது அளவாகத் தொடங்கிய சட்டம், மெல்ல மெல்லவோ, விரைவாகவோ பூரணமாகி, இம்மையில் தூய இன்பத்தையும், மறுமையிற் பிறவாத பேரின்ப முத்தியையும் கூட்டுவித்தல் கூடும்; அல்லது அடுத்த பிறவியிலோ, இன்னும் பல ஜன்மங்களிலேயோ இம் முழுப்பலனை அடைவித்தலும் கூடும். ஆனால் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் உண்டு என்பது மாத்திரம் உறுதி.

## ii தூய நல்வாழ்வு

சட்டத்திலே சேர்ந்து, ஒழுங்காக அனுஷ்டித்து வருபவர்கள் முதலில் அவர்கள் குடும்பத்திற்கே விளக்கமாய் விளங்குவார்கள். நாட்செல நாட்செல அவர்கள் வாழும் ஊருக்கே, சுற்றுப்புறத் திற்கே மணி விளக்காய்த் திகழ்வார்கள். நாடு மொத்தத்தினுக் குமே ஒளி வளர்சசோதியாய் மிளிர்தருவார்கள். சட்டத்தைச் சரிவரப் பற்றாத மற்றவர்கட்கும், சட்டத்திலே சேராத ஏனையவர் கட்கும், வழிகாட்டும் வயங்கொளியாய் பிரகாசிப்பார்கள். எல்

லோரும், எத்தகைய இடுக்கண் வந்தாலும், திடுக்கெனச் சென்று விளக்கங் கோரும் விழுமிய பொருளாய் விளங்கிடுவார்கள்.

மற்றோருக்கெல்லாம் மணி விளக்காய் வழி விளக்கும் அவர்கள், அவர்களது வாழ்க்கையிலே எவ்வித சந்தேகங்களும் பயங்களும் இல்லாமல், தெளிவான சாந்தம் நிறைந்த சிந்தையோடு, ஆண்டவன் அருள் வெள்ளத்திலே ஆழ்ந்தவர்களாய், பிறவா நெறியைப் பெறுவது உறுதி என்னும் உண்மை கண்டவர்களாய்ப், "பெற்ற சிற்றின் பமே,பேரின்பம் ஆம் அங்கே" என்னும் வாய்மையை யுணர்பவர்களாய், உடல் எடுத்ததின் இம்மைப் பயனை யெல்லாம் இவ்வுலகிலே பெற்றவர்களாய்த், தூய நல்வாழ்வு செய்து வருவார்கள் என்று எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

iii உடையவனிடம் உறுதி.

சுவாமிகளது சட்டத்தை முறையாக அனுஷ்டித்து வருவதால் வரும் பயன்களிலே மூன்றாவதும், மற்ற வகையிலே எல்லாம் எளிதிலே பெறக் கூடாததுமான பெரும் பொருள், உடையவனிடம் உலுக்கலாகாத உறுதியாகும். சட்டத்தின் ஒவ்வொரு பகுதியும் இவ்வுறுதியை உயிராக வைத்துத்தான் செய்யப் பெற்றிருக்கின்றது. சட்டத்தைச் சரிவரக் கையாள்பவர் ஆண்டவன் பால் அளவிடலாகாத பற்று கொண்டு விடுவார்கள் என்பது மலையின் மேலிட்ட விளக்காகும். உலகத்தில் தமக்கும் பிறர்க்கும் நேரக்கூடிய எவ்வித இடர்ப்பாட்டிற்கும் துளியும் உளம் சலனம் உறார் என்பது திண்ணம்.

"மண் பாதலம் புக்கு, மால் கடன் மூடி மற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு, இருசுடர் வீழினும் அஞ்ச நெஞ்சே!"

என்றும்,

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
ஏமாப்போம், பிணியறியோம்"

என்றும்,

"வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன கழல் விடுவேனல்லேன்"

என்றும்,

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன கழல் தொழுதெழுவேன்"

என்றும்,

திருவருள் கைவந்த பெரியார்களெல்லாம் கொண்டிருந்ததும், எதுக்கும், எவர்க்கும் எள்ளளவும், அஞ்சாததும், தளராததுமான, உன்னத உள்ளம் சட்ட அனுஷ்டான முடையவர்கட்கு எளிதில் சொந்தமான பொருளாய் விடும். இப்பொருள் சொந்தமாய் விட்டால் இகத்திலோ பரத்திலோ உயிர்கள் பெற வேண்டிய வேறு பொருள் என்ன இருக்கிறது?

iv வழி காட்டும் வளமை.

சட்ட அனுஷ்டான முடையார், வாழ்க்கையிலே, தமக்கும் மற்றார்க்கும் வழிகாட்டுவதற்கென யாரையும் நத்த வேண்டுவதே யில்லை. "இது என்ன முட்டுப்பாடான நிலையாக வந்து நேர்ந்ததே இது சமயம் இப்படிச் செய்யலாமா அப்படிச் செய்யலாமா?" என்று சந்தேகித்து இடர்ப்பட்டு நிற்க வேண்டிய அவசியமே, சட்டத்திற் சேர்ந்தார்க்குச் சம்பவிக்காது. மற்றார்க்கு அத்தகைய சந்தர்ப்பங்கள் நேர்ந்து, தம்மிடம் வந்து விளக்கம் வேண்டினார்களானாலும், உடையவனிடம் அப்போதே 'தாக்கல்' கொடுத்து, 'இதுதான் தகுதியான வழி' என்று ஆண்டவன் அருள் அறிந்து அவர்களுக்குக் கூறிவிடுதல் கூடும்.

எல்லாம் வல்ல எந்தையின் இன்னருள் எவ்வளவு அற்புதமாக வாழ்க்கைக்கு வழிகாட்டி வருகின்றதென்பதை யுணர்ந்து, சட்ட அனுஷ்டானம் உடையவர் மட்டிலாத மகிழ்ச்சியடைவர். ஆண்டவன் கருணையை அகத்தில் எண்ணி அன்பால் உருகுவர். ஆனந்தத்தில் ஆழ்வர். வல்லவனால் வளமையுடன் வழிகாட்டப் பெறும் வழக்கம் கிட்டி விட்ட பிறகு, வாழ்க்கையிலே எவரால் தான் ஆகவேண்டுவது என்ன இருக்கின்றது?

சட்டத்தைத் எவ்வளவு தீவிரமாக, எத்துணைச் சத்தியமாக அனுஷ்டிக்கின்றோமோ, அத்துணைத் தெளிவாக அவ்வளவு உண்மையாகவே ஆண்டவனும் வழிகாட்டி வருவான். வேலைக்கு ஏற்ற கூலி என்று முன்னமே சொன்னபடி உடையவனை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு நம்புகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு விளக்கந் தந்து செல்வது அவனுடைய அறநெறியாக இருக்கின்றது. முழு வேலை செய்தால்தான் முழுக் கூலி உண்டென்பதையுணர்ந்து, சட்டத்தைப் பூரணமாக ஏற்று நடந்து வருவோமானால், அதன் பயனாகத் தூய நல்வாழ்வும், ஆண்டவன் பால் அசையாத அன்பும் வாய்க்கும். இவை வாய்த்து விட்டால், நாணித் தலைகுனிந்து நடக்க அறியாத நங்கையாகிய மணமகளை, அவளையாள வந்த அன்பின் மணமகன் கைத்தலம் பற்றி நித்திலப் பந்தருக்கு அழைத்துச்சென்று நித்திய மகிழ்ச்சி யளிப்பது போல உடையவன் நமது கையைப் பற்றிக் கொண்டு நமக்கு வழிகாட்டிச் சென்று, முத்தி யெனும் பேரின்பத்தைச் சத்தியமாய் அளிப்பான்.

## 9. சட்ட அனுபவம் இரகசியம்

சட்டத்தை எடுத்துக்கொண்டு நடந்துவரும் எவரும், பிறர் கண்டு பெருமை பாராட்டுவதற்காக, தான் சட்டத்தில் சேர்ந்திருப்பதாக வெளிப்படுத்திக் கொள்ளக்கூடாது. சட்டத்தை அனுஷ்டிப்பதிலே ஏற்படும் கஷ்டங்களையும், அக்கஷ்டங்களிலிருந்து ஆண்டவன் கரையேற்றி நாளுக்குநாள் மேன்மையடையும்படி வழிகாட்டிச் செல்கின்ற பெருமையையும், பிறரிடம் சொல்லிக் கொள்ளலாகாது. உடையவன் அருளாலே சட்டத்தில் உள்ளவருக்கும், அவர் வாயிலாக மற்றவர்கட்கும் அற்புதமாக ஏற்பட்டு வருகின்ற நலங்களையும் அவர் மற்றவர்களிடம் கூறிக்கொள்ளக் கூடாது. இப்படியெல்லாம் வெளிப்படுத்திக் கொள்வதால், தற்பெருமை தோன்றவும், வளரவும், உடையவன் கணக்கறிந்து நடக்கும் நெறியை, மூடிக்கொள்ளவும், கூடும் என்பது சுவாமிகளது அச்சம்.

ஆனால், நெருங்கிய அடியவர்கள் ஒருவருக்கொருவர் தம் தம் வாழ்க்கையை ஆண்டவன் அருமையாக நடத்திச்செல்லும் அற்புதத்

தைப்பற்றி, சொல்லிக்கொள்ளலாம் என்பது சுவாமிகள் கருத்து. அடியவர்களது ஆன்ம வளர்ச்சிக்கு இது பெருந்துணையாயிருக்கும் என்பது சுவாமிகளது நம்பிக்கை. அடியவர்கள் அடிக்கடி ஒருவரை யொருவர் சந்திக்கவேண்டும் என்றும், அளவளாவ வேண்டுமென்றும், சுவாமிகள் சொல்லுவார்கள். நேரே கண்டு கலந்து பேசும் நேரங்கள் சிலவாயிருந்தாலும், கடித மூலமாக இடைவிடாது கலந்து கொண்டேயிருத்தல் வேண்டுமென்பது சுவாமிகளது கட்டளை.

இவ்வாறு சட்ட அனுஷ்டானத்தின் வளர்ச்சிக்காக வேண்டி, சட்ட அனுஷ்டானத்தில் ஏற்படும் இரகசியங்களை அடியார்களிடமே யல்லாமல், மற்று அடியவர் ஆதற்கு உரியவர்களிடமும் தற்பெருமை யற்று இரகசியமாகவே சொல்லிக் கொள்ளலாமே தவிர, வேறு வகையாக அந்த இரகசியங்களை வெளியிடுதல் கூடாது என்பது தான் சுவாமிகளது கருத்து.

# VII

# அடியாரைத் தேர்தலும், அருளாலே ஆள்தலும்

## 1 ஆண்டவன் அருளை வழங்க அவா

**பொ**திகையிலே தனித் தவம் ஆற்றிக் காரணன் அருளைப் பூரணமாகப் பெற்று, இம்மை மறுமை நலங்களை உலகத்தார் இனிது அடைதற்கு உரிய வழிகளை வகுத்துக் கொண்ட சுவாமிகளுக்கு ஆண்டவன் அருளை, அவனருளால் அடைந்த சட்டத்தை, எங்கெங்கும் சென்று, எந்தையின் திருக்குறிப்பு இருந்தபடி வழங்குதல் வேண்டும் என்னும் வள்ளல் உள்ளம் ஏற்கனவே இருந்து வந்தது என்று முன்னமே அறிந்தோம். அவ்வுள்ளம் கடலெனப் பரந்து மடை திறந்து பாயலாயிற்று. இப்படி ஆனதும் அவனருளாலே நேர்ந்ததாகத்தான் இருக்கவேண்டும். உடையவனது திருவருளானது இந்தச் சுவாமிகள் இத்தகைய அவாவினைப் பூணாது போயிருப்பார்களானால், இறைவனது திருக்குறிப்பு நடத்தற்கு உரிய நல்துணையையும், அடியவரது நல்வினை பயனளிக்கின்ற பரமாசிரியனையும் எப்படிப் பெற்றதாக முடியும்?

## 2 அடியவரது ஆவல் நோக்கம்

சுவாமிகளை ஏற்கனவே தரிசித்திருந்த அடியவர்கள், சுவாமிகளைக் காணாது ஏங்கியிருந்தார்கள். என்று சேவை கிட்டுமோ என எதிர்பார்த்துவந்தார்கள். சுவாமிகளைக்கண்டாவது, அவர்களைப்பற்றி ஏதும் கேட்டாவது இராத பலகனிந்த உள்ளங்களும், 'உடையவன் என்று அருள் பாலிக்கப் போகின்றான். எப்போது குருநாதனாக வந்து ஆட்கொள்ளப் போகின்றான்' என ஏக்கங்கொண்டு, நாட்டின் பல பாகங்களிலே, நாட்ட முற்று இருந்து வந்தன. சுவாமிகள் அடியவரை ஆட்கொள்ளும் சமயம் நெருங்கி வர நெருங்கி வர, அருணோதய நேரத்தில் சூரியன் வரவு அருகுள்ளது என அலரச்சித்தமுறும் கமலங்கள் போல, அவர்கள் எல்லோரது ஆன்மாக்களும் தம்மையும் அறியாத செம்மை பூணத் தொடங்கின.

## 3 அருள் செலுத்தச் செல்லல்

ஆண்டவன் அருளை எல்லோருக்கும் வழங்கவேண்டும் என்னும் அவா சுவாமிகளுக்கு அடர்ந்து வந்தாலும், சுவாமிகள் இன்ன

இடத்திற்குத்தான் செல்ல வேண்டும், இன்னாரைத்தான் காண வேண்டும், இன்னாருக்குத்தான் ஆண்டவன் அருளை வழங்கி ஆட்கொள்ள வேண்டும் என்று ஏதும் சங்கல்பம் வைத்துக்கொள்ள வில்லை. தம் செயல் அற்று, எல்லாம் உடையவன் செயலாகவே, சுவாமிகள் இருந்தும், சென்றும், பேசியும், நடந்தும், வந்தார்கள். ஜீவன் முக்தர்களுடைய நிலை அதுவேயாகும். ஆண்டவன் அருள் எங்கெங்குச் செலுத்தினதோ அங்கங்குச் சென்றார்கள், யார் யாரைக் காண வைத்ததோ அவரவர்களைக் கண்டார்கள், என்னென்ன செய்யச் செய்ததோ அதனைச் செய்தார்கள்.

முதலிலே, ஏற்கனவே பழக்கமாயிருந்த இடங்களாகிய தூத் துக்குடி, கொக்கரகுளம், சாத்தூர், மதுரை முதலிய இடங்களி லுள்ள அடியார்களை ஆட்கொள்ளத் திருவருள் செலுத்தியது. சுவாமிகளைக் கண்டு அழைத்துப் போய், அவர்களுக்கு முன் செய்த அபசாரத்தை மன்னித்தருள வேண்டிக்கொண்டு, அவர் களுடைய அருளினால் தங்களுக்கு ஏற்பட்டிருந்த குறைகளை நீக்கிக் கொள்ளவேண்டும் என்று தேடிக் கொண்டிருந்த இரெட்டி யப்பட்டி மக்கள், சுவாமிகள் சுற்றுப் பக்கங்களில் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு, ஓடிவந்து தம் ஊருக்கு வரவேற்றார்கள். உடைய வன் கணக்கும் அவ்வூருக்குச் செல்லவேண்டும் என்று இருந்ததைச் சுவாமிகள் உன்னி அங்குச் சென்றார்கள். பின்னர் அம்பா சமுத் திரம் பாபவிநாசம் போய், அதற்கு மேற்கு மலையோரத்திலுள்ள சொரியின் முத்தையன் கோயிலுக்குச் செல்பவர்கள் போலச் சென்று, மலைமேலேயே மறைந்து விட்டார்கள். உடன் சென்ற கொக்கரகுளம் மாப்பிள்ளை ஆசாரி குடும்பத்தாரும் பிற சிலஅடியார் களும் சுவாமிகளைக் காணாது வருந்தி திரும்ப வேண்டியதாயிற்று.

சுவாமிகள் பிற்பாடு அடியவர்களிடத்திலே குறிப்பாகக் கூறி யதிலிருந்து, சொரியன் முத்தையன் கோயிலைக் காணச் சென்றவர் கள், பொதிகை மலையின் மேற்குச்சாரல் வரையில் போய் திருவனந்த புரத்தை யடைந்து, அங்கிருந்து மைசூர், பெங்களூர், பல்லாரி, மலபார் ஆலப்பிழை, குடகு, மடிக்கரை, பம்பாய், முதலிய இடங் களைக் கடந்து, காசிமாநகர், கல்கத்தா இவைகண்டு, கோதாவரி

கிருஷ்ணை இந்நாடுகளைப் பார்த்துக் கொண்டு, மறுபடியும் தென் தமிழ்நாடு வந்து சேர்ந்தார்கள். தமிழ் நாட்டிலே சுவாமிகள் சென்ற இடங்களின் பட்டியை வரைவதென்றால் குறைந்தது பதினைந்து பக்கங்களாவது வேண்டியிருக்கும். அவற்றை யெல்லாம் வரைவதைத் தவிர்த்து, ஆண்டவன் அருளை விளக்கச் சுவாமிகள் அற்புதங்கள் நடத்திய சில இடங்களை மாத்திரம் பின்னர் குறிக்க லாகும்.

## 4. அடியவரைத் தேரும் அருமை.

ஆண்டவனுடைய அருள் செலுத்திய வழியே சுவாமிகள் பல ஊருக்குச்சென்று, பல அடியார்களை ஆட்கொண்டதிலே அதிசயிக் கத்தக்க சில விஷயங்கள் காணக் கிடைக்கின்றன. சுவாமிகளாலே ஆளப் பெறவேண்டும் என்றே ஜன்மம் எடுத்திருந்த அடியவர்கள் எல்லோரும் ஒரே ஊரிலேயோ, அடுத்த அடுத்த பல ஊர்களி லேயோ இருந்துவிடவில்லை. மூலைக்கு ஒருவராக, நாட்டினுடைய மூலை முடுக்குகளிலெல்லாம் இருந்திருக்கிறார்கள். குருநாதர் என்று வருவார், என்று வருவார் என, அவாவுடன் எதிர்பார்த்தபடி, கனிந்த உள்ளத்தோடு, அவரவர்களுடைய குக்கிராமங்களிலேயோ நகரங்களிலேயோ அவர்களது உள்ளத்தின் நிலைமையை யாரும் அறியாதபடி வதிந்து வந்திருக்கிறார்கள்.

உடையவன் இவர்களுடைய கணக்கையெல்லாம் புள்ளியெடுத்து, சுவாமிகளுடைய திருவுள்ளத்திலே அமைத்து வைத்துவிட்டிருக்க வேண்டும். எவ்வெவருக்கு எவ்வெக்காலத்தில் தரிசனம் கிட்ட வேண்டும் என்பதையும் குறிப்பித்து வைத்திருக்கவேண்டும். அந்தத் திட்டத்தின்படி சுவாமிகள் இன்றைக்கு ஓர் ஊருக்குச் செல்வார்கள். அவ்வூரில் ஆயிரக் கணக்கான மக்கள் வசித்தாலும் அவர்கள் எல்லோருக்கும் சுவாமிகள்பால் பற்று ஏற்படாது. முன் பின் அறியாத ஒரு வீட்டுக்குப் போவார்கள். அவ்வீட்டிலுள்ள பலரும் சுவாமிகளிடத்திலே நெருங்கி அன்புகொள்ளமாட்டார்கள். ஒருவரோ இருவரோதான், உடையவன்கணக்கின்படி, பலநாள் காண அவாக்கொண்டிருந்த அன்பின்பெரியார் வந்ததுபோல அன்பு ஊற்றெ டுக்கச், சுவாமிகளது திருவடியைத் தேனைப்பற்றிய ஈக்களைப்போல

இறுகப்பற்றிக் கொள்வார்கள். இவர்களை ஆளத்தான் சுவாமிகள் வந்ததுமாகும். சுவாமிகளது திருநயனங்களாலேயே அவர்களது முன்னை வினையின் முடிச்சு அறுத்து, மேலும் வினை சூழாதிருக்கச் சட்ட அனுஷ்டானத்தை உபதேசிப்பார்கள். அவர்களும், நெடுங் காலம் எதிர்பார்த்திருந்த கருந்தனம் கைக்கு எட்டியதுபோல, சுவாமிகளது உபதேசத்தை உச்சிமேல் ஏற்று அதுமுதல் அதன் வண்ணமே நடந்துவரத் தொடங்கிவிடுவார்கள்.

சுவாமிகள் கதுமென விடைபெற்று, அவ்வூரிலுள்ள மற்று ருக்கு யார் வந்தது யார் போனது என்பதும் தெரியாதிருக்க, அவ் விடத்தைவிட்டு, வழியில் எளிதில் தங்கிக் காணக்கூடிய பல காட்சி களும் ஊர்களும் இருக்க, அவற்றையெல்லாம் பொருள்படுத்தாது, பல பதிகளைக் கடந்து, எங்கேயோ ஒரு மூலையில் இருக்கும், பல மைல் துலைவு, காடு முரடான பாதையின் வழியே, காலாலேயே நடந்து சென்றே அடையக்கூடிய, ஒரு பட்டிக்காட்டைச் சேர் வார்கள். அங்கொரு அடியார் முன் பின் அறியாத இக்குருநாதர் வரவை எதிர்நோக்கியிருப்பார். பலநாள் பழக்கமுடைய பந்துவைப் போலச் சுவாமிகள் அவரோடு அளவளாவுவார்கள். அவரும் ஆண்டவனே அருளுருவந் தாங்கி வந்தான் என உணர்ந்து உபசரிப் பார். ஜன்மசாபல்யத்திற்குரிய சட்டத்தைச் சுவாமிகள் உப தேசித்து அடுத்தபடி ஆட்கொளவேண்டிய அடியவர் எங்கெயெனப் புறப்பட்டுவிடுவார்கள்.

சுவாமிகள் அருள் உலா செய்துவந்த முறையை உற்று நோக்கி ஞல், ஏற்கனவே ஆண்டவன் கணக்கின் பிரகாரம் வகுத்துவைக்கப் பெற்ற ஏதோ ஒரு திட்டத்தின்படி சென்ற உண்மை ஏற்படுமே தவிர, சுவாமிகளது மனம்போன போக்காகப் போனதென்று தவருக எண்ணமுடியாது. புகைவண்டிப் பாதையில் உள்ளது எந்த இடம்? நல்ல சாலையில் உள்ளது எந்த ஊர்? தங்குவதற்கு வசதி யானது எந்த நகர்? உபசரித்தற்கு உரியவர்கள் எந்த செல்வந்தர்? என்றெல்லாம் சௌகரியத்தை உத்தேசித்துச் சுவாமிகள், போனதே கிடையாது என்னும் வாய்மையும் வெள்ளிடைமலையென விளங் கும். "சாமி மச்சு வீட்டுக்குப் போகும் குச்சு வீட்டுக்குப்

போகும். உடையவன் பணக்காருக்குப் பங்காளனா ஏழைக்குப் பங் காளனா?" என்று சுவாமிகளே சொல்வது வழக்கம்.

ஆண்டவனது அருளின்படி சுவாமிகள் சென்று ஆட்கொண்ட அடியார்களைக் கண்டு சுவாமிகளே வியப்பதுண்டு. "அடியார்களை மணிமணியாக அல்லவா உடையவன் கணக்கு எடுத்துவிட்டிருக்கு," என்று குதூகலத்துடன் சொல்லிக் களிப்பதுண்டு. குரு நாதரது வருகையை எந்தெந்த ஆன்மாக்கள் பூர்வ புண்ணியப் பயனாக, எதிர்பார்த்திருந்தனவோ, அவைகளையே சுவாமிகள் ஆள வந்தார்கள் ஆதலினால், அடியார்கள் பொன்னும் பூண் அணியும், முத்தும் முழுமணியுமாகக் கிடைத்ததில் ஆச்சரியம் என்ன இருக் கின்றது?

இவ்வாறு மணி மணியாக அடியார்களை ஒருமுறை சென்று தேர்ந்துவிட்ட பிறகு, அடியார்களுடைய பக்குவத்திற்கு ஏற்பப், பயிரின் பண்பினுக்குத் தக்கபடி பயிர் செய்தோன் சென்று சென்று பார்த்துத் தக்க காலத்துத் தக்கன செய்து வருதல்போல, சுவாமிகள் மறுபடியும் மறுபடியும் அவர்களைப் போய்ப் பார்த்து சட்ட அனுஷ் டானத்தில் ஊக்கம் ஊட்டி வருவது வழக்கம். அடியார்களும் சுவாமிகளுடைய வருகையை, வானத்தை வரவேற்கும் வளரும் பயிர்கள்போல, ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்து வரவேற்றுப் பயனடைவார்கள்.

சட்டத்திலே தேர்ச்சியுற்ற சில அடியார்களைக் கண்டதும், சுவாமிகள் அந்த அடியார்கள் வசிக்கும் இடத்திற்குச் சென்று, மற்ற அடியார்களும் அங்கு வந்து தேர்ச்சி பெற்றுள்ள அடியார்களைப் பார்த்துப் பயனடையட்டும் என்னும் எண்ணத்தோடே அவ் விடத்தே சிலநாள் தங்கி இருப்பதும் உண்டு. சுவாமிகளின் கருத் தின்படியே பல அடியார்கள் அங்ஙனம் வந்து சட்டத்தில் தேர்ச்சி பெற்றுப் போவார்கள். அடியார்கள் பலர் ஒருங்குகூடி சட்ட விஷயங்களை ஆராய்ந்து சந்தேகமற வேண்டும் என்னும் அருட் குறிப்பு சுவாமிகளுக்கு நிரம்ப இருந்தது.

சந்தேகம் உடைய அடியவர்களையும் பிறரையும் சந்தேகம் அறுத்து ஆட்கொள்ளும் திருக்கருத்தோடு சுவாமிகள், ஆண்டவ

னது அருள் விலாசத்தால் ஆங்காங்கே அற்புதங்கள் செய்து வருவார்கள். பேருக்காகவும் புகழுக்காகவும் அவை செய்யப்பெறு வன அல்ல ஆதலின், அவற்றை இரகசியமாக வைத்துக்கொள்ளும் படி அடியார்களிடம் சொல்லுவார்கள். தாழை மணத்தைத் தாளிட்டா வைக்கமுடியும்? அடியார்களே சொல்லாவிட்டாலும், அருகுள்ள மற்றூர்களாவது அவ்வற்புதங்களை விளம்பரம் செய்யா மல் விட்டுவிடுவதில்லை. சுவாமிகள் ஆற்றிய அற்புதங்கள் பலப் பல. யாவும் கூறத் தாவு இங்கு ஏது? எனினும் சில இனி கூறப் பெறும்.

## 5. அருளாலே ஆளும் பெருமை

### i ஆள்தற்குரிய அருந்தகைமை

#### க. தெய்வத்தின் தோற்றம்:

சுவாமிகளைக் கண்டால் எவர் மனதும் அவர்கள் பாலே செல் லும். அவர்களது வசீகரமான தெய்வீகத் தோற்றம், எவர் உள்ளத்தையும் கவர்ந்துவிடும். பழுதற்ற அங்க அமைப்பும், பளிங்கென ஒளி வீசும் திருநயனங்களும், சுடர்விடும் திருமுடியும் பெருந்தாடியும், மற்றவர்களிடத்திலே காணமுடியாத சிறப்பினவாக அமைந்திருந்தன. அதேவிதமான அவயவங்கள் மற்றவர்களிடத் தும் காணக்கிடைக்கும் என்று யாராவது சொல்வார்களாகுலும், அத்தகைய உறுப்புக்கள் உடையவரையும் சுவாமிகளையும் மணக்கண் முன்னே ஒன்று வைத்து அவரை ஒத்துப் பார்ப்பாராஞல், சுவாமி களது அவயவங்களிலுள்ள தனித் திரு தெய்வத்தன்மை மற்றவ ரிடத்திலே இல்லாதிருப்பதை அவர் எளிதில் கண்டு கொள்ள லாகும்.

சுவாமிகள் நடக்கும்போது அருகிருப்பவர்க்கும் அடி சப்தமே கேட்காது. திருவடி கீழே பாவுகின்றதோ இல்லையோ யென காண்பவர்கள் சந்தேகம் உறுவதுண்டு. அமரும்போதும், அசை யும்போதும், பேசும்போதும், ஏசும்போதும், சுவாமிகளது திரு மேனியும் திரு உறுப்புக்களும் இயங்குகின்ற இன்பகரமான இயல்பைக் கண்டவர்கள், தெய்வத்திரு இயல்பு என்றே. சொல்வார்

கள். சுவாமிகளது இயக்கம், நடனமயிலின் நல்இயக்கம் போலவும், அம்பலக் கூத்தனின் ஆனந்த அருள் ஆட்டம் போலவும், காணக் களிப்பும், மாண மன இழுப்பும், தரும் தன்மையனவாகும்.

**உ. குழந்தையின் குணம்:**

தூரே இருந்து காணும்போதே சுவாமிகளது திருத்தோற்றம் மனதை மகிழ்விக்கும் மகிமையதாக இருக்க, அருகே சென்று பார்த்தால், குழந்தையின் குளிர்விக்கும் குணமே சுவாமிகளது சுசீலமாக இருப்பது நோக்கி இணையிலா இன்பம் எய்தலாகும். பாலர்களது பார்வையில் பாய்கின்ற பரிவு போல, சுவாமிகளது சேவையில் சுகிர்தம் சுரந்து ஓடும். கள்ளங் கபடு அற்ற சிறுவர் சிறுமிகளோடே கலந்து விளையாடுங் காலத்திலே பெறக்கூடிய கழி பேருவகை, சுவாமிகள் சந்நிதானத்திலே தங்கியிருக்க வாய்க்கும் போது தானே மீதுரும்.

"மக்கள் மெய்தீண்டல் உடற்கு இன்பம் மற்றவர்
சொல் கேட்டல் இன்பம் செவிக்கு"

என்று நாயனுர் நவின்றபடி, சுவாமிகளது திருவடியைத் தீண்டும் போது ஒரு தித்திக்கும் இன்பமும், அவர்களது அருமையான மொழிகளை அநுபவிக்கும் போது காதுக்கு கனிந்த களிப்பும் ஏற் படுவது இயற்கை.

**ங. கனியினும் இனிமை.**

சுவாமிகளது வாசகம் திருவாசகமாகும். உயர்ந்த பொருள் களை, உயிருக்கு உறுதி பயக்கும் விஷயங்களைக், கூறும் போதும் சுவாமிகள் தெள்ளத் தெளிந்த தேன் மொழிகளையே வழங்குவார் கள். தமிழ் மொழியே தெரியாத ஒருவரும், சுவாமிகள் பேசும் போது, அருகிருப்பாராகுல், சுவாமிகளது திருவாக்கின் தீஞ் சுவையை சுவைத்துச் சுகமடைவார். சுவாமிகளது குரல் குழை குயிலின் குரல் குழையோ, நல்வீணையின் நடு நரம்போ என நவில் தற்கு உரிய நயமுடையதாயிருக்கும். ஒலியில் இனிமை, எடுத்து ஆளும் சொல்லில் இனிமை, கூறும் பொருளில் இனிமை இவை யாவும் சுவாமிகள் வாக்கில் ஒருங்கே வாய்த்திருந்தன.

பேச்சு அளவிலே இனிமையிருந்தால் பேதை யுள்ளங்களையே கவர்தல் கூடும். ஆனால் அதனால் ஆகும் அரும்பயன் ஏதும்

இராது. அறிஞர்களையும் ஆட்கொளவந்த அரசராகிய சுவாமிகள், இனிய வாசகத்தோடு இன்பந்தரும் நடத்தையும் பூண்டவர்களாக இருந்தார்கள். கருணையே உருவமாக இருந்தார்கள். நல்லாசிரியருடைய இலக்ஷணங்களெல்லாம் சுவாமிகளிடத்தில் நனி பொருந்தியிருந்தன. சுவாமிகளை யடைந்து அவர்களிடம் அளவளாவும் பேறு பெற்ற எவரும், அவர்களுடைய இனிய சொற்களையும் இன்பம் நிறை குணத்தினையும் என்றும் மறக்க முடியாது. 'அடியார்கள் இன்றும் சுவாமிகளது அன்பு கனிந்த செயல்களையும், அருள் கனிந்த வாசகங்களையும், நினைந்து நினைந்து உருகி உருகி இன்பமும் ஏக்கமும் எய்துகின்றனர். சுவாமிகளது அருமையான மொழியமுதத்தினையும், செயல் செம்மையினையும், அநுபவித்த அடியவர்கள் அப்படியே பேசியும் நடந்தும் காட்டி மற்றுரையும் தங்களையும் மகிழ்வித்துக்கொள்வது உண்டு. "தாயா, தந்தையா? தனையனு, தமரா? பிரியரா பிறரா? யாரே இவ்வாறு அன்பும் அருளும் அடரச் செய்யப்போகின்றவர்?" என்று எண்ணி எண்ணி ஏங்குவர் அடியவர்.

### ௪. கைம்மாறு கருதாக்கடமை

குருநாதரது தரிசனத்திற்காகத் தவங்கிடந்து வந்த தக்கார்களை ஆளும் அருங்கடமையை அருளில் ஆற்றவந்த சுவாமிகள், அவ்வாறு ஆளப்பெற்றாரிடமிருந்தாவது மற்றாரிடமிருந்தாவது ஏதாவது கைம்மாறு எதிர்பார்க்கப் போகின்றனர்? அடியவர்களுக்குச் சுவாமிகள் செய்த நல்லுபதேசங்களில் ஒன்று, எந்தவிஷயத்திற்கென்றும் அனுவசியமாக அரைகாசும் செலவு செய்தல் கூடாது என்பதாகும். தம்பொருட்டாகவும், இன்றியமையாத சுருக்கமான அளவுக்கு மிஞ்சி, ஏதும் செலவு வைக்கச் சுவாமிகள் இசையார்கள். குருகாணிக்கை என்று சொல்லித் தாமே கை நீட்டி தம்பிடியாவது தரும்படி கேட்பதோ, சிஷ்யர் கூட்டம் என்று வைத்துக்கொண்டு அவர்களை ஏவி அவர்கள் வாயிலாய்ப் பணம் பறிப்பதோ, அந்த தர்மத்திற்கென்றும் இந்த கைங்கரியத்திற்கென்றும், ஏதேதோ காரணங்கள் காட்டிக் காசு தண்டுவதோ, சுவாமிகள் கனவிலும் கருதாத கடையான விஷயங்களாகும். அடியார்களும் சுவாமிகளுடைய

திருவருளினாலே மக்களுக்குச் செய்யும் நன்மைகளுக்காக எவ்வித பிரதிப்பிரயோஜனமும் எதிர்பார்த்தல் கூடாது என்பது சுவாமிகளது கண்டிப்பான கட்டளை.

சுவாமிகள் ஆங்காங்கே அடியோர்களோடு தங்குகின்ற சிலநாட்களிலே, சுவாமிகளுக்கு அவர்கள் செய்யும் உபசாரம் உண்மை அன்பு நிறைந்ததாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்களே தவிர, அதற்கெனப் பொருள் விரையம் செய்வதற்கே ஒரு சிறிதும் ஒருப்படவே மாட்டார்கள். தவறி, யாராவது ஓர் அடியார் அன்பின் மிகுதியால் ஆடம்பரமான வரவேற்போ பிறவோ செய்ய முயற்சிப்பாரானால் அதுபோதுதான்,

> "குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயும் காத்தல் அரிது"

என்ற பொய்யா மொழிக்குச் சுவாமிகள் இலக்கு ஆவதை அடியார் அறிய நேரும். மிக எளிய உணவே சுவாமிகள் உண்டது. மிக எளிய உடையே சுவாமிகள் உடுத்தியது. எல்லோரும் அவ்வாறு இருக்கவேண்டும் என்றே சுவாமிகள் உபதேசித்தது.

ஓர் ஊரை விட்டு இன்னொரு ஊர் சென்றதெல்லாம் அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டே யானாலும், சுவாமிகள் அடியவர்களிடத்திலிருந்து பயணத்திற்கென ஒரு சல்லியும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஊரைவிட்டுப் புறப்படு முன், சுவாமிகள் கையில் கொண்டு செல்லும் வேஷ்டித்துண்டு மூட்டையைத் தம் எதிரே அவிழ்த்து மறுபடியும் கட்டச் சொல்லுவார்கள். காரணம், அப்பொட்டளத்தில் அடியவர்கள் அன்பால் பணம் ஏதாவது முடிந்து வைத்து விடாது பார்த்துக் கொள்வதற்காகத் தான். அதுபோது "சாமி பொருளை யாராவது எடுத்துக் கொண்டார்களா என்று தான் பார்த்தது வேறொன்றுமில்லை" என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். அன்பினாலே அவரவர்கள் வண்டி கட்டியனுப்பினால் தடுக்காது அவ்வண்டிகளில் ஏறிச சென்றதும், சுவாமிகளுக்குச் செலவு வைத்ததலாகாதே யென்று முன்னாடியே ஓடிப்போய் அடியவர்களில் சிலர் புகைவண்டிப் பயணத்திற்கு மூன்றும் வகுப்புச் சீட்டொன்று வாங்கி வைத்து விட்டால், மறுக்காது அருளினால் அச்சீட்டை ஏற்

றுக் கொண்டதுமே சுவாமிகள் அடியவர்களுக்கு செலவு வைத்த வகைகளாகும்.

"பொன்னால் பிரயோசனம் பொன் படைத்தார்க்கு உண்டு மற்று
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு அங்கு ஏதுண்டு?" [அவர்

என்பது போல சுவாமிகளால் பெறுதற்கரிய பேறு அடியார்களுக்கு உண்டே தவிர, அடியார்களால் சுவாமிகளுக்கு ஒரு துளியும் பயன் கிடையாது. கைம்மாறு கருதாது கடமையை ஆற்ற வந்தவர்கள் அல்லரா சுவாமிகள்?

ரு கடையேற்றும் உறுதி.

"வடத்தைக் கையில் எடுத்து விடவேண்டும் எடுத்து விட்டால் தேரில் உட்கார்ந்திருக்கும் உடையவன் இழு இழு என்று உற்சாகம் ஊட்டிச் செலுத்திக் கொண்டே போவான். கட்டாயம் நிமிஷத்தில் நிலை சேர்ந்து விடலாம்." என்று சுவாமிகள் அடியவர்களிடத்தில், அழகாக, வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு. தம்மளவிலே, சட்டத்தில் சேர்ந்து விட்டவர்களைத் தவறாமல் காத்துக் கரை சேர்த்து விட முடியும் என்பது சுவாமிகளது உறுதி.

ஒரே அளவான சிறுசிறு வெள்ளைக் கூழாங்கற்களைக் கையில் வைத்துக் கொண்டிருப்பார்கள். குலுக்கிக் கொண்டே ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு ஒவ்வொன்றாகவோ, ஒரு சேரப் பலவாகவோ, மாற்றிக்கொண்டே யிருப்பார்கள். படுக்கப்போகும் போது தலையணையடியில் வைப்பார்கள். நீராடப்போகும்போது அங்குள்ள அடியவரிடம் தருவார்கள். கொடுக்கும்போது "பத்திரம்! நழுவி விடப்போகிறது. இது தான் சுவாமிக்கு ஆஸ்தி," என்று விளையாட்டாகச் சொல்வதுண்டு. மற்று எக்காலத்திலும் இம்மணிகள் கையிலோ மடியிலோ இருந்தபடியே யிருக்கும். ஒரு சமயம் அடியார் ஒருவர் தைரியத்துடன் சுவாமிகளை அணுகி இம்மணிகளை எதற்காகச் சுவாமிகள் வைத்துக் குலுக்குவதும் எண்ணுவதும் கொட்டுவதுமாக இருக்கின்றார்கள் என்று கேட்டார். சுவாமிகள் சிரித்து, "இதா, இதைக்கொண்டு தான் உடையவன் கணக்கு எடுக்கு" என்று சொன்னார்கள். அது என்ன கணக்கோ, அதைச்

## அடியாரைத் தேர்தலும் அருளாலே ஆள்தலும்

சுவாமிகள் எப்படித் தெரிந்து கொள்கிறார்களோ என்பது அடியார்களுக்கெல்லாம் விந்தையாகத்தானிருக்கும்.

ஆனால், சுவாமிகளுக்கு இது இது இன்ன இன்ன காலத்தில் இப்படி இப்படி நேரும் என்னும் விஷயங்களெல்லாம் திட்டமாகத் தெரியும் போலும். அடியார்களுக்கு எவ்வித துன்பங்கள் வந்த போதிலும், சிறிது கூட அச்சம் என்பதே சுவாமிகளுக்குக் கிடையாது. அடியார்கள் வருந்துவதாகத் தோன்றினாலும், ஒரு நொடியில் அவர்களது துயரத்தை மாற்றி, வந்த துன்பத்தை வந்த வழியே போகச் செய்து விடுவார்கள். சுவாமிகள் உடன் இருந்து விட்டால், சாதாரண அடியாருக்கும் சற்று கூட எதற்கும் பயம் தோன்றாது. சிறிது தேர்ச்சி பெற்ற அடியவராயின், சுவாமிகள் கண் எதிரே இராவிட்டாலும், மனதெதிரே எப்போதும் இருப்பதை யுணர்ந்து எதற்கும் அஞ்சுவதில்லை. எவ்வளவோ ஆபத்தான அசௌக்கியங்கள், எத்தனையோ அருமையான குடும்பத் தொல்லைகள், எம்மட்டோ இடர்ப்பாடான மற்ற சந்தர்ப்பங்கள், இவற்றினின்றும் சுவாமிகள் எத்துணை எளிதிலே காத்து விடுகிறார்கள் என்பதை அநுபவித்த அடியார்களுக்கு, அச்சம் ஏன் அண்டம் புரண்டாலும் வரப்போகிறது?

ஒருவராலும் நீக்கமுடியாத உலகார்த்த நிலையில் இருந்தெல்லாம் கைம்மாறு சிறிதும் கருதாது நிமிஷத்திலே நீக்கிவைக்கும் நிர்மல குருநாதர் "இந்த பிறவியிலே பேரின்ப முத்தியைக் கூட்டுவிப்பான் உடையவன், காட்டிய சட்டத்தின்படி நாட்டமுடன் நடங்கள்" என்று உறுதியாகச் சொல்லும்போது எப்படி அடியார்கள் நம்பாமல் போகக்கூடும்? இம்மை மறுமைக்கு வரும் இடுக்கண்கள் யாவற்றினின்றும் கட்டாயம் கடையேற்றும் உறுதி நமது குருநாதருக்கு உண்டு என்பதை அடியார்கள் எங்ஙனம் மறந்து விடுவார்கள்?

ii அற்புத அருளாட்சி.

சுவாமிகள் அடியார்களை ஆட்கொண்டு உலாசசென்று வந்த காலத்திலே நடத்திய அருள் செய்திகள் சிலவற்றை இங்கே குறித்தல் இன்றியமையாதது. சென்ற இடங்களிலே சுவாமிகளது

திருக்கரங்களால் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்றவும் புதுப்பிக்கப் பெற்றவுமான ஆதி மூர்த்தியின் ஆலயங்கள் அளவிறந்தனவாகும். எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையை எச்சரித்துக் கொண்டே சமயச் சழக்கின்றி, சட்ட அனுஷ்டானத்தைத் திட்டமுறச் செய்யும் முறைகளைப் போதித்தும் நடத்திக் காட்டியும் செல்வார்கள்.

சுவாமிகள் தாமே விடியல் 4-மணிக்கு முன், படுத்துறங்கும் ஒவ்வொரு அடியவரிடமும் சென்று அவர்களை நீராடுதற்கு, எழுப்பும் அன்பும் அருளும் பழுத்த முறையானது இன்றும் அடியார்கள் மனதில் இனித்து, வாயில் மணந்து, கண்ணில் கசிகின்றது.

சுவாமிகளது திருக்கரங்களினாலே அநேக ஆயிரம் அற்புதங்கள் நடந்தன. அவற்றில் வெளிக்குத் தெரிந்தன நூற்றுக் கணக்கானவை. அவைகளில் இது பெரிது இது சிறிது எனச் சொல்லுதற்கு ஆகாது ஆதலின் இன்னும் சிறந்தனவெல்லாம் இங்கு எழுதாது விடுபெற்றனவே யென்று எவரும் சொல்லுதற்கு இராது. அவைகளுக்குப் பாத்திரமா யிருந்தோரில் பலர் தங்கள் பொருட்டு நடந்த அவ்வற்புதங்களை இந்நூலில் வெளியிட வேண்டும் என்னும் வேட்கையோடு இருப்பார்கள். வேறு பலர் தமக்கெனச் சுவாமிகளால் நிகழ்ந்த அவ்வதிசயங்களை மறை பொருளாகவே வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அவரவர்களது ஆவலை யறியவும், அதன்படி அச்சு செய்யற்பாலன யாவை, நிறுத்தி வைக்கற்பால யாவை, என்று தெரிந்து அவ்வண்ணமே செய்யவும் இது போது இயலவில்லை. எவர்களது அவாவையும் கருதாமலும், அறிவுக்கு எட்டியுள்ள அற்புதங்கள் அனைத்தினும் ஏதைத்தள்ளுவது எதைக்கொள்ளுவது என ஆராயாமலும், இங்கொன்றும் அங்கொன்றுமாக மிக மிகச் சிலவே இங்கு எழுதப் பெறுகின்றன. உடையவன் கணக்கு இருந்தபடி ஆயிற்றென அடியார்கள் பொறுத்து விடுவார்களாக. அடியார்கள் அல்லாத பிறரும், ஆண்டவன் அருள் ஆற்றிய அற்புதங்களில் இச்சிலவற்றை இங்கு அறிந்ததன் பயனாக எஞ்சியவற்றை அடியார்கள் வாயிலாக அறிந்து அரும் பயன் அடைவார்களாக.

## அடியாரைத் தேர்தலும் அருளாலே ஆள்தலும்

கி.பி. 1900 ஆண்டில், இராமநாதபுரம் ஜில்லா, சாத்தூர் நகரத்தில், சத்திரம் ஒன்றில் சுவாமிகள் சென்று தங்கினார்கள். அவ்வூரில் ஆண்டவன் அன்பினிலே பெரும் பற்றுவைத்தவராய், ஒழுக்கம் வழுவாத உத்தமராய் வாழ்ந்து வந்த காண்ட்ராக்டர். திரு. ச. ப. சண்முகம்பிள்ளைக்கு இருந்த சற்குரு நாட்டமே சுவாமிகளை அங்கே செலுத்தியது என்று சொல்ல வேண்டும். பிள்ளையின் ஆப்த நண்பர் புரோக்கர் திரு ஆறுமுகம் பிள்ளை, அதுபோது மிகக் காயலாவாக இருந்தார். பலவித வைத்தியங்களும் பயன்படவில்லை. கைவிட்டுவிட வேண்டிய நிலையாக இருந்தது.

சுவாமிகள் சத்திரத்தில் வந்திருப்பதைத் திரு. ச. ப. சண்முகம் பிள்ளை யறிந்து, சென்று வழிபட்டு, ஆறுமுகம் பிள்ளையைப்பற்றி விண்ணப்பித்தார். சுவாமிகள் அருள்கூர்ந்து ஆறுமுகம் பிள்ளை வீட்டுக்கு எழுந்தருளி படுக்கையிலிருந்த அவரது சிரசின் மேல் தமது திருக்கரத்தைச் சிறிது நேரம் வைத்து அநுக்கிரகித்து, உடம்பு முழுதும் தடவிக் கொடுத்தார்கள். நீச்சு நினைவு அற்று இருந்த ஆறுமுகம் பிள்ளை உடனே கண்விழித்துக் காயலா நீங்கி நலமுற்றார். கண்டவர்களும் கேட்டவர்களும், 'அற்புதம் அற்புதம்' என்று ஆரவாரித்து ஆச்சரியம் அடைந்தனர். திரு. ச. ப. சண்முகம் பிள்ளை அப்போதே சுவாமிகளது அடியவராகிச் சட்டத்தில் சேர்ந்து, ஆயுள் பரியந்தம் சுவாமிகளிடம் இடைவிடாது அன்பு பூண்டவராய், குருநாதரது அருளாலே தாமே பல அற்புத ஆற்றலைப் பெற்றவராய், சாத்தூரார்க்கும், சுற்றுப் புறத்தார்க்கும் பல நலங்களைப் புரிந்து வருவராயினர். அவர்களது குடும்பம் பூராவும் சட்டம் அனுஷ்டிக்கலாயிற்று. சட்டத்திலேயே ஜனித்த பிள்ளையின் குமாரர் திரு. சாமிநாதம் பிள்ளை இன்னும் சுவாமிகள் பால் தளரா அன்பு பூண்டு சட்டத்தில் ஒழுகி வருகின்றார்.

மதுரைமா நகரத்திலே, வடக்கு மாசி வீதியிலே வதிந்த திரு. வெங்கடசாமி நாயுடு குமாரர் மிராசுதார் திரு. அப்பாசாமி நாயுடு, சுவாமிகளது பழைய அன்பர். நாயுடுவின் குமாரத்தியும், பழனி தாலூக்கா சத்திரப்பட்டி ஜமீன்தாரர் திரு. முத்துசாமி நாயுடுவின் பாரியையுமான, திரு. சூடியம்மையாருக்குக் கால்கள்

இரண்டும் சுவாதீனம் அற்றுப்போயின. நடக்க முடியாமல், நகர்ந்து செல்லவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். செல்வந்தருக்கு ஏற்ற பல்வித வைத்தியங்கள் நடந்தன. குணங்காணவில்லை. கடைசியாக, அதுபோது மதுரைக்கு வந்திருந்த சுவாமிகளை, நாயுடு வரவேற்று தம்மகளைக் காத்தருளுமாறு கோரினர். அவ்வம்மையாருக்குச் சுவாமிகள் அருள்புரிய, நோய் நீங்கி அது முதல் சட்டத்தில் இருந்து பல மக்களைப் பெற்று சுக வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

இரெட்டியப்பட்டியாரது வரவேற்புக்கு இணங்கிச் சுவாமிகள், அவ்வூருக்குச்சென்று அங்குள்ளாரது கஷ்டங்களை நீக்கியருளிய போது, அம்பலம் திரு. பொன்னையா பிள்ளை என்பவருக்கு யாரும் பெண் கொடுக்க அஞ்சினர்கள் என்று அறிந்தார்கள். அவரது ஜாதகப்படி, அவர் அற்ப ஆயுள் உடையவர் என்றும் மணமானதும் மரிப்பாரென்றும், பிரபல ஜோசியர்கள் கூறி யிருந்தனர். பிள்ளையும் உற்றாரும் வருந்தினர். வயது முதிர்ந்து கொண்டு வந்தது. பிள்ளையைச் சுவாமிகள் சட்டம் எடுத்துக் கொள்ளச் சொல்லி, விரைவில் மணமாகுமென வாக்குக் கொடுத்தார்கள். அப்படியே ஆயிற்று. பிள்ளை பல மக்களைப் பெற்று இன்னும் பெரு வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

திருவனந்தபுரம் மகாராஜாவினுடைய குதிரை லாயத்தின் கணக்கப்பிள்ளையை ஆட்கொள்ள சுவாமிகள் அவர் வீட்டிற்கு எழுந்தருளிய போது, பிறவியிலேயே நொண்டியா யிருந்த குதிரைக்காரன் ஒருவன் மற்ற அன்பர்களோடு சுவாமிகளை வந்து வணங்கிக் கொண்டான். அவனுக்கு நொண்டி யென்றே பெயர் வழங்கினது. அவனுடைய ஆழ்ந்த அன்பினை அறிந்த சுவாமிகள், அவனது நொண்டிக்காலைத் தமது திருக்கரத்தால் தடவிக் கொடுத்தார்கள். உடனே அவன் கால் நொண்டித்தன்மை நீங்கிற்று. ஊரெல்லாம் அதிசயித்தது. அவனது அகமகிழ்ச்சிக்கு அளவுண்டா? அக்காலத்து இளவரசராக இருந்த ஆயில்யம் மகாராஜாவும் அது கேட்டு, தாமே கணக்கப் பிள்ளை வீட்டுக்கு வந்து சுவாமிகளைத் தரிசித்துப் போயினர்.

# அடியாரைத் தேர்தலும் அருளாலே ஆள்தலும்

சுவாமிகள் காசிக்குச்சென்று திரும்புங்காலையில், கும்பகோணத்தில் சில அடியார்களை ஆட்கொள்ளத் திரு. சந்தனம் பிள்ளை வீட்டில் தரிசனம் கொடுத்துக்கொண்டிருக்கும்போது, சோழன் மாளிகையிலிருந்து சுவாமிகளது அடியவர் ஒருவர் அங்கு வந்தார். அவரது தம்பியின் மகன், சிதம்பரம் திரு. துரைசாமிப் பிள்ளைக்கு முதுகில் பிளவை ஏற்பட்டு ஆபத்தாக இருந்தது. ஆஸ்பத்திரிக்குப் போய் அறுவை செய்துகொள்ளத்தான் வேண்டும் என்று அனைவரும் அவசரப்படுத்திக்கொண்டிருந்தார்கள். சுவாமிகளது அடியவராகிய அவரது பெரிய தகப்பனாரோ சுவாமிகளது சட்டப்படி இருந்து குணம் செய்துகொள்ளலாம் என்றார். துரைசாமிப் பிள்ளையும் மற்றாரும் கேட்கவில்லை. சட்ட அனுஷ்டானமுள்ள தாமே இருந்தும் வைத்தியம் செய்துகொள்ள இடந் தந்துவிடுவது எப்படி எனப் பெரிய தகப்பனார் இடர்ப்பட்டார். அதுசமயம் சுவாமிகள் கும்பகோணத்தில் வந்திருப்பதைக் கேள்வியுற்றே அவர் திரு. சந்தனம் பிள்ளை வீட்டுக்குப் போனது. சுவாமிகளிடம் விஷயம் தெரிவித்தார். அடியார்களைச் சட்ட அனுஷ்டானத்தினின்றும் தவறாது காப்பதும், மற்றவர்களையும் சட்டம் ஏற்கச் செய்வதுமே கடமையாகக் கொண்டிருந்த சுவாமிகள் உடனே சோழன் மாளிகைக்குச் சென்றார்கள்.

திரு. துரைசாமிப் பிள்ளைக்குச் சேவை கொடுத்துப் பச்சை நீராடச்செய்து பிளவையைத் தமது திருக்கையால் சுவாமிகள் தொட்டார்கள். உடனே நலமுறத் தொடங்கி முழுதும் செம்மையுற்றது. ஊரார் பலர் சட்டம் மேற்கொண்டு ஆண்டவன் அருளைப் போற்றி செய்தார்கள். அது முதல் சிலநாள் சுவாமிகள் அங்கே தங்க, எத்தனையோ பிணிகளும் பிறவும் நீக்கப் பெற்றன.

திருச்சி ஜில்லா, குளித்தலையில் சுவாமிகள் அடியவரில் ஒருவரான கோபால அய்யருக்கு இருந்த கொடிய நோயினை நீக்கி அருளச் சென்றிருந்தபோது, அவ்வூர் திரு. முனிசாமி சோழயர் அங்கு வந்து தனது தம்பி அரங்கசாமி சோழயருக்கு ஏற்பட்டிருந்ததும், தமிழ் ஆங்கில வைத்தியத்தால் முயன்றும் தீராததுமான விப்புருதிப் பிளவையைப் போக்கியருளும்படி கேட்டுக்கொண்டார். உடம்பு எங்

கனும், உரித்த தேங்காய் அளவு பதினாறு கட்டிகள் இருந்தன. வியாதி தீராது, மரணம் நிச்சயம் என்று தீர்மானித்துவிட்டிருந்தனர். சுவாமிகள் சென்று நீராடச் செய்துவரச் சொல்லி, நீறு பூச உத்தரவிட்டு, வயிற்றின்மீது இருந்த ஒரு கட்டியைத் தடவிக் கொடுத்து முப்பத்து ஒன்கு மணி நேரத்தில் முழுதும் நலமாகும் என்று கூறினார்கள். உயிருக்கே சுவாமிகள் கெடு வைத்துவிட்டார்கள் என்று எல்லோரும் அஞ்சினர். ஆனால் குறித்த காலத்திற்குள் சுவாமிகளின் ஆசீர்வாதத்தின்படி சுவாமிகள் திருக்கரம் பட்ட கட்டி உடைந்து, அதன் வழியாய் மற்ற பதினைந்து கட்டிகளின் சீழும் இரத்தமும் வடிந்து விபூதியினால் ரணமும் குணமாயிற்று.

சுவாமிகளுக்குத் திருச்சியில் உற்சவம் நடந்தபோது திருமஞ்சனத்திற்கு யானைமீது ஆற்று நீர் கொண்டுவருகையில் டெபுடி முனிசாமிசோழயர், முதலில் மறுத்துப், பிறகு, அடியவர் வேண்டுகோளுக்கு இணங்க யானைமீது இருந்து கவரி வீசி வருகையில் சுவாமிகள் தங்கியிருந்த இடத்திற்கு அருகிருந்த வீட்டுச் சுவர் ஒன்றில் யானை தாக்கச் சோழயரது முட்டிக்கால் மோதி உடைந்தது. இருக்கவும் ஆற்றாது இறங்கவும் முடியாது, சோழயர் கஷ்டப்பட்டு சுவாமிகளது பணியைத் தான் அன்புடன் ஏற்றுச் செய்யாததற்கு வருந்தினர். சுவாமிகள் கண்ணுற்று, இறங்கி வருமாறு பணித்தார்கள். நடக்க முடியாதிருந்த சோழயர் இழிந்து சுவாமிகளிடம் நடந்து சென்றதே வியப்பாக இருந்தது. சுவாமிகள் சோழயரது மனதின் நிலையை யறிந்து, அருளோடு உடைந்த முட்டியைத் தடவிக் கொடுத்தார்கள். நலமடைந்தது.

திருச்சினாப்பள்ளியில் திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை பாரியை திரு. மதுராம்பாளுக்குப் பெரும்பாடு சொல்லொணாத கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டு வந்தது. விவரங்களெல்லாம் இங்குஎழுதலாகாதன. எவ்வித வைத்தியமும் ஏதும் பயனில்லை. சுவாமிகள் சேவையினாலும், சட்ட அனுஷ்டானத்தினாலும், அவ்வியாதி இருந்தஇடம் தெரியாமல் சென்றது.

புதுக்கோட்டை திரு கோ. வே. இராமசாமி செட்டியார் வீட்டில் பகைவரால் வைக்கப்பெற்ற சூனியத்தால், இருந்ததுபோல்

இருந்து, பிரம்மாண்ட வெடி ஒலியும், ஏராள குதிரை வண்டிகள் ஒரு சேர மலை மீதிருந்து இழிந்து வந்தாலன்ன கடகட சப்தமும், அச்சம் தரும்ஆள் அடிக்கடி தொடருவது போன்ற தோற்றமும், திடீரெனத் தீப்பற்றலும் பிறவும் போலக் காட்சிகளும், நிகழ்ந்து வந்தன. அவ்வப்போது செட்டியாரது மனைவி சீதாலக்ஷ்மி யம்மாள் மூர்ச்சையற்று விழுவதும், அது சமயம் அவர் மனதில், கும்பங் கள் வைத்திருப்பது போலவும், மந்திரங்கள் ஓதுவது போலவும், காண்பதும் உண்டு. மூன்று வருஷ காலமாக ஏராளப்பொருள் செலவு செய்து ஏதேதோ முயன்றும் ஏதும் பலனில்லை.

அதுபோது தஞ்சைக்குத் தெற்கே பத்து மைல் தூலைவில் முன்னரே சுவாமிகளால் ஆளப்பெற்ற ஒரு சிறுவர் இருந்தார். அவர் பதினாறு வயதிலேயே குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பெற்று வேறு கதியில்லாமல் சுவாமிகளே தஞ்சம் என்று அடைந்து, அவர் களுடைய அருளாலே சட்டம் ஏற்று, பெருநோய்ப் பற்றற நீங்கப் பெற்று, குருநாதரது அருளாலேயே மற்றோரது குறைகளுக்கும் நீறு தந்து நீக்கும் பெருமையை யடைந்திருந்தார். அப்பெருமை கேட்டு, ஷை திரு. கோ. வே. இராமசாமி செட்டியார் அவ்இளை ஞரை யடைந்து, தமது இன்னலுக்குத் தகும் வழி யென்னவென்று கேட்டார். இளைஞர் குறிப்பித்தபடி சுவாமிகளை இலங்கைக்குளம் சென்று சேவித்து, தமது அகத்திற்கு அழைத்துவந்து வழிபாடு செய்தார். குடும்பத்தோடு சட்டம் ஏற்றுக்கொண்டார். தீதெலாம் சுவாமிகள் திருவடி வைத்த அன்றே சேதமுற்று ஓடின.

அவ்வூரிலேயே, வக்கீல் தொழில் பார்த்துவந்த அய்யர் ஒருவரது மருமகளுக்குப் பேய் பிடித்து சேஷ்டை செய்து வந்தது. பத்துப் பேய்கள் பற்றி யிருப்பதாகக் கூறினார்கள். பலரால் முயன்றும் தொலையவில்லை யென்றும் சொல்லிக்கொண்டார்கள். சுவாமிகளது வருகையை யறிந்து அவ்வம்மையாரை அழைத்துவரப் பார்த்தார்கள். எளிதில் வாராததால் சங்கிலியிட்டுக் கட்டி இழுத்து வந்தார்கள். சுவாமிகளது பார்வையே எல்லாப் பேய்களையும் எங்கோ போகச் செய்துவிட்டது. அந்தம்மாள் சுவாமிகளை வலம் வந்து வழிபட்டுக் குறையேதுமின்றி வாழ்ந்து வந்தனர்.

# வழிகாட்டும் வான்பொருள்

இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலுக்கா, கீழ்ச்சீவல் பட்டி கிராமத்தில் திரு. மெய்யம்மையாச்சிக்குக் கண்களிரண்டும் பார்வையற்றுப் போயின. அந்தம்மையாருக்கு 60 வயது இருக்கும். நாட்டுக்கோட்டை நகரத்து இனத்தவர். நான்கு வருஷங்களாக நயனங்கள் பாதை கொடுத்து வந்தன. சுவாமிகளைச் சேவித்துக் குறையிரக்கச் சுவாமிகள் அம்மையாரது கண்களின்மீது தமது தெய்வத் திருவிரல்களை வைத்துத் தாடனம் செய்து சட்ட அனுஷ்டானம் ஏற்கப் பணித்தார்கள். ஒரு வாரத்தில் கண் தொந்தரவு முற்றும் நீங்கியது மல்லாமல், பார்வையும் தெளிவாகத் தெரியலாயிற்று. 'அற்புதம்! அற்புதம்!' என்று அடியவர்கள் ஆனந்தித்தனர். அவ்வம்மையார் பிறகு இருபதாண்டு பார்வை குறையாது சட்ட அனுஷ்டானம் பிழையாமல் நடந்து ஆண்டவன் சேவடி அடைந்தனர்.

அவ்வூரிலேயே திரு வெ. நா. கி. சிகப்பியாச்சி என்பவர் காச நோயால் வருந்தி யிருந்து, சுவாமிகள் தரிசனத்தால் சட்டம் ஏற்றுப் பிணி முற்றும் நீங்கப்பெற்றனர். இவர் பெரிய செல்வந்தக் குடும்பத்தினர். சட்ட அனுஷ்டானத்திலே தீவிரமானவர். ஆதலினால் இவரை இரெட்டியப்பட்டி ஆச்சியென்று அப்பக்கங்களிலே கூறுவர். இவர் இன்றும் சுவாமிகள் சந்நிதானத்திற்கு அன்பு செய்து வருபவர்.

ஷை தாலூக்கா கண்டரமாணிக்கம் என்னும் நகரத்தில் அடியவராகிய திரு.மெ.அழகப்ப செட்டியார் அழைப்புக்கு இணங்கிச்சுவாமிகள் சென்றிருந்தார்கள். அதுபோது அங்கே விஷபேதி. பேதி கண்ட பலர் சுவாமிகளது அருளாலும் சட்ட அனுஷ்டானத்தாலும் நலமடைந்தனர். செட்டியாரது வீட்டண்டை பேதி கண்டவர்களை யழைத்து வருவது நலமல்லவென்று எண்ணிச், சுவாமிகள் ஊருக்கு வெளியே கால் மைல் தூலைவிலே உடனே ஒரு விநாயகரைப் பிரதிஷ்டை செய்து, அங்குச்சென்று தங்கி, அளவிறந்த பேருக்கு அருள் புரிந்தார்கள். அவ்வாறு செய்து வந்த காலத்தில் பிணியாளரும் அவர்களுக்குத் துணைவரும் வந்து தங்கி அருள்பெற அவ்விடத்தில் ஏராளமான கொட்டாரங்கள் அமைக்கப்பெற்று விட்

டன. ஆடுமாடுகளுக்கு நேர்ந்த கடுநோய்களுக்கும் கூட, சுவாமிகளிடம் வந்து, சுவாமிகள் கட்டளைப்படி விநாயகரை வலம் வந்து நலம்பெற்றுப் போயினர். சுவாமிகள் அவ்வூரை விட்டுச் சென்ற பிறகும் அவ்விடத்தில் சுவாமிகளது பெயரைச்சொல்லி விபூதி யணியப் பல அற்புதங்கள் நடந்து வந்தன.

சுவாமிகள் அடியார் சிலர் அவாவியபடி குற்றால மலைக்குச் சுமார் ஐம்பது அடியாரோடு சென்றார்கள். அதுபோது சென்னையிலிருந்துவந்து அங்குத் தங்கியிருந்தவரும் கீல் வாயுவினால் வருந்திக் கொண்டிருந்தவருமான ஒருவரைச் சுவாமிகளிடம் தூக்கிக் கொண்டு வந்தார்கள். சுவாமிகள், அருவி நீராட்டுவித்து நறுநீறு அணிவித்து அவரை அருளால் முற்றும் நலமுறுத்தினார்கள்.

தென்னாற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூக்கா, வைரபுரம் கிராமத்தில் திரு. மணியம். வ. அ. வைத்தியநாத முதலியார் வீட்டில் அவரது மைத்துனர் குமாரர் கடலூர் செல்லங்குப்பம் திரு. செ. மு. சிங்காரவேலு முதலியார் காயலாவாக இருந்தார். அவருக்குக் கலியாணம் ஆனதும் பித்தப்பாண்டு நோய் வந்தது. தேகம் வெளுத்து மிக மெலிந்து போனார். செல்லங்குப்பத்தில் பலவித வைத்தியத்தாலும் பலனில்லை. வைரபுரம் அழைத்துச் சென்று அங்கு வேறே மருந்துகள் கொடுத்துப் பார்த்தார்கள். ஜோசியம் ஆராய்ந்தார்கள். கிரக பலன் கடுமையானதாகத் தானிருக்கும் என்று தெரிந்தது. மனைவியின் ருது ஜாதகத்தில், அவர் உயிர் பிழைக்கமாட்டார் என்றே ஏற்பட்டது. எனவே அவர் கைவிட்ட நிலையில் இருந்தார்.

அப்போது சுவாமிகள் அடுத்துள்ள விண்ணம்பூண்டி கிராமத்தில்அடியார்களை ஆட்கொள வந்திருந்தார்கள். திரு. வைத்தியநாத முதலியார் சுவாமிகளிடம் மேற்படி சிங்காரவேலு முதலியாரின் நிலையைக் கூறி வருந்தினார். சுவாமிகள் கருணை கூர்ந்து அவ்வூருக்கு எழுந்தருளி, திரு. சிங்காரவேலு முதலியாரைச் சட்டம் எடுக்கச் சொன்னார்கள். பூரண சுகம் ஏற்பட்டு விட்டது. பிறகு இருபது வருஷத்திற்கு மேலாக சட்டம் வழுவாது பல மக்களைப்பெற்று வாழ்ந்து வந்தார். அவரது குடும்பம்

மொத்தமும் இன்னும் சட்டத்தில் இருக்கின்றது. சுவாமிகள் பிறகு அவ்வூருக்குப் பலமுறை சென்று பற்பல அற்புதங்களை நடத்தியிருக்கின்றார்கள்.

தென்னாற்காடு ஜில்லா, திருக்கோயிலூர் தாலூக்கா, ஆனத்தூர் கிராமத்தில், சின்ன கம்பத்தம் திரு. கு. ஜகன்னாத ரெட்டியாருக்கு மூன்று மாதமாகக் காய்ச்சல். கால்வீங்கிப் போயிற்று. வயிற்றிலும் வீக்கம் கண்டு விட்டது. நீர் இறங்கவில்லை. நினைவும் அற்றுப் போய்விட்டது. பண்ணுருட்டியிலிருந்து இங்கிலீஷ் டாக்டர் வந்து பலவிதமாகச் சிகிச்சை செய்து வந்தார். இடையிடையே தமிழ் வைத்தியத்தில் தேர்ந்தவர்களும் பார்த்து வந்தார்கள். எல்லோரும் கைவிட்டார்கள். தொண்ணூறு நாழிகை ஜன்னி, அதோடு பூர்த்தி தான் என்றார்கள். தொண்ணூறு நாழிகையில் எண்பது நாழிகை ஆய்விட்டது. இன்னும் பத்து நாழிகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதுசமயம் சுவாமிகள் எதிர்பாராதபடி ஏற்கனவே சுவாமிகளது அடியவராய்ச் சட்ட அனுஷ்டானத்தில் இருந்து வந்த அவ்வூர் மூலைக்கம்பத்தம் திரு. இராமலிங்க ரெட்டியாருக்குத் தரிசனம் கொடுப்பவர் போல அங்கு வந்தார்கள். மேற்படி திரு. ஜகன்னாத ரெட்டியாரது தமையனார் குமாரர் அருகுள்ள திருச்சாத்தனூர் பெரிய கம்பத்தம் திரு. மு. முத்துராம ரெட்டியார் என்பவரும், தம் சிறிய தகப்பனார் காயலா காண அப்போது அவ்வூருக்கு வந்து இருந்தார். இவர் ஏற்கனவே சட்டம் ஏற்றிருந்தவர். சுவாமிகளது வருகையையறிந்து, அவர் நேரே வீட்டுக்கு வரவேற்று தமது சிறப்பினைக் காட்டினார்.

உடையவன் திருவருள் உடனிருக்க எத்தகையான ஆபத்தான நிலைக்கும் அஞ்சலாகாது என்பது சுவாமிகள் கொள்கையாதலின், எல்லா விவரத்தையும் திரு மு. முத்துராம ரெட்டியார் வாயிலாய்க் கேட்டறிந்தும், சிறிதும் கிலேசம் கொள்ளாது, எப்போதும் போல இருக்கும் உற்சாகமான நிலையிலேயே சுவாமிகள் இருந்தார்கள். படுக்கையண்டை சென்று, நோயாளியின் சிரசின்மீது சிறிது நேரம் திருக்கையை வைத்தார்கள். உடனே பிரக்ஞை வரத்,

தொண்டையைக் கனைத்துக்கொண்டு 'யார் அது?' என்று கேட்கும் நிலை வந்தது. சுவாமிகள் என்று அறிந்ததும், தூக்கி உட்கார வைக்கும்படிச் சொன்னார். ரெட்டியார் பிடித்துப் படுக்கையிலேயே சார்த்தினார். 'என்ன செய்கிறது உடம்பு?' என்று சுவாமிகள் கேட்க, இடுப்பு, கால், தலை முதலிய இடங்களில் நோகின்றதாகச் சொன்னார். அவ்விடங்களிலெல்லாம் விபூதி தடவும்படிச் சுவாமிகள் திட்டம் செய்தார்கள். தாகத்திற்குக் கேட்டார். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவரச் சொல்லி, அதில் துளி விபூதி போடச் செய்து, வேண்டியமட்டும் தந்தார்கள். ரெட்டியார் செம்பு செம்பாகக் குடித்தார். 'நீர் இறங்கவில்லை. பாதையாக இருக்கின்றது' என்று சொல்ல வயிற்றுக்கு ஆகாரமாகவும் இருக்கட்டும் என்று சுவாமிகள் சாதத் தண்ணீர் கொடுக்கச் சொன்னார்கள். அதுவும் தரப்பெற்றது.

ஆபத்தான ஜன்னியில் இருக்கின்றவர்க்குத் தண்ணீரும் சாத நீரும் தருவதைப் பார்த்து, ரெட்டியாருடைய தமக்கையும் மனைவியும் அழத் தொடங்கிவிட்டனர். அவர்கள் அழ மற்றாரும் அழுதனர். எதிர் வீட்டு உறவினரும் ஓடிவந்து ரெட்டியாரிடமே சென்று முகத்தின்மீது கை வைத்துக்கொண்டு ஓவென்று கதறினார்கள். நினைவே அற்றுப்போயிருந்த ரெட்டியார் இப்போது பூரணப் பிரக்ஞையோடு எழுந்து நாற்காலியில் உட்கார்ந்திருப்பது அவர்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. சாத்தனூர் ரெட்டியாரை அவரது அத்தையும், சிறிய தாயாரும் மற்றாரும், துரோகியென்றும் பாவியென்றும் , பலவாறு வைதனர். தப்பித் தவறித் தெய்வாதீனமாகப் பிழைக்கக் கூடிய பிராணனையும் நிச்சயமாகப் போக்கிவிடுவதற்காகத்தான் சுவாமிகளை அழைத்து வந்துவிட்டாரென நொந்தனர். ஆனால் ரெட்டியாரோ ஏதும் மனந்தளரவில்லை. சுவாமிகளைப்பற்றி அவர் நன்குஅறிவார். சுவாமிகளது தரிசனம் கிடைத்துவிட்ட பிறகு இனிஏதும் தமது சிறியதகப்பனாருக்கு ஆபத்து கிடையாது என்று உறுதி கொண்டு இருந்தார்.

சுவாமிகள் சொற்படியே, மறுநாள் காலை, திரு. ஜகந்நாத ரெட்டியாருக்கு இருபத்தோரு குடம் பச்சைத் தண்ணீர் விடியல்

நாலுமணிக்கெல்லாம் விடத் தீர்மானமாய் விட்டது. குறித்த காலந் தவறாமல், திரு. ஜகன்னாத ரெட்டியாரும் கிணற்றண்டை பிடித்துப் போகச்சொன்னார். ஸ்நானம் ஆயிற்று. இதற்குள் காருண்ய மூர்த்தியாகிய சுவாமிகள் அங்கு வந்துவிட்டார்கள். ஸ்நானம் ஆவதைக் கண்டு, எல்லோருக்கும் உற்சாகம் ஊட்ட ஆனந்த நடனம் செய்தார்கள். முடிந்ததும் கிணற்றண்டையே அருகே சென்று நின்றுகொண்டார்கள். உடையவனுக்கு உறைவிடமாயுள்ள தமது திருமேனியை நோயுள்ள அடியார்கள் நீராடியதும் சுற்றுவது வழக்கம். அவ்வழக்கப்படி வலம் வராமல் போனால் அடியவருக்கு மனதில் குறை நேரும் என எண்ணி, அருளின் மிகுதியால் குருநாதர் அங்கேயே நின்றது எளிதில் வலம் வந்துகொள்ளட்டும் என்றே யாகும். சுலபமாகச் சுற்றியாயிற்று. பூரண சுகமும் கைகூடிற்று. அன்று மாலையும் அவ்வாறே நீராட்டம் நடைபெற்றது. அதுமுதல் சுவாமிகள் கட்டளைப்படி திரு. ஜகன்னாத் ரெட்டியார் சட்டத்தில் இருக்கத் தொடங்கினர். இவரை ஆட்கொளவே சுவாமிகள் அன்று அங்கு வந்தது போன்றிருந்தது. ரெட்டியார் சட்டம் ஏற்றுவிடவே அக்குடும்பத்திலுள்ளார் அனைவரும் சட்டம் எடுத்தனர்.

திருச்சாத்தனூர் பெரியகம்பத்தம் திரு. மு. முத்துராம ரெட்டியாரது மனைவியார் திரு. பங்கஜம்மாளுக்கு வலது கண் வெளி மூலையில் சதை வளர்ந்திருந்தது. ரெட்டியார் சட்டம் ஏற்றவர். ஆனால் அப்போதுதான் மணமா யிருந்தமையின் அம்மையார் சட்டம் எடுத்துக் கொள்ளவில்லை. கடலூர் மஞ்ச குப்பத்திலுள்ள தமது சிறிய தகப்பனார் திரு. பாஷ்யம் ரெட்டியார் வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். மஞ்ச குப்பம் பெரிய டாக்டரிடம் காட்டிக் கலியாணத்திற்கு முன்பே அச்சதையை ஆபரேஷன் செய்திருந்தார்கள். என்றாலும் அது மறுபடியும் வளர்ந்துவிட்டது. ஒருபெரிய கடலை யவ்வளவு காணப்பட்டது மல்லாமல், மேலும் வளர்ந்து கொண்டே போகும் போலிருந்தது. மறுபடியும் கத்தியாடுவதற்கு ஏற்பாடாயிற்று. உள்ளுக்கு மருந்து கொடுக்கவும் சித்தம் செய்தார்கள். அங்குக் கிடைக்காத மருந்துக்காகச் சென்னைக்கும் எழுதினார்கள்.

## அடியாரைத் தேர்தலும் அருளாலே ஆள்தலும்

இந்நிலையில் அவ்வம்மையாரைச் சாத்தனூருக்கு அழைத்து வர திவாரது மனுளர் ஏற்பாடு செய்திருந்தார். வைத்தியம் பூர்த்தியான பிறகு தான் அனுப்புவது என்ற கொள்கை மஞ்ச குப்பத்தாருக்கு இருந்தது. வந்து சிலநாள் இருந்து மறுபடியும் வைத்தியம் செய்து கொள்ளப் போய் விடுவதெனத் தீர்மானம் ஆயிற்று. அதன்படி அம்மையார் சாத்தனூருக்கு வந்தார்கள். அப்போது, அந்த ஊருக்கு ஒரே வீடாக ரிஷியாசிரமம் போன்ற ரெட்டியாரது கிருகத்திற்குச் சுவாமிகளும் எழுந்தருள நேர்ந்தது. விஷயம் சுவாமிகள் திருச்செவிகளுக்கு எட்டிற்று. அம்மையாரை அருகழைத்து வளர்ந்த சதையின் மீது தமது திரு விரலை வைத்தருளினுர்கள். அப்படியே சிலநாள் ஆண்டவன் அருளை, உறுத்து எண்ணி விரலால் தடவி வரும்படி ரெட்டியாரின் தங்கையாரும், சட்ட அனுஷ்டானத்தில் தீவிரப் பற்றுடையாரும், பிரஞ்சு இலாகா பிள்ளையார் குப்பம் மணியக்காரர் வீடு திரு. வெங்கடபதி ரெட்டியாரது வாழ்க்கைத் துணைவியாருமான திரு. சொர்ணம்பாள் அம்மாளுக்குச் சுவாமிகள் கட்டளையிட்டார்கள். அப்படியே செய்து வர பதினைந்து நாளைக்குள் சதை கரைந்து கொண்டே வந்து கடுகளவாயிற்று.

இதற்குள் மஞ்ச குப்பத்திலிருந்து கடுமையான தபால்கள் வந்து கொண்டிருந்தன. சென்னைக்கு எழுதிய மருந்து 'பார்சல்' வந்து விட்டதாகவும், ஆனால் திறந்து பார்த்ததில் புட்டி காலியாயிருந்ததாகவும் தகவல் கிடைத்தது. இன்னும் சிலநாளில் முழுதும் பற்றறும் என்று சுவாமிகள் சொல்லியும், அழைத்து வந்த போது நடந்த பேச்சின்படி, அம்மையாரை அனுப்பாமல் இருக்க முடியவில்லை. மஞ்ச குப்பம் சென்றதும், சதை கரைந்து போயிருப்பதைக்கண்டு திரு. பாஷ்யம் ரெட்டியாரும் பிறரும் மகிழ்ந்து சுவாமிகளது பெருமையை வியந்து பாராட்டினர். மேலும் என்னத்திற்கு மருந்து என்று விட்டு விட்டார்கள். அம்மையாரோ சட்டம் ஏற்று விட்டமையால், மற்றுோர வற்புறுத்தினும் மருந்து அருந்த இசையாத உறுதி பூண்டிருந்தார்கள். கடுகு அளவு நின்றது, மேலும் வளராமல் கடுகளவாகவே நின்றுவிட்டது. சுவாமிகளது கட்டளைப்படி இன்னுஞ் சிலநாள் சாத்தனூரில் இருந்திருந்தால் அக்கடுகும்

கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும். அம்மையார் அவரது பர்த்தாவுக்கு ஏற்க அனுஷ்டானத்தில் பரமப் பற்றுடையவராக ஒழுகி வருகின்றனர். இருவரது இயைந்த பக்குவத்தையும் அறிந்த சுவாமிகள் திருச்சாத்தனூரில் உடையவனது அருட்கொடி நாட்டப் பெற்றிருக்கின்றது என்று திருவாக்கு அளித்தார்கள். அதன் படியே ஆண்டவனது அருளைப் பரவச் செய்ய அவ்வூர் அருந்துணையாக நிலவுகிறது. அருட்கொடியேற்ற விழாவும் அங்கே ஆண்டு தோறும் சுவாமிகள் திருநட்சத்திரத்தன்று நடக்க ஆரம்பித்து விட்டது.

அடியார்களது வீடுகளிலே, சுவாமிகளுக்கு வந்தனை வழிபாடு நடக்கின்ற காலங்களிலே, சில அற்புதமான செய்திகள் நிகழ்வதுண்டு. சுத்த மனதுடைய சின்னஞ் சிறுவர்கள் தம்மை மறந்து, தம் நிலையற்று, சுவாமிகள்பால் வருவார்கள். 'யார்' எனக் கேட்க, 'விநாயகர்' என்றும், 'சுப்பிரமணியம்' என்றும், 'நடராஜர்' என்றும், பிறர் பிறர் என்றும், கூறுவர். கணபதி போல அசைவர், அறுமுகர் போல ஆடுவர், நடராஜர் போல நடிப்பர். இந்நாமங்களைக்கொண்டு ஆண்டவனை வழிபடும் அடியார்களது மனோபீஷ்டங்களை, ஆவேசங் கொண்ட அச்சிறுவர் வாயிலாகவே அவரவர்கள் அறிந்துகொள்ளும் படி சுவாமிகள் குறித்து மௌனமாயிருப்பார்கள். சுவாமிகளது உள்ளத்தைக் கோயிலாகக்கொண்டு எழுந்தருளிய, எல்லாம் வல்ல எங்கும் உள்ள உடையவன் வேறு, பலரூப நாமங்களோடு பலசமயத்தவர் வழிபடும் ஆண்டவன் வேறு, என்ற நினைவு அடியவர்களது மனதில் தோன்றலாகாது என்ற கருத்தோடேதான், பரமன் இவ்வாறு சிறுவர்கள்மீது பல பெயர்களோடு வந்து அருளியது போலும் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

பேய் பிசாசு பிடித்த மகளிரையும், மோகினி முதலிய பற்றிய ஆண்மக்களையும், சுவாமிகளுக்கு வழிபாடு நடக்கும்போது அவரவர்களது உறவினர் அழைத்துவருவர். இருந்தது போல் இருந்து கூட்டத்தையும் தள்ளிக்கொண்டு, பேயும் பிசாசும் மோகினியும் பிறவும் உடையவர்கள், சுவாமிகளண்டை ஆவேசத்துடன் வந்து அமர்வர். வரலாற்றைக் கூறுவர். வலம் வருவர். சுவாமிகள், "விட்டுப் போங்கள். இனி வருதலாகாது" என்றதும் கூச்சலிட்டுக்

கொண்டு போவர். பிறகு அவற்றால் பிடிக்கப் பெற்றவர் நீராடி நீறணிந்து சுவாமிகளை வந்து வழிபட்டுக் குறையற்று வாழ்வர்.

இவற்றையெல்லாம் கண்டு கொண்டிருந்த மோழாண்டிகுப்பம் முத்துசாமிப் படையாட்சி யென்பவர், தானும் ஒரு தெய்வங் கொண்டவர்போல சுவாமிகளுடைய திருமுன் ஆடினால், மக்கள் பிறகு தன்னை நாடி குறியும் பிறவும் கேட்க வருவர். ஜீவனத்திற்கு வழியேற்படும் என்ற கருத்தோடேயோ, அல்லது 'பேயும் பிசாசும் ஆடுபவர் பொய்யாகவே அங்ஙனம் ஆடுகின்றனர், ஒரு பேயும் பிடிக்காமலே நானும் அவ்வாறு ஆடி அவர்களுடைய பொய்ம் மையை வெளிப்படுத்தவேண்டும்' என்னும் தப்பெண்ணத்தோ டேயோ, சுவாமிகளுக்குத் திருச்சாத்தனூரிலே வழிபாடு நடக்கும் நேரத்தில் ஆவேசங்கொண்டவன்போல ஆடினான்! சுவாமிகள் உண்மையை யறிந்து கொண்டார்கள் என்று சொல்லவேண்டுவ தில்லை. அனைவருக்கும் அவ்வுண்மையைத் தெரிவிக்கக் கருதினார் கள். ஆனத்தூர் திரு ஜகன்னாத ரெட்டியார் குமாரர் இளஞ் சிறு வர் இராமலிங்கத்தின்பேரில் ஆவேசம் வந்தது. அவர் பிரம்பு கொண்டு படையாட்சியை நன்றாகப் புடைத்து உண்மையைப் படையாட்சியின் வாயாலேயே வெளிப்படுத்தச் செய்தார். படை யாட்சி மன்னிப்பு கேட்டுக்கொண்டு விடைபெற்று ஓடிவிட்டான்.

திருக்கோயிலூர் தாலூக்கா திருவெண்ணெய் நல்லூரில் ரெவி னியூ இன்ஸ்பெக்டராக இருந்த சாம்பசிவ அய்யருக்கு வாய்வுத் திரேகம். வலதுபுறம் முழங்காலிலிருந்து யானைக்கால். பாதம் அரையடி உயரத்துக்கு மேலிருக்கும். அடிக்கடி காய்ச்சல் வரும். வாயுவினாலே கைகால் பிடிப்பும் உண்டு. நல்ல உள்ளம். ஆண்ட வனை வழிபட்டு வந்தவர். தொழில் முறையிலே சுற்றுப்பயணம் செய்துவரும்போது திருச் சாத்தனூரில் சுவாமிகள் வந்திருப்பது அறிந்து அங்கே சென்றார். சுவாமிகள் ஒரு நாற்காலியில் அமர்ந் திருக்க வழிபாடு நடந்துகொண்டிருந்தது. எதிரே நின்றார். அவ ரது உள்ளத்தை யறிந்து நாற்காலி போடும்படி ரெட்டியாரிடம் சுவாமிகள் சொன்னார்கள். நாற்காலி வந்தது. அய்யர் உட்கார்ந் தார். வழிபாடு முடியும்வரை இருந்து, வேடிக்கை காண்பவர்

போலப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுப் போய் விட்டார்.

சாத்தனூருக்கு அடுத்துள்ள மேலமங்கலத்திலே தம்மனைவியாரோடு ஒரு வீட்டில் இறங்கி அங்குத் தணிக்கை செய்து கொண்டிருந்த அய்யருக்கு அன்று இரவு கனவில், சுவாமிகளுக்குச் சாத்தனூரில் வழிபாடு நடந்த வைபமும், அருகே ஒரு பெரியார் நின்று சுவாமிகளைச் சுட்டிக்காட்டி, எல்லாம் வல்ல ஆண்டவன் தாண்டவமிடும் திருக்கோயில் இது, பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் இவர், பிரிவிலா அடியார்க்கு என்றும் தீரா நோய் தீர்த்தருளவல்லான் இவர், என்னும் பொருள்பட ஏதேதோ அய்யருக்குச் சொன்னது போன்ற தோற்றமும் ஏற்பட்டது. உடனே அய்யர் விழித்து எழுந்து தாம் சுவாமிகளை வணங்கிக் கொள்ளாது போனதற்காக வருந்தி, எப்போது விடியும் என்று பொறுத்து, சுவாமிகளைத் தரிசிக்க விரைந்து சாத்தனூருக்கு வந்து கொண்டிருந்தார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்னச் சுவாமிகள் எதிரில் வண்டியில் வருவதைக் கண்டு, அருகணைந்து, நிறுத்தச் சொல்லி, வண்டியை மூன்று பிரதக்ஷிணம் வந்து, விழுந்து வணங்கிச், சுவாமிகளை வீட்டுக்கு அழைத்துச் சென்று, குடும்பத்தோடிருந்து சாத்தனூரில் நடந்தது போன்ற வந்தனை வழிபாடுகள் ஆற்றினார். அன்று முதல் சட்ட அனுஷ்டானத்தைத் தாமும் மனைவியும் ஏற்றுக் கொண்டனர்.

சிறிது காலத்திற்குள் வாத நோயெல்லாம் வந்தவழி தெரியாமற் போயிற்று. காலும் பாதமும், யானைக்கால் ஒரு காலத்தில் இருந்ததென்று எண்ணவும் முடியாதபடி சுத்தமாய் விட்டன. சட்ட அனுஷ்டானம் தவறாமற் படிக்கே, பச்சைநீர்ப் பத்தியத்திலேயே அவரது மனைவியாருக்குப் பல பிரசவங்கள் நடந்தன. அய்யர் சட்டம் பிறழாது ஒழுகிப் பல ஆண்டுகள் உத்தியோக முறையில் உயர்ந்து வாழ்ந்து வந்து, உடையவன் சேவடி உற்றனர்.

ஷை திருச்சாத்தனூருக்கு அருகாமையில் உள்ள அண்டராய நல்லூரில் கம்பத்தம் திரு. ஆதி மூர்த்தி நாயுடு என்பவர் வீடு கட்டத்தொடங்கி முடிக்க முடியாது விட்டு விட்டிருந்தார். கிரக தோஷங்கள் இருப்பதாகச் ஜோசியர்கள் சொன்னார்கள். அம்மனையே

ஆகாது என்றார்கள். வாசற் படிகளை அடியோடு மாற்றி அமைக்க வேண்டும் என்றார்கள். கட்டட வேலையை மறுபடியும் ஆரம்பித்ததால் குடும்பத்திற்கு ஏதாவது கேடு நேர்ந்து வந்தது. சுவர்களெல்லாம் தளம் போடு மட்டம் எழும்பிய உடனே நாயுடு மாண்டார். சுமார் பதினைந்து வருஷங்களாகக் கட்டிடம் அப்படியே நின்றுவிட்டிருந்தது. நாயுடுவின் மனைவியார் திரு. மூர்த்தியம்மாள் சட்ட அனுஷ்டான முடையவராயிருந்தார். அடியாரை ஆளச் சுவாமிகள் அவ்வூருக்குச் சென்றபோது, அக்கட்டிடத்தைப் பற்றிச் சொன்னார்கள். உடையவன் அருள் இருக்க ஒரு குறையும் வராது, மறுநாளே தொடங்கி அந்த கட்டிடத்தைப் பூர்த்தி செய்யும்படி சுவாமிகள் கட்டளையிட்டபடி அப்படியே கட்டிடம் கட்டி முடிந்தது. கிருகப் பிரவேசத்திற்குச் சுவாமிகள் எப்படியோ அங்கு வந்துவிட்டார்கள். ஒருநாள் அவ்வீட்டில் சுவாமிகள் தங்கியிருந்து அவ்வீட்டுக்குரிய அடியார்களது மனதில் இருந்த அச்சத்தை அறவே போக்கினார்கள். ஒரு குறையும் இல்லாமல், அவ்வீட்டார் பெரு வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வூருக்கு அடுத்துள்ள தி. மழவராய நல்லூரில் சட்டத்தில் சேர்ந்த திரு. வேங்கடசாமிநாயுடுவின் சிறியதாயார் பிரசவத்திற்குப் பிறகு நோய்வாய்ப்பட்டுப் பிழைப்பது அரிது என்னும் நிலையில் இருந்தார். சுவாமிகள் அவ்வழியே வரக், குழந்தையைச் சுவாமிகளது சேவடிகளில் கொணர்ந்து இட்டனர். தடவிக் கொடுத்துத், தள்ளாடித் தடுமாடி அங்கு வந்த அக் குழந்தையின் தாயாரது சிரசின்மீது சிறிதுநேரம் சுவாமிகள் திருக்கரம் சூட்டினார்கள். அவ்வம்மையார் ஆச்சரியமாக முழுநலம் உற்றார்கள். குழந்தையும் அறிவிற் சிறந்த ஆண்மகனாக இருந்துவருகிறான்.

திருச்சாத்தனூர் ரெட்டியாரது தங்கை திரு. சொர்ணம்பாள் அம்மையின் மாமனார் திரு. பாபு ரெட்டியார் அழைப்புக்கு இணங்கிச் சுவாமிகள், பிரெஞ்சு இலாகா பிள்ளையார்குப்பம் என்னும் அவரது கிராமத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கு அவருடைய தம்பி மனைவியாகிய திரு. அமிர்தாம்பாள் அம்மாளுக்கு மண்டைக் கறுப்பான் பல வருடங்களாகத் தீரமுடியாத வியாதியாகத் தொந்திரவு

செய்துகொண்டு வந்திருந்தது; அண்ணார் மருமகள் மங்கையம்மாளுக்குச் சுவாசகாசம் இடைவிடாது இடைஞ்சல் தந்துவந்தது. சுவாமிகளிடம் இருவரும் சென்று வழிபட்டுச் சட்டம் ஏற்க, அப்பிணிகள் இருந்த இடம் தெரியாமற் போயின. ரெட்டியார் வீட்டில் இருவரும் இன்னும் சுகமாக வாழ்ந்து வருகின்றனர். சுவாமிகளுக்குப் பிள்ளையார் குப்பத்தில் செலுத்திய அதிதீவிர அன்பின் உண்மையைச் சுவாமிகள் உணர்ந்து, சட்ட வளர்ச்சிக்கு அவ்வூர் தலைநகர்போல விளங்கும் என்று ஆசிர்வதித்தார்கள். சுவாமிகள் திருவாக்கு என்றும் எள்ளளவும் பழுதாவதில்லை என்பது இன்னும் அவ்வூரில் திரு. ரெட்டியார் வீட்டில் விபூதி விலாசத்தால் நடக்கும் அருள் அற்புதங்கள்கொண்டு அறியலாம்.

வடஆற்காடு ஜில்லா வாணியம்பாடியிலே சுவாமிகள் எழுந்தருளியிருந்தபோது சுவாமிகளது தரிசனத்தினாலே பித்தபாண்டு நீங்கியதும் அன்புகனிந்த அடியவராயிருந்த திரு. சி. மு. முனியப்ப செட்டியாரது உறவினர் குடும்ப வழக்கப்படி குழந்தைகளுக்குக் காதுகுத்தி மயிர் வாங்குவதற்காகக் குலதெய்வத்திற்கு ஆடு கோழி பன்றி இவை யறுத்துப் பூசை போட ஏற்பாடு செய்தனர். சிறு தேவதை வழிபாடு கூடாதென்றும் பலியிடுதல் தவறு என்றும் சுவாமிகள் விளக்கினார்கள். எதிர்ப்பு அளவில்லாமல் ஏற்பட்டது. உடையவன் அருளுக்கு முன் யார்தான் என்ன செய்யமுடியும்? பலி நிற்பாடு செய்யப்பெற்றுவிட்டது. உடனே அக் குடும்பத்தில் செட்டியார் தமக்கைக்குக் காலரா கண்டது. குல தெய்வத்திற்குப் பலி நிறுத்தியதனால்தான் வந்தது என்று குடும்பத்தார் குதித்துக் கூத்தாடினர். எதுக்கும் அஞ்சவேண்டாம் என்று சொல்லிச், சுவாமிகள் பேதிகண்டவரை நீராட்டுவித்து நீறு பூசச் செய்து முழுதும் நலமுறுத்தினார்கள். அம்ம! என்று அனைவரும் ஆச்சரியமுற்றனர்.

அடுத்துள்ள அலசந்தாபுரத்தில், செட்டியாரது நண்பர் திரு. ஸ்ரீரங்கக் கவுண்டரது குமாரருக்குக் கடுமையான காய்ச்சல். ஜன்னி கண்டிருந்தது. கைவிட்ட நிலை. நினைவற்ற நேரம். பலவித வைத்தியமும் பல தேவதைப் பிரார்த்தனையும் பயனில்லை. சுவாமிகள்

அங்குச்சென்று, பிணியாளியைப் பேரிட்டு அழைத்தார்கள். பிரக்ஞையற்ற பேர்வழி எப்படிப் பேச முடியும்? சிரசில் திருக்கரம் வைத்து அநுக்கிரகித்த உடன் கண் விழித்துப் பெயர் சொல்ல முடிந்தது. வேட்கை மிகுதியால் பிணியாளி இளநீரும் விளாம் பழமும், சாதநீரும் வேண்டும் என்றார். கொடுக்கலாம் என்றார்கள் சுவாமிகள். எல்லோரும் அஞ்சினர். பழுதேதும் இன்றி பரம சௌக்கியம் ஏற்பட்டது. ஆண்டவன் அருளை வியந்து ஆனந்தம் அடைந்தனர்.

இதுவரை, இங்கொன்றும் அங்கொன்றும், முதலிலேயே சொல்லியபடி, சுவாமிகள் ஆற்றிய அருள் அற்புதங்கள் கூறப்பெற்றன. ஒரு காசும், ஒருவித நன்றியும், ஒருவரது புகழ்ச்சி ஒரு துளியும் எதிர்பாராது சுவாமிகள், ஆண்டவனது அருளை வழங்கி வந்த விதத்தை யறியும் அறிஞர்கள், உலகத்திலே பலவித சௌகரியங்களை எதிர்பார்த்து மந்திரத்தாலும், தந்திரத்தாலும் மக்களுக்கு நன்மை கூட்டுவிப்பதாகச் சொல்லும் போலிச் சாமிகளையும் இறைவன் அருளால் சிறிது ஆற்றல் பெற்று அதுகொண்டு புகழ் விழைந்து சித்து விளையாடி விட்டுப் போகும் சில அடியார்களையும், மனத்து எண்ணி, இவர்களையும், அருவமான எல்லாம் வல்ல எந்தையே உருவமாக வந்தது போன்ற நமது சுவாமிகளையும் ஒத்துப் பார்க்கவே மாட்டார்கள். சுவாமிகள் இங்கும் அங்கும் சென்று ஆண்டவன் அருளை வழங்கினார்கள். அடியார்களை ஆட்கொண்டார்கள் என்று சொல்வதைக் காட்டிலும், ஆண்டவனே சுவாமிகளது திருமேனியைத் திகழ்தரும் இருப்பிடமாக்க் கொண்டு அற்புத அருளாட்சி புரிந்து வந்தாரென்று கூறுவது பொருத்தமானதாகும்.

### iii பாடற் பான்மை

சுவாமிகள் அடியார்களை ஆளச்சென்ற இடங்களில் உள்ளத்தில் உதயமாகும் பாடல்களை அடியாரிடம் சொல்லி எழுதிக்கொள்ளும்படிக் கூறுவது வழக்கம். அப்படி ஆங்காங்குள்ள அடியார்களிடம் சேகரிக்க முடிந்த சில பாட்டுக்களை அச்சு செய்யப்பெற்றிருக்கின்றன. இன்னும் எத்தனையோ வெளிக்கு வராமலே இருக்கும் என்

பது திண்ணம். அச்சாயிருக்கும் பாடல்களைப் படிக்கும்போது, சுவாமிகள் புஸ்தகங்கொண்டு கல்லாமலேயே, ஆண்டவன் அருளால் ஞானம் பெற்றிருந்த உண்மை இனிது புலனாகும்.

பாடல்களிலே இலக்கியச் சுவையும், இனிய ஓட்டமும் தாண நிறைகின்றன. வண்ணப்பாக்களில் வளமை மலிகின்றது. அருள் கொண்டு பாடிய பாடல்களில் அவை அடர இருப்பது அதிசய மல்ல. சுவாமிகள் உடையவனது பூரண அருளைப் பெறுவதற்கு முயன்ற முயற்சியைப் படம் எடுத்ததுபோன்றிருக்கின்றன பாடல்கள். இறைவனோடு எம்மட்டு இயைபு கொண்டு இருந்தார்கள் என்பதையும் இனிது காட்டுகின்றன. அவை அன்பர்கட்கு அருந்துணையாயிருக்கக் கூடிய அரும்பொருளாகும்.

# VIII
# அடியவரது அன்பும் அதிசய அநுபவமும்

## 1. அன்பு செய் முறைகள்

i. வருகை வேட்கை.

சுவாமிகள் ஒரு முறை வந்துவிட்டுச் சென்ற பிறகு, மறு முறை எப்போது எழுந்தருளுவார்கள் என்ற ஆவலே அடியார்களது உள்ளத்தில் நிரம்பி யிருக்கும். எக்காலத்தும் எதிர்பார்த்தபடி இருப்பார்கள். குருநாதரைக் காணும் அவாவினாலே ஏக்கங் கொண்டு, உண்ணவும் தோன்றாமல், பூரண விரதமாகவே அதிதீவிர பக்குவமுள்ள அடியவர் இருந்து விடுவதுண்டு. மனதுக்கோ உடலுக்கோ, தமக்கோ, பிறர்க்கோ, ஏதாவது இடுக்கண்கள் நேர்ந்து தம்மால் தெளிவித்துக் கொள்ள முடியாது கலக்கம் ஏற்பட்டுத் தயங்குகின்ற ஆபத்தான வேளைகளில் குருமூர்த்தியை உறுத்து நினைத்து உடனே வந்து அருள்புரியாரா என்று அடியவர் உருகுவர்.

சுவாமிகளது அருள் ஆசிர்வாதத்தைக் கொண்டு, அடியவர் ஏதாகினும் புதியதொரு அதிசயம் ஆற்றிய காலத்தும், அவர்களது திருநோக்காலோ, தாடனத்தினாலோ தீரத் தொடங்கிய தீர்தற்கு அரிய குறைகள் பற்றறத் தீர்ந்து, பார்த்திருந்தோர்க்கு விந்தை விளைத்த காலத்தும், அதற்குமுன் ஏதுக்கும் உதவாது தீதுற்ற இடம் என எண்ணப்பட்டிருந்த ஸ்தானங்களில் அவர்களது திருவடி தீட்சையினாலே, திருமாளிகைகளும், மருமலர் வனங்களும் ஏற்பட்டு அவற்றில் நலம்பல நடக்கின்ற காலத்தும், அதற்கு முன் பல காரணங்களால் கைகூடாது எனக் கைவிடப்பட்டிருந்த மணங்களும் பிறநலங்களும் அவர்களது அருந்திரு வாக்கின் பெருந்தகைமையினால் இனிது கைகூடி இன்பகரமாகக் கைகூடுகின்ற காலத்தும், அடியவர் சுவாமிகளது நல் வருகையை நயந்து மனமாரக் கோருவர்.

ii. நல்வரவேற்பு.

அத்தகைய காலங்களில் சுவாமிகள் கதுமெனக் காட்சி கொடுக்கும் அற்புதம் ஆச்சரியமா யிருக்கும். அதுபோது அடியவர் உள்ளங்கள், கமலங்களைப் போல் கமழ்ந்து மலரும். அடியவர் ஆனந்தித்து ஆரவாரிப்பர். சுவாமிகளது பரங் கருணையைப் பன்னிப் பன்னிப்பேசுவர், உன்னி உன்னி உருகுவர். அவரது கவலைகளும் மேற்கொண்டிருந்த வேலைகளும், பிறவும், அவரது மனங்களை விட்டு மறைந்து விடும். குருநாதரை வரவேற்பதிலும், அருகிருந்து அத்தியந்த அன்போடு உபசரிப்பதிலுமே அவரது உள்ளங்கள் சென்று ஊன்றிக் கிடக்கும்.

பல ஊர்களில், சுவாமிகளை வரவேற்பதற்கென்றே கொடிகளும், தோரணங்களும், குடைகளும் கவரிகளும் போன்ற சின்னங்களைப் பட்டாலும் பரிவாலும் பண்ணி வைத்திருந்தனர். அவற்றின் மீது, "ஸ்ரீ ரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை" "ஸ்ரீ சற்குரு நாதர் துணை" என்று பூ எழுத்துக்களால் எழுதப் பெற்றிருக்கும். சுவாமிகள் வருகையை முன்னரே அறிய நேர்கின்ற காலங்களில் வரவேற்பின் பெருமையை வாயெடுத்துச் சொல்ல இயலாது. வரும் வழியெல்லாம், மாவிலைத் தோரணங்களும், வாழைமரச் சோலைகளும், மணமலர்க் கோவைகளும் மண்டபப்படிகளும் மலிந்து விடும். வாத்திய வகைகள் வழிகாட்ட, ஊர்வலமாக ஆர்வமது அடர, சுவாமிகளைக் கோரிய இடத்திற்குக் கொண்டு செல்வார்கள்.

iii திருவடிபூசை

சுவாமிகளைக் கண்ணுற்றதும், அடியவர் அன்பு மீதூர்ந்து, வலம் வந்து, அடிபணிவது வழக்கம். சுவாமிகளுக்குப் பாதக் குறடாவது பிற ஆடம்பரங்களாவது கிடையாது. வீட்டுக்கு எழுந்தருளியதும் திருவடிகளை நீர்கொண்டு மஞ்சனமாட்டி, ஆசனத்து அமர்த்தி, ஆராதனைசெய்து பிரதக்ஷணம்செய்து, சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுவர் அடியவர். பின்னரே மற்ற உசாவல்கள் நடக்கும்.

தினந்தோறும் காலை அடியவர் பலரும் நீராடியதும் கூடி சுவாமிகளை வீட்டின் நடுக் கூடத்தில் நாற்காலியிட்டு அமரக்கோரித்

திருவடி பூசை செய்வர். நாற்காலியின் இருமருங்கும் குத்து விளக்குகள் சுடர் விட்டு எரியும். ஆலயங்களிலே ஆண்டவனது ஸ்தாவர மூர்த்தங்களுக்கு அபிஷேகம் செய்யும் அரும்பொருள் பலவும் மிகவும் பக்தி சிரத்தையோடு சேகரித்து வைத்துக்கொள்வர். தீபாராதனைக்குரிய தட்டுகளும் அடுக்குகளும் எங்கிருந்தாவது அங்கு வந்து சேர்ந்துவிடும். மங்கள வாத்தியமுழக்கத்தினிடையே, பாதபூசை தொடங்கும். முறைப்படி திருமஞ்சனப் பொருளை ஒவ்வொன்றாக எடுத்துத் திருவடிகளுக்கு அபிஷேகம் செய்வர். மஞ்சனமாட்டிய நீரும் பிறவும் ஒரு துளியும் புறத்தே சிந்தாது பார்த்துப், பாத்திரம் ஒன்றில் பத்திரப்படுத்துவர்.

பின்னர், பலவித நறுமலர் கொண்டு வழிபடுவர். மாலைகள் தொடுத்துச் சூட்டி மகிழ்வர். கனிவகைத் திருத்திக் குவித்து நிவேதிப்பர். இவை ஆனபின் அடுக்கு அடுக்காகத் தீபாராதனைகள் நடைபெறும். ஆண்டவன் நாமம் கூறி ஆரவாரித்து ஆனந்திப்பர். வலம் வந்து வணங்குவர். குறையெல்லாம் மனத்தெண்ணி அவை தீரக்கோருவர். நலமெலாம் நல்க வேண்டி நாட்டமுடன் பணிவர். சுவாமிகளின் கட்டளையின்படி அவரவர்களது மனோபீஷ்டங்கள் நிறைவேறுமென்பதற்கு அறிகுறியாகச் சுவாமிகள் விபூதி வழங்கும்படி அடியவரொருவரைப் பணிப்பார்கள். எல்லோரும் பெற்றுக் கொண்டதும், மஞ்சனமான நீரும் பொருளும் வழங்கப்பெறும். மிக்கப்பரிவோடு ஏற்றுப் பயன் பெறுவர். அவ்வாறே மாலைக் காலத்தும் மஞ்சனமாட்டுவது நீங்கலாக மற்ற வழிபாடு நடக்கும்.

பாதபூசை நடக்கும் காலத்திலே சுவாமிகளது தெய்வத் திருத்தோற்றம், மற்றக் காலங்களிற் காட்டிலும் மகிழ்ச்சியும்,மயிர்க் கூச்சும் விளைவிப்பதாகக் காணும். இத்தகைய வழிபாட்டால் சுவாமிகளுக்கு ஆவது ஒரு நன்மையும் இல்லை. ஆண்டவனுக்கு அவர்களது திருமேனி நடமாடும் கோயிலாக அமைந்திருந்தமையினால், ஆண்டவனை ஆலயங்களில் உள்ள ஸ்தாவர மூர்த்தங்களில் வழிபடுவதைப் பார்க்கிலும், அவர்களது அரும்பெருந் திருமேனியில் வணங்குவது மிகவும் சிறந்த முறையாகும் என்று சாஸ்திரங்கள் இயம்புவதற்கு ஒப்பவே அடியவர் அவ்வாறு வழிபாடு ஆற்றிவந்தனர்; சுவாமிகளும் அவ் வழிபாட்டை ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்கும் சிந்தையால் அருளோடு ஏற்க இசைந்துவந்தார்கள்.

சுவாமிகள் தமது அன்னையார்க்கு இரெட்டியப்பட்டியில் செய்துவந்த பாதபூசையைக் கண்டே, அடியவர்கள் முதன்முதலில் இம்முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. மற்றப்படி சுவாமிகளே, தமக்குத் திருவடி வழிபாடு ஆற்றும்படி சொன்னது கிடையாது. அவர்களது திருமேனியை இருப்பிடமாகக் கொண்டு இலங்கும் இறைவனது இன்னருள் அடியவர்களை அத்தகைய பூசனை செய்யும்படி தூண்டியிருக்கவும் கூடும்.

iv உண்மை உபசாரம்

அடியவர் அவரவரது சக்திக்கு ஏற்றபடி, சிறிதும் குறைவு இருத்தலாகாது என்னும் சிந்தனையோடு, உபசாரம் செய்வர். உபசாரத்திற்குரிய பொருள்களின் மதிப்பையோ அவை ஆக்கவும் அமைக்கவும் பெற்றிருந்த திறமையின் சிறப்பையோ சுவாமிகள் கருதமாட்டார்கள். அவற்றை ஊடு உருவிப் பாயும் உண்மை அன்பின் பெருமையையே போற்றி அடியவர்கட்கு அருள் புரிவார்கள். இராமநாதபுரம் அரண்மனையில், அரசரின் நெருங்கிய உறவினரான சோமநாத தேவரையும் திரு. சீதாலக்ஷ்மி நாச்சியாரையும் அவரது தங்கையாரையும் அடியவராக ஆட்கொண்டு அரண்மனையில் அரிய உபசாரத்தையும், பிற மாளிகைகளில் செல்வத்திற்புரளும் பெருந் திருவாளர்களது பேருபசாரத்தையும் பெற்றவர்களானாலும் உண்ண எத்தகைய எளிய உணவும், இருக்க எத்தகைய தாழ்ந்த இடமும் சுவாமிகட்குச் சாலும். சுவாமிகள் எதிர்பார்ப்பது எந்தைபால் வைத்த உறுதியான உள்ளமும் உண்மையான அன்புமேயாம். சுவாமிகள் எவ்வளவு சிறிதளவு அமுது செய்கிறார்கள், எத்துணை இலேசான சாத்வீகமான ஆகாரம் சேர்த்துக் கொள்கிறார்கள் என்பதைக் கூர்ந்து அறிந்து கொள்ளாத அடியவர்கள் எவ்வளவோ முரட்டுத்தனமான உணவையும் இட்டிருக்கிறார்கள். சுவாமிகள் இது வேண்டும் அது வேண்டும் என்று கேளார்கள். குறிப்பறிந்து செய்து படைப்பது அடியவர்களது உண்மை உபசாரத்தின் உரிய பகுதியாக இருக்கவேண்டி இருந்தது.

சுவாமிகள் எழுந்தருளி விட்டால், வீடு கலியாண வீடுபோல் ஆய்விடும். அவ்வீட்டார் தம்முடைய பந்துமித்திரர்களுக்கெல்

லாம், ஆள் அனுப்பியோ, கடிதம் எழுதியோ, வரவழைத்து விடுவார்கள். அடியவர் கூட்டம் நிறைந்திருக்கும். வழிபாடு ஆனதும், சுவாமிகளைச் சுற்றி அடியவர் அமர்ந்து அவரவர்கட்கு உண்டாயிருந்த சந்தேகங்களைக்கேட்டு நிவர்த்தித்துக் கொள்வர். சுவாமிகள் அமர்ந்தபடியேயோ, உலவினபடியேயோ அடியவர்கட்குச் சட்ட அனுஷ்டானத்தின் பெருமையை விளக்கி வருவார்கள். சுவாமிகள் விடியல் நீராட்டத்திற்கோ, மாலை உலாவிற்கோ செல்லுங் காலத்தில் அடியவர் கூட்டம் ஆரவாரிப்புடன் சூழ்ந்து செல்லும் காட்சி ஆனந்தக்காட்சியாக இருக்கும். சுவாமிகள் தங்கியிருக்கும் நாட்கள் வரையில், மங்கள வாத்தியம் முழங்கிக் கொண்டிருக்கும்.

சுவாமிகளை உபசரிப்பதிலே ஈடுபட்ட அதிதீவிர பக்குவமுடைய அடியவர் சுவாமிகள் பணிவகையிலேயே கவனமும் காலமும் முழுதும் செலுத்தியவராய் உண்பதையும் மறந்திருப்பர். பத்து நாள் பதினைந்து நாள் ஆனாலும் நீரும் பருகாமல் இருந்தும், சோர்வு சிறிதும் கொள்ளாமலும் வாட்டம் ஏதும் இல்லாமலும் மிக உற்சாகத்துடன் பணியாற்றி வருவர். அவரது தலை அன்பின் தகுசிறப்பினைச் சுவாமிகள் எப்படியோ அறிந்து அருள் கனிந்து ஆசிர்வதிப்பார்கள். அவரே ஆண்டவன் அருளை அனைவர்க்கும் வழங்கவல்ல அருமை அடியவர் என்று அகமகிழ்வார்கள்; உடையவனது சட்டத்திற்கு உயர்வு கூட்டுவிக்கவல்ல உண்மைச் சட்டாம் பிள்ளை என்பார்கள்.

அடியவர்கட்கு அமுது படைக்கும் வேளை வந்ததும் சுவாமிகள் உலாவிக்கொண்டே அடியார்களை உபசரிப்பது உல்லாசமாயிருக்கும். இலை போடும் நேரத்தில் திடீரெனச் சுவாமிகளைச் சேவிக்க எதிர் பாராது எத்தனையோ பேர் வந்து விடுவதுண்டு. செய்த உணவு எல்லோருக்கும் எப்படிப்போதும் என்று வீட்டார் அஞ்சுவர். சுவாமிகள் அவர்களது அச்சத்தை அறிவார்கள். அருள் சுரப்பார்கள். அருகழைத்து, உற்சாகத்தோடு "உடையவன் பொறுப்பு. போட்டும் இல்லை" என்பார்கள். நூறு பேருக்குச் செய்தது இருநூறு பேருக்கு எங்ஙனமோ திட்டமாய்ப் போய் விடும்! வீட்டார் வியந்து ஆண்டவன் அருளுக்கு அகங்களிப்பார்;


மற்றும் அறிந்து மகிழ்வர். எவ்வளவு சிரமமானாலும், எத்துணைச் செலவானாலும் வீட்டாருக்குத் துளியும் தளர்ச்சி தோன்றாது. சுவாமிகள் பொருட்டாகச் செலவு செய்யப் பெறும் ஒவ்வொரு சல்லியையும் உடையவன் கணக்கெடுத்துப் பன்மடங் காக்கித் திரும்பவும் அவ்வீட்டாருக்கு அருளும் பெருமையை அடியவர்கள் அநுபவத்தில் அறிந்திருந்தார்கள். சுவாமிகள் சம்பந்தமாக ஏற்படும் சிரமத்திற்குப் பதிலாகப் பன்மடங்கு சுகம் கைமேல் பயனாய்க் கிட்டுவதையும் வீட்டாரும் பிறரும் உணர்ந்து உடையவன் கணக்கை உவப்பர்.

சுவாமிகள் ஓர் இடத்தைவிட்டுப் புறப்பட்டு விடும்போது வழிகூட்டி அனுப்பும் அடியார்களது முகத்தைப் பார்க்க முடியாது. கஷ்டப்பட்டுத் தேடிய கருந்தனத்தையெல்லாம் கள்வர் பறிக்குக் கொடுத்த தனவந்தர் போல, உள்ளம் பறிகொடுத்து உடைந்து காண்பர். மனதைக் களவாடுகின்ற மகிபராகிய உடையவனது நடமாடுங் கோயிலாகிய சுவாமிகள் நகர்ந்து செல்லும்போது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளாதுமா செல்வார்கள்? சுவாமிகள் சென்ற பலநாள் வரையில் ஊணும் உறக்கமும் உரிய அளவு ஏற்க இயலாது ஏக்கம் உற்று இருப்பர். எந்தையின் அருள்தான் அவர்களை ஏன்று எடுத்து ஆற்றி ஆளாக்கும்.

## V உற்சவ ஊர்வலம்

இறைவனுக்கு என்றும் இருப்பிடமான சுவாமிகளது தெய்வத் திருமேனிக்கு மஹா அபிஷேகங்கள் நடத்தி விசேஷ அலங்காரங் கள் செய்து, புஷ்ப விமானத்தில் எழுந்தருளப்பண்ணி ஊர்வல உற்சவம் நிகழ்த்தவேண்டும் என்று அடியவர்கள் அவாவினார்கள். தம் செயலற்று, ஆண்டவன் அருள் செலுத்திய வண்ணம் இயங்கி வந்த சுவாமிகள் ஏது பதில் சொல்வார்கள்? அத்தகைய உற்சவம் தமக்கெனஎண்ணினால் அல்லவா தாம் விடை பகர வல்லார்கள். ஆண்டவனுக்கு அர்ப்பணமாக அடியவர் செய்ய விரும்பிய உற்சவாதிகளை அவர்கள் எண்ணப்படியே செய்ய விட்டுவிட்டார்கள்.

முதல் உற்சவம் 1902ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 தேதியன்று இரெட்டியப்பட்டியிலே வெகு விமரிசையாக நடந்தது.



20—12—1907ல் திருச்சினுப்பள்ளியில் சுவாமிகளுக்கு நடந்த உற்சவ ஊர்வலம்.

# அடியவரது அன்பும் அதிசய அநுபவமும்

ஒன்றினுக்கு ஒன்று மேன்மையாக அம்மாதிரி உற்சவங்கள் 1922 வரை நமது மாகாணத்தின் பல பாகங்களிலும் நடந்தேறின. உற்சவ விவரம் கீழ்வரும் பட்டியிற் காண்க. குடம் குடமாகப் பாலும் தயிரும், அபிஷேகத்திற்குரிய பிற பொருளும், ஆயத்தம் செய்வர். திருமஞ்சனம் செய்தற்கெனவே கல்லும் சுண்ணும்பும் கொண்டு அமைத்த உயர்ந்த மேடையின் நாப்பண், நாற்காலியிட்டு சுவாமிகளை எழுந்தருளச் செய்வர். இரு பக்கமும் இலங்கும் விளக்கு இருத்துவர்.

மேள வாத்தியத்துடனும் கொடி குடைகளுடனும் கூட்டமாகச்சென்று, ஆற்றிலிருந்தோ, பிற நீர் நிலைகளிலிருந்தோ குடம் குடமாக நன்னீர் கொண்டு வருவர். இயன்ற இடங்களில் யானைகளின்மீது மஞ்சனீர் மடுத்து ஊர்வலமாக வருவதும் உண்டு.

அடியவர்கள் நீராடி வந்து, மங்களவாத்தியங்களின் முழக்கத்தினிடையே சுவாமிகளது சிரசிலே முறையாக அபிஷேகம் செய்யத் தொடங்குவர். அடியவர் கூட்டம் ஆரவாரித்தபடி தரிசித்துக் கொண்டிருக்கும். திருமஞ்சனம் முடியச் சுமார் இரண்டு மணி நேரம் செல்லும். அதுபோது சுவாமிகளது திருத்தோற்றம் எவ்வாறு இருக்குமெனக் கண்டவரே உணர்வர். சுவாமிகள் தம்செயலற்று ஆண்டவன் வடிவமாக அமர்ந்திருப்பார்களாதலின் நூற்றுக் கணக்கான குடங்களாகப் பாலும், தயிரும், நெய்யும், தேனும், எண்ணெயும், இளநீரும், பன்னீரும், பழச்சாறும், நன்னீரும் நறுநீறும் கொட்டியும், பழவகை அப்பியும், சந்தனக் குழம்பு ஆட்டியும் விபூதி தூவியும் அபிஷேகிக்கும்போது சுவாமிகள் திருமேனி அசைவற்று ஆனந்தக்காட்சி யளிக்கும். பிறகு அர்ச்சனையும் ஆராதனையும் ஆர்வமுடன் ஆகும்.

மாலையானதும், மலர் மாலைகளால் அழகிதாக அலங்காரங்கள் நடக்கும். பின்னர் உயரமான புஷ்ப விமானத்தில் எழுந்தருளச் செய்து, பலவித வாத்தியங்கள் முன் செல்லப் பஜனை கோஷ்டிகள் கணக்கிலாது பின் தொடர, ஊர்வல விழாவினைக் கழிபெருஞ் சிறப்போடு, நடத்துவர். ஊர்வலம் முடியும் வரையில் சுவாமிகள் அமர்ந்த ஆசனத்திலிருந்து இப்படி அப்படி அசைவதும் கிடை

## ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கு

| வரிசை எண் | கொல்லம் ஆண்டு | தமிழ் | | | ஆங்கில தேதி | வாரம் |
|---|---|---|---|---|---|---|
| | | வருஷம் | மாதம் | தேதி | | |
| 1 | 1077 | பிலவ | பங்குனி | 29 | 11-4-1902 | வெள்ளி |
| 2 | 1082 | பராபவ | மார்கழி | 17 | 31-12-1906 | திங்கள் |
| 3 | 1083 | பிலவங்க | ஷை | 5 | 20-12-1907 | வெள்ளி |
| 4 | 1083 | ஷை | தை | 24 | 6-2-1908 | வியாழன் |
| 5 | 1083 | கீலக | ஆடி | 16 | 31-7-1908 | வெள்ளி |
| 6 | 1084 | சௌமிய | வைகாசி | 22 | 4-6-1909 | ஷை |
| 7 | 1085 | ஷை | புரட்டாசி | 13 | 28-9-1909 | செவ்வாய் |
| 8 | 1086 | விரோதிகிருது | ஆனி | 23 | 7-7-1911 | வெள்ளி |
| 9 | 1087 | பரிதாபி | சித்திரை | 28 | 10-5-1912 | ஷை |
| 10 | 1087 | ஷை | ஆடி | 28 | 12-8-1912 | திங்கள் |
| 11 | 1088 | ஷை | பங்குனி | 22 | 4-4-1913 | வெள்ளி |
| 12 | 1089 | ஆனந்த | வைகாசி | 30 | 12-6-1914 | ஷை |
| 13 | 1090 | ஷை | ஆவணி | 26 | 11-9-1914 | ஷை |
| 14 | 1090 | இராக்ஷஸ | ஆனி | 18 | 2-7-1915 | ஷை |
| 15 | 1091 | நள | வைகாசி | 27 | 9-6-1916 | ஷை |
| 16 | 1091 | ஷை | ஆனி | 26 | 9-7-1916 | ஞாயிறு |
| 17 | 1092 | ஷை | பங்குனி | 24 | 6-4-1917 | வெள்ளி |
| 18 | 1097 | துந்துபி | ஆடி | 27 | 11-8-1922 | ஷை |

குறிப்புகள்:— * 140-வது பக்கம் பார்க்க.

† மேலிலந்தைக்குளம் பி. சீனியாப் பிள்ளை, கோ. அருணாசலம் பிள்ளை, கயத்தார்—தெ. மு. அய்யாதுரைப் பிள்ளை, தெ. அ. ஊர்த்துநாயகம் பிள்ளை,

§ கே. பி. நாராயணஞ் செட்டியார், கர்னம். தனகோபால் செட்டியார், மணிகை. யப்ப செட்டியார். செ. இராமசாமி செட்டியார். அண்ணாசாமி முதலியார். அலசந்தா

## அடியவரது அன்பும் அதிசய அநுபவமும்

# நடந்த உற்சவ விவரங்கள்

| ஜில்லா | தாலுக்கா | நிகழ்ந்த இடம் | கைங்கரியதாரர்கள் |
|---|---|---|---|
| திருநெல்வேலி | கோயில்பட்டி | இரெட்டியப்பட்டி | சுவாமிகளின் அடியார்கள் |
| திருச்சிறாபள்ளி | திருச்சி | பாலக்கரை இடத்தெரு | *புரோகிதம் ஐயாசாமி அய்யர் முதலிய 49 பெயர்கள். |
| டிை | டிை | டிை | ச. கணபதி ஆச்சாரி |
| டிை | டிை | ஸ்ரீரங்கம் | ஸ்ரீரங்கத்து அடியார்கள் |
| திருநெல்வேலி | சங்கரநயனார் கோயில் | மேலிலந்தைக் குளம் | † பி. சீனியாப் பிள்ளை உள்பட 10 பேர் |
| தென்னாற்காடு | திண்டிவனம் | வைரவபுரம் | வ.அ.வைத்தியநாத முதலியார் |
| டிை | டிை | தணியல் | மணியம் செ. ஆறுமுக முதலியார், செ. எல்லுசாமி முதலியார் |
| திருநெல்வேலி | சங்கரநயனார் கோயில் | மேலிலந்தைக் குளம் | சா. பெரியதிருவடி |
| டிை | டிை | டிை | டிை |
| டிை | திருநெல்வேலி | அவனாப்பேரி | உ. காந்திமதிநாதம் பிள்ளை |
| திருநெல்வேலி | சங்கரநயனார் கோவில் | மேலிலந்தைக் குளம் | சா. பெரியதிருவடி |
| டிை | டிை | டிை | டிை |
| டிை | திருநெல்வேலி | அவனாப்பேரி | உ. காந்திமதிநாதம் பிள்ளை |
| திருநெல்வேலி | சங்கரநயனார் கோவில் | மேலிலந்தைக்குளம் | சா. பெரியதிருவடி |
| டிை | டிை | டிை | டிை |
| டிை | டிை | டிை | டிை |
| டிை | டிை | டிை | டிை |
| வடஆற்காடு | திருப்பத்தூர் | வாணியம்பாடி நியூடவுன் | §கே. பி. நாராயணஞ் செட்டியார் முதலிய 9 பெயர்கள். |

சா. பெரிய திருவடியாப்பிள்ளை, சா. லக்ஷ்மணப் பிள்ளை, சா கோதண்டராமப்பிள்ளை, தெ. மு. ராஜநாயகம் பிள்ளை, ம. ஆறுமுகம் பிள்ளை, கா மொ. முகம்மது இராவுத்தர் பொரிக்கடை கோவிந்தராஜ முதலியார். செ. கோவிந்தராஜ முதலியார், சி. மு. முனி புரம் கந்தசாமிக்கவுண்டர். வகீல்குமாஸ்தா எஸ்.சாமிநாதம் பிள்ளை. (வாணியம்பாடி)

# 31-12-1906ல் சுவாமிகளுக்குப் பாலக்கரையில் உற்சவம் நடத்தியவர்கள்

| | |
|---|---|
| திருச்சிக்கோட்டை | ஐயாசாமி அய்யர் புரோகிதம் |
| தென்னூர் | ஸ்ரீ. ரங்கசாமி அய்யங்கார் |
| சமயபுரம் | முத்துவய்யர் |
| திருச்சி | இடைத் தெருவு R. S. பெருமாள் கோனர் மிராஸ்தார் |
| ,, | கோ. மாரியப்பக் கோனர் மிராஸ்தார் |
| ,, | தேக்க. கோவிந்தக் கோனர் |
| ,, | மளிகை ப. மருதக் கோனர் |
| ,, | நவதான்ய மண்டி ப. வையாபுரிக் கோனர். |
| ,, | ஷை மண்டி சொ. திருவேங்கடக் கோனர் |
| ,, | பச்சை கீ. ரங்கநாதக் கோனர் |
| ,, | கொ. கோவிந்தக் கோனர் |
| ,, | ஜவுளி வியாபாரம் மாமுண்டிக் கோனர் |
| ,, | ஷை வியாபாரம் சி. த. பரிமணம் பிள்ளை |
| ,, | கொ. முத்துக்கருப்பக் கோனர் |
| ,, | சோ. சுப்பராய ஆச்சாரி |
| ,, | மோதிர வியாபாரம் ரெ. முத்துசாமி நாயுடு. |
| ,, | மா. நாராயணக் கோனர் |
| ,, | சுருட்டு வியாபாரம் வீராசாமி நாயுடு |
| ,, | அரங்கசாமிக் கோனர் |
| ,, | வீரராகவ ஆச்சாரி |
| ,, | தங்கமுத்துசாமிக் கோனர் |
| ,, | செ. வெ. இராஜு நாயுடு |
| ,, | கு. முத்துசாமி நாயுடு. மேஸ்திரி |
| ,, | பச்சை வத்தக் கோனர் |

| | |
|---|---|
| இடைத் தெரு | நிஜாம் சாகிப் |
| ,, | பொன்னையா படையாச்சி |
| பாலக்கரை | சி. கி. தி. சாமிக்கண்ணு செட்டியார் |
| ,, | மா. கோபால்சாமிப் பிள்ளை |
| தி. கோட்டை | வக்கீல் கஸ்தூரி நாயுடு |
| ,, | பொடிக்கடை வீரப்பிள்ளை |
| ,, | சுவாமி சொரூபானந்தம் |
| ,, | பிடில். முத்துப்பத்தர் |
| ,, | இரத்தின வியாபாரம் பெ. கோபாலு சாமிப் பத்தர் |
| ,, | ஷை வியாபாரம் மு. மருதமுத்துப்பிள்ளை |
| திருவானைக்காவல் | சபாபதி ஆச்சாரி |
| கொண்டயம் பேட்டை | திப்பிலிப்பிள்ளை<br>நாகலிங்கம் பிள்ளை |
| ,, | மாரிமுத்துப் பிள்ளை |
| ,, | அய்யாசாமிப் பிள்ளை |
| இடைத் தெருவு | ரா. சாமிநாத ஆச்சாரி |
| ,, | இளங்காக்குறிச்சி த. வீரப்ப ஆச்சாரி |
| ,, | தாண்டவராயப் பிள்ளை |
| ,, | சுந்திரமாச்சாரி |
| ,, | அடைக்கலமாச்சாரி |
| முத்தரச நல்லூர் | கா. சுப்ரமண்ய ஆச்சாரி |
| உடுமலைப்பேட்டை | திருமூர்த்தி ஆச்சாரி |
| புதுக்கோட்டை | மா. முத்துவீரா ஆச்சாரி |
| வரகநேறி | பழக்கடை அப்பாவு பிள்ளை |
| திருச்சிராப்பள்ளி | பாலக்கரை இடைத் தெருவு ச. கணபதி ஆச்சாரி |

யாது. வழி முழுதும் மண்டகப்படிகளும் வீட்டுக்கு வீடு தீபாராதனைகளும் நடக்கும். ஊர்வலம் ஆரம்பித்த இடத்திற்கு வந்து சேர, பல மணிகள் ஆய்விடும். வாணியம்பாடியில் மாலை ஐந்துக்குத் தொடங்கிய வீதிப் புறப்பாடு மறுநாள் விடியல் நாலுக்குப் பூர்த்தியாயிற்று.

இவ்வுற்சவங்களை நடத்துவதில் உள்ள விசேஷங்களில் ஒன்று, பல இனத்தவரும், பல மதத்தவரும் சுவாமிகளது விஷயத்தில் ஈடுபட்டு முன்னிருந்து அவற்றை நடத்தியதாகும். இந்துக்களில் பிராம்மணர் முதல் பல பிரிவினரேயன்றி, கிறித்துவர், முகம்மதியர் பலரும் கலந்தே உற்சவ அழைப்பு அச்சிட்டு அனுப்பியிருக்கின்றனர். அவ்வழைப்புக்களை அடியவர் சுவாமிகளது நினைவுக்குறியாக இன்னும் வைத்துக் கண்டு களித்து வருகின்றனர்.

ஃ ஃ ஃ ஃ

## 6. அதிசய அநுபவம்.

### i. விபூதி விலாசம்.

சுவாமிகளை நேரே சேவித்த அடியவர்களும், அவ்வடியவர்கள் வாயிலாகச் சுவாமிகளது சட்டத்தின் பண்பறிந்து, சட்ட அநுஷ்டானம் ஏற்ற அடியவர்களும், சுவாமிகளது திருநாமத்தைச்சொல்லித் திருநீறு அணிந்து தத்தமக்கு நேர்ந்த குறைகளை யெல்லாம் களைந்து கொண்டு, நலம் பலவும் பூண்டு வருவாராயினர். தேர்ச்சி பெற்ற சில அடியவர்கள் ஆண்டவன் நாமம் கூறி விபூதி தீர்த்தத்தால் தமக்கேயல்லாமல் தம்மைச் சேர்ந்தோர்க்கும் நோயும் பேயும் நீக்கிச் செம்மையும் நன்மையும் கூட்டுவித்து வரலாயினர். ஆடு மாடுகள் முதலிய சகல பிராணிகளுக்கும் நோய் வந்தாலும், காயம் பட்டாலும் நீறும் தீர்த்தமுமே கொடுத்து நலஞ் செய்வர். செடி கொடிகளுக்கும் பயிர் பச்சைகளுக்கும் வரும் கெடுதிகளை யெல்லாங்கூட அப்படியே போக்கிப் புனிதம் பண்ணுவர்.

சுவாமிகள் பொதிகை நிருவிகல்பத்திலிருந்து சட்டம் வழங்க வெளி வந்த பிறகு விபூதியைத் தம் கையால் யாருக்கும் கொடுக்கும் வழக்கம் இல்லை. அடியவர்களே அவரவர்களது உறுதிக்கு ஏற்றபடிப் பயனடையட்டும் என்று, அவரவர்களையே எடுத்து அணிந்து

கொள்ளச் சொல்வார்கள். அடியவர்கள் மற்றுருக்கு விபூதி கொடுப்பதும் உண்டு. அவ்வாறுதென்னுட்டில் ஆங்காங்கே பலப்பல அடியவர்கள் அவரவரது சட்ட அனுஷ்டானத்தின் தேர்ச்சிக்கு ஏற்றபடி விபூதி கொடுத்துப் பயன் செய்து வருவார்களானுலும், சுவாமிகளே நேரில் ஆசீர்வதித்து, 'விபூதி கொடுத்து வரட்டும்' என்று அன்போடு கட்டளையிட்ட அடியவர்களிடம், விபூதி விலாசம் விளங்கி அற்புதமான விஷயங்களை நடத்தி வந்தது. திருநீற்றிலு லும் தீர்த்தத்தாலும் தீர்ந்த வியாதிகளும், ஆறிய வெட்டுகளும், ஆன நலங்களும், போன குறைகளும் அளவிறந்தன. எவ்விதக் கடினமான, நாட்பட்ட, பிணியானுலும் விஷபேதி, பிளேக் முதலிய கொள்ளை நோயானுலும், அச்சம் சிறிதும் இல்லாமல் அடியவர் நலமுறுத்தி வந்தனர். பேய்களும் பிசாசுகளும் சுவாமிகளது நாமங் கூறி திருநீறு தூவியதும் பறந்தோடி வந்தன.

## ii அற்புத நிகழ்ச்சி

சட்ட அனுஷ்டானத்திலே இருந்தவர்களுக்கு அவ்வப்போது பல அற்புதமான நிகழ்ச்சிகள் ஏற்படும். அவையாவும் இங்கே கூறி முடியா. இரண்டொன்று குறிக்கலாகும். மேல்இலந்தைக்குளம் திரு. திருவடியாப்பிள்ளை சுவாமிகளது சிறந்த அடியவர். அவரும் அவரது பத்தினியும் குருநாதரது சேவையிலே ஈடுபட்டவர்களாய் தங்கள் குழந்தைகட்கு வேளையில் உணவு இடவும் மறந்து இரவில் தூங்கிவிட, குழந்தைகள் உறங்கிப்பசியால் நடுநிசியில் விழித்து எழ ஆண்டவன் அருள் அக்குழந்தைகட்கு அருந்தப் பழம் அளிப்ப துண்டு. அவ்வாறு அளித்த குறிகள் சந்தேகம் அறத்தெரிய வந்து அருள் நினைந்து இன்புற்ருர்கள். அவர்கள் வீட்டிலேயே விடியல் பூசைக்கு உரிய மலர் பழம் முதலிய காலத்தே வாங்கி வைத்துக் கொள்ள முடியாது போன சமயங்களில், அப்பொருள்கள் திடீரெனக் கைவைத்த மாடத்தில் இருப்பன கண்டு வழிபாட்டிற்குப் பயன் பெறுத்தியிருக்கின்ருர்கள். திருநெல்வேலி திரு. கோமதியம்மாளுக் கும் அவ்வாறு மலர் மாலைகள் பூசை நேரத்துக்கு எதிர் பாராதபடி கிடைப்பதுண்டு.

## அடியவரது அன்பும் அதிசய அநுபவமும்

திண்டிவனத்தின் கிழக்கே ஐந்தாறு மைலில் எளவாளப்பாக்கம் என்னும் கிராமத்தில் திரு. வேங்கடவரதசெட்டியார் வீட்டில் அன்பிற் சிறந்த அடியவர்கள் இராக்காலங்களில், பூசை அறையைமெழுகிக் கோலம் இட நேரங்காணாது சோர்ந்து படுத்துவிட்டு விடிந்து எழுந்து கண்டதும், அற்புதமான கோலங்கள் இட்டிருப்பதைப் பார்த்து ஒரு புறம் ஆச்சரியமும் மற்றொரு புறம் பயமும் கொண்டுவிட்டனர். சுவாமிகள் அவ்வூருக்கு வந்தபோது தங்கள் அச்சத்தைத் தெரிவித்தார்கள். "ஏன் பயப்பட வேண்டும்? பில்லி சூனியம் குட்டிச்சாத்தான் என்று எண்ணிக்கொள்ளுகிறீர்களா? . ஆண்டவனுடைய அருள் செய்யும் முறை அது" என்று சுவாமிகள் விளக்கினார்கள்.

வாணியம்பாடி திரு. சம்பங்கி செட்டியார் வீட்டில் சுவாமிகளது படம் யார் கையும் படாமல் திடீரெனப் பூசை மாடத்திலிருந்து தரையில் வந்து தங்கும். உடனே சுவாமிகள் அவ்வூருக்கு வருகின்றார் என்ற விஷயத்தை அவ்வீட்டார் அறிந்து கொள்ளுவர். இந்த அநுபவத்தை இன்றைக்கும் அச்செட்டியாரது மனைவி திரு. மங்கையம்மாள் கூறி மகிழ்வர்.

### iii ஆபத்தில் அருந்துணை

அடியவர்களுக்கு எத்துணையோ ஆபத்தான நிலைகள் ஏற்பட்ட காலத்திலே, சுவாமிகளை உறுத்து நினைத்ததால் வந்த ஆபத்து வழி தெரியாமல் போய் விட்டிருக்கிறது. திருச்சாத்தனூரிலிருந்து சுவாமிகளது வாணியம்பாடி உற்சவத்தைத் தரிசிக்க, சின்னகம்பத்தம் திரு. முத்துநாராயண ரெட்டியாரும், அவரது தாயும் தங்கையும் விழுப்புரம் இரயிலடிக்கு இரவில் வண்டிகட்டிச் சென்றபோது, வீதியில் பதினைந்து பதினாறுபேர் திருடர்கள் வழிமறிக்க வந்தனர். ஏராள நகைகள் அணிந்து இருந்ததால் அச்சத்திற்கு அளவில்லை. கைக்கு எட்டு தூரத்திலே திருடர்கள் வந்தும், குருநாதரது திருவடிகளையே சிந்தித்தமையால், "போக்கு வண்டியடா இது. இதில் யாருமில்லை" என்று அவர்களே சொல்லிக்கொண்டு போய்விட்டனர். இதேபோல, ஆனத்தூரிலிருந்து சாத்தனூர் திரு. முத்துராம ரெட்டியார் அவசர

வேலையாக இரவிலே பண்ணுருட்டிக்கு போக நேர்ந்தது. சுவாமிகள் அப்போது அங்கே வந்திருந்தார்கள். வழியில் திருடர் பயம் என்று சுவாமிகளிடம் தெரிவிக்க, "ஏதுக்கும் அஞ்சவேண்டாம் செல்லட்டும்" என்று சுவாமிகள் வாக்குக் கொடுத்தார்கள். அப்படியே இரெட்டியார் அணிந்திருந்த தங்கக் கடிகார சங்கிலி முதலியவற்றோடு சென்றார். வழியில் திருடர்கள் வண்டியைத் துரத்தி அருகே வந்து "காலி வண்டி இது" யென்று சொல்லிக்கொண்டே போய்விட்டனர்.

ஆனத்தூர் திரு. ஜகன்னாத ரெட்டியாரது தமக்கை ஆதிலக்ஷிமியம்மாள் சட்ட அனுஷ்டானம் வழுவாதவர்கள். ஒருநாள் மயக்கமாக அவர்கள் விழுந்துவிட நேர்ந்தபோது, சுவாமிகள் அவரது கைகளைப் பிடித்து மெல்ல உட்காரவைத்தது போன்றிருந்தது. அப்படியே அமர்ந்திருந்து மயக்கம் தெளிந்ததும் சுவாமிகளைக் காணாது, இப்போது எனது கைகளைப் பிடித்து அமரவைத்த சுவாமிகள் எங்கே யென்று எல்லோரையும் கேட்கலாயினர்.

இம்மாதிரி நிகழ்ச்சிகள் தெரிந்த அளவிலேயே ஏராளமாக இருக்கின்றன. தெரியாதன இன்னும் எவ்வளவோ உண்டு. அவை யாவற்றையும் இங்கு எழுதுதல் அடியார்க்கும் மற்றாருக்கும் அன்பைப் பெருக்கி உறுதியை மிகுத்துமானாலும், இடங்காணாது விட்டு விடவேண்டியிருக்கிறது. கனவிலும், நினைவிலும் காட்சி கொடுத்து வந்த ஆபத்துக்கள் இந்த இந்த வேளையில் நீங்கும் என்று அடியவர்களுக்குத் தைரியம் கூறியருளிய சமயங்களும் எத்தனையோ உள்ளன. எவ்விதமான அச்சந்தரு நிலையும் குருநாதரது தியானத்தால் எதிர்பாராதபடி நீங்கித் தெளிவு ஏற்பட்ட தகவல்களும் அளவுகடந்தன.

### iii வளம்பெறு வாழ்வு

சட்டத்தை ஏற்றுச் சரிவர நடந்துவரும் அடியவர்கள், அவர்களும் எதிர்பாராதபடி மற்றாரும் மதிமயங்கும்படி, நாளடைவில் வளம்பெற்ற வாழ்வையும் உரம்பெற்ற திறமையையும் உறுவாராயினர். சுவாமிகளைத் தரிசிக்கும்போது, சட்டம் எடுக்கும்போது, வயிறார உண்பதற்கும் உணவு சாலாது வருந்திய வறிய

வர்களும், தாங்கள் கோராமலேயே, தங்கள் முயற்சிக்கும் மேலாக, நிரம்பிய செல்வந்தர்களாக, நிலம் புலம் நிறைந்தவர்களாகப், பெரு வாழ்வு வாழ்ந்துவருவதைப் பிற அடியவர்களும் அல்லாரும் கண்டு அதிசயிப்பர். ஆண்டவனது அந்தண்மையை அகத்தெண்ணி அன்பு ஊறப்பெறுவர். ஏற்கனவே, பணமும் பாரும் படைத்த பாங்குடையாரும், சுவாமிகளது ஆசிகளால், சட்டத்தின் பெருமையினால், ஒருகுறைவுமின்றிப் பலநலமும் பொருந்தி, மேலும் மேலும் சிறந்து வாழ்ந்து வருவதையும் அனைவரும் பார்த்து அவன் அருளை வியப்பர். "சட்ட அனுஷ்டானமுடைய அடியவர் யாவரும் இம்மையில் எவ்வித இடர்ப்பாடும் இல்லாத இன்ப வாழ்க்கை வாழ்ந்து, மறுமையில் மாபெரும் பேறு பெறுவர் என்பது திண்ணம்" என்னும் சுவாமிகள் வாக்குப் பொய்யாகுமா? நலஞ்சிறந்தாரது பேரையும் ஊரையும் கூறும் பெரும்பட்டி இங்கு அமைக்க இடம்போதாது. அடியவர்களைச் சேவை செய்யவும், அவர்களது வரலாறுகளை வாயாரக் கூறக் காதாரக் கேட்கவும், நேர்கின்ற அன்பர்கள், உளம் மறைந்து உறையும் உடையவன் அருளால் வளம்பெறு வாழ்வு யார் யாருக்கு, எப்படி எப்படி, வந்ததென்னும் வாய்மையை அறிந்து உவக்கலாகும்.

# IX

# போலிச் சுவாமிகளும் பொய் அடியவர்களும்

## 1. போலிச் சுவாமிகள் தோற்றம்.

சுவாமிகளது திருவருள் விலாசம் விளைத்துவரும் அற்புதங்களையும் நற்செயல்களையும் அறிய வந்த அனைவரும், சுவாமிகளது திருநாமத்திலும், அப்பெயரால் தரப்பெறும் விபூதியிலும், பெருநம்பிக்கை வைக்கலாயினர். அவரவர்களது ஆசைகளையெல்லாம் அவற்றால் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும், குறைகளையெல்லாம் போக்கிப் போட்டலாம் என்றும், உறுதி பூணலாயினர். ஆனால் அவர்களுக்குச் சுவாமிகளது கொள்கைகளை உள்ளன உள்ளபடி எடுத்துக் கூறுவாரும் உயர்நெறிக்கு வழி காட்டுவாரும் அருகில்லை.

மக்களது மன நிலைமை யறிந்த சில பேர்வழிகள், அவர்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்கு இதுவே சமயம் என்று எண்ணி, மாகாணத்தின் பலபாகங்களிலும் தனித்தனியே முயற்சி செய்யலாயினர். ஊருக்கு வெளியிலேயோ, ஊர் நடுவேயோ வசதியான இடங்களை அமைத்துக்கொண்டு, சுவாமிகளுடைய உண்மைத் திருநாமத்தைப் பொய்ம்மைக் கரவுள்ளத்தால் அறிக்கைகளில் அச்சிட்டு வழங்கியும், விதவிதமாக விளம்பரம் செய்தும், சிலசில இடங்களில் தாமே இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்று ஏமாற்றியும், ஏழை மக்களை, எளிய மனங்களை, ஏராளமாகக் கூட்டி, முற்றத் துறந்து முழு அருள்பெற்ற அடியவர்போலப் பாசாங்கு காட்டி, விபூதி கொடுத்துச் சுவாமிகள் கட்டளைக்கு மாறாக உண்டி வைத்து ஊதியம் பெறலாயினர், நடவடிக்கை தவறி நலங்கெடுக்கலாயினர். காணிக்கை பெற்று கடிதிற் பொருள் குவித்தனர்.

## 2. பொய்யடியவர் ஏமாற்றம்.

பிணியுள்ளவரும் அணிவேண்டியவரும், பேயுள்ளவரும் சேய் கோரியவரும், திரள் திரளாகப் போய்த் திரவியத்தைத் துலைத்து வந்தனர். இயற்கையாகவோ, நம்பிக்கையினாலோ நலமாகக் கூடிய வெகுசில குறைகளே செம்மையாய் வந்தன. அவைகண்டு மேலும் பலர் போலிச் சாமிகட்குக் கப்பங்கட்ட முற்பட்டுப் போயினர்.

அவ்வாறு சென்றவர்கள் பலருக்கும் சுவாமிகளது உண்மை நெறியும் சட்டத்தின் சவிஸ்தாரமும் தெரியாதது ஒருகுறை. உலகச் சிறு அல்லல்களையோ, பிறருக்குக் கெடுதி உண்டாக்கும் கோரிக்கைகளையோ மனத்து எண்ணி ஓடினது பெருங்குறை. எனவே, அவர்கள் சுவாமிகளது சட்டத்தாலும், சுவாமிகளது திருநாமம் சொல்லித் திருநீறு பூசும் திட்டத்தாலும் பெறக்கூடிய பலனைப் பெறமுடியாது போயிற்று. கைப்பொருளையிழந்து கவலையுற்றுப் போனார்கள். ஏமாந்தவர் என்று ஏசப்பெறலானார்கள்.

## 3. உண்மை உணரா உரை.

சுவாமிகளை நேரே காணாதும், சுவாமிகளது சட்டத்தின் பிரபாவத்தை நல்லடியார் வாயிலாய் அறியாதும் கிடந்த அறிஞர்கள், மாகாணம் எங்கணும் மயல் விளைத்து வந்த இப்போலிச் சாமிகளையும் பொய்யடியவர்களையும் கண்டுவிட்டுச் சுவாமிகளைப் பற்றியும், அவர்களது கொள்கைகளைப்பற்றியும், மிகவும் குறைவான எண்ணங்கொள்ளலானார்கள். எல்லாம் வல்ல உடையவன் கணக்கை நடத்தவந்த சுவாமிகளையும் உண்மை யடியார்களையும், வயிறு வளர்க்க வழி தேடியவர்களென்றும், ஏமாற்றிப் பொருள் பறிப்பவர்கள் என்றும், ஒழுக்கம் அற்ற கூட்டத்தார் என்றும், பேய் ஓட்டும் பில்லி சூனியக்காரர் என்றும், மந்திரவாதிகள் என்றும் தந்திரக்காரர்கள் என்றும், மயங்கிக் கூறலானார்கள். பின்னராவது சுவாமிகளையோ, சுவாமிகளது கொள்கைகளின் சிறப்பையோ, அவற்றை அனுஷ்டிக்கும் அடியார்களையோ, அவ்வறிஞர்கள் அறிய நேர்ந்திருக்குமானால், அவர்களது தவறான எண்ணத்தை அவசியம் மாற்றிக் கொண்டிருப்பார்கள். அப்படியல்லாமல் அவர்களது வாழ்க்கையிலே நாளது வரையில் அத்தகைய வாய்ப்பு அவர்களுக்கு நேராது போயிருக்குமாயின், அவர்கள் முன்கொண்ட தப்பெண்ணத்தையே இன்னமும் கொண்டுவருவார்கள். அன்னவர்களும், அன்னவர்கள்பால் அத்தவறான எண்ணத்தை ஏற்றவர்களும், உண்மை யுணர்தற்காகவே இப்பகுதி இங்கே எழுதப்பெறுவதாயிற்று. இன்றேல், போலிச்சாமிகளைப் பற்றியாவது பொய்யடியார்களைக் குறித்தாவது இங்குக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

# X

# ஆண்டவன் மறைவும் அடியவர் வழிபாடும்

## 1. அடியார்க்கு அறிக்கை.

சுவாமிகள் மறையும் காலத்தை அடியவர்கட்குப் பலவகை யால் அறிவுறுத்தினார்கள். உடையவன் கணக்கு முடியும் நேரம் நெருங்கி வந்ததும் அடியார்களைப் பல ஊர்களில் நேரே காணும் போது, சுவாமிகள் நேரப்போகும் நிலையை அடியார்களுக்குக் குறிப் பாக உணர்த்தி வந்தார்கள். அப்போது சுவாமிகள் கூறிய அச் சொற்களுக்குப் பொருள் தெரியாதிருந்த அடியவர் பலர், பின்னிட்டு அறிந்து எண்ணி எண்ணி ஏக்கமுற்றனர். கடைசியாக எதிர்கால வாழ்வில் எச்சரிக்கையாயிருந்து உடையவன் பற்றை உறுதியாகக் கொண்டு தூய வாழ்க்கை செய்துவரும்படி அடியவர்கட்குச் சுவாமி கள் எழுதுவித்தார்கள். எல்லாம் வல்ல எந்தை, தம் திருமேனி மூலமாக அருள் வழங்க, அதுவரை போல் பலர் காண நேரே வாரான் ஆதலின், அடியவர்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி கலந்து, அந்தரங்கமாக ஆண்டவன் அருள் புரிந்து வரும் விதத்தை அள வளாவிச், சட்ட நெறியை உலகு எங்கணும் விளக்கி வரவேண்டும் என்று அறிவித்தார்கள்.

ஆங்காங்கு இருந்த அடியவர்கள், சுவாமிகளது சமீப நிலையை இன்னதென அவரவர்களது நிஷ்டையில் அறிந்து, நீள நினைந்து, ஏங்கலாயினர். சுவாமிகளே அடியவர்களது நிஷ்டையில் காட்சி கொடுத்து, "சாமி தங்கியிருக்க ஓர் இடம் கொடுக்குமா?" என்று ஒரு முறையும், "சாமிக்கு இடங் கிடைத்துப் போச்சு," என்று அடுத்த படியும், எப்போதும் போன்ற உற்சாகத்துடன், உல்லாசப் பேச் சாகத், தெரிவித்ததையும் எண்ணி எண்ணி அடியவர்கள் சிந்திக்க லாயினர். என்றாலும் பெருவாரியான அடியவர்கட்குத் தெளிவாக இன்னதுதான் இவ்வளவு சமீபத்தில் நேரப் போகின்றதென்று தெரியாமலே இருந்தது.

## 2. நிருவிகல்ப நிஷ்டை

முதல் நிருவிகல்ப நிஷ்டை இரெட்டியப்பட்டியில் தொடங்கிப் பொதிகையில் முடிந்தது அறிந்திருக்கிறோம். இரண்டாவது, மேல் இலந்தைக்குளத்தில் திரு. திருவடியாப் பிள்ளை இல்லத்தில் நிகழ்ந்தது. மூன்றாவது நிஷ்டை மறுபடியும் இரெட்டியப்பட்டியிலேயே ஏற்பட்டது. சுவாமிகள் பல நாட்கள் உண்ணாமல் மௌனமாக இருந்து வந்தார்கள். அந்த நிலையில் சுவாமிகளது திருமேனியின் இளைப்பைக் கண்டால் உள்ளம் நையும். நிஷ்டையின் முதற் பகுதியிலே அடியவர்கள் சுவாமிகளுடைய நிலையறியாமல், சிலச்சில இடங்களுக்கு அழைத்தார்கள். சுவாமிகளும் அருள் மிகுதியால் சென்று வந்திருக்கிறார்கள். ஆனால் நிருவிகல்பத்தின் பிற் பகுதியிலே சுவாமிகள் வெளியே யெங்கும் போகவில்லை. இரெட்டியப் பட்டியிலேயே தங்கி விட்டார்கள். அப்போது சுவாமிகள் அவதரித்து அறுபத்து ஆறு ஆண்டுகள் ஆயிருந்தன.

## 3. பிறப்பிடமே மறைவிடம்

துந்துபி௵ மார்கழி௴ இருபத்தெட்டாந் தேதி சுக்கிர வாரம், ஏகாதசி திதி, அனுஷ நக்ஷத்திரம், இரவு நான்குமணிக்குச், சுவாமிகளது திருமேனியைக் கோயிலாகக் கொண்டு வெளி முகமாக அருளாட்சி புரிந்து வந்த ஆண்டவனோடு சுவாமிகள் இரண்டறக் கலக்கவே, அக்கோயிலிலேயே உள் முகமாக அசைவற்று உடையவன் அமர்ந்தருளத் திருவுளங் கொண்டான். அருகிருந்து தரிசித்து வந்த அடியவர்களது மனநிலையை எழுத வொண்ணாது. வெளியிலிருந்த அடியவர்கட்குத் தந்திகளும் கடிதங்களும் உடனே அனுப்பப் பெற்றன.

சுவாமிகள் எந்த இடத்தில் தாயார் வயிற்றினின்றும் தரைமீது எழுந்தருளினார்களோ, அதே யிடத்தில் தங்கினபடியே ஆண்டவனோடு மறைந்தருளியது எல்லோருக்கும் வியப்பாக இருந்தது. அந்த இடத்தில்தான் சுவாமிகள் இளமைக் காலத்தே விநாயகரை வைத்துப் பூசை செய்திருக்கிறார்கள் என்பதும், மறுபடியும் அதே இடத்திலேயே வேலினை வைத்து வழிபட்டு இருக்கின்றார்கள் என்ப

தும், மறைந்துவிட்ட அவ்வேல் பிற்காலத்தில் செட்டிநாட்டுக் கீழச் சிவல்பட்டி திரு. வெ. நா. கி. சிகப்பியாச்சியின் கனவில் தோன்றிய படி அதே இடத்தில்தான் மண் கீழிருந்து கிண்டி எடுக்கப்பட்டதென்பதும், வியப்பை மேலும் பெருக்குவதாயிருந்தன.

## 4. திருமேனித் திருக்காப்பு

ஆண்டவன் மறைந்த அதே இடத்திலேயே, திருமேனித் திருக்காப்பு செய்ய ஏற்பாடு பண்ணினர். மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் திரள் திரளான அடியவர்கள் அகநெக்கு அன்புருகி ஆற்றாது வந்து சேர்ந்தனர். மறைந்த ஐந்தாம் நாள், அதாவது, தை மாதம் மூன்றாம் தேதி செவ்வாய்க்கிழமை அமாவாசை திதி பூராட நட்சத்திரம் மாலை ஆறு மணிக்கு, மஹா அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன், திருமேனி திருக்காப்பு செய்யப் பெற்றது.

## 5. ஆலய அமைப்பு

திருக்காப்பின் மீது ஆலயம் அமைக்க அடியவர் தீர்மானித்தனர். ஊருக்கு மத்தியில் விசாலமாக அமைந்து இருந்த சுவாமிகளது குடும்பத்தாருடைய வீடும், அந்த வாடை மொத்தமுமே முன்பொரு சமயம் சுவாமிகள் வெளிகளிலே அருளாட்சி செய்து வந்த காலத்திலே, தீயினால் முழுதும் பழுதாய் விட்டிருந்தன. புதுப்பித்து வைத்த வீடு மறுமுறையும் தீக்கிரையாயிற்று. சுவாமிகள் இரெட்டியப்பட்டிக்குச் சென்றபோது, தீ விபத்து நேர்வதற்குக் காரணமாயிருந்த பேர்வழி தானே நேரே சுவாமிகளிடம் வந்து, தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, மன்னித்தருள வேண்டினான். அவன் அவ்வாடையில் ஒருவர்மீது கொண்ட பகைமையைத் தீர்த்துக்கொள்ள எண்ணி, அவர் வீட்டுச் சோளப் படப்பிலே வைத்த நெருப்பானது, அவனது எண்ணத்துக்கு அப்பாலும் சென்று, அந்த வாடையிலுள்ள எல்லா வீடுகளையும் கொளுத்திவிட்ட உண்மையை அப்போதுதான் அவன் வாயிலாகச் சுவாமிகள் திருமுன்னர் எல்லோரும் அறிந்தனர். அவனது அறியாமைக்கு இரங்கி அவனுக்கு ஏதும் தீது செய்தலாகாது எனக்கட்டளையிட்டுச், சுவாமிகள், "இப்படி நடந்ததும் உடையவன் கணக்கே," என்று சொல்லி



இரெட்டியப்பட்டியிலுள்ள ஸ்ரீ குருநாதரது சந்நிதானம்.
5-ம் ஆண்டு குருபூசையின்போது அடியவரோடு எடுத்த படம்.



மதுரை வைகை நதிக்கரையில் சுவாமிகளுக்கு அருட்காட்சியளித்த
ஸ்ரீ பரிபூரண விநாயகருக்குத் அமைத்த ஆலயம்.

யிருந்தார்கள். அவ்வாறு தீயால் மறைந்த வீட்டை மறுபடியும் புதுப்பிக்கும் எண்ணத்திலேயே காலம் போய்விட் டிருந்ததேயல்லாமல் அவ்வெண்ணம் செயலாகவில்லை. தற்காலிகமாக இருப்பதற்கு ஒரு புறத்தில் சிறு வீடு மாத்திரமே அமைத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, சுவாமிகள் திருமேனி மண்மீது உதித்த இடம் வெற்றிடமாகவே இருந்து வந்தது.

இருக்கவே, அவ்விடத்தில் திருமேனித் திருக்காப்பு செய்யவும், அதன்மீது ஆலயம் அமைக்கவும், ஏதும் இடைஞ்சல் இல்லாமல் நேர்ந்தது. ஊராரும் சுவாமிகள் விஷயத்தையறிந்தவர்களாதலின் சுற்றிலும் வீதிகள் அமைய ஊர்நடுவே அவ்வாறு செய்யத் தடையொன்றும் கூறவில்லை. ஏற்கனவே அங்கொரு ஆசிரமம் அமைக்க வேண்டும் என்று அடியவர் சேகரித்து வைத்திருந்த பொருளைக் கொண்டு ஆலயம் அழகிதாக ஆக்கப்பெற்றது. ஆலயம் அமைப்பதற்கு முப்பதுமைல் தூலைவிலிருந்து கருங்கல் கொண்டுவரும்போது வழியில் ஒரு வண்டியின் அச்சு முறிந்துபோயிற்று. அவ்வண்டியில் அமர்ந்துவந்த ஆலயப் பணியாற்றும் அன்பிற்சிறந்த அடியவர் வாணியம்பாடி திரு. சி. மு. முனியப்ப செட்டியார், வண்டிக்காரர் உண்மை கூறியும் கேளாது, ஆண்டவன் அருளில் வைத்த நம்பிக்கையினால் அப்படியே ஓட்டச்சொன்னார். ஆலய இடத்தண்டை வந்த பின்புதான் வண்டிவிழுந்தது. கல்லும் சிதையாமல் கீழே நழுவிற்று. வண்டிக்காரரும் அக்கம் பக்கத்தாரும் ஆச்சரியமென ஆண்டவன் அருளை வியந்தனர்.

மூலத் திருவுருவம் கருஞ்சலவைக் கல்லினாலும், உற்சவமூர்த்தம் உயர் பஞ்சலோகத்தினாலும் மிக்க அருமையாகச் செய்விக்கப் பெற்றன. சுவாமிகளை நேரில் காணும் பேறு பெறாதவர்கள் இத் திருவுருவங்களைத் தரிசித்தே சுவாமிகளது உண்மைத் திருமேனியின் தெய்வப்பொலிவை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்படி, அம் மூர்த்தங்கள் அவ்வளவு அற்புதமாக ஆக்கப்பெற்றிருக்கின்றன.

## 6. வந்தனை வழிபாடு

நாடோறும் காலை மாலை வழிபாடு செய்யச், செட்டிநாட்டுப் பெருவள்ளல், அரனடியடைந்த திவான்பகதூர்: தர்மபூஷணம் திரு.

ஸ்ரீ. நா. முத்தைய செட்டியாரும், மற்றொரு செட்டிநாட்டு அடியவரும், நிரந்தரமான ஏற்பாடு செய்திருக்கின்றனர். விசேஷ நாட்களில் விசேஷ பூசைகட்கும் நிவேதனங்கட்கும் வேறு பல அடியவர்கள் திட்டம் வகுத்திருக்கின்றனர். திருவுருவங்கட்கு வெள்ளிக் கவசங்களும், திருமஞ்சனத்திற்கு வெள்ளிக் குடங்களும் செய்து வைக்கப் பெற்றிருக்கின்றன.

ஆண்டுதோறும், மார்கழி மாதம் கிருஷ்ணபக்ஷம் அனுஷ நட்சத்திரத்தில் சுவாமிகளுக்குக் குருபூசை நடந்துவருகிறது. அதே நாள் நாட்டின் பல பாகங்களிலும் அடியவர்களால் குரு பூஜை விழா கொண்டாடப்பெறுகின்றது. குருநாதர் அவதரித்த நாளாகிய புரட்டாசி மாதம் சுக்கிலபக்ஷம் ரேவதி நட்சத்திரத்தன்றும் விசேஷ பூசை சந்நிதானத்தில் நடைபெறும். அன்று ஆங்காங்கு அடியவர்களால் விழாவும், திருவெண்ணெய் நல்லூருக்கு அடுத்த திருச்சாத்தனூரில் சுவாமிகள் ஆசீர்வதித்து வாக்களித்தபடி திருஅருட்கொடியேற்ற வைபவமும், பல இடங்களில் ஒவ்வொரு மாதக்கடைசி வெள்ளியன்று வீதிவல உற்சவங்களும் நடந்தேறி வருகின்றன.



திருச்சாத்தனூரில் 1—10—1936ல் திரு ப. முத்துராம ரெட்டியார் மாளிகையின்மீது சுவாமிகளது
அருட்கொடி ஏற்றியபோது நடந்த 80-வது ஆண்டு விழா.

# XI

# என்றும் வழிகாட்டும் எந்தை குருநாதர்

## 1. மறைந்தும் அருளும் மகிமை

ஊனக்கண்ணுக்குப் புலனாகாதபடி, உலகினுக்குத் தெரியாதபடி, குருநாதர் மறைந்தருளினார்கள் ஆனாலும், அன்றுபோல் இன்றும், நிஷ்டை நேரங்களில் அடியவர்கட்குக் காட்சி கொடுத்து, அவர்களது வாழ்க்கையையும், அவர்களை அடைந்தாரது வாழ்க்கைகளையும், மிகத் தூய்மையாக நடத்திச் செல்வதற்கு வேண்டிய உபதேசங்களைச் செய்து, வழிகாட்டிக் கொண்டே போகின்றார்கள். அக்காலத்தைக் காட்டிலும் இக்காலத்தில், அடிக்கடியும், மிக்க விழிப்போடும் உரிமையோடும், குருமூர்த்தி கருணை பாலித்து வருவதை அடியவர்கள் ஒவ்வொருவரும் அகமார உணர்ந்து, அவரன்பின் பெருமையை அதிசயித்துப் போற்றி செய்கின்றனர். குருநாதரை மறுபடியும் எப்போது சேவிக்கப் போகின்றோம் என்ற ஏக்கமே அடியவர்களுக்குத் தோன்றாத வண்ணம், அவர்களுக்கு உடையவன் என்றும் உடன் வாழும் ஏற்ற பெருந்துணையாக இருந்து வருவதை எண்ணி எண்ணி மகிழ்கின்றனர்.

குருமூர்த்தியின் திருவருளினாலே, திருநீறும் தீர்த்தமும் கொண்டு, அடியவர், தங்கட்கும் பிறர்க்கும் முன்னர் தாங்களேசெய்து கொண்டிருந்த நலங்களைக் காட்டிலும் பன் மடங்கு நன்மைகளை இப்போது செய்துகொள்ள இறைவன் இசைந்து உதவுவதை இனிக்க நினைத்து இன்புறுகின்றனர். குருநாதரின் திருவுருவப் படத்தை வீடுகள் தோறும் வைத்து விடியலும் மாலையும் விரும்பிப் பூசை புரிகின்றனர். வாழ்க்கையில், பிணியாலும் பிறவற்றாலும் தங்கட்கும் மற்றோர்க்கும் துன்பம் நேர்கின்ற காலங்களிலே, குருசுவாமியை நேரில் கண்ட காலத்தில் செய்தது போல, அவர்களது திருவுருவத்தைக் கொலுவில் அமர்த்திக், குவிந்த அன்போடு பூசித்து, வலம் வந்து வழிபட்டுக் குறையிரந்து கும்பிடுகின்றனர். வந்த இடர் அனைத்தும், தொந்தமற ஒழிதல் கண்டு உடையவனின் இன்னருளை உருகித் துதித்து உவக்கின்றனர்.

## 2. அனைவரை ஆளும் அருமை

குருநாதரது அருள் விலாசம் ஏற்கனவே அடியவராயுள்ளவர் பாலே யல்லாமல் அனைவர் பாலும் மடைதிறந்து பாய்கிறது. ஆண்டவன் அமரும் அருங்கோயிலாக அவதரித்த அவர்கள் மறைந்து இருந்தும், அருளால் ஆளும் பெருந்தொழிலை இன்றும் நடத்திக் கொண்டுதான் வருகின்றார்கள். குருமூர்த்தி அருள் வாக்கு அளித்துச் சென்றபடி, சட்டத்தின் வைபவம் நாளுக்கு நாள் விளக்க முற்று வருகின்றது. ஆண்டவன் நாமம்கூறி அடியவரால் தரப் பெறும் விபூதியும் தீர்த்தமும், நீக்காத நோயில்லை, போக்காத குறையில்லை, ஆக்காத நலனில்லை, சேர்க்காத பலனில்லை. ஓர் அறிவு படைத்த உயிர் முதல் ஆறறிவு பெற்ற உயிர் ஈறாக எல்லா ஜீவராசிகட்கும் ஆண்டவன் ஆணை அருள் பாலித்து வருகின்றது.

உடையவன் சட்டத்தின் உயர்வினை யறிந்து, சட்ட அனுஷ்டானத்தில் தீவிரப் பற்றுடன் பலப்பல புதிய அடியவர்கள் சேர்ந்து கொண்டே வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் சுவாமிகளை நேரே தரிசிக்காதவர்கள். சுவாமிகளது திருநாமத்தைக் கூட, சட்டத்தில் சேர்வதற்கு முன் வரையில், கேட்டிராதவர்கள். என்றாலும் உடையவனிடம் உறுதியுடன் சட்டத்தைச் சிறிது அளவு மேற்கொண்டுவிட்ட பின்னர், பையப்பைய அவர்கள் முழு அளவையும் கடைப்பிடித்து ஒழுகும்படிக்கு ஆண்டவன் அற்புதமாக அவர்களுக்கு அருள்புரிந்து செல்லும் முறையைக் கண்டு, அவர்கள் அளவுகாணா மகிழ்ச்சி யடைவதோடு, மேலும் புதிது புதிதாக அடியவர்கள் சட்டத்தில் சேர்வதற்கும் அவர்களை வழிகாட்டிகளாகவும் இருக்கின்றனர்.

உயர்ந்த சர்க்கார் உத்தியோகங்களிலே யுள்ளவர்கள், பிற உத்தியோகங்களிலே இருப்பவர்கள், பெருத்த வியாபாரிகள், சிறந்த மிராசுதார்கள், நகரங்களிலே வாழ்பவர்கள், கிராமங்களிலே குடியிருப்பவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், உயர் குலத்தார் என்பவர்கள், தாழ்குலத்தார் என்பவர்கள், பலரும், சுவாமிகளது பெயரைப் புதிதாகக் கேட்டு, சுவாமிகளது சட்டத்தின் பெருமையைப் புதிதாக அறிந்து, விடியல் எழுந்து பச்சை நீராடுவதும், உடையவனை வழிபடுவதும், விபூதியும் தீர்த்தமும் கொள்வதும், எத்தகைய கடுமையான பிணி வந்தாலும் எள்ளளவும் அஞ்சாது

## என்றும் வழிகாட்டும் எந்தை குருநாதர்

எந்தை யருளில் நம்பிக்கை நாட்டிப், பச்சை நீர்ப் பழக்கத்தைக் கைவிடாது திருநீறும் தீர்த்தமுமே துணையென நின்று, பார்த்தோர் வியக்கும்படி சிறிதும் பழுதில்லாது சிறப்புடன் வாழ்வதும் காணும்போது, குருநாதரது அருள் அன்றுபோல் இன்றும் அனைவர்க்குமென நிலவிவருவது அங்கை நெல்லியெனப் புலனாகும்.

"சுவாமிகள் நேரே இருந்து அருள் புரிந்த காலத்திலேதான் அற்புதமாக நோய்கள் நீங்கின; பச்சை நீர்ப்பழக்கத்தால் பழுது ஏதும் வாராது இருந்தது; சுவாமிகளை நேரிலே சேவித்து அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்ற அடியவர்கள் ஒரு வேளை இன்றைக்கும் சுவாமிகள் சட்டத்தின்படி ஒழுகும் உறுதி பெற்றிருக்கலாம்; ஆனால் இக்காலத்தில் புதிதாக எவரும் சட்டத்தில் சேர்வாரானால் ஒரேநாளில் உடம்பைக்கெடுத்துக்கொள்ள வேண்டியதுதான்; எட்ட இருக்கும் எமனைக் கிட்டே அழைத்துக்கொள்ள வேண்டுவது தான்; அறிவுள்ள எவர்தான் இப்போது சட்ட அனுஷ்டானத்தை ஏற்று நடந்து நலமுடன் இருக்க முடியும்?" என்றெல்லாம் சட்டத்தில் சேராத அன்பர்கள் பலர் எண்ணலாம்.

ஆயின் அந்த அன்பர்கள், இன்றைக்குச் சட்டத்தில் சேர்ந்த புது அடியவர்கள்கூட சட்ட அனுஷ்டானத்தால் பெற்றுவரும் பெரும் பலன்களை ஒரு முறை கண்ணுறுவார்களானால் அவர்களது எண்ணத்தை அவசியம் மாற்றிக் கொள்ள வேண்டியவர் ஆவார்கள். கடுமையான காய்ச்சல், மும்முரமான அம்மை, கொல்லும் விஷபேதி, குறைத்து அழிக்கும் குஷ்டம், ரத்தம் வடியும் ரணம், எலும்பு நரம்பு முறிவு, முதலிய எத்தகைய பயங்கரமான பிணிகள் நேர்ந்தாலும் சரி, சிறிதும் கலக்கம் அடையாமல், விடியல் நீராட்டத்தை விடாமல், மருந்தென்பதை மனத்து எண்ணாமல், அருள் நீறும் தண்ணீருமே அருந்தி, நோய் முழுவதும் ஆச்சரியமாக நீங்கப்பெற்று, செம்மையுற்றுச், சிறந்து வருவதைப் பார்க்கும் போது, நம்பிக்கை கொள்ளாது இருந்த அந்த அன்பர்கள்கூட எப்படி அவர்களுடைய தப்பெண்ணத்தைத் தவிர்த்துவிட்டு நம்பிக்கை பூணாமல் போக முடியும்? தீராத மனக்குறைகள் தீர்ந்தும், வாராத நலங்கள் வரப்பெற்றும், புது அடியவர்களும் வளம் பெற

வாழ்வதைக் கண்ணாரக் காணும்போது எவ்வாறு சுவாமிகளது சட்டத்தில் நம்பிக்கை கொள்ளாது இருக்க இயலும்?

முதலில் சந்தேகங்கொண்டு இருந்து, சட்ட அனுஷ்டானத்தில் உள்ளவர்களைச் சரிவர கவனிக்காமையினாலேயே அவர்களை ஏசியும் நகையாடியும் வந்து, அறிவற்றவர்கள் என்றுகூட அவர்களை எண்ணியும் சென்றிருந்த அன்பர்கள் பலர், அடியவர்களுக்குச் சட்ட அனுஷ்டானத்தால் உண்டாகும் உண்மை நன்மைகளை நேரே ஒருமுறை பார்த்துவிட்ட பிறகு 'அம்ம! அம்ம!' என்று அதிசயித்து உடையவன் அருளில் உறுதி சிறிது கொண்டு சட்டத்தின் முதற்படியிலே கால்வைக்கின்றனர். வைத்ததுமே பையப் பைய அந்த அன்பர்களை சட்டத்தின் பல படிகளையும் எளிதில் ஏறுதற்கு உரிய திடமானது, அவர்களும் அறியாமலே, அவர்களுக்கு வருவதைக் கண்டு வியப்பும் உவப்பும் கொண்டு வருகின்றனர். ஆண்டவனின் அருளை யறியாமலே, சட்டத்தின் மாண்பை உணராமலே, முன்னர் அடியார்களை ஏசியதையும் இழித்து எண்ணியதையும் அவர்களே நினைத்து, அவர்களது அறிவானது எவ்வளவு அளவு பட்டதாகவும் சின்னஞ் சிறியதாகவும் இருக்கின்றதென்பதை இனிது உணர்ந்து, வெட்கமும் வெறு நகைப்பும் கொள்ளுகின்றனர்.

ஆறு அறிவுடைய மக்களுக்கேயல்லாமல், ஆடுமாடுகளுக்கும் பறவை பிறவுக்கும், நோய் நொடிகள் வந்தபோதும், புலன்களில் உள்ள பயிர்களுக்கும், தோப்புகளிலுள்ள மரங்களுக்கும் காற்றினாலும் காய்ச்சலினாலும், பிறவற்றாலும் பீடைகள் நேர்ந்தபோதும், அவை அவற்றிற்கு உலகத்தில் ஏற்பட்டுள்ள சிகிச்சைகளைச் செய்யப் போகாமல், உடையவனிடம் கொண்ட உறுதியோடு சுவாமிகள் திருநாமத்தைச் சொல்லித் திருநீறும் தீர்த்தமும் வழங்கியே அக் குறைகளை யெல்லாம் இன்றுகூட புது அடியவர்களும் நீக்கி வருவதைக் கண்ணுறும் சட்டத்தில் சேராத அன்பர்கள், சுவாமிகளது சட்டத்தில் நம்பிக்கை பூண்டு தாமும் சட்டத்தை ஏற்றுக்கொள்ள அவாவுவதில் என்ன அதிசயமிருக்கிறது? மிருக வைத்தியத்தாலும் பயிர் வைத்தியத்தாலும் தீராத அந்த நலிவுகள் ஆண்டவனது அருளைக்கொண்டு அடியவர்கள் தரும் திருநீறு தீர்த்தத்தால்

தீர்ந்து விடுவதைப் பார்க்கும்போது அந்த அன்பர்கள் சட்டத்தில் மேலும் உறுதி பூண்பதில் என்ன வியப்பு கிடக்கின்றது?

சட்ட அனுஷ்டானத்திலிருக்கும் புது அடியவர்களுடைய பெயர்களையும் விலாசங்களையும், அவர்களுக்கு வந்த இன்னல்களை அவர்கள் பிறர் உதவி நாடாது சட்டம் வழுவாது இருந்தே நீக்கிக் கொண்ட அற்புதங்களையும், இங்கே எழுதுவதென்றால் இடம் போதாது. ஆனால், அவர்கள் அளவிறந்த பேராக இருக்கின்றார்கள் என்று மாத்திரம் கூறலாகும். உண்மைச் சற்குரு நாட்டம் உடையவராய், அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் வாய்மையை நம்பினவராய், அவனருள் எங்கும் நிலவி, விரும்பி வேண்டுவர்க்கு வெளிப்பட்டு உதவுகிறதென்பதை புணர்ந்தவர்களாய், இருக்கும் ஒவ்வொருவருக்கும் சுவாமிகளது சட்டத்தை ஏற்கும் பேறு கிடைக்கும் என்பது திண்ணம்.

குருமூர்த்தியை அடியவர்கள் நேரில் சேவித்த காலங்களிலே, "உடையவன் கணக்கு இப்போதேயா விளங்கிவிடும்? இன்னும் போகப்போகத்தான் விளக்கமுறும்" என்றும், "அவனுடைய அருட்கொடி உலகமெங்கும் பறக்கும்" என்றும் சொல்லுவதுண்டு. "ஆண்டவனது அருளாட்சி உலகின்மீதுள்ள மிக மிகப் பெரிய அரசாட்சிகளிலும் மேலானது, அதை நடத்தும் சிப்பந்திகளும் உத்தியோகஸ்தர்களும் அளவிறந்த பேராவர்" என்றும் கூறுவதுண்டு. இவ்வுரைகளும் இன்னன பலவும் இப்போதுதான் கூறுவது போல அனைவர் காதுகளிலும் ஒலித்து ஆண்டவனது அருள் ஆட்சி ஓங்கி வளரும் வளமையை நினைவூட்டி வருகின்றன. எங்கும் நிறைந்த ஆண்டவன் அருளை, ஏற்று அநுபவிப்பதற்கு, விழைந்து உழைத்துக் கனிந்து உருகும் அகிலத்துள்ள அனைவர்க்கும், வளமையுடன் வழி காட்ட, வான்பொருளாகிய எந்தை குருநாதர் என்றும் இருந்து வருகின்றார்.

ஸ்ரீ இரேட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

வழிகாட்டும் வான்பொருள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு

முற்றிற்று.